யாழ்ப்பாணம் பொது நூலகம் / மாநகராட்சி மன்றம் / யாழ்ப்பாணம்.

இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56

சுடர் 32 | கதிர் 78 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 30, ஞாயிற்றுக்கிழமை 12.02.2017

மகாராஜா பொதிகள் சேவை
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
அவுஸ்திரேலியா 800/-
பிரான்ஸ் 750/-
உணவு பொருட்களை
விரைவாக அனுப்ப நாடவேண்டிய ஒரே இடம்
GTV Express
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25 கந்தசாமி கோவில் வீதி வவுனியா
024 - 4930200 / 076 - 6908961

# கால அவகாசம் வழங்குவதானால் ஐ.நா. கண்காணிப்பு கட்டாயம்

## அரசின் நகர்வுக்கு கூட்டமைப்பின் நிலைப்பாடு இது

யாழ்ப்பாணம், பெப்ரவரி 12

காலத்தை இழுத்தடிப்பதற்காகத் தவணை கேட்பதில் அர்த்தமில்லை. இலங்கை அரசு கோரும் கால அவகாசத்தை ஐ.நா. வழங்குவதாக இருந்தால், ஐ.நா. மேற்பார்வையில் செயற்படுத்தும் வகையில் தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும்

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு இணை அனுசரணை வழங்கி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கொழும்பு அரசு கால அவகாசம் கோரப் போவதாகப் பகிரங்கமாக அறிவித்துள்ளது. இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய நிலைப்பாட்டைக் >> 52

## அமெரிக்காவுக்குள் நுழைய முற்பட்ட இலங்கையர்கள் 6 பேர் கைது

கொழும்பு, பெப். 12

படகு மூலம் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைய முற்பட்ட குற்றச்சாட்டில் 6 இலங்கையர்கள் உள்ளிட்ட 15 பேர் அமெரிக்க கடலோரக் >> 52

அவகாசம் குறித்து விளக்கமளிக்க

## மூவர் குழுவை ஜெனிவாவுக்கு அனுப்புகிறது கொழும்பு

கொழும்பு, பெப். 12

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு 18 மாதகால அவகாசத்தை இலங்கை கோரவுள்ளது. அதுதொடர்பில்ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு விளக்க >> 52

## கருணா தலைமையில் அரசியல் கட்சி உதயம்

யாழ்ப்பாணம், பெப். 12

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுடன் நுகேகொடையில் ஒன்றாக மேடையேறிய கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி >> 52

## அரிசி விற்பனையில் மோசடி குறித்து 1977க்கு அறிவிக்கக் கோரிக்கை

கொழும்பு, பெப். 12

அரிசி விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், அரிசி விற்பனையில் மோசடியில் >> 49

உறவுகளின் கதறல்களுடன் நேற்று

## குமாரபுரம் படுகொலையில் உயிர் நீத்தோருக்கு அஞ்சலி



மூதூர், பெப். 12

மூதூர்குமாரபுரம்படுகொலையின் 21ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு உறவுகளின் கண்ணீர், கதறல்களுடன் குமாரபுரத்தில் நேற்று இடம்பெற்றது. படுகொலை செய்யப்பட்ட 26 பேருடைய ஒளிப்படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நினைவுத்தீபங்கள் ஏற்றி பூக்கள் >> 53

## புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு அனைத்துக் கட்சி கூட்டம் விரைவில்

### தடங்கல்களை நீக்குவதற்கு அரச தலைவர் அவசர முடிவு

யாழ்ப்பாணம், பெப், 12

புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சி தேக்கமடைந்துள்ள நிலையில், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அரசமைப்புத் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன >> 52

## யாழ். ஆரியகுளத்தின் நீர் சிவப்பு நிறமாக மாற்றம்

### சுற்றுச்சூழல் பாதிப்புக் காரணமா? என்று பொதுமக்கள் அச்சம்



யாழ்ப்பாணம்,பெப். 12

யாழ்ப்பாண நகரி லுள்ள ஆரியகுளத்தின் நீர் சிவப்பு நிறமாக மாறியுள்ளது. சுற்றுச் >> 49

முச்சந்தி முரளி



மகிந்தர் வழியிலேயே இவரும் கூட்டத்தைக் கூட்டியே காலத்த கடத்துவார் பாருங்கோ..

## 12ஆவது நாள்

### பேரெழுச்சியுடன் தொடர்கிறது பிலக்குடியிருப்பு அறவழிப்போர்

முல்லைத்தீவு, பெப். 12

முல்லைத்தீவு பிலக்குடியிருப்பு மக்களுக்கு விசுவமடு பிரதேச பொதுஅமைப்புப் பிரதிநிதிகள் நேற்று காலை 10 மணியளவில் >> 52

## 116 கிலோ கஞ்சாவுடன் மூவர் வல்வையில் கைது



யாழ்ப்பாணம், பெப். 12

இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கடத்தப்பட்ட இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான 115 கிலோ 600 கிராம் கேரளக் கஞ்சாப் பொதிகள் >> 50

## 110 கிலோ கஞ்சாவுடன் தலைமன்னாரிலும் இருவர் சிக்கினர்

மன்னார், பெப். 12

இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட 110 கிலோகிராம் கேரளக் கஞ்சாப் பொதிகள் ஹைஏஸ் வாகனத்தில் ஏற்றப்பட்ட நிலையில் தலைமன்னாரில் மீட்கப்பட்டன. கடத்திய குற்றச்சாட்டில் 2 பேர் கைது >> 52

## அகதிகளாக அலைவதற்கு பிள்ளைகளை விடோம்

### வைராக்கியத்துடன் புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் தொடர்கிறது



முல்லைத்தீவு, பெப். 12

அகதி வாழ்க்கை எங்களுடனேயே முடியவேண்டும். எங்கள் பிள்ளைகளும் அகதிகளாக அலையநாங்கள் விடமாட்டோம். காணியில்கால் பதிக் காது இந்த இடத்தை விட்டு நகரவே மாட்டோம். இவ்வாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் நேற்று ஒன்பதாவது நாளாகவும் தொடர் அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்த >> 52

SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புக்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி
011 5 411 411
www.sdb.lk | @SDBbank
www.facebook.com/sdbbank
12.50% வ.தே.வ. 13.10% 03 மாதங்கள்
12% வ.தே.வ. 12.36% 06 மாதங்கள்
12.25% வ.தே.வ. 12.25% 12 மாதங்கள்
SDB வங்கி
Fitch Rating BB+ (Stable), Reg. No: PB62PQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு அரசில் நீடிப்பதா? சு.க. விரைவில் தீர்மானம்

## இராஜாங்க அமைச்சர் டிலான் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 12

கூட்டு அரசுடனான ஒப்பந்தத்தை நீடிப்பதா இல்லையா என்பதை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மைய செயற்குழுக் கூட்டத்தில் விரைவில் தீர்மானிக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சரும் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் செய்யப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் கூட்டு அரசு அமைக்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் 21ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசீம் மற்றும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் கூட்டு அரசு அமைக்கும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தனர். இந்த உடன்படிக்கை இவ்வருடம் ஓகஸ்ட் 21ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

இதேவேளை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த உடன்படிக்கை தொடர்பில் எதுவும் இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. எனினும் கட்சியின் யாப்பின் பிரகாரம் இவ்வாறான விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் கட்சியின் மைய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்க வேண்டும் என்று டிலான் தெரிவித்தார். (வ-4)

## வடக்கு - கிழக்கு இணைப்பு

# கிழக்கு முதல்வருடன் பேச வடக்கு முதல்வர் தயாராம்

யாழ்ப்பாணம், பெப். 12

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக பேசுவதற்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் முன்வந்தால் அவருடன் பேச்சு நடத்தத் தயார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தாண்டவன்வெளியில் உள்ள கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் முஸ்லிம் சமூகத்தினருடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு அரசின் கீழ் தமிழர்களுக்கு கிடைக்கின்ற தீர்வுப் பொறிமுறை, முஸ்லிம்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் எங்களுக்கு வேறுபட்ட கருத்து இல்லை. முஸ்லிம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் உள்ள பிரச்சினைகளை இருசாராரும் இணைந்து பேசித் தீர்த்துக் கொள்ளக் கூடிய பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும்.

சிவில் அமைப்புக்கள் மக்களுடைய தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை என்ன என்பதை அடையாளப்படுத்தி அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிச் சிந்தித்து வருகின்றனர். இதே போன்று முஸ்லிம் மக்களுக்குள்ள பிரச்சினைகளையும் நாங்கள் இரு



சாராரும் சேர்ந்து பேசி தீர்த்துக் கொள்ளக் கூடிய பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு முழுமையான சம்மதம் இருதரப்பாலும் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுடனான பேச்சுக்கள் தொடரும்.

முஸ்லிம் மக்கள் எதனை வேண்டுகின்றார்கள் என்ற எண்ணப்பாடுகளை அவர்களே வெளிப்படுத்த வேண்டும். அதனை அடுத்த கூட்டத்தில் வெளிப்படுத்தும் முகமாக ஆவண ரீதியாக தெரிவிப்பதாக தெரிவித்துள்ளனர். வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பில் பேச கிழக்கு மாகாண முதலமைச்சர் முன்வந்தால் அவருடன் பேச்சு நடத்தத் தயார் - என்றார். (வ-5)

# பிரிவினைவாதத்திலிருந்து விடுபட்டு அனைவரும் ஒன்றிணையவேண்டும்

## *யாழ்ப்பாணத்தில் வலியுறுத்தினார் அமைச்சர் பிரியதர்சன யாப்பா*

யாழ்ப்பாணம், பெப். 12

"உங்கள் மொழியில் கதைக்க முடியாததையிட்டு நான் வருத்தமடைகிறேன். எம்மைப் பிரித்து வைத்தது இந்த மொழிதான். எனவே கல்வித்துறையில் மொழி தொடர்பான மாற்றம் இயற்றப்பட வேண்டும். நாம் சகோதரர்கள் போன்று உரையாடக் கூடிய சூழல் உருவாக வேண்டும். பிரிவினை வாதத்தில் இருந்து நாம் விலகி அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்."

இவ்வாறு இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் மாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் பிரியதர்சன யாப்பா மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜனநாயக ரீதியானது. எமது கட்சியில் மொழி வேறுபாடோ இன வேறுபாடோ பிரதேச வேறுபாடோ மத வேறுபாடோ இல்லை. இவ்வாறான கட்சிக்கு இளைஞர்களுடைய ஒத்துழைப்புத் தேவை. ஒரே நாட்டில் வாழ்வதான அபிப்பிராயம் எமது இளைஞர்களுக்கு வரவேண்டும். இங்கு ஒரு கதையும் கொழும்பில் இன்னொரு கதையும் கதைக் கும் கட்சி எமது கட்சியல்ல.

நாங்கள் இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக நடமாடும் ஒரு சூழலை உருவாக்க வேண்டும். அதுதான் எமது அரச தலைவரின் விருப்பம்.

எமது மக்களுடைய காணிப்பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாக நாங்கள் கதைத்துக் கொண்டிருக்கிறோம். குடிதண்ணீர்ப் பிரச்சினை, மீள்குடியேற்றம் தொடர்பாக நாமும் அமைச்சரவையில் கதைத்துக் கொண்டுதான் இருக்கிறோம். வெகுவிரைவில் அதற்குப் பதில் கிடைக்கும் -என்றார். (வ-4,ரீ)

# நான் செய்த வேலைக்கு நான் கூலி கேட்கிறன்! எனக்கென்ன பயம்!!



**அம்பலத்தாடி அப்புச்சி**

aappuchchi@gmail.com

கணநாளாவீட்டிலமச்சத்தண்ணி இல்லை. அது இது என்று மாறி மாறி மரக்கறிதான். ஞாயிறு மீன் வாங்குவமென்று வெளிக்கிட்டுச் சந்தைக்குப் போய் ஒரு கீரைப் பிடியை வாங்கிக் கொண்டு மீன் சந்தையை எட்டிநோட்டமிட்டன். நல்ல விளை மீன் வந்திருந்தது. சீசன் என்றதாலோ என்னவோ ஒட்டியும் ஒருதொகை கொட்டிக் கிடந்தது. பூவை விரிச்சுப் பார்த்து விளை மீன் ஒரு கிலோ வாங்கினன். வெட்டக் குடுப்பம் எண்டு பக்கத்தில இருந்த மீன் வெட்டிற மனிசனிட்டப்போனன். மீனைக் குடுத்துப் போட்டு அங்கால இங்கால சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தன்.

இருந்தாப் போல மீன் வெட்டிக் கொண்டிருந்த மனிசன் எழும்பி நின்று கத்திச்சுது. கையில கத்தியையும் வைச்சிருக்க நான் பயந்துபோனன். ஒரு கிளீன் சேவ் பண்ணினவர் மீன் வெட்டுற மனிசனுக்கு நூறு ரூபாவை நீட்டுறார். அந்தாள் சொல்லுது இந்த நூறு ரூபா எனக்கு வேண்டாம். தயவு செய்து கொண்டு போங்கோ. எனக்குக் காசு வேண்டாம். எடுத்துக் கொண்டுபோ! மற்றவரோ, இல்லை இதைப்பிடி! இதைப்பிடி! என்று நீட்டுறார். அதுக்கு மீன் வெட்டுறவர், இதை எடுத்துக்கொண்டு போ என்று குளறிக் கத்திச்சுது.

மீன் வெட்டுவிச்சவர் முகமெல்லாம் வெளிறிப் போய். ஒரு உர பாக் முட்ட வெட்டின மீனை தூக்கேலாமல் தூக்கிக்கொண்டு பக்கத்தில இருந்த இறைச்சிக் கடைப் பக்கம் போய் நின்றார். மீன் வெட்டின மனிசன் கோபம் தாங்கேலாமல் மீன் வெட்டின குத்திக்கு மேல ஏறி நின்று பெரிசாக் கத்திச்சு. நான் ஒரு மணித்தியாலமா பதினைஞ்சு கிலோ மீனை வெட்டிறன். நூறு ரூபாவை நீட்டுறார். நான் சும்மா வெட்டினதா இருக்கட்டும். கொண்டு போ என்று குடுத்து விட்டிட்டன். இதைப் பார்த்துக் கொண்டு பக்கத்தில இருந்து மீன் வெட்டிக் கொண்டிருந்தாக்கள் சொல்லிச்சினம். நீ ஏன் இப்படிக் கத்துறாய். பக்குவமாக் கேட்க வேண்டியதுதானே. அவன் பொலிஸ்காரனெல்லே! பார்த்து நடக்கவேணும் என்று. அந்த மனிசனுக்கு எல்லாருமா அட்வைஸ் பண்ணிச்சினம். அட்வைசைக் கேட்டதும் அந்தாளுக்கு இன்னும் கொதி அதிகமாகிப் போச்சு. தொண்டை கிளியக் கத்திச்சிது. பொலீஸ் என்றா எனக்கென்ன பயம். நான் செய்த வேலைக்குக் கூலிதானே கேட்டனான். சுடுகிறதெண்டா சுடட்டும். நான் ஒரு மணித்தியாலமாப் பதினைஞ்சு கிலோ மீன் வெட்டினனான். அறுநூறு ரூபா கேட்கவேணும். ஐந்நூறு தரச் சொல்லிக் கேட்டன். அது பிழையோ. போங்கடா உங்கட கதையும் மண்ணாங்கட்டியும். கூடவே ரெண்டு தூசணமும் வந்து விழுந்துது.

அந்தாளின்ர கத்தலக் கேட்டுக்கொண்டு நின்ற மீனை வெட்டுவிச்ச ஆள், இறைச்சிக் கடைக்காரனிட்டக் காசை வாங்கி இந்தாளிட்டக் கொண்டுவந்து குடுத்தார். அதுக்குப் பிறகுதான் இந்தாள் அடங்கிச்சுது. இதைப் பார்த்துக் கொண்டிருக்க எனக்கு ஆச்சரியமாப் போய்ச்சுது. ஒரு பக்கம் பொலிஸ்காரனென்று அவனைத் தடவுற பெருங்கூட்டம். அப்படியே தரையில விழுந்து கும்பிட்டு நிக்குது. இன்னொரு பக்கம் தனியொருத்தனா தன்ர நியாயத்துக்காகக் குரல் கொடுக்கிற மனிசன். தனக்கு வர வேண்டியதுக்காகத் துணிஞ்சு கலகம் விளைவிச்சதைப் பார்க்க அதிசயமாத்தான் இருந்திச்சுது.

நாங்கள் நாளொன்றுக்கு எங்கட காரியம் நடக்கவேணும் என்றதுக்காக எத்தின இடத்தில விழுந்தெழுகிறம் என்று நினைக்க அருவருப்பா இருந்துது. ஐயா! நாற்பது ரூபா தாங்கோ என்றபடி வெட்டின மீனை நீட்டினார் அந்தாள். காசைக் குடுத்திட்டு அதை வாங்கிக் கொண்டு வீட்டை வெளிக்கிட்டன். வாற வழியில பேப்பரையும்; வாங்கிக் கொண்டு வந்தன். பேப்பரில இருந்திச்சு பிலக்குடியிருப்பில விமானப்படைக்கு முன்னால மக்கள் அமர்ந்திருந்து போராடுகினமாம் என்று. தங்கட நிலத்தில போய்க் குடியிருக்கும் வரைக்கும் போராட்டம் தொடருமென்று உறுதியா இருக்கினமாம். இதை வாசிச்சுக் கொண்டிருக்கப் பேப்பர்காரப் பெடியன் வாசல்ல வந்து நின்றான். அப்புச்சி நாங்கள் கேப்பாப்புலவுக்குப் போறம் நீயும் வாவன். பார்த்திட்டு வந்து ஏதாவது விடுப்புக் கதைக்கலாம். உடன திரும்பி வந்திடுவம் என்றான். சரி ஓசியில வாற சவாரிதானே என்று போட்டு ஏறிக் குந்திட்டன். அங்க போனா குமருகள் குஞ்சு குருமான் என்று எல்லாம் என்ர நிலத்தை எனக்குத்தா என்று நிக்குதுகள். ஒரு பக்கத்தில ஏணை கட்டிப் பிள்ளையைக் கிடத்திக் கிடக்கு. உடுப்பு தோச்சுக் காயப்போட்டிருக்கு. அதுகள் தங்கட சொந்தக் காணிக்க போறத்துக்குத் தவங்கிடக்குதுகள். அது அங்க போனப் பிறகுதான் தெரிஞ்சுது. விமானப்படை முகாமுக்கு முன்னால ஒரு கொட்டில் போட்டு அதுகள் போராடுகிறதைப் பார்த்தா பூரிப்பா இருக்கு. எங்களோட பேசுறதுக்கு ஒன்றுமில்லை. எங்கட நிலத்தில கொட்டில் போட்டு அடுப்பெரிக்கும் வரைக்கும் போராடுவம். இதுதான் எங்கட கோரிக்கை. இங்க வந்த எல்லாரிட்டையும் சொல்லிப் போட்டம். எல்லாரும் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளுகினம். ஆனாத் தீர்வுதான் தருகினமில்லை. அதுகள் ஒருமிச்ச குரலில சொல்ல ஆச்சரியமாத்தான் இருந்தது.

இந்தத் துணிச்சல் எத்தின பேருக்குவரும்? சனத்தின்ர பேரால சீவிக்கிற அரசியல்வாதிகளின்ர ஆதரவு எட்டிப் பார்த்திட்டுப் போறதோட சரி. தொடர்ச்சியா ஒரு விடிவு வரும் வரைக்கும் போராடுறதுக்குச் சனத்திட்ட இருந்துதான் படிக்கவேணும். முதலமைச்சர் வந்தவராம். தான் எல்லாம் பார்க்கிறன் என்றுபோட்டுப் போயிட்டாராம். கிழக்கில எழுக தமிழ் வேலையளால அவசரமாப் போட்டாராக்கும்! எதிர்க் கட்சித் தலைவர் (சம்பந்தர் ஐயா) வரேல்ல என்று சனத்துக்குச் சரியான கோபம். வந்தவை போனவையள் எல்லாரையும் கணக்கில வச்சிருக்குதுகள் சனம்.

எழுக! எழுக! என்று வடக்கிலயும் இருந்துபோய் கிழக்கிலயும் முழக்கமிடுகிறவை ஏன் எழும்பி நிக்கிற சனத்துக்கு ஆதரவா அந்த இடத்தில இல்லை என்ற கேள்வி என்ர மனச சரியா அரிச்சுப்போட்டுது. வெறும் கோசங்களால உசுப்பேத்தி தங்கட அரசியல் செய்யிறதோட எல்லாரும் ஒதுங்கிவிடுகினமோ என்ற அச்சம் அப்பிடியே என்னை அடிச்சுப் போட்டுது. எல்லாரும் ஒரே குட்டையில ஊறின மட்டையள்தான் என்ற சுடலை ஞானம் அந்த இடத்தில நிக்கேக்கதான் வந்து துலைக்குது.

போராட்டம் என்றா என்ன என்றதையும் அதை எப்படிக் கொண்டு நகர்த்திறது என்றதையும் கேப்பாப்புலவு மக்களின்ர கொட்டில்ல போயிருந்து அரசியல்வாதிகள் கற்றுக்கொள்ளவேணும் என்றும் நினைச்சுக்கொண்டன். இரவு பகலாப் போராடுகிற அந்தச் சனம் போன பேப்பர் பெடியளுக்குப் பாணும் ரின் மீன் கறியும் தந்துதான் விட்டிச்சுதுகள். அதை நாங்கள் கொட்டில்ல இருந்து சாபிட்டுக் கொண்டிருக்க எங்களுக்கு மேல பிளேன் ஒன்று வட்டமிட்டு அந்த விமானப்படை முகாமுக்க இறங்கிச்சுது. என்ன இது என்று நாங்கள் பதறச் சனம் சொல்லிச்சு. முகாமில இருக்கிறவங்களுக்குப் பிளேனிலதான் சப்ளை பண்ணுறவங்கள். இந்தப் பிளேன் அடிக்கடி வாறது என்று. சனத்தின்ர போராட்டம் வெற்றி பெறவேணும் என்று மனசுக்க வேண்டிக் கொண்டு அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டம். ஆனால், மனசும் ஆன்மாவும் அந்த இடத்தைத்தான் சுத்திக்கொண்டிருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைட்டம் விவகாரத்தை ஆராய நிபுணர்கள் குழு

## மருத்துவ அதிகாரிகளிடம் உறுதியளித்தார் மைத்திரி

கொழும்பு, பெப். 12
சைட்டம் தனியார் மருத் து வக் கல்லூரி தொடர்பில் ஆராய்வதற்காக நிபுணர் கள் அடங்கிய குழு வொன்று நியமிக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால

>> 52

## ஜி.எஸ்.பி. வரிச் சலுகை

# கொழும்புக்கு ஐரோ. ஒன்றியம் மிரட்டல்

கொழும்பு, பெப். 12
எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்க இணக்

>> 52

# மைத்திரியின் இல்லத்துக்குள் நுழைந்தவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 12
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தினுள் அனுமதி யின்றி பிரவேசிக்க முயற்சித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அரச தலைவர் இல்லத்தின் பாதுகாவலர்களால் இவர் கைது செய்யப்பட்டார்.
சந்தேகநபர் தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. (வ-5)

# அரசுக்கு பிக்குகள் எச்சரிக்கை

## தங்கள் உயிர் பிரிந்த பின்னரே கூட்டாட்சித் தீர்வு சாத்தியமாம்

யாழ்ப்பாணம், பெப். 12
கூட்டாட்சி என்ற போர்வை யில் நாட்டைப் பிரிக்கும் முயற்சி தொடர்ந்தும் முன் னெடுக்கப்பட்டால் நிலமை பயங்கரமாகி விடும் என்று பிக்குகள் எச்சரிக்கை விடுத் தனர். நாட்டைப் பிரிப்பதா யின் தங்களது உயிர் பிரிந்த பின்னரே நிகழும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
அரச வாகனங்களை முறை கேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய் யப்பட்ட மகிந்த அணி நாடா ளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கொழும்பு வெலிக் கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை சந்திப்பதற்காக கொழும் பிலுள்ள பௌத்த பிக்குகள் வெலிக்கடை சிறைச் சாலைக்கு நேற்றுச் சென் றனர். பிக்குகள் குழுவுக்கு தலைமை தாங்கிய ருக்மலே தம்மகீர்த்தி தேரர், விமலைச் சந்தித்த பின்னர் பத்திரிகை யாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்த தாவது:
கூட்டாட்சித்தீர்வென்பது நாட் டைப் பிளவுபடுத்தாது என்று கூறுகின்றனர். இந்த நாட் டைப் பிரிக்கவே அவர்கள் முயற்சிக்கின்றனர் என்பதை நாங்கள் அறிவோம். நாட் டைப் பிரிப்பதற்கே நாட்டி லுள்ள தலைவர்களும் முயற் சிக்கின்றனர். நாட்டிலுள்ள அனைவரும் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இரகசி யமாக இந்த முயற்சியை மேற்கொண்டாலும் அரசி யலில் இல்லாத அனைத்து மகாநாயக்கர்களும் விழித் துக் கொண்டுதான் இருக் கின்றனர். அனைத்து மகா நாயக்கர்கள் ஒன்றிணைந்து அரசுக்கு பாடம் புகட்டுவார்கள். எமது உயிரைத் தியாகம் செய்த பின்னரே நாட்டைப் பிரிக்க எவருக்கும் முடியும். மகாநாயக்கர்களும், இளைய பிக்குகளும் பின்வாங்க மாட்டார்கள். கோரிக்கை களை முன்வைக்கும் இளை ஞர்களைக் கைது செய்கின் றனர். அவர்கள் மீது கண் ணீர் புகைப்பிரயோகம் நடத் தப்படுகிறது. அரசு அவர் களின் கோரிக்கைகளை நிராகரிக்கின்றது. இந்த நிலை தொடர்ந்து சென்றால் மிகவும் பயங்கரமான சூழ் நிலையே இந்த நாட்டில் ஏற்படும் - என்றார். (வ-5)

# தூதுவர்களுக்கு விளக்கமளிக்கும் பொறுப்பு சந்திரிகாவுக்கு

கொழும்பு, பெப்.12
இலங்கையின் நல் லிணக்கச் செயற்பாடுகள் குறித்து வெளிநாட்டுத் தூதுவர் களுக்கு விளக்கும் பொறுப்பு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரண துங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது.
முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான தேசிய நல்லிணக்கப் பணியகம் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளது.
முதற்கட்டமாக சுவிற் ஸர்லாந்து உள்ளிட்ட சில நாடுகளின் தூதுவர்களை முன்னாள் அரச அதிபர் சந்தித்து அரசின் நல் லிணக்கச் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித் துள்ளார்.
நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு பன்னாட்டுகளின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படு கின்றது என்று தெரிவிக் கப்பட்டது. (ற)

# ஆன்மீகப்பொய்கை வெளியீடு இன்று

யாழ்ப்பாணம்.பெப்.12
ஆன்மீகப்பொய்கை கட்டு ரைத் தொகுதி நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர் துர்க்கா தேவி மண்டபத்தில் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமை யில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்கிறார். வெளி யீட்டுரையை கோப்பாய் ஆசி ரிய கலாசாலை பிரதியதிபர் ச.லலீசன் வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

# நிபுணர்கள் குழுவை தற்போது நியமிப்பதில் பயன் கிடையாது

## அனைத்துப் பல்கலை. மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 12
சைட்டம் நிறுவனம் தொடர்பில் விசாரணைகளை மேற் கொள்ள நிபுணர்கள் குழுவை தற்பொழுது நிய மிப்பதில் பயனில்லை என்று அனைத்துப் பல் கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்தது.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கை யில் ஒன்றியம் இதனைக் குறிப்பிட்டது.
இதற்கு முன்னரும் நிபுணர்கள் குழு நியமித்து பரிந் துரைகள் பெறப்பட்டுள்ளன. அதேபோன்ற ஒரு வேலையைத் தான் தற்பொழுது மீண்டும் செய்யத் திட்டமிடப் படுகிறது என்று மாணவர் ஒன்றியம் தெரிவித்தது.
சைட்டம் தொடர்பில் கருத்துக்களைத் தெரிவிக்க அரச தலைவருடன் தங்களது அமைப்புக்கும் சந் தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று எழுத்து மூலம் கேட்டுள்ளது. (வ)

# வழங்கிய வாக்குறுதிகளை முதலில் நிறைவேற்றுங்கள்

## கூட்டரசுக்கு பிரசன்ன ரணதுங்க சவால்

கொழும்பு, பெப்.12
பிறர் பெற்ற பிள்ளைகளுக்கு பிறப்புத்தாட் சிப் பத்திரம் எழுதாமல் முடிந்தால் வழங்கிய வாக்குறுதிகளின் படி மக்களுக்கு அபிவிருத் திகளைச் செய்து காட்ட வேண்டும்.
இவ்வாறு கூட்டரசுக்கு சவால் விடுத்துள்ளார் கூட்டு எதிர்க்கட்சியின் ஒருங்கிணைப்பாள ரான நாடாளு மன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க.
உடுகம்பொல வாராந்த சந்தையை பலவந் தமாகத் திறந்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மற்றவர்களின் பிள்ளைகளுக்கு பிறப்புத் தாட்சிப் பத்திரத்தை எழுத திறமையானவர் களே நாட்டுக்கு வேலை செய்த மகிந்த அரசைத் தோற் கடிக்க முன்னின்றனர்.
கடந்த அரசு அமைத்ததைத் தம்முடைய தைப் போல் திறந்து வைக்க வருகின்ற னரே தவிர நாட்டின் அபிவிருத்திக்காக எந்த வேலைகளையும் செய்யவில்லை. வேலை களைச் செய்யவும் அவர்களால் முடியாது - என்றார். (ற)



கொழும்பு காலி வீதியில் லொறியொன்று தடம்புரண்டு தலை கீழாகக் கவிழ்ந்தது. அதனால் வீதியூடான போக்குவரத்துகள் தடைப் பட்டன. (ற)

இயக்கச்சியில்... உறுதியுடன்
காணி விற்பனைக்கு
கற்பகவனம்
1 ஏக்கர், 2 ஏக்கர் காணிகள்
A9 இல் இருந்து 1km தூரத்தில்
078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306
சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்
வங்கிக் கடன் வசதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை நூறு நினைவலைகள் (1917 - 2017)

பண்டிதர்
க.செல்லத்துரை



மலர்வு 08.02.1917 — இறையடி 11.09.1985

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் (1963 - 1973) புகழ்பூத்த ஆசிரியர் திலகம். கடமை வீரனாக கடமையைச் செவ்வனச் செய்தவர். தனது உயர்வுக்காக கற்காமல், மாணவர்களுக்காக வாழ்ந்தவர், பண்பின் உறைவிடம், பாசத்தின் புகழிடம் மாணவர்களை வழிப்படுத்துவதற்கு அவர் கடைப்பிடித்த நேர்த்தியான கண்டிப்பு பல்லாயிரம் மாணவர்களை வழிப்படுத்தி யிருக்கிறது.
பண்டிதர் ஐயாவின் நூற்றாண்டில் அவரை வணங்கி நிற்கின்றோம்.

பண்டிதர் ஐயாவின்
அன்புக்குரிய மாணவர்கள் சார்பில்
(இரா.செல்வவடிவேல்)



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 13.01.2017 வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி
அமரர் கமலேஸ்வரி
சிவராசா (கமலா)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (12.01.2017) ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அல்லாரை தெற்கு,
கொடிகாமம்.
குடும்பத்தினர்.

(AJAX13)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 01 1949



மறைவு 26 01 2016

திரு.கணபதிப்பிள்ளை இராசையா

( ஓய்வு பெற்ற Sri Lanka Telecom கண்காய்வாளர் )

ஆண்டொன்று போனதையா அவனியிலே உமைப்பிரிந்து
அன்புடனும் பண்புடனும் எமை ஆளாக்கி அழகுபார்த்தீர்
அச்சாணி போல் இருந்து ஆளுமையாய் அரசாண்டீர்
அழிவில்லா புகழ் சேர்த்து ஆண்டவன் அடி சேர்ந்தீரே !
“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்
மனைவி,மகள்,மகன்,மருமகன்,பேரப்பிள்ளைகள்.
தொலைபேசி : 021 226 4747


# இ.போ.ச. பேருந்தை மோதியது டிப்பர்

*இருவர் காயம்*





வவுனியா, பெப். 12
வவுனியாவில் தாண்டிக்குளம் புகையிரத நிலையத்துக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர். அவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த இ.போ.ச. பேருந்து தாண்டிக்குளம் பகுதியில் நிறுத்தப்பட்டது. வீதியால் பயணித்த டிப்பர் நிறுத்தப்பட்ட பேருந்துடன் மோதியுள்ளது. பேருந்தில் பயணம் செய்த கிளிநொச்சியைச் சேர்ந்த நடேசபிள்ளை கமலாகரன் (வயது-36) என்பவரும், டிப்பர் சாரதியான றோபேட் சந்திரகுமார் (வயது-38) என்பவருமே காயமடைந்தனர்.
டிப்பரை முந்திச் சென்ற இ.போ.ச தனது தரிப்பிடத்தில் திடீரென நிறுத்தியதால் டிப்பரை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியாது விபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-4)

# குப்பைகளை வீதிகளில் வீசுவதைத் தவிருங்கள்

*சாவகச்சேரி நகர சபை அறிவுறுத்து*

சாவகச்சேரி, பெப்.12
சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பல இடங்களில் மக்கள் நடமாடும் பகுதிகளில் கழிவுப் பொருள்கள் வீசப்படுகின்றன. இதனால் அந்த இடங்கள் துர்நாற்றம் வீசுவதுடன், மக்கள் நடமாட முடியாத நிலை காணப்படுகிறது. வீதிகளில் கழிவுகளை வீசுவதைத் தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. சாவகச்சேரி பெருங்குளம் சந்திக்கு அருகில் மட்டுவில் கல்வயல் வீதியில் பெருங்குளத்தின் இணைப்புக்குளம் பகுதியில்வீதியோரமாகவும், சாவகச்சேரி டச்சு வீதியில் மருதடிச் சந்திக்கு அருகில் சின்னமண்டுவில் வயல் கரையோரமாகவும் அதிகமாக குப்பைகள், கழிவுகள் பொது மக்களால் வீசப்படுகின்றன.
அந்தப் பகுதிகளில் குப்பைகளை வீசி வீதியை அசிங்கப்படுத்த வேண்டாம் என சாவகச்சேரி நகரசபை செயலாளர் அறிவித்துள்ளார். இதனை மீறுவோர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. பொதுமக்கள் கழிவுப் பொருள்களைப் பொதி செய்து தமது வீட்டுக்கு அருகில் வைத்தால் நகர சபை வாகனங்கள் மூலம் அவை அகற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ந-13)


# கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலத்தில் கூட்டுறவு அபிவிருத்தி
உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திரு. இராசரத்தினம் வேல்குமார்
அவர்களின் அன்புத் தந்தை
கந்தையா இராசரத்தினம்
அவர்கள் 07.02.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளவதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும்,
உத்தியோகத்தர்களும்,
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
அலுவலகம், யாழ்ப்பாணம்.



# கண்ணீர் அஞ்சலி



க. நவசீலன் (முகாமைத்துவ உதவியாளர், பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிதி, வட மாகாண சபை) அவர்களின் அன்பு தாயார்
திருமதி பரமேஸ்வரி கந்தசாமி
அவர்கள் 08.02.2017 புதன்கிழமை
சிவபதமடைந்தார்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதிப் பிரதம செயலாளர்
அலுவலகம் - நிதி வடமாகாண சபை



# 08ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி சாந்தி கதிரவேற்பிள்ளை

மலர்வு 26.01.1968 — உதிர்வு 11.02.2009



எட்டு ஆண்டுகள் மறைந்தாலும்
அன்பான உங்கள் வதனமுகம்
எங்களை விட்டு என்றும்
நீங்காதம்மா......

கணவர் - கதிரவேற்பிள்ளை,
பிள்ளைகள் - விஸ்ணுகாந்
ஹேமகாந்,
விமல்காந்.

இல.45,சோலை,
பல்லவராயன் கட்டு.

(சி.264) (13)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ.பி.எஸ். பக்கம் பாண்டியராயன் ஆட்டம் கண்டது சசிகலா அணி



சென்னை, பெப். 12

அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் சசிகலாவின் பக்கமிருந்து முதல்வர் ஓ.பி.எஸ்ஸின் பக்கம் சாய்ந்தார் பள்ளிக்கல்வி அமைச்சர் பாண்டியராயன்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அ.தி.மு. கழகத்தின் தலைமைக்கு எதிராக பல விமர்சனங்களை முன்வைத்தார் ஓ.பன்னீர்செல்வம். நான், வற்புறுத்தலின் அடிப்படையிலேயே பதவிவிலகினேன் என்றும் அவர் குறிப்பிட்டார். இதனையடுத்து கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார். சசிகலா ஓ.பி.எஸ். இடையே தற்போது பெரும் வார்த்தை மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவு எவருக்கு என்று தெரிவித்துவரும் நிலையில், பள்ளிக்கல்வி அமைச்சர் பாண்டியராயன் நேரில் சென்று ஓ.பி.எஸ்ஸுக்குத் தனது ஆதரவை நேற்றுத் தெரிவித்தார்.

தனது பக்கம் வந்த அமைச்சரான பாண்டியராயனை முதலமைச்சராக வரவேற்கிறேன் என்று ஓ.பி.எஸ். தெரிவித்தார். முதல்வர் பன்னீர்செல்வத்தின் தலைமையில் கட்டுக்கோப்பானதும், பக்கச்சார்பற்றதுமான ஆட்சியை அமைப்பதற்கும், குடும்ப ஆட்சியை இல்லாது செய்வதற்குமே நான் வந்துள்ளேன் என பாண்டியராயன் தெரிவித்தார்.

ஓ.பி.எஸ். பக்கம் பாண்டிய ராயன் சென்றதை அடுத்து, சசிகலா அவசர அவசரமாகச் சட்ட மன்ற உறுப்பினர்களைச் சந்திக்கச் சென்றார். அதற்கு முன்னதாக அவர் ஆட்சி மாற்றம் தொடர்பில், ஓரளவுதான் பொறுமை காப்போம். பின்னர் செய்யவேண்டியதைச் செய்வோம் எனத் தெரிவித்தார். (ம)

# மாடியில் இருந்து குதித்தவர் காயம்

தவறான முடிவு டுத்து உயிர் துறக்க முற்பட்டு காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தவர், வைத்தியசாலை மாடியிலிருந்து குதித்துக் காயமடைந்தார். அவர் மீண்டும் சிகிச்சையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த 7ஆம் திகதி இராணுவ கோப்பரல் ஒருவர் கிருமிநாசினி உட்கொண்டு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் 2 ஆம் மாடியிலுள்ள 14ஆம் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்துள்ளார். நேற்றுமுன்தினமிரவு 7.10மணியளவில் மலசல கூடத்திற்குச் சென்று அங்கிருந்த ஜன்னல் வழியாக வெளியே குதித்ததால் இரண்டு கால்களிலும் காயம் ஏற்பட்டுள்ளது. (ற-4)

## தரம் 5 பரீட்சைத் தொடர் - 05
## பாராட்டுப் பெறுவோர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஐயாவின் பூரண அனுசரணையுடன் கடந்த டிசம்பர் மாதம் ஒளி அரசி மூலம் இடம் பெற்ற தரம் - 5 தபால் மூலமான பரீட்சைத் தொடரில் உயர் புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் புலமைசாலிகளை ஒளிஅரசி, புலமைச்சுடர் குழுமத்தின் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.


| பெயர் | பாடசாலை | புள்ளிகள் |
|---|---|---|
| த. தக்சஜன் | யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி | 200 |
| ஜ. கபிநயா | யா/அச்சுவேலி செந்திரேசா | 199 |
| சு. பிரவிந் | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 198 |
| ம. அபிலாசினி | யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் | 197 |
| மு. மஸனவி | க/ திஹாரி தாருஸ்ஸலாம் | 196 |
| ஜ. பதுஷன் | மா/ ஸ்ரீ குமரன் ஆரம்ப பாடசாலை | 195 |
| றெ. பிறெவினாஸ் | யா/ புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம் | 195 |
| சி. ஹஸ்மிதன் | | 195 |
| கோ. அபர்நாத் | வ/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 194 |
| சு. இலக்கியா | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி | 194 |
| பி. கானுஜன் | யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை | 194 |
| ச. றோகித் | யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை | 194 |
| ந. உயானா | யா/இணுவில் மத்திய கல்லூரி | 194 |
| மு.ப.பாத்திமா பூரிகா | மட/மம/ஹிழ்றிய்யா வித்தியாலயம் | 194 |
| செ. டிசாயினி | வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 193 |
| வி. அபிராஜ் | யா/தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம் | 193 |
| உ. சிபிசன் | யா/ அருணோயதக்கல்லூரி | 193 |
| த. தர்மிகா | மன்/தோட்டவெளி அ.த.க.பாடசாலை | 193 |
| க. தாரிகன் | வ/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 192 |
| ற. அபிதா | வ/ சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை | 192 |
| செ. மதுஷன் | யா/ வடஇந்து ஆரம்ப பாடசாலை | 192 |
| டே.ஆதவன் | வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 191 |
| செ. பானுஜா | யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் | 191 |
| கோ. சாரங்கன் | யா/புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம் | 191 |
| ம. ஷசிதன் | மட்/தேத்தாத்தீவு மகா வித்தியாலயம் | 191 |
| எ.எ.எப்.அஸ்னா | அல்/முபறாக் கனிஷ்ட வித்தியாலயம் | 191 |
| சு. மகிழ்நிலா | யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் | 191 |
| ச. ரந்துர்சன் | வ/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 191 |
| சு. டிலூசியா | | 191 |
| தி. ஷகித் | | 190 |
| பா. சந்தியா | தி/ ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி | 190 |
| பா.துனுஜாபத்தூல் | அல்/அஸ்ஸிறாஜ் கனிஷ்ட பாடசாலை | 190 |
| ஜெ. டினோசன் | யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி | 190 |
| க. ஹேசிகா | | 190 |
| ச. சேழினா | வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 190 |
| சு. நிருத்திகன் | யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை | 190 |

(தொடர்ச்சி நாளை)

உங்கள் பிள்ளைகளும் பரீட்சையில் பங்குபற்ற விரும்பினால் 0718628351 என்ற இலக்கத்திற்கு அழைக்கவும்.

வேலைவாய்ப்புடன் உயர்கல்வி STUDY & WORK
UK - JAPAN - AUSTRALIA - LATVIA - ITALY
CYPRUS - CANADA / USA - NEW ZEALAND
USA - 2 lakhs I GCE OL I IELTS 5.5
JAPAN - 10.5 lakhs I Part time I JLPT Classes Available
RUSSIA - 5 lakhs I No IELTS I No Sponsor
AUSTRALIA - IELTS 6.0 I Part time I GCE OL
NEW ZEALAND - IELTS 6.0 I Part time I GCE OL
ITALY - 4 lakhs I IELTS I GCE AL I Deadline March.05
VISIT VISAS
DEPENDENT VISAS
IELTS and JLPT Classes starts on March.2017
யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு: 0778438403
READ International
No:201-1/1A, Galle Road, Dehiwala. (Opposite to HNB)
E- mail: read.int@gmail.com
Reg.No:PV96305

CANADA , USA
study & work visa
Minimum Qualification O/L
VISA Consulting and Online from filling.
குறைந்த செலவில், விரைவில் பயணம்.
Bank Balance 100%
குறைந்த தகைமை O/L
Swiss, France
செல்ல வழிகாட்டல்
Royal Visa Consultants & Education Service
No.128, Jampettah Street, Colombo -13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892




BUSINESS MANAGEMENT MARKETING | HRM
HND Leading to BA (Hons) from the UK Universities
QUANTITY SURVEYING
HND Leading to BSc (Hons) from the UK Universities
BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY
HND Leading to BSc (Hons) from the UK Universities
CIVIL ENGINEERING
HND Leading to BEng / BSc (Hons) from the UK Universities
LAW
LLB Leading to LLB (Hons) from the UK Universities
COMPUTING
HND Leading to BSc (Hons) from the UK Universities
UGC TVEC
GCE O/L › GCE A/L / Foundation Programme › BTEC HND Programmes › Degree Programmes › Masters Programmes
BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA 077 710 2131 077 960 3753
COLOMBO 077 283 4595
Jaffna Campus 16, Point Pedro Road, Jaffna.
Corporate Office 32, Dharmarama Road, Colombo 6. T : 0112597217
HOTLINE : 021 221 9910
Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2843 திகதி 11.02.2017

33 34 48 69 F 19 ரூ. 47,061,622/-

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா ?

* தலைமுடி நீளமாக வளர வேண்டுமா
* இள நரையா ?
* முடி கொட்டுகிறதா ?
* தலையிடியா ?
* பேன்,பொடுகு தொல்லையா ?

பொன்னாங்காணி, வல்லாரை, இலாமிச்சை வேர், மருதாணி, கரு சலாங்கண்ணி,கருவேப்பிலை சேர்த்து காய்ச்சிய ஆயுள் வேத எண்ணை.

100% இயற்கை மூலிகைகளால் ஆன இவ்வெண்ணையைப் பாவித்து 2வாரங்களில் பலனை உணர்வீர்கள்.

பதிவு இல : 16168
077 263 9037
221,நாவலர் றோட்,யாழ்ப்பாணம்.

## DELL VOSTRO 3650 MT DESKTOP

Intel(R) Core(TM) i3-6100 Processor (3M Cache, 3.70 GHz)
Intel H110 Chipset
Dell E Series E1916HV 18.5" Wide Screen Monitor
4GB DDR3L 1600MHz RAM
500GB 7200 RPM HDD
DVD+/-RW Drive
Windows 10 Pro - 64 bit
Dell Wireless Driver 802.11bgn & Bluetooth 4.0, 2.4 Ghz
Dell USB Keyboard
Dell Optical Mouse

SPECIAL OFFER

3 Years Warranty



~~Rs.86,000/-~~
Rs.76,500/-

ALDI ELECTRONICS
15, STANLY ROAD, JAFFNA
TEL: 021 222 2676


## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இராசையா செல்வராசா
(ளைப்பாறிய ஆசிரியர்)

கொக்குவில் பியன் லேனைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் இராசையா செல்வராசா அவர்கள் அமரத்துவம் எய்திய 25 ஆண்டுகள் நிறைவு நாளில் எமது கழகம் சார்பாக நினைவஞ்சலியினை தெரிவித்துக் கொள்கின்றோம், அவரது நினைவாக குடும்பத்தினரின் உதவியுடன் " நூல் இரவல் கொடுக்கும் பகுதி " எமது நிலையத்தில் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

சம்பியன் லேன்,
கொக்குவில்.
- கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்-

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
### இராசையா தங்கராசா
(தங்கர்)
[ஓய்வுபெற்ற சாரதி - I -
யாழ்.சாலை கோண்டாவில்,
சமாதான நீதிவான் (J.P)]

எனது தந்தையாரும், வைத்தியர் இராசையாவின் மகனும் மறவன்புலத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தில் வசித்தவரும் ஆகிய இராசையா தங்கராசாவின் மறைவுச் செய்தி கேட்டு என்னுடனும் எனது தாயார் தங்கராசா பாக்கியலெட்சுமி (ஓய்வுபெற்ற தபாலதிபர் - மண்டைதீவு) உடனும் சேர்ந்து இறுதிச் சடங்கில் இறுதிவரை கலந்துகொண்டோருக்கும், மற்றும் துயர் அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி வழியாக ஆறுதல் கூறியோருக்கும், வைத்தியசாலை முதல் இறுதிச்சடங்கு வரை வழி நடத்திய எனது தந்தையின் உடன் பிறப்புக்களுக்கும் இன்று எனது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் என்னுடனும் எனது தாயாருடனும் கலந்து கொண்டோருக்கும் மற்றும் எனது தந்தையின் பிரிவால் துயர் உற்று இருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

258, கச்சேரி,
நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

ஏகபுத்திரி
திருமதி அன்பரசன் பொற்குணவதனி
(இராசாத்தி)
தபாலதிபர், நிர்வாக காரியாலயம்,
அடம்பன்.


## கடை வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் சின்னக்கடை Market அண்டிய பகுதியில் கடை வாடகைக்கு உண்டு. - 076 984 7081

## ஆங்கில ஆசிரியர் தேவை

URUMPIRAI KIDS PARK,
KOPAY ROAD,
URUMPIRAI.

FURTHER EDUCATION UNIT

- 6 Hours of working per a day for six days a week.
- Payment not less than 20,000/= per month.
- EPF, ETF Paid.

விண்ணப்பிப்போர் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

தொடர்பு : 077 656 5258, 021 205 4654

## உத்தியோகபூர்வ முடிவுகள்

சௌபாக்கிய வாசனாவ
Development Fortune

சீட்டிழுப்பு வாரம் 16
சீட்டிழுப்பு திகதி 11.02.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 36 41 52 54
சுப்பர் இலக்கம்: 02
அதிர்ஷ்ட மாதம்: செப்

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| 7, 316, 398/= | 3, 011, 509/= | 1, 584, 198/= |

2017.02.16 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## DUBAI JOB 2017 வேலைவாய்ப்பு

- Hotel works
- Driver ( Srilankan License)
- Car Company
- Cook and Helper
- Flower Shop

மற்றும் கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப ஆண், பெண் இருபாலாருக்கும் வேலைவாய்ப்பு உண்டு.

Salary (48 000/= - தொடக்கம் 120 000/= வரை)
உணவு / தங்குமிடம் / போக்குவரத்து அனைத்தும் இலவசம்.
தொடர்பு - (இலங்கை - 075 469 9004, 072 425 2240)
(டுபாய் - 00971 508096517 whatsup,imo,viber.) 00971 552548955
www.DubaiJob.lk (websaid)


## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் கடமைபுரியும் செ.சுபாசினி அவர்களின் பாசமிகு தாய்

### திருமதி செல்லத்துரை பூபதி

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

ANDRA PRINTERS 379,Kasthuriyar Road, Jaffna.


## இலங்கையில் முதல்தடவையாக

பெண்களுக்கு பொருத்தமான பாடநெறிகளைக் கொண்ட அழகுக்கலைப் பயிற்சிக் கல்லூரி

## ஒளிஅழகன் ஸ்ரூடியோ

British College Of Beauty Studies

இணைந்து நடத்தும் பயிற்சி வகுப்புக்கள்



புதிய அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

18.02.2017 அன்று காலை 10.30 To 12.30
18.02.2017 அன்று மதியம் 01.00 To 02.30
இரண்டு புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

- வெளிநாடு செல்பவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட குறுகிய கால பயிற்சி வகுப்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.
- பெறுமதி வாய்ந்த சான்றிதழே வழங்கப்படும்.
- உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சொந்த தொழில் பெற்றுக்கொள்ள முடியும்.
- இந்த வகுப்பில் இணையும் மாணவர்களுக்கு கட்டணம் கழிவு வழங்கப்படும்.
- மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
- இணைய விரும்புவோர் நேரில் வருகைதரவும்.

யாழ்ப்பாணம்.
உதயன் பணிமனை அருகில்,
கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

## வீடு காணி தேவை

ஆனைப்பந்தி, கந்தர்மடம், திருநெல்வேலி, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தேவை.

தொடர்பு: 077 361 1282

## கடைகள் வாடகைக்கு

நல்லூர் கோயில் அருகில் மூன்று மாடி கடைகள் மற்றும் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு :- 077 397 31 66

## மணமகன் தேவை

1983 இல் பிறந்த உத்தராட நட்சத்திரம் கிரகபாவம் 52 1/2, செவ்வாய் 12 இல் உள்ள பொறியியலாளருக்கு இந்து சமயத்தைச் சேர்ந்த பொருத்தமான மணமகனை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு - 075 065 6527

## வீடு வாடகைக்குண்டு

A9 வீதி,பழைய பூங்காவிற்கு முன்பாக 04அறைகளுடனும் 02 Attach Bathroom / பெரிய Hall, சமையலறையுடன் கூடிய வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. அலுவலக உபயோகத்திற்கு விரும்பத்தக்து.

தொடர்பு:- 077 867 7261, 077 934 6338

## வீடு விற்பனைக்கு

கல்வியங்காடு டச்சு வீதியில் (G.P.S Road) எமக்கு சொந்தமான (2 1/2) இரண்டரைப்பரப்பு காணியுடன் சேர்ந்த சகல வசதிகளுடனும் கூடிய பெரிய வீடு விற்பனைக்குண்டு .

தொடர்பு கொள்ளவேண்டியது.
076 668 6929

## வேலை ஆள் தேவை

கிளிநொச்சி, திருவையாற்றில் உள்ள பால்பண்ணை ஒன்றுக்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பண்ணை வேலை தெரிந்த வேலையாள் உடன் தேவை.

தொடர்பு - 077 229 2436

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையில் A9 கண்டி வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

● தரகர் வேண்டாம்.

நவம் : 076 708 7942

## காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு K.K.S.வீதி முதலி கோயிலுக்கு அருகில் நிலப்பரப்பு 1 3/4 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.தொடர்பு - 077 711 1400

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, இலக்கம் 60, உடையார் லேனில் சுற்றுமதிலுடன் கூடிய 3 3/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 077 751 3872, 021 221 3632

## வீடுகள் தேவை

சாவகச்சேரி : A9 வீதிக்கு அண்மித்த பகுதியில் மீசாலை வரை
யாழ்ப்பாணம் : பிரதானவீதி (Main Street)
கோப்பாய், சிறுப்பிட்டி : பருத்தித்துறை வீதியில்
அச்சுவேலி : நகரத்திற்கு அண்மித்த பகுதியில்

– 077 362 7055, 077 468 2951


## வேலையாள் தேவை

கொழும்பில் உள்ள பிரபல வர்த்தக நிலையத்திற்கு Bill Clerk தேவை. ஆண்கள் மட்டும். உணவு, தங்குமிடம் இலவசம்.

தொடர்பு: 077 325 8492



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர சபை மண்டப வடிவமைப்பில் மக்களும் கருத்துக்கள் வழங்கலாம்



சுப்பிரமணியம் சிறுவர் பூங்காவிலிருந்தான பார்வைகள்





யாழ்ப்பாணம், பெப்.12


யாழ். மாநகர சபையால் அமைக்கப்படவுள்ள நகர மண்டபத்துக்கான மாதிரி வடிவமைப்பு தொடர்பில் பொதுமக்களிடமிருந்து கருத்துக்களையும், ஆலோச னைகளையும் மாநாகர சபை ஆணை யாளர் கோரியுள்ளார். இந்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றைச் சமர்பிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.


யாழ்ப்பாணம் மாநகர சபையின் அழிந்த நகர மண்டபத்தை மீண்டும் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுப்பிரமணியம் சிறுவர் பூங்காவின் தெற்குப் புறத்தில் உள்ள அதே திடலில் நிறுவப்பட வுள்ளது. பூங்காச் சூழலுடன் இணைந்த, பழைய நகர மண்டபத்தை நினைவூட்டும் வகையில் புதிய நகர மண்டபம் அமைக் கப்படவுள்ளது.

அதன் கீழ்த் தளத்தில் மக்கள் நேரடியாக வந்து சேவை பெற்றுச் செல்லும் கிளை அலு வலகங்களும், முதலாவது தளத்தில் சபைக் கூட்ட மண்டபம், சபை நூலகம் மற்றும் நூதன சாலை, ஞாபகப் பொருள் விற்பனைக் கூடம் என்பனவும் இரண்டா வது தளத்தில் மக்கள் நேரடியாகத் தொடர் புறாத வேறு கிளை அலுவலகங்களும் மூன்றாவது தளத்தில் 380 பேர் அமரக்கூடிய நவீனத்துவமான கேட்போர் கூடமும் அமையவுள்ளது. மக்கள் பிரதி நிதிகள், கல்வியாளர்கள், பெரியோர்களும் நகர மண்டபம் அமைப் பதற்கான ஆலோசனை களை வழங்கியுள்ளனர். அவற்றை உள்வாங்கி யாழ்ப் பாண மண்ணின் மூத்த கட்டக் கலைஞரின் பொறுப்பில் வடிவமைப்பு உருப்பெற்றுள்ளது. இந்த வடிவமைப்புத் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களும், ஆலோசனைகளும் தேவைப் படுகின்றன.


கருத்துக்கள் அல்லது ஆலோசனைகளை, மாநகர ஆணை யாளர், யாழ்ப்பாணம் மாநகர சபை, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் முகவ ரிக்கோ அல்லது mcjaffnamailc@yahoo.com என்ற மின் அஞ்சல் முக வரிக்கோ அனுப்ப முடியும் என்று மாநகர சபை ஆணை யாளர் தெரிவித்தார். (ற-5)









கடற்கரை வீதியிலிருந்தான பார்வைகள் (பிறபக்கத் தோற்றங்கள்)



நூலகப்பக்கத்திலிருந்து ஆகாயப்பார்வை



மத்திய கல்லூரி மைதானத்தின் மேலிருந்தான பார்வை



நீதிமன்றத் தொகுதிப்பக்கத்திலிருந்து பார்வை



அம்பலப்பெருமள் குளம் அம்பல விநாயகர் ஆலயத்தின் அறநெறிபாடசாலைக்கான கட்டடம் கடந்த வியாழக்கிழமை துணுக்காய் பிரதேச செயலாளர் ஐ. பிரதாபனால் திறக்கப்பட்டது.(ற-7)

## வெளிநாடு செல்லும் பணிப்பெண்களுக்கு

# போலி அறிக்கைகள் வழங்கும் அதிகாரிகள் மீது நடவடிக்கை

கொழும்பு, பெப்.12

வெளிநாடுகளுக்குச் சென்று பணி புரியும் பணிப்பெண் க்ளின் குடும்பம் தொடர்பில் போலியான அறிக்கையை வெளியிடும் அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போலி அறிக்கைகள் தொடர் பில் கருத்து வெளியிட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக் கோரள மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

இவ்வாறு தவறான அறிக்கை களைச் சமர்ப்பிக்கும் அதி காரிகளுக்கு தமது அமைச் சில் ஒருபோதும் இடம் கொடுக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டு வேலைகளுக் காகச் செல்லும் பெண்க ளுக்கு, 5 வயதுக்கும் குறை வான பிள்ளைகள் இருக்கின் றார்களா? இல்லையா என் பது தொடர்பில் உறுதிப்பத்திரம் வழங்க 75 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபா வரை பண மும் பெற்றுக்கொள்ளப்பட்டுள் ளது என்றும் தெரிவித் துள் ளார். பணம் பெறும் 25 முதல் 30 அதிகாரிகள் தொடர்பில் தற் போது விசாரணைகள் முன்னெ டுக்கப்படுகின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ற)

# புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு பன்னாட்டுக் கண்காணிப்பு வேண்டும்

## ஈ. சரவணபவன் எம்.பி. வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், பெப். 12

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் பன்னாட்டுக் கண்காணிப்பில் முன்னெடுக் கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரி வித்தார்.

சமரபாகு நியூட்டன் சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் நியூட்டன் விளையாட்டுக் கழக மும், நியூட்டன் ஐரோப்பிய ஒன்றியக் கிளை யும் இணைந்து நடத்திய 43ஆவது மெய் வன்மைப் போட்டி கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடப்பு ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டத் தில் மேல் மாகாணத்துக்கு அடுத்ததாக வடக்கு மாகாணத்துக்கே அதிக நிதி ஒதுக்கப் பட்டது. தேவைகள் எமக்கு அதிகமாக இருக் கின்றன. ஒதுக்கிய நிதியை விரைந்து செலவு செய்ய வேண்டும். ஆனாலும் அதனை முழுமையாகச் செய்து முடிப்பதற்கு எமக்குப் போதிய வளம் இல்லை.

கொழும்பு அரசு நிதியைக் கொடுத்து விட்டு, ஆளணியைக் கொடுக்காமல், வேலையை முடிக்கவில்லை என்று கூப்பாடு போடுகின் றது. உரிய காலத்தில் நிதியைக் கொடுக்காது இழுத்தடித்து விட்டுப் பின்னர் நாம் செய்ய வில்லை என்று குற்றஞ் சொல்லுகின்றார்கள். எமது தேவைகளுக்கு கொழும்பு அரசு வழங் கும் நிதி போதாமல் இருக்கையில் நாம் எப் படி நிதியைத் திரும்பச் செல்ல விடுவோம்? எமது மாகாணத்துக்கான நிதியை கொழும்பு அரசிடம் நாம் வாதாடித்தான் பெறுகின்றோம். 13ஆவது திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்ட உரித்துக்களைக்கூட எம்மால் அனுபவிக்க முடியவில்லை. புதிய அரசமைப்பு உருவாக் கம் நடக்கின்றது. பன்னாட்டுக் கண்காணிப் பில் இது நடைபெற வேண்டும். இந்த அரசு இந்த முயற்சியை விரும்பி முன்னெடுக்காது. அதனால்தான் பன்னாட்டுக் கண்காணிப்புத் தேவை என்பதை வலியுறுத்துகின்றேன் - என்றார். (வ-5-10-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 70 வீதிகளை கடந்த ஆண்டு மாநகர சபை சீரமைத்தது

## யாழ். மாநகர சபை ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 12
யாழ்ப்பாணம் மாநகர சபையால் கடந்த ஆண்டு 15 வடிகால்களும் 70 வீதிகளும் சீரமைப்புச் செய்யப்பட்டன. 2 ஆயிரத்து 227 புதிய மின்விளக்குகள் பொருத்தப்பட்டன.

இவ்வாறு யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். கடந்த வருடத்துக்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது-

யாழ்ப்பாண மாநகர சபையால் 2016 ஆம் ஆண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டுத் தொகை 875 மில்லியன் ரூபாவாகும். உண்மையாக ஈட்டப்பட்ட வருமானம் ஆயிரத்து 12 மில்லியன் ரூபா ஆகும். உள்ளூராட்சித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அரசிறை மானியம் 461 மில்லியன் ரூபாவுடன், ஏனைய வருமானமாக 514 மில்லியன் ரூபா காணப்படுகின்றது. இவற்றில் சபையால் ஈட்டப்பட்ட வருமானமாக 263 மில்லியன் ரூபாவும், ஏனைய நிதி மூலங்களில் இருந்து பெறப்பட்ட வருமானம் 251 மில்லியன் ரூபாவாகவும் காணப்படுகின்றது.

சபையால் ஈட்டப்பட்ட சொந்த வருமானமாக சோலைவரி, தண்ணீர் விற்பனை மற்றும் களியாட்ட வரிகளாக 65.1 மில்லியன் ரூபாவும், கடை வாடகை அல்லது குத்தகையாக 79.3 மில்லியன் ரூபாவும், உரிமங்களாக 21.7 மில்லியன் ரூபாவும், சேவைகளுக்கான கட்டணமாக 38.3 மில்லியன் ரூபாவும், குற்றங்கள் தண்டங்களாக 9.3 மில்லியன் ரூபாவும், முத்திரைத் தீர்வையாக 34.4 மில்லியன் ரூபாவும் ஏனைய வருமானமாக 14.9 மில்லியன் ரூபாவும் பெறப்பட்டன.

2016 ஆம் ஆண்டில் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஆயிரத்து 12 மில்லியன் ரூபா மொத்தச் செலவினத்தில், நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளங்கள் 461 மில்லியன் ரூபா தவிர்ந்த ஏனைய செலவினங்கள் 551மில்லியன் ரூபாவாகும். வேலைகள் முடிவுறாதுள்ள வேலைத்திட்டங்களுக்காக 2017க்கு பொறுப்புக்களாகக் கொண்டு செல்லப்பட்ட தொகை ரூபா 26 மில்லியன் ரூபாவாகும்.

இந்தச் செலவினங்களின் மூலம் 2016 ஆம் வருடத்தில் 15 வடிகால்களும் 70 வீதிகளும் சீரமைப்புச் செய்யப்பட்டன. 2 ஆயிரத்து 277 புதிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. 78 புதிய நீர் இணைப்புக்களும் 91 நீர்க்குழாய் உடைவுத்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. சபை எல்லைக்குள்ளும், சபைக்கு வெளியேயும் 61தீயணைப்புச்சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய கட்டட விண்ணப்ப அனுமதிகள் 620 வழங்கப்பட்டன. சபை எல்லைக்குள் 14 ஆயிரத்து 774 தொன் திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டன. 28.5 மில்லியன் லீற்றர் திரவக் கழிவுகளும் அகற்றப்பட்டன.

381 டெங்குத் தொற்று அறிவித்தல்கள் பெறப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. காக்கை தீவுக் கரையோரத்தில் 100 தென்னை மரக் கன்றுகள் நடப்பட்டன. சபையின் சித்த மருத்துவப் பிரிவில் 65 ஆயிரத்து 995 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுப் பயன் அடைந்துள்ளனர். நாவாந்துறையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை நாள்களில் இலவச பேருந்து சேவை வழங்கப்படுகின்றது. நாவலர் கலாசார மண்டபம், பொது நூலக மண்டபம், நகர மண்டப மைதானம் ஆகியவை நிகழ்வுகளின் தன்மைக் கேற்ப நிகழ்வுகள் நடத்த இலவசமாக வழங்கப்பட்டன- என்றுள்ளது. (ற-10)



தென்னிந்திய திருச்சபை முறிகண்டி புனித பவுல் ஆலயத்துக்கான மணிக் கோபுரம் நேற்றுமுன்தினம் தென்னிந்திய திருச்சபையின் பேராயரும், அமெரிக்கன் இலங்கை மிசன் தலைவருமான வண. டானியல் தியாகராஜாவால் திறந்து வைக்கப்பட்டது. (ற-6)

# கிளி. மாவட்ட நெற்செய்கை மழையால் ஓரளவு தப்பியது

## கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப்.12
கிளிநொச்சி மாவட்டத்தில் இடையிடையே பெய்த மழையால் காலபோகச் செய்கை ஓரளவுக்குக் காப்பாற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆயகுலன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக செய்கை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வறட்சி காரணமாக விளைச்சல் குறைவாக உள்ளது. ஆரம்பத்தில் 3 ஆயிரத்து 800 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட நெல் நேற்று 2 ஆயிரத்து 900 ரூபாவாகக் குறைந்தது. எமக்குப் பெரும் பொருளாதார இழப்பு ஏற்படுகின்றது - என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

பெரியநீர்ப்பாசனக்குளத்தின் கீழ் விதைக்கப்பட்ட காலபோகநெற்செய்கை அவ்வளவு பாதிப்பை எதிர்நோக்கவில்லை. சில இடங்களில் பாதிப்புக் காணப்படுகின்றது. அழிவடைந்த வயல் நிலங்கள் தொடர்பாக பதிவுகள் பெறப்பட்டு பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை பிரதேச செயலகங்கள் மூலம் வழங்கப்படும்- என்றுகமநலஅபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ற-6)

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைக்கான

# இயக்குநர் சபைத் தெரிவில் பெரும் போட்டி நிலைமை

யாழ்ப்பாணம்,பெப்.12
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைக்கான புதிய இயக்குநர் சபையைத் தெரிவு செய்வதில் பெரும் இழுபறி நிலை ஏற்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் தலைமையில் புதிய இயக்குநர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுச்சபை கூட்டம் கூட்டப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகள் சமுகமளித்தனர். புதிய இயக்குநர்களைத் தெரிவு செய்வதில் பெரும் போட்டி ஏற்பட்டது. இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவுகள் இடம்பெற்றன. சபையின் தலைவராக மீண்டும் தி.சுந்தரலிங்கம் தெரிவுசெய்யப்பட்டார். க.மகாதேவன், செ.இலகுநாதன் ஆகிய இருவரும் உப தலைவர்களாகத் தெரிவானார்கள்.

க.துரைசிங்கம், செ.செல்வராசா, ப.கேசவதாசன், க.இராஜசந்திரன், ச.முருகநேசன், பெ.கனகசபாபதி, அ.குகதாசன் ஆகியோர் இயக்குநர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இயக்குநர்சபைத் தெரிவின்போது, பெண்களுக்கு எவ்வித முன்னுரிமையும் வழங்கப்படாதமைகுறித்துப்பெரும்விசனம்தெரிவிக்கப்பட்டது. சபையின் புதிய இயக்குநர் சபைத் தெரிவின் போது கூட்டுறவு அமைப்புக்களில் இருந்து அதிகமான பெண்களும் வந்திருந்தனர்.

சங்கங்களில் இருந்து வந்திருந்த அதிகமான ஆண் பிரதிநிதிகள் இயக்குநர்களாக வருவதற்குப் பெரும் போட்டி போட்டனர். ஏற்கனவே சபையில் இயக்குநர்களாக இருந்தவர்கள் கூட விட்டுக் கொடுப்பு இன்றி கடும் போட்டியில் ஈடுபட்டனர்.

இதில் சபையின் பத்து இயக்குநர்களும், ஆண் பிரதிநிதிகளாகவே காணப்பட்டனர். பெண்களுக்கு எவ்வித முன்னுரிமையும் கொடுக்கப்படவில்லை.

இதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை மேற்கொண்டு கூட்டுறவுச் சபை உட்பட மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் பெண்களுக்கும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொடுக்க முன்வரவேண்டும்என்று கூட்டத்துக்குவந்திருந்த பெண்கள் சிலர் கோரிக்கை விடுத்தனர்.(ற-17)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.12
மறைந்த ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தியின் 'நினைவுகளோடு பேசுதல்' சிறப்புக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது என்று யாழ்ப்பாண எழுகலை இலக்கியப் பேரவை தெரிவித்தது. எழுகலை இலக்கிய பேரவை போசகர் இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வானது, யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கில் உலகளாவிய சமூக இயக்கங்களின் இயங்கியலைப் புரிந்து கொள்ளல் எனும் தலைப்பில் ஹற்றன் நஷனல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் உரையாற்றவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)



பலாலி வீதி, உரும்பிராயில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் காயமடைந்தார். மோட்டார் சைக்கிளும் சிறிய ரக ரக் வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளாகின. மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் காயத்துக்குள்ளானார். (ற-8)

## டெங்குநோய் இறப்புக்களைத் தடுப்போம்



ஊர்ப் பெரியவர்கள், சனசமூக நிலைய அங்கத்தவர்கள், சமூக நல ஆர்வலர்களே!
இது உங்களுக்கான செயலாற்றுகைக்காலம். நேரம் அறிந்த செயலாற்றுகை நிச்சயமாக டெங்குத் தாக்கத்தைக் குறைக்கும்.
சிரமதானத்தின் முக்கியத்துவம் உணரப்படுவதும், சிரமதானத்தின் உண்மைப் பொருள் விளங்குவதும் இந்தக்காலத்தில்தான்.

"டெங்கை ஒழிக்கும் பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் உள்ளது என்பதை நினைவில் கொள்வோம்"

**தகவல் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - யாழ். மாநகரசபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலி அறுத்த பெண் சிக்கினார்

யாழ்ப்பாணம், பெப்.12
நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் கும்பாபிசேகத்தின் போது பக்தர்களின் நெரிசலைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசைகளை காட்டியுள்ளனர்.
பெண் ஒருவர் பக்தர் ஒருவரின் சங்கிலியை அறுக்க முற்பட்ட சமயம் ஏனைய பக்தர்களால் பிடிக்கப்பட்டார்.
இந்தப் பெண் மற்றும் இரண்டு பக்தர்கள் அணிந்திருந்த தங்கச் சங்கிலிகளை ஏற்கனவே அறுத்துள்ளார். ஆலயத்தில் மகா கும்பாபிசேகம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சமயம் திருட்டு இடம்பெற்றது. (ந-17)



தென்மராட்சியில் தைப்பூச தினத்தன்று நெல் அறுவடை ஆரம்பமானது. அரிசி விலை அதிகரிப்பையடுத்து, அறுவடை செய்து- அன்றைய தினமே சூடு மிதித்து-நெல்லை விவசாயிகள் எடுத்துச் செல்கின்றனர். போதிய மழை வீழ்ச்சியின்மையால் பல வயல்களில் விளைச்சல் குறைவாகவே உள்ளது என்றும் விவசாயிகள் தெரிவித்தனர். (ந-9)

# உதவி திட்டமிடல் பணிப்பாளர்களை நியமிக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.12
முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு தகுதி உடைய உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். இவ்வாறு மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியது. மாவட்டச் செயலகத்தில் உரிய தரத்தைக் கொண்ட நிர்வாக உத்தியோகத்தர் நியமிக்கப்படவில்லை. உரிய தரத்தைக் கொண்டவர்கள் நியமிக்கப்பட்டு, சேவைகளை வழங்க வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களிலும் உரிய தரத்தைக் கொண்ட உத வித் திட்டமிடல் பணிப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை. அந்தப் பதவிகளுக்கும் உரிய தரத்தைக் கொண்டவர்கள் நியமிக்கப்பட வேண்டும் - என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.
இந்தப் பதவிகளுக்கு உரிய தரத்தைக் கொண்டவர்கள் நியமிக்கப்படவில்லை. அவர்களுக்கு அடுத்த தரத்தைக் கொண்டவர்களைக் கொண்டே சேவைகளை வழங்க வேண்டியுள்ளது. மாவட்டச்செயலகத்துக்கும், பிரதேச செயலகங்களுக்குமாக ஏழு பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள் தேவையாகவுள்ளது. அமைச்சுக்கு இது தொடர்பாகத் தெரியப்படுத்தியுள்ளோம். அவர்கள் நியமிக்கப்படும்வரை மூத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இந்தப் பணிக்குப் பயன்படுத்துகின்றோம்- என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ந-7)

# பெற்றோர்கள் ஒத்துழைத்தால் மாணவர் கல்வித் தரம் உயரும்

## கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அதிபர் சுட்டிக்காட்டு


யாழ்ப்பாணம், பெப்.12
ஆசிரியர்களால் மட்டும் கல்வியை வளர்க்க முடியாது. ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் இணைந்தாலே கல்வியை வளர்க்க முடியும்.
இவ்வாறு தெரிவித்தார் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அதிபர் பன்னீர்செல்வம்.
பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
எமது பாடசாலையைப் பொறுத்தவரை ஆரம்பக் கல்வியை புகட்டுவதில் எமது ஆசிரியர்கள் மிகவும் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுகின்றனர். பெற்றோர்கள் எம்முடன் கைகோத்து நிற்க வேண்டும்.
எமதுவலயங்களிலேமுல்லை வலயம் முன்னணியில் இருப்பதென்றால் காரணம் அங்கே பெற்றோர்கள் விழித்தெழுந்து விட்டார்கள். எமது பாடசாலையின் கல்வித்தரம் உயரும். பெற்றோர்கள் தோள் கொடுக்க வேண்டும்- என்றார். (ந-4,500)

# “காணிகளை மக்களிடமே திருப்பிக் கொடு”

## பிலக்குடியிருப்பு மக்களுக்காக யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், பெப்.12
இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்தித் தொடர் போராட்டம் நடத்திவரும் பிலக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக நேற்று யாழ். பேருந்து நிலையம் முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
முகநூல் ஊடாக அழைப்பு விடுக்கப்பட்டு இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்துஎன்று தெரிவிக்கப்பட்டது.
முல்லைத்தீவு, பிலக்குடியிருப்பு மக்கள் தங்களின் காணிகளில் அமைக்கப்பட்டுள்ள விமானப் படையினரின் முகாமை அகற்றி காணிகளை ஒப்படையுங்கள் என வலியுறுத்தி நீண்ட நாள்களாக போராடி வருகின்றனர். அவர்களின் போராட்டத்துக்கு பல தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.
இளைஞர்களான நாம் முகநூல் ஊடாக போராட்டத்துக்கு ஆதரவு திரட்டி இந்தப் போராட்டத்தில் இணைந்துள்ளோம்.
பொதுமக்களின் காணிகளை இராணுவமும், விமானப்படையும் மீள ஒப்படைக்கும் வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லை என பிலக்குடியிருப்பு மக்கள் தெரிவித்துள்ளனர். அவர்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையிலேயே இளையவர்கள் முதல் பெரியவர்கள், பெண்கள் எனப் பலதரப்பினரும் போராட்டத்தில் இணைந்துள்ளோம். இந்த ஆதரவு போராட்டத்துடன் மட்



டும் நாங்கள் நின்றுவிடாது, முல்லைத்தீவுக்கும் நேரடியாகச் சென்று அந்த மக்களுடனும் சேர்ந்து காணி மீட்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்- என்றனர்.
இந்த போராட்டத்தில் இளைஞர்கள், யுவதிகள், பொதுமக்கள், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர், பாதிக்கப்பட்ட மக்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ந-8)

# முயற்சியாளரை ஊக்குவிக்கும் உதவிகளை வழங்க வேண்டும்

## சாந்தி சிறிஸ்கந்தராஜா எம்.பி. வேண்டுகோள்

செங்கலடி, பெப்.12
முல்லைத்தீவு மாவட்டம் போரால் முழுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டமாகும். அங்குள்ள முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் உதவிகள் வழங்கப்பட வேண்டும்.
இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்தார்.
சங்காரவேல் பவுண்டேசன் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்திலிருந்து மருத் துவம், பொறியியல், சட்டம் ஆகிய துறைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு கல்லடி துளசி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் 19 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.
அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
லண்டன் சிவன்கோயில் அறங்காவலர் சபை வடக்கு-கிழக்கு மக்களுக்கு செய்யும் உதவிகளை இரு மாகாணங்களை இணைக்கும் உறவுப் பாலமாகக் கருதுகிறேன்.
லண்டன் சிவன்கோயில் அறங்காவலர் சபையினரும், புலம் பெயர்ந்து வாழும் உறவுகவும் 'ஒளிரும் வாழ்வு' அமைப்பின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 32 இருக்கை மலசல கூடங்கள் வசதிகளை ஏற்படுத்தி தந்தார்கள்- அவர்களுக்கு எமது நன்றிகள்.
முல்லைத்தீவு மாவட்டம் போரால் முழுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டமாகும். இங்கேபலகுடும்பங்களுக்கு அடிப்படைத் தேவைகள் கூட இன்னும் முழுமையாக செய்யப்படவில்லை. எமது மாவட்டத்தில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் உங்களது சேவைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்-என்றார். (ந)

# ஆசிரியர்கள் பணித் தடை: நாளை முதல் போராட்டம்

## *இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப்.12
பணித் தடை வழங்கப்பட்ட ஆசிரியர்களை மீள இணைத்துக்கொள்வது தொடர்பாக வடக்கு முதலமைச்சரின் அலுவலகம் சாதகமான பதில் வழங்கவில்லை என்று தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கம் நாளை திங்கட்கிழமை முதல் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்றும் தெரிவித்தது.
சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் அனுப்பிய அறிக்கையில் தெரிவிக் கப்பட்டதாவது:
அநீதிகளுக்கெதிரான போராட்டமாக இந்தப் போராட்டம் இடம்பெறும். செம்மணி வீதியிலுள்ள வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் அலுவலகத்துக்கு முன்பாக காலை 9 மணி தொடக்கம் தீர்வு கிடைக்கும் வரையான தொடர் போராட்டத்தை இலங்கை ஆசிரியர் சங்கம் நடத்தவுள்ளது.
அடிப்படை விசாரணைகள் எதுவுமின்றி மூன்று ஆசிரியர்களுக்கு பணித்தடை வழங்கப்பட்டது. அதை இடைநிறுத்துமாறு கோரிக்கை விடுத்தும் இன்றுவரை எவ்விதமான நடவடிக்கைகளையும் வடக்கு மாகாண கல்வியமைச்சு மேற்கொள்ளவில்லை. இது தொடர்பில் முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. எவ்விதமான சாதகமான பதிலும் வழங்கப்படவில்லை.
வெளிமாவட்ட சேவை நிபந்தனைக் காலத்தை பூத்தி செய்த ஆசிரியர்களால் கடந்த மாதம் 10 ஆம் திகதி நடத்தப்பட்ட கவனவீர்ப் புப் போராட்டத்தில் பங்கு கொண்ட ஆசிரியர்கள் செயலாளரை தாக்கினர் என்ற பொய்யான விரோத குற்றச்சாட்டுக்களை வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் சுமத்தியுள்ளார்.
வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, ஆசிரியர்கள் செயலாளரின் சட்டையைப் பிடித்தனர் என்று ஆதாரமற்ற குற்றச் சாட்டை வடக்கு மாகாண சபையில் கூறியுள்ளார்.
எமது போராட்டத்தில் அனைத்து ஆசிரியர்களையும் ஒன்றிணையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்-என்றுள்ளது. (ந-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

100% கிரிசோடைல் மற்றும் அஸ்பெஸ்டஸ் அற்றதென சான்றளிக்கப்பட்டது

SWISSTEK

100% அஸ்பெஸ்டஸ் அற்ற ஃபைபர் சீமெந்து சீட்

கூரை - சீலிங் - பார்ட்டிஷனிங்

வீட்டுக் கூரையை அமைக்க புதிய வழிமுறை

உங்கள் வீட்டுக் கூரையை அமைப்பதற்கு, பாதுகாப்பான சர்வதேசத் தரங்களுக்கு அமைந்த நவீன ஐரோப்பியத் தொழில்நுட்பம் கொண்ட SWISSTEK ஃபைபர் சீமெந்து சீட்களை நாடுங்கள்.



நாடெங்கிலுமுள்ள லங்காடைல்ஸ் மற்றும் ஸ்விஸ்டெக் விற்பனை முகவர்களிடமும் விநியோகஸ்தர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

சீட் ஒன்றின் விலை ரூ 700 தொடக்கம்

www.swisstekceylon.com

# கிழக்கில் 445 பேருக்கு விரைவில் தொண்டர் ஆசிரியர் நியமனங்கள்

கொழும்பு,பெப்.12

கிழக்கு மாகாணத்தில் விரைவில் 445 பேருக்கு தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஏ.எஸ்.எம்.அனிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்டத்தில் 135 பேருக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 61 பேருக்கும், திருகோணமலை மாவட்டத்தில் 249 பேருக்குமாக 445 பேருக்கு தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

வெகு விரைவில் அனைவருக்கும் நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. அவர்களுக்கு ஒரு மாதத்துக்குள் நியமனங்கள் வழங்கி வைக்கப்படும்.

பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்ற சிலர், தாமதமாகத் தங்களது தகவல்களை வழங்கியவர்களின் விவரங்கள், மாகாண கல்வி அமைச்சரால் அமைச்சரவை அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.-என்றார். (ஐ)

# மட்டக்களப்பில் கிரிக்கெட் பயிற்சி நிலையம் அமைக்க நடவடிக்கை

மட்டக்களப்பு,பெப்.12

கிழக்கு மாகாணத்திலுள்ள கிரிக்கெட் வீரர்களின் திறமைகளை மேம்படுத்தும் பொருட்டு, மட்டக்களப்பில் அனைத்து வசதிகளையும் கொண்ட கிரிக்கெட் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.-இவ்வாறு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவரும், பிரதி சபாநாயகருமான திலங்க சுமதிபால தெரிவித்தார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட கரையோர பிராந்திய கிரிக்கெட் விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பில் கிரிக்கெட் விளையாட்டு, முன்னேற்றம் அடைவதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன். பொதுவாக பாடசாலை மற்றும் கழக மட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் எம்மால் வகுக்கப்பட்டுள்ளன.

அவற்றை நடைமுறைப்படுத்தும்போது பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்துவிடும்.

கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களினதும், மத்திய இடமான மட்டக்களப்பில் கிரிக்கெட் பயிற்சி நிலையத்தை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.-என்றார்.

கிரிக்கெட் வீரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது தேவைகள் குறித்தும், அம்பாறை மாவட்டத்தில் கரையோர பிராந்தியத்துக்கென பிரத்தியேகமாக கிரிக்கெட் சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் கழகங்களின் பிரதிநிதிகள் கோரிக்கைகளை முன்வைத்தனர். (ஐ)

1717 FOLLOW US

நவீன உலகில் காவியம் பாடும் காதல் கதைகள்



2020
இனை அழைத்து
அழகிய காதல் கதைகளுக்கு சரியான பதிலளித்து இலட்சக்கணக்கான பணப் பரிசுகளை வெல்லுங்கள்!

| | |
|---|---|
| முதலாவது பரிசு | ரூ. 300,000 |
| இரண்டாவது பரிசு | ரூ. 200,000 |
| மூன்றாவது பரிசு | ரூ. 100,000 |
| ஆறுதல் பரிசுகள் 10 - | ரூ. 20,000 வீதம் |

ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் உடனடி பரிசு ரூ. 200/- (ரீலோட்)

Sri Lanka Telecom Mobitel

WP/GT/476S

கலப்படமற்ற உயர்தரத்தின் உன்னத நம்பிக்கை!



எமது சின்னம் பற்றி உங்களுக்குத் தெரியுமா ?

பாரிய கனவுகளுடன் வீடு கட்டும்போது உருக்குக் கம்பிகள் எப்போதும் அதன் அத்திவாரத்தில், சுவரில், லிண்டலில், தூணில் உபயோகப்படுத்துவது அவற்றின் உறுதிப்பாட்டை மென்மேலும் அதிகரிப்பதற்கேயாகும். நீங்கள் நிர்மாணிக்கும் கட்டடங்களுக்கு ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் பொருளே உருக்குக் கம்பி. எனவேதான் இது பற்றி இரு முறை சிந்திக்காமல் இருக்கத்தான் லங்வா வர்த்தகச் சின்னம் உருக்குக் கம்பியில் பதிக்கப்பட்டிருக்கின்றது.

உறுதிப்பாட்டில் குறைந்த கம்பிகளை கொள்வனவு செய்து கைசேதப்படாதீர்கள்!

www.ceylonsteel.com

OTBARS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாடகைக்கு உண்டு

யாழ் மாநகரசபை எல்லைக்குள் 4அறைகள் கொண்ட புதிய வீடு வாடகைக்கு உண்டு. வாகன தரிப்பிட வசதி உண்டு.

**071 818 6362/ 077 454 0695**

### இணைய வியாபாரத்தில் வேலை வாய்ப்பு

வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்திற்கு முகாமையாளர் மற்றும் Designers தேவை

077 758 5969

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

CD-200, 86 XXXX

077 766 8041

### காணி விற்பனைக்கு-மல்லாகம்

K.K.S வீதியிலுள்ள விசாலாட்சி வித்தியாசாலைக்கு அருகில் வீட்டுடன் சேர்ந்த 20.75 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. இந்தக் காணி திருமண மண்டபம் அல்லது தங்கு விடுதி (Hotel) அமைக்க உகந்த இடமாகும்.

021 321 9802

### காணி விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கு கற்புலத்தடியில் அமைந்துள்ள 21 பரப்புக் காணி.வீடு கட்டவும் உகந்தது. தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

077 272 8555, 021 223 0315

### வாடகைக்கு

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள 1500 சதுரஅடி கொண்ட முதலாம் மாடி கட்டடம்(மாபிள் பதிக்கப்பட்ட) வாடகைக்கு உள்ளது. அலுவலகம் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 077 324 8867**

### சாரதி தேவை

கொழும்பில் சகல இடமும் தெரிந்த சாரதி தேவை. தங்குமிட வசதி உண்டு. வேன்/கார் அனுமதிப்பத்திரங்கள் உடையவர்களும் முப்பது வயதிற்கு மேற்பட்டவர்களும் விரும்பத்தக்கது.

077 539 6262

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மூல நட்சத்திரம் 24 பாவத்தை உடைய Engineer மணமகனுக்கு (25 -28) வயதிற்கு உட்பட்ட மணமகள் தேவை.

**078 644 1200**

### மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம். 1981. அச்சுவினி 2 ஆம் பாதம். செவ்வாய்க் குற்றமற்ற தனியார் IT பட்டதாரி தொழில் புரியும் மணமகளுக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

077 156 8181

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

அரியாலை நெடுங்குளம் சந்தியிலிருந்து (A9) 100 m தொலைவில் 3 அறைகளுடன் கூடிய வீட்டுடன் காணி உடன் விற்பனைக்குண்டு.

077 033 3910 / 021 221 1414

### வேலையாள் தேவை

Wellawatta யில் உள்ள Communication ஒன்றுக்கு காசாளர், Mobile phone திருத்துனர் Software, hardware தங்கி இருந்து வேலை செய்வதற்கு வேலையாள்கள் உடன் தேவை.

**077 707 8577**

### வீடு வாடகைக்குண்டு

இல. 166. கோயில் வீதி. நல்லூர். யாழ்ப்பாணத்தில் 2000 சதுர அடி கொண்ட சகல வசதியுடைய வீடு வாடகைக்குண்டு.

076 352 7443, 077 626 8226

### Partner தேவை

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் விற்பனை செய்வதற்கு பணம் முதலீடு செய்யக்கூடிய Partner தேவை.

தொடர்புகளுக்கு: A.ஜீவா

075 722 7378

### தேவை

திருமணப் பொருத்தம் பார்ப்பதில் அனுபவமுள்ள 30-40 வயதுக்குட்பட்ட கணினி அனுபவமுள்ள பெண் உதவியாளர் தேவை.

077 685 6072

### வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரம், அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

077 758 5412, 077 300 1763

### இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

## S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

**தினசரி காலை 8 மணி முதல் மாலை 6.00 மணிவரை**

**இல.19, பலாலி வீதி,**
**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**
**072 681 6681, 076 557 5394**

### தேவை

மானிப்பாயில் உள்ள நிறுவனத்திற்கு ஜீக்கி மெசினில் தைக்கக் கூடிய பெண்கள் உடனடியாக தேவை.

**076 329 0663, 077 857 8444**

### காணி விற்பனைக்கு

வேலணை குறிகாட்டுவான் வீதியில் உள்ள 100 யார் தூரத்தில் 05 பரப்பு காணி தூய உறுதியுடன் விற்பனைக்குண்டு. இது மின்சாரம், தண்ணீர் பெறக்கூடிய, குடியிருப்புக்கு உகந்த இடமாகும்.

**077 830 8941**

### வேலையாள்கள் தேவை

- Graphic Disigner Printing அனுபவம் உள்ளவர். ஆரம்ப சம்பளம்-25000/=
- Screen Priting செய்யக்கூடிய அனுபவம் உள்ளவர். ஆரம்ப சம்பளம்-15000/=

Evergreen printers
693, K.K.S. Road,
077 714 1444

### புதிய கார் விற்பனை

Micovo Panda Cours - 2013
NP CAO (XXXX)

**077 605 2399**

### உடனடி வேலைவாய்ப்பு - பெண்கள்

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக பிரபல ஆய்வு கூடம் (சிமெட் வைத்தியசாலை) இற்கு துப்புரவாக்கல் தொழிலாளி உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். இன்று (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் தொடர்பு கொள்ளலாம்.

Ceymed(pvt)Ltd - 071 453 5258
No.514, Hospital Road, Jaffna - 021 221 9777

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 71 பூச நட்சத்திரம் 5' 6" Computer Diploma படித்து விட்டு தனியார் துறையில் தொழில் புரியும் நன்நடத்தை உள்ள, தீய பழக்கங்கள் எதுவும் அற்ற நன்மதிப்பைப் பெற்ற மணமகனுக்கு படித்த அழகிய தகுதியான மணமகளை எதிர்பார்க்கின்றோம். சைவ போசனம் விரும்பத்தக்கது. (பொறுப்புக்கள் அற்ற விவாகரத்து)

**077 834 7660**




கொமர்ஷல் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணத்தைப் பெற்று வருடம் முழுவதும் ரூபா 4 மில்லியனுக்கு மேல் பரிசுகளை வெல்லுங்கள்...

- வருட இறுதிச் சீட்டிழுப்பில் **DATSUN redi-GO** மோட்டார் வாகனம் ஒன்றை வெல்லும் வாய்ப்பு
- ஒவ்வொரு 3 மாதத்திற்கொருமுறை சீட்டிழுப்பு
- Yamaha ஸ்கூட்டர் 4, LED TV 12 மற்றும் ரூபா.10,000 வீதம் 84 பேருக்கு பணப் பரிசுகள்
- Remittance கார்ட் உரிமையாளர்களுக்கு இரு மடங்கு வெற்றி வாய்ப்பு

கொமர்ஷல் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணத்தைப் பெற்று வருடம் முழுவதும் அதிகமதிகமாய் பரிசை வெல்லுங்கள்.

2017 டிசம்பர் 31 வரை கொமர்ஷல் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் பெறும் அனைவருக்கும் சீட்டிழுப்பில் வெல்லும் வாய்ப்பு.

**e-Exchange**

MoneyGram money transfer · Ria MONEY TRANSFER · XPRESS MONEY

COMMERCIAL BANK

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.facebook.com/CombankSL · +94 112 353 596 · www.combank.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கேள்வி கோரல்

**ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் உரும்பிராய் வேலைத் தளத்தில் (வேம்பன் வீதி, உரும்பிராய்) பின்வரும் ஆர்.சி. கம்பங்கள் கேள்வி கோரப்படுகின்றது.**

**01) 8.3 மீ ஆர்.சி. கம்பங்கள் (மின்கம்பம்)**
**02) 6.7 மீ ஆர்.சி.கம்பங்கள் (தொலைக்கம்பம்)**

கேள்விகோரல் மீளளிக்கப்படாத ரூபா 1000/= ஆயிரம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி **22.02.2017 ஆம் திகதி 2 மணிக்கு முன்னர் தலைவர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், இல.27, வொக்சோல் வீதி, கொழும்பு - 2** இற்குப் பதிவுத் தபாலில் அல்லது **நேரடியாக தலைமைக் காரியாலயத்தில் உள்ள கேள்வி கோரல் பெட்டியில் போடலாம்.** அன்றையதினம் 3 மணிக்கு விண்ணப்பம் திறக்கப்பட்டு அதி கூடிய விலைகோரலுக்கு வழங்கப்படும். அதி கூடிய விலைகோருபவர் அதற்கான முழுப்பணத்தையும் செலுத்தி ஒரு வாரத்துக்குள் பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்,**
**இல.27, வொக்சோல் வீதி, கொழும்பு 02.**



# யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டுக்கல்வி தினம்

**Australia, New Zealand, Malaysia**
மற்றும் **Singapore** ஆகிய நாடுகளில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உயர் கல்வியை பெறுங்கள்.

Date - 19th February 2017
Time - 10.00am - 4.00pm
Venue - Tilko Jaffna City Hotel

Entrance **FREE**

- **FREE** information on 75 Universities & Institutions
- Scholarships & **FREE** Application processing
- Study options available in : **Foundation, Diploma, Bachelor's & Postgraduate**
- மாணவர் விசாவுக்கான இலவச வழிகாட்டல்கள் வழங்கப்படும்
- Australia/ New Zealand நாடுகளில் உங்களுடைய குடும்பத்தினர் / நண்பர்கள் இருந்தால் அவர்கள் மூலம் நீங்கள் எவ்வாறு உதவி பெறமுடியும் என்பது பற்றிய வழிகாட்டல்களை வழங்குவோம்.
- **iELTS/PTE** coaching **FREE** of charge*

* Conditions apply

**FOR REGISTRATIONS CALL 021 5 700 750**

edlocate 17 years of excellence
Reach Light Beyond Borders
www.edlocate.lk

200, Sivan Pannai Road, Jaffna.
E- jaffna1@edlocate.lk
Follow Us On

## பனையிலிருந்து விழுந்தவர் சிகிச்சையில்

தென்மராட்சி, பெப்.12

30 அடி உயரமான பனையிலிருந்து வீழ்ந்த முதியவருக்கு இடுப்பு மற்றும் கழுத்துப் பகுதிகளில் பலத்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை மந்துவில் கிழக்கில் நடந்துள்ளது. கள் எடுப்பதற்காக வர மரத்தில் ஏறியபோதே அவர் தவறி வீழ்ந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த வேலன் யோகராசா (வயது-63) என்பவரே பாதிப்புக்குள்ளாகி சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ம-9)

## கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரம் விற்பனைக்கு

**சிறிய, நடுத்தர, பெரிய முதலீட்டாளர்களுக்கு ஏற்ற வகையில் அனைத்து வகையான இயந்திரங்களும், உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள்ள முடியும். (அனைத்து பறவை முட்டைகளையும் பொரிக்க வைக்க முடியும்)**

**அ.பகீரதன் - 077 660 0711**

## We Need You...

O/L தகைமை மட்டும் உடையவரா நீங்கள்?
கவலை வேண்டாம் இன்றே எம்முடன் இணையுங்கள்
இதோ!
நாடு பூராவும் இயங்கிக் கொண்டிருக்கும் எமது Grantan Group கம்பனிக்குப் புதிய கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இங்கு
பயிற்சி இல்லாதவர்களுக்குப் பயிற்சியும் பயிற்சியின் போது (18,000/=. - 25000/=) பின்னர் 50,000/= +EPF. ETF உடன் புதிய கிளைகளுக்கான நிரந்தர வேலை வாய்ப்புக்கள். தங்குமிட வசதியுடன், மருத்துவ வசதிகளும் இலவசம்.
நேர்முகத் தெரிவு வவுனியாவில் இடம்பெறும்.

**41A, சூசைப்பிள்ளையார் குளம் வீதி, வவுனியா.**
077 999 4807, 076 989 5016

## வேலை வாய்ப்பு

**"கோல்டன் குறூப் கம்பனி"** தனது 02 ஆவது கிளையினை திறந்துள்ளது. அதற்காக யாழ். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசசங்களை சேர்ந்த இளைஞர்கள், யுவதிகளுக்கு குறைந்தபட்ச தகைமையுடன் பதவி வெற்றிடம்

**1. விற்பனை பிரதியாளர்** **2. மேற்பார்வையாளர்**
**3. உதவி முகாமையாளர்** **4. அலுவலகப் பெண்**

அடிப்படைச் சம்பளம் 18500 + கொமிசன் + போக்குவரத்துவசதி, தங்குமிடம், உணவு இலவசம் (தூர இடங்களில் இருந்து வருவோருக்கு) 120 - 150 நாள்கள் பயிற்சியளித்து உள்வாங்கப்படுவர். பயிற்சியின் நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும்

**வயதெல்லை: 18 - 38**
**உடன் தொடர்புகொள்ளவும்: 077 998 7699/ 077 884 8188**
**இல.129, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



29.01.2017 ஞாயிற்றுக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தில்
நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
**கலைத்துறையில் கலைமாணிப் பட்டத்தினைப்** பெற்ற
**றுமினா**
**றெஜிமோகனதாஸ்**
(B.A)
அவர்களைப் பாராட்டி மேன்மேலும்
பல பட்டங்களைப் பெற
எல்லாம்வல்ல இறைவனின்
ஆசியை வேண்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
**கணவன், மகன்,அம்மா, அப்பா, அண்ணாமார், அக்கா, மாமா, மாமி, மச்சாள்மார்.**
செல்மேரிஸ், இல.17, முதலாம் ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

## பல் தேசிய நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

**Educational Technologies Pvt Ltd**
இலங்கையில் தனது 20 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் வகையில் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

(Jaffna Branch)

- Training Marketing Executive
- Marketing Executive (With one year Experience)

G.C.E.A/L சித்தி பெற்ற உங்களுக்கான ஓர் அரிய வேலைவாய்ப்பினை வழங்கவிருக்கின்றது.

**Training Period** Rs. 30, 000
**After Training** Rs.60,000

→ Over seas travel
→ Vehicle Allowance

ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.



G.Anthany
Branch Manager
077 356 6835
Jaffna Pioneerhouse@gmail.com
No 100 2nd Floor Manipay Road, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பத்து இலட்சம் தொழில்களை உருவாக்கும் தேசிய செயற்றிட்டத்தின் ஒரு நடவடிக்கை

# சுயசக்தி

## இருபத்தையாயிரம் எண்ணங்கள் - இருபத்தையாயிரம் வியாபாரங்கள்

புதிய வியாபாரங்களை ஆரம்பிக்கும் புதிய எண்ணங்களை நீங்கள் கொண்டிருக்கிறீர்களா? எவ்வித தாமதமுமில்லாமல் அதனை நீங்கள் ஆரம்பிக்க வேண்டுமா? இதனைப் பெரிதாக்கி வளர்த்தெடுக்கும் விதத்தில் சோர்வின்றி உழைப்பதற்கு நீங்கள் விரும்புகின்றீர்களா? இவற்றையெல்லாம் நீங்கள் கொண்டிருந்தும் நிதிப் பிரச்சினை உங்களை பிடித்திழுக்கின்றதா? ஒன்றிற்கும் யோசிக்க வேண்டாம். சுயசக்தி இவ்வியாபாரங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டமாகும். இது உங்களைப் போன்று மக்களை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்ட திட்டமாகும். "பத்து இலட்சம் தொழில் நிகழ்ச்சித்திட்டத்தின்" பகுதியாக 25,000 எண்ணங்கள் - 25,000 வியாபாரங்களை மாற்றியிருக்கின்றோம். நாடு முழுவதுமுள்ள உங்களுக்கு கிடைக்கும் அழைப்பே இது.

வியாபாரங்களைத் தொடங்குவதற்காக புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள கடன் திட்டத்தின் கீழ், பெயரளவு வட்டி வீதமான 5.5% வழங்கப்படவிருக்கும் உயர்ந்தபட்சக் கடனான ரூ. 200,000 இற்கு புறம்பாக, வியாபாரத்தினை தொடங்கும் பொழுது ஏற்படும் ஆரம்பச் செலவினங்களைப் பூர்த்தி செய்வதற்காக ரூ. 50,000 கொண்ட உயர்ந்தபட்சக் கொடையொன்று வழங்கப்படும். ஏற்கனவேயுள்ள வியாபாரங்கள் 5.5% கொண்ட வட்டியுடன் ரூ. 250,000 கொண்ட உயர்ந்தபட்சக் கடனைப் பெறும்.

### யாருக்கு?

கிராமிய மட்டத்தில் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபார முயற்சியை ஆரம்பிக்க நினைத்திருப்பவர்களுக்கு அல்லது தற்போது செய்துகொண்டிருக்கும் வியாபாரத்தை மேலும் விஸ்தரிக்க நினைத்திருப்பவர்களுக்கு

கிராமத்தில் உள்ள விஷேட வளம், தகவல் தொழில்நுட்பத் துறை அல்லது சூழல் நட்புறவான உற்பத்தித் துறை ஆகிய துறைகளில், புதிய வியாபார முயற்சியை ஆரம்பிக்கும் எண்ணத்தைக் கொண்டிருக்கும் தொழில்முயற்சியாளர்களுக்கு

இளைஞர்கள், யுவதிகள், இளம் பட்டதாரிகள், பல்வேறு தேவைகள் மற்றும் விஷேட தேவைகளைக் கொண்ட மக்களுக்கு

### கடன் தொகை மற்றும் வட்டி

ஆண்டுக்கு 5.5% வட்டியுடன் உயர்ந்தபட்சம் ரூ. 250,000 கடன் தொகையாக வழங்கப்படும்.

### செயற்படுத்தும் முறை

இலங்கை மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வசதியின் கீழ் நாடு முழுவதிலுமுள்ள அரச மற்றும் தனியார் வர்த்தக வங்கிகள் 17இன் பங்களிப்புடன் சிறப்புச் செயற்றிட்டமாக இது செயற்படுத்தப்படும்.

ஆரம்பிக்கவிருக்கும் புதிய வியாபார முயற்சி தொடர்பான செயற்திட்டத்தை கடன் பெற்றுக்கொள்வோர் முன்வைத்தல்.

அரச மற்றும் தனியார் வங்கிகள் மூலம் அல்லது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறிய வியாபார அபிவிருத்தி பிரிவூடாக செயற்றிட்ட முன்மொழிவுகள் மதிப்பிடப்படும்.

புதிய வியாபார முயற்சியாளர்களுக்கு செயற்றிட்டத்தின் ஆரம்பச் செலவுகளுக்காக ரூ. 10,000 மீளப் பெறாத தொகையாக வழங்கப்படும். புதிய தொழில்முயற்சியாளர்கள் அதற்கு இணையான பங்களிப்பை தாமும் வழங்கி செயற்றிட்டத்தை ஆரம்பித்தல் வேண்டும்.

வருடாந்த 5.5% வட்டியுடன் உயர்ந்தபட்சமாக ரூ. 200,000 கொண்ட தொகை கடனாக வழங்கப்படும்.

ஆறு மாதங்களுக்கு வியாபாரம் வெற்றிகரமாக நடாத்தப்படுவது கண்காணிக்கப்பட்டு, ஆறு மாத காலத்திற்குள் மீள அறவிடப்படாத ரூ. 40,000 கொண்ட கொடை வழங்கப்படும்.

தற்போது காணப்படும் வியாபாரத்திற்காக வருடாந்தம் 5.5% வட்டியுடன் ரூ. 250,000 வரையான உயர்ந்தபட்சக் கடன் தொகை வழங்கப்படும்.

### மேலதிக கடன்

வியாபார முயற்சியின் வெற்றியின் அடிப்படையில் மிதமான வட்டி வீதத்தில் மேலதிகக் கடன் தொகையை பங்கேற்கும் தொடர்பான வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

### கடன் பெற்றுக்கொள்ளக்கூடிய துறைகள்

#### விவசாயம்

- பழங்கள் மற்றும் மரக்கறி வகை பதனிடல்
- செடி மற்றும் நாற்றுமேடை அபிவிருத்தி
- சேதன விவசாயம் மற்றும் உரம்
- பாற்பண்ணை மற்றும் கோழிப் பண்ணை
- மீன் வளர்ப்புத் தொழில்
- அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம்

#### கைத்தொழில்

- ஒட்டு வேலை
- ஆடைக் கைத்தொழில்
- கொன்கீறிட் தயாரிப்பு, பரப்பிடுதல் மற்றும் ஏனையவை
- தோல் உற்பத்திகள்
- கட்டட வேலை, நிறம் பூசுதல் மற்றும் தச்சு வேலை
- பிளாஸ்திக் மற்றும் இறப்பர் பதனிடல்
- உலோகப் பொருள் உற்பத்திகள்
- இரத்தினக் கல் வெட்டல் மற்றும் பட்டை தீட்டுதல்

#### சேவை

- விவசாயப் பொருட்களைச் சேகரிக்கும் மத்திய நிலையம்
- சுற்றுலாச் சேவை, சிற்றுண்டிச்சாலை மற்றும் பொழுதுபோக்குச் சேவை
- தோட்டப் பயிர்ச்செய்கை மற்றும் தரைமட்டப்படுத்தல்
- அழகு நிலையங்கள், பாலர் பாடசாலை மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிலையம்
- தகவல் தொழில்நுட்பம் (IT) அச்சிடல், இணையம், தொலைபேசி மற்றும் கணனி திருத்த வேலை
- அச்சுக் கைத்தொழில்
- குளிர்சாதனம் மற்றும் AC ஆகியன தொடர்பான சேவை
- மோட்டார் சைக்கிள் திருத்த வேலை
- கணனி மென்பொருள் பிரயோக அபிவிருத்தி
- மின் மற்றும் இலக்ரோனிக் உபகரணங்களைத் திருத்துதல் மற்றும் வேறு சிறிய மற்றும் நடுத்தரச் செயற்றிட்டங்கள்

PHOENIX O&M

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

இலங்கை மத்திய வங்கி

மேலதிக விபரங்களுக்கு: அழையுங்கள் 011 2 669 234. கீழே உள்ள வங்கிகளின் எந்தவொரு கிளைக்கும் செல்லுங்கள். பிரவேசியுங்கள் www.swashakthi.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு விடப்படும்

கொக்குவிலில் 6 வருடங்களாக இயங்கி வந்த அழகுக் கலைநிலையம் அனைத்து உபகரணங்களுடனும் மற்றும் வைத்தியசாலை வீதி Srilanka Insurance இற்கு முன்னால் Direct Marketing நிறுவனம் இயங்கி வந்த மேற்தளம் (700 சதுர அடி)உம் வாடகைக்கு விடப்படும்.

**077 786 9760,072224 2203**

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




| | |
|---|---|
| மஜெஸ்டிக் பிளாட்டினம் | 10.00 / 1.00 / 4.00 / 7.00 |
| சில்வர் | 10.15 / 1.15 / 4.15 / 7.15 |
| பிரொன்ஸ் | 10.30 / 1.30 / 4.30 / 7.30 |

விசாரணை ☎ 021- 2227712
Find us on facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## விற்பனைக்கு

ஹோட்டலுக்குத் தேவையான தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

**077 320 0727, 077 252 2996, 077 724 2427**

## வீடு, காணி விற்பனை

சுன்னாகம், நாகம்ஸ் தியேட்டர் எதிரில் உள்ள ஒழுங்கையில் உள்ள நிலப்பரப்பு 2¼ உம், 3 அறைகள் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு.

**077 363 4525, 077 255 3220**

## விற்பனைக்கு

கொழும்பு - 5 புதிய வடிவில் நிர்மாணிக்கப்பட்ட தொடர்மாடி மனை வீடு Layard's வீதியில் விற்பனைக்குண்டு. 1000/ 1600 / 2500 சதுர அடி. April 2017 இல் உறுதி கிடைக்கும்.

**RE/MAX கஜன்- 077 934 7222**

## விற்பனை

புத்தம் புதிய தொடர் மாடி வீடுகள் வெள்ளவத்தையில் விற்பனைக்கு. 3 bedrooms- 1450 sqft
3 bedrooms- 25 மில்லியன் (nego) 4 bedrooms- 1700 sqft
3 bedrooms- 30 மில்லியன் (nego)

kajan-077 442 3680

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

டாசன் (ஆண் / பெண்) இன,
றொட் வீலர் (ஆண்) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**077 434 1551**

## விற்பனைக்கு

Photo Copy (Sharp - 5316) Machine, Laminating Machine என்பன விற்பனைக்குண்டு.

**077 078 4729**

## கடை விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி மனோகரா தியேட்டருக்கு அருகில் கடைக்கட்டடம் 12 அடி அகலமும், 24 அடி நீளமும் அதனுடன் சேர்ந்த 12 அடி அகலமும், 55 அடி நீளமும் உடைய பின் பாதை 4 அடியுடன் மேல்மாடிக் கடை விற்பனைக்குண்டு.

**077 661 5973**

## வேலையாள்கள் தேவை

பாட்டா கடைக்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை.

அபிராமி சூ சென்ரர்
நியூ மார்கட், யாழ்ப்பாணம்.
**077 661 5973**

## வேலைவாய்ப்பு

யாழில் உள்ள பிரபல தொலைத் தொடர்பாடல் கம்பனிக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். க.பொ.த.சாதாரண கல்வியறிவு போதுமானது. பயிற்சியுடன் 85,000 இற்கு மேல் சம்பளம் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு.

**078 500 0580, 078 855 7000**

## கடையுடன் வீடு வாடகைக்கு

திக்கம், அல்வாய் மேற்கு, நெல்லியடி வீதி, சித்திவிநாயகர் பாடசாலையடி ! கடையுடன் வீடு வாடகைக்கு(தனியாகவோ/இரண்டும் ஒன்றாகவோ) திக்கம் நெல்லியடி பிரதான வீதியில் எவ்வித தொழிலுக்கும் ஏற்றது. முற்பணம், வாடகை, பார்வை நேர விவரங்களுக்கு

**சேகர்/கயன்/மது: 077 327 7491**

## விற்பனைக்கு

கொழும்பு - 6 : அரை சொகுசு தொடர்மாடி மனை விற்பனைக்கு
கொழும்பு - 6 : 24மில்லியன்/ 3படுக்கையறை/ 1350 சதுரஅடி சிறந்த முதலீடு Sea view/ Upgraded Security Surveillance Individual Parking/ Swimming Pool/ GYM Project Completed/ April 2017 உறுதி கிடைக்கும்.

**தொடர்பு: ரவி - 077 442 3800**

## தேவை

பம்பலப்பிட்டியில் இயங்கி வரும் HOTEL க்கு Cook, RoomBoy, Front Office Bar man வெயிட்டர். தேவை. உணவு, தங்குமிடம் இலவசம்.

**011 250 7161/ 077 749 0307**

## வாடகைத்தாய் தேவை

30 வயதிற்குக் குறைவான பெண் ஒருவர் iuf மூலம் செய்வதற்கு வாடகைத்தாயாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.

077 637 3804

## வேலையாள்கள் தேவை

வடமராட்சியில் இயங்கவுள்ள ரயர் கடை ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.


**077 619 2927**

## 40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற 'றோயல் குளுக்கோஸ்'

தற்போது புதிய வடிவில்!!

இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
**"றோயல் குளுக்கோஸ்"**

Packed By:
Royal Industries, Colombo - 13.
**077 727 7670**




## சிவா நறுமணப் பூங்கா

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 2567**

# மக்களின் நன்மதிப்பை பெற்ற உலக நாடுகளில் முதன்மை நாமமான

20% OFF

BLACK+DECKER DEWALT Ohms STANLEY

PowerTools மற்றும் வீட்டு இலத்திரனியல் உபகரணங்கள்

மீண்டும் யாழ் மக்களுக்காக 20% விசேட விலைக்கழிவுடன்

## KINGS ELECTRONICS(PVT) LTD

வடமாகாண ஏகவிநியோகத்தர்


NO.12, POINT PEDRO ROAD, JAFFNA. | WEB: MYKINGS.LK Tel: 0214546699
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
10.02.2017 தொடக்கம் 17.02.2017 வரை பெற்றுக்கொள்ளலாம்

150 வருடத்திற்கு மேலான நம்பிக்கை வாய்ந்த Delmage கம்பனியிடம் இருந்து




மேலும்
நந்தலாலா ஹாட்வெயர் No.29.Stanley வீதி யாழ்ப்பாணம்.
ஜெசீமாஸ் K.K.Sவீதி யாழ்ப்பாணம்.
ARK Enterprises Stanley வீதி யாழ்ப்பாணம்.
தில்லயம்பதி மோட்டர்ஸ் Stanley வீதி யாழ்ப்பாணம்.
லிங்கம் & Co No.48.Stanley வீதி யாழ்ப்பாணம்.
நாராயணா ஹாட்வெயர் Stanley வீதி யாழ்ப்பாணம்.
கஜமுகன் ஹாட்வெயர் Stanley வீதி யாழ்ப்பாணம்.

ஒரே கூரையின் கீழ் இவ் உபகரணங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் பழுது பார்க்கும் வசதிகள் உண்டு




ஆகிய இடங்களிலும் மேற்குறிப்பிட்ட திகதிகளில் 20% விலை கழிவுடன் பெற்று கொள்ளலாம்

**Delmege Forsyth & Co. Ltd**
101 Vinayalankara Mawatha, Colombo 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுத்துவக்குடன் இளைஞன் கைது

கொழும்பு,பெப்.12
திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரமா நகர் பகுதியிலுள்ள வயல் வெளியில் வைத்து, கட்டுத்துவக்குடன் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என்று சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார், பொலிஸ் வாகனத்தில் வீரமா நகர் பகுதியிலுள்ள வயல் ஓரமாகச் சென்று கொண்டிருந்தனர். அதன் போது துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டுள்ளது.
இதனையடுத்து பொலிஸார் தேடுதல் நடத்தினர். அந்தப் பகுதியில் கட்டுத்துவக்கின் மூலமாகக் கொக்குக்கு வெடி வைத்துக் கொண்டிருந்த இளைஞன் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட இளைஞன், சம்பூர் பொலிஸில் தடுப்புக் காவலில் ௵வக்கப்பட்டுள்ளார். அவரை மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை சம்பூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ)

# தேசத்துரோகிகள் ஆக்கப்பட்டோரை தேசிய வீரர்களாக்க கலந்துரையாடல்

## நாளை கண்டியில் நடைபெறும்

கொழும்பு,பெப்.12
பிரிட்டன் அரசால் தேசத்துரோகிகளாகப் பிரகடனம் செய்யப்பட்ட 190 பேரையும் நாட்டுக்காகப் போராடிய தேசியவீரர்கள்எனவர்த்தமானி மூலம் அறிவிக்குமாறு, இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.
இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கான விசேட கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை கண்டியில் நடைபெறவுள்ளது.
நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ச மற்றும் ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக ஆகியோரது பங்குபற்றலுடன் கண்டி தலதா மாளிகையில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.
இந்தக் கலந்துரையாடலுக்கு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும், வேறு ஒரு வேலை நிமித்தம் காரணமாக தன்னால் இந்தக் கலந்துரையாடலுக்கு சமுகமளிக்க முடியாது என அவர் ஏற்பாட்டுக்குழுவுக்கு அறிவித்துள்ளார் எனத் தெரிய வருகிறது.

> 1818 ஆம் ஆண்டு தேசத்துரோகிகளாகப் பிரகடனம் செய்யப்பட்ட மேலும் பலர் தேசிய வீரர்களாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

1818 ஆம் ஆண்டு பிரிட்டன் ஆட்சிக்கு எதிராக ஊவா-வெல்லஸ்ஸ பகுதியில் கிளர்ச்சி செய்த 19 பெரும்பான்மையினத் தலைவர்களை, நாட்டுக்காகப் போராடிய தேசிய வீரர்கள் என வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரச தலைவர் பிரகடனம் செய்திருந்தார்.
இந்த நிலையில் 1818 ஆம் ஆண்டுதேசத்துரோகிகளாகப் பிரகடனம் செய்யப்பட்ட மேலும் பலரை தேசிய வீரர்களாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
1804 ஆம் ஆண்டு ஜூன் 7ஆம் திகதி தேசத்துரோகிகளாகப் பிரகடனம் செய்யப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் 190 பேரையும், நாட்டுக்காகப் போராடிய தேசிய வீரர்கள் எனப் பிரகடனம் செய்யுமாறு இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச ஆகியோருக்குக் கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.
அதில் 1804 ஜூன் 7 ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலையும் இணைத்து அனுப்பியிருந்தார் எனத் தெரியவருகிறது.
1804 ஆம் ஆண்டு தேசத்துரோகிகளாகப் பிரகடனம் செய்யப்பட்டவர்களையும், தேசிய வீரர்களாக அறிவிக்க அரசு கவனம் செலுத்தியுள்ளது.
அதற்கமைய குறித்த விசேட கலந்துரையாடலின் போது இந்த விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாட்டைப் பிரிப்பதற்குப் பலர் முயற்சி அதை நானே தடுத்து நிறுத்தினேன்

### இப்படிச் சொல்கிறார் மகிந்த

கொழும்பு,பெப்.12
போரால் நாட்டை இரண்டாகப்பிரிப்பதற்கு பலர் முயற்சித்தனர். அந்த முயற்சியை நான் தடுத்து நிறுத்தி, நாட்டை ஒருமைப்படுத்தினேன். இவ்வாறான நிலையில், அரசமைப்பின் சூழ்ச்சியின் ஊடாக, நாட்டை பிரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த முயற்சிக்கு நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன்.- இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.



மீகொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசமைப்பில் திருத்தம் அல்லது புதிய அரசமைப்பின் ஊடாக, நாட்டுக்குப் பெரும் ஆபத்து ஏற்படப் போகின்றது. அதுமட்டுமன்றி, கடன் மற்றும் முதலீடு ஆகிவற்றைப் பெற்றுக்கொள்ளும் போர்வையின் கீழ், வெளிநாட்டவருக்கு நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கான முயற்சியும் இடம்பெறுகின்றது. அதற்கும் ஒருபோதும் நாம் இடமளிக்கக்கூடாது.-என்றார். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாத்திரிகர்கள் பயணித்த கார் விபத்தில் சிக்கியது

## ஒருவர் சாவு: மூவர் காயம்

கண்டி,பெப்.12
மஸ்கெலியா - ஹற்றன் பிரதான வீதியில் மஸ்கெலியா - கிளன்டில் பகுதியில் காரொன்று விபத்துக்குள்ளானது. காரில் பயணித்த ஒருவர் உயிரிழந்தார். மூவர் காயமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனொளி பாத மலைக்குச் சென்று, மீண்டும் அம்பாறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த யாத்திரிகர்கள் பயணித்த காரே, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9.30 மணியளவில் பாதையை விட்டு விலகி சுமார் 10 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமுற்றவர்கள் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். உயிரிழந்தவரின் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துத் தொடர்பிலான விசாரணைகள் தொடர்வதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# தமிழர்களுக்கான உரிமைக்குரலை எந்த அரசாலும் நசுக்க முடியாது

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கலையரசன் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.12
தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைக் கோரும் போராட்டத்தின் குரலாக உலகெங்கும் முழங்கிக் வரும் தமித் தேசியக் கூட்டமைப்பினருக்கும், அதன் தலைமைகளுக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுப்பதன் மூலம் அவர்களின் குரலை நசுக்கி, தமிழ் மக்களின் உரிமையை வழங்காது அரசு தட்டிக்கழிக்க முடியாது.- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் டி.கலையரசன் தெரிவித்தார்.



அம்பாறை - திருக்கோவில் மண்டானை பாடசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்பினர்தமதுஉயிரைவிட தமிழர்களின் உரிமையையே மேலாகக்கொண்டுசெயற்பட்டு வருகின்றனர். எமது போராட்ட வரலாற்றில் இலட்சக்கணக்கான உயிர்களையும், தலைமைகளையும் இழந்து, இன்றும் எமது சுயநிர்ணய உரிமையைக் கோரி நிற்கின்றோம். தமிழர்களின் கண்ணீருக்கு ஒரு விடிவு கிடைக்கும் வரை நாம் எமது உயிரை துச்சமாக மதித்துப் போராடுவோம்.

தற்போது இடம்பெறும் உயிர் அச்சுறுத்தல் கபடநாடகத்துக்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமைகள் அஞ்சப் போவதில்லை. இவ்வாறு கதை கூறி தமிழ் மக்களையும், அதன் தலைமைகளையும் ஓரம் கட்ட முடியாது. தமிழ் மக்களின் நம்பிக்கையும், பலமும் எம்மோடு இருக்கின்றன- என்றார். (ஐ)

# மரப்பொந்திலிருந்து வெடிப்பொருள்கள் மீட்பு

கொழும்பு,பெப்.12
மெதகிரிய, யுதகனாவ பிரதேசத்தில் மரப்பொந்திலிருந்து, 71 தோட்டாக்கள் மற்றும் கைக்குண்டு என்பவை நேற்று முன்தினம் இரவு கைப்பற்றப்பட்டுள்ளன என்று மெதகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.
விமான எதிர்ப்புத் தோட்டாக்கள், ர-56 ரகத் தோட்டாக்கள் 66, எம்.பீ.எம்.ஜீ.ரகத் தோட்டாக்கள் 5 உள்ளிட்ட பல வெடிபொருள்களைப் பொலிஸார் கைப்பற்றினர்.
பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து, நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, இந்த வெடிப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கட்சிகளுக்கா மக்களுக்கா புதிய அரசமைப்பு?

புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள் தொடர்பில், இரண்டு நாள்களின் முன்னர் "மீண்டும் முருங்கை மரம் ஏறும் வேதாளம்" என்று இந்தப் பத்தியில் வர்ணித்திருந்தோம். அதை ஏற்று வழிமொழியும் வகையில் கொழும்பில் அடுத்த நகர்வு இடம்பெற்றுள்ளது. அரசமைப்பு உருவாக்கத்தில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்காக அனைத்துக் கட்சிக் குழு ஒன்றை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமிக்கவுள்ளார் என்று செய்திகள் வெளியாகின்றன.

ஒட்டுமொத்த நாடாளுமன்றமுமே அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டுவிட்ட நிலையில், மீண்டும் அரசியல் கட்சித் தலைவர்கள் குழு மட்டத்தில் இந்த விடயத்தை அலச முற்படுவது ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை.

புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பிலான முயற்சி ஆரம்பத்தில் இருந்த ஆரோக்கியமான நிலையில் தற்போது இல்லை என்று அடித்துக்கூறலாம். இதற்குக் காரணம், கொள்கை ரீதியான அடிப்படை ஏதுமற்று, அவ்வப்போது தமது தேவைகள் கருதி ஒன்றிணைந்து செயற்பட முயலும் கட்சிகளின் சுயநலமே. அதனால்தான் ஆட்சி உருவாக்கத்தின்போதும், அதன் பின்னர் சில காலத்திற்கும் இலகுவாக இருந்த புதிய அரசமைப்பு விடயம், அதன் தீர்க்கமான கட்டத்தை அடைந்ததும் சிக்கலை எதிர்கொள்ள ஆரம்பித்துவிட்டது.

புதிய அரசமைப்பு என்பது கட்சிகளின் தேவைக்காக வடிவமைக்கப்படக்கூடாது என்பதை அரசியல்வாதிகள் அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். பிரித்தானிய அரசிடமிருந்து இலங்கை என்கிற நாடு விடுதலை பெற்ற பின்னர் உருவாக்கப்பட்ட இரு அரசமைப்புகளும்கூட, இதேபோன்ற சூழ்நிலையில்தான் உருவாக்கப்பட்டன; அதனால்தான் அவை தோல்வியும் அடைந்தன.

பிரித்தானிய ஆட்சியில் வகுத்தளிக்கப்பட்ட ஆட்சிமுறைமையில் தமக்கு வேண்டிய திருத்தங்களை சிங்கள பௌத்த மேலாதிக்கம் செய்வதற்காகவே 1972 அரச்மைப்பு உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் முதலாளித்துவம் நோக்கிய தனது நலன்களை நிறைவேற்றிக்கொள்வதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியால் 1978 அரசமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த இரு தருணங்களிலுமே தத்தமது சுய விருப்புக்களை நிறைவேற்றுவதற்காக ஏற்கனவே இருந்த அரசமைப்புகளில் இருந்த சிலவற்றை நீக்கியும் தமக்கு வேண்டியவற்றைச் சேர்த்தும் புதிய அரசமைப்புகள் நிறைவேற்றப்பட்டன. மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பில் பல அம்சங்கள் அவற்றில் சேர்க்கப்பட்டாலும்கூட, அவை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை; ஏனெனில் அவையெவையும் கட்சிகள் விரும்பி ஏற்ற விடயங்களில்லை. கட்சிகள் விரும்பி ஏற்றுக்கொண்ட விடயங்கள் மட்டும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

இப்போது இருக்கும் அரசமைப்பிலும்கூட முக்கிய இரு கட்சிகளுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாகத் தேர்தல் முறையில் அவைகள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. நடைமுறையில் உள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையால் கட்சிகளுக்குள்ளேயே உட்பூசல் வலுக்கிறது. எனவே அதற்குத் தீர்வு காணவேண்டியிருப்பதே முக்கிய கட்சிகளின் தேவையாக இருக்கிறது. அதற்காகத்தான் அவர்களுக்கு அரசமைப்புத் திருத்தம் அல்லது புதிய அரசமைப்புத் தேவையாக இருக்கிறது. எனவேதான், தம்மைச் சிக்கலுக்குள் ஆழ்த்திவிடக்கூடிய சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்தும் விடயம் உள்ளிட்ட மற்றவை குறித்துச் சிந்திப்பதற்கும், விவாதிப்பதற்கும் அவர்கள் தயாராக இல்லை. அதாவது புதிய அரசமைப்பு ஒன்று வேண்டும். ஆனால் அது மக்களுக்கானதாக அல்லாமல், கட்சிகளுக்கானதாக இருக்க வேண்டும் என்றே அரசியல்வாதிகள் இந்தத் தடவையும் எதிர் பார்க்கிறார்கள். புதிய அரசமைப்பை உருவாக்கும் வழிகாட்டல் குழுவில் தனது கருத்துக்களைத் தெரிவிக்காமல் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இழுத்தடிப்பதாகட்டும், இப்போது அனைத்துக் கட்சிக் குழுவைக் கூட்டுவதாகட்டும் எல்லாமுமே புதிய அரசமைப்பின் ஊடாகத் தமது நலனை உறுதிப்படுத்த கட்சிகள் எடுக்கும் உத்திகள்தான்.

அதற்கான மிகச் சிறந்த உதாரணம், முதலமைச்சர்கள் ஒத்துப்போகும் விடயங்கள் மற்றும் ஏற்கனவே விவாதிக்கப்பட்ட அரசியல் தீர்வுப் பொதிகளை ஆராயும்படி கடந்த வழிகாட்டல் குழுக் கூட்டத்தில் தெரிவித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அரசமைப்புத் தொடர்பில் மக்களின் கருத்துக்களை அறிவதற்காக நியமிக்கப்பட்ட செயலணியின் அறிக்கையைக் கவனத்தில் எடுக்குமாறு கூறவேயில்லை என்பதே. இப்படி கட்சிகளின் நலன்களுக்காக ஒரு அரசமைப்பை உருவாக்குவது முதலில் நிறுத்தப்படவேண்டும். மக்களின் தேவைகளுக்கான அரசமைப்பு ஒன்றே உருவாக்கப்படவேண்டும். அதற்கான அழுத்தங்களே இப்போது வழங்கப்படவேண்டும்.

# மூடி மறைக்கப்படும் சிறிலங்காவின் போர்க் குற்றங்கள்

ஆங்கிலத்தில் Bruce Haigh
வழிமூலம் The age
மொழியாக்கம் நித்தியபாரதி

1983ஆம்ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு மே மாதம் வரையான காலப்பகுதியில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் போது தமிழ் மக்களுக்கு எதிராக போர்க் குற்ற மீறல்கள் இடம்பெற்றன என்பதை சிறிலங்காவில் ஆட்சி செய்த சகல அரசாங்கங்களும் மறுத்தே வந்துள்ளன. பெரும்பான்மை சிங்கள மக்களால் சிறுபான்மைத் தமிழ் மக்கள் பாரபட்சமாக நடத்தப்படுவது காலனித்துவ காலத்திலிருந்து இடம்பெற்று வருகிறது. அதாவது இலங்கை பிரித்தானியாவின் நிர்வாகத்துக்கு உட்பட்டிருந்த போது தமிழ் மக்களுக்குச் சார்பான தரப்பினருக்கு பிரித்தானியாவால் நிர்வாகப் பதவிகள் வழங்கப்பட்டன.

சிறிலங்கா சுதந்திரமடைந்த பின்னர், சிங்கள மொழி நாட்டின் உத்தியோகபூர்வ மொழியாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இதனால் கல்வி, தொழில் வாய்ப்புக்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதில் தமிழ் மக்களுக்குத் தடை விதிக்கப் பட்டதுடன், உத்தியோகபூர்வ அமைப் புக்களுடன் தொடர்புகளைப் பேணு வதற்கான வாய்ப்புக்களும் தமிழ் மக்களுக்குப் புறக்கணிக்கப் பட்டன.

1983ல் தமிழ் மக்களுக்கு எதிரான அரச ஆதரவுப் படுகொலைகள் இடம்பெற்றன. இதன் காரணமாக கொழும்பு மற்றும் தெற்கில் வாழ்ந்த தமிழ் மக்கள் வடக்கில் தஞ்சம் புகுந்தனர். சிங்கள பேரினவாதத்திடமிருந்து தமிழ் மக்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தனர். தனிநாட்டுக் கோரிக்கையைப் பாதுகாப்பதற்காக ஆயுதம் ஏந்திய குழுக்கள் செயற்படத் தொடங்கின.

இவ்வாறு தோற்றம் பெற்ற இந்தப் போரானது, 2009ல் முடிவுற்றபோது, அதில் 80,000 வரையான தமிழ்ப் பொதுமக்களும், விடுதலைப்புலிகளும் படுகொலைசெய்யப்பட்டிருந்தனர். இவ்வாறான போர்க் குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்யுமாறு அனைத்துலக சமூகம் பல்வேறு பலமான கோரிக்கைகளை முன்வைத்திருந்தது. குறிப்பாக ஐ.நா தலைமையில் அனைத்துலக நீதிமன்றால் இந்தப் போர்க் குற்றங்கள் விசாரணை செய்யப்பட வேண்டும் எனவும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.

1983ல் தமிழ் மக்களுக்கு எதிரான அரச ஆதரவுப் படுகொலைகள் இடம்பெற்றன. இதன் காரணமாக கொழும்பு மற்றும் தெற்கில் வாழ்ந்த தமிழ் மக்கள் வடக்கில் தஞ்சம் புகுந்தனர். சிங்கள பேரினவாதத் திடமிருந்து தமிழ் மக்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தனர். தனிநாட்டுக் கோரிக்கையைப் பாதுகாப்பதற்காக ஆயுதம் ஏந்திய குழுக்கள் செயற்படத் தொடங்கின.

இதற்கு எதிராக சிங்கள தேசியவாதிகளால் பல்வேறு பரப்புரைகள் மேற்கொள்ளப் பட்டன. இதன் ஒரு பகுதியாக, ஆஸ்திரேலியாவும் இப்பரப்புரையில் இணைந்து கொண்டது. சிறிலங்காவிலிருந்து தனது நாட்டுக்குப் படகுகள் மூலம் வந்தடையும் புகலிடக் கோரிக்கையாளர்களை மீண்டும் அவர்களது சொந்த நாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பது ஆஸ்திரேலியாவின் நோக்காகும். ஆகவே சிறிலங்காவில் போர்க் குற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட்டால், அத்தகைய ஆபத்து நிறைந்த நாட்டுக்கு புகலிடக் கோரிக்கையாளர்களைத் திருப்பி அனுப்ப முடியாது. ஆகவே இதற்காக ஆஸ்திரேலிய அரசாங்கம் சிறிலங்காவிற்கு ஆதரவாக நேரடியாகப் பரப்புரையில் ஈடுபட்டது.

### சந்தர்ப்பவாதக் கூட்டு

தமிழ் மக்களுக்கு எதிரான படுகொலை என்கின்ற தனது கோட்பாட்டை மறைப் பதற்கான முழு ஆதரவை ராஜபக்ச அரசாங்கம் ஆஸ்திரேலியாவிலிருந்து பெற்றுக் கொண்டது. சிறிலங்காவிலிருந்து படகுகள் மூலம் தமிழ் மக்கள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காக சிறிலங்காவின் காவல்துறை மற்றும் கடற்படையினருக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் உதவியது.

ஆனாலும் ஆஸ்திரேலியாவிலிருந்து சட்டத்திற்கு முரணாகத் திருப்பி அனுப்பப்படும் தமிழ் மக்கள் சிறிலங்காவில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

ஆள்கடத்தல்களில் மகிந்த ராஜபக்சவின் சகோதரரும் முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்சவே ஈடுபடுவதாக அறிந்திருந்தும், ஆஸ்திரேலியாவிற்குப் படகுகளில் செல்லும் மக்களைத் தடுத்து நிறுத்துவதற்காக சிறிலங்கா கடற்படையினருக்கு ஆஸ்திரேலிய அரசால் ரோந்துப் படகுகள் வழங்கப்பட்டன.

குறித்த சில சந்தர்ப்பங்களில் மாத்திரமே இவ்வாறான சித்திரவதைகளை நியாயப்படுத்தலாமே தவிர, இது தொடர்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளிவந்துள்ள அறிக்கை அசாதாரணமானது என 2013ல் சிறிலங்காவிற்கு வருகை தந்த போது ஆஸ்தி ரேலியப் பிரதமர் ரொனி அபோற் தெரிவித்திருந்தார்.

சிறிலங்காவில் பல்வேறு சித்திரவதைகள் இடம்பெறுவதற்கான சகல சாட்சியங்களும் உள்ள போதிலும், தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்கள் பொருளாதார நோக்கினாலேயே இவ்வாறு சட்டரீதியற்ற வகையில் நாட்டிற்குள் உள்நுழைவதாக ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பொப் கார் தெரிவித்திருந்தார். இதே போன்றே இவரைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சராகப் பதவி வகித்த ஜூலி பிசப்பும் தெரிவித்திருந்தார்.

**போருக்கான பொறுப்பைத் தமிழர்கள் மீது சுமத்தும் ஆஸ்திரேலிய அரசுக்களது போக்கு**

சிறுபான்மைத் தமிழ் மக்களே சிறிலங்காவில் இடம்பெற்ற உள்நாட்டு போருக்குக் காரணமானவர்கள் என்பதே ஆஸ்திரேலிய அரசாங்கங்களின் நிலைப்பாடாக இருந்துள்ளது. சிங்களவர்கள் போரை வென்றுள்ளனர் எனவும், நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட்டுள்ளது, அத்துடன் இதனைத் தமிழ் மக்கள் கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் ஆஸ்திரேலியாவின் கோட்பாடாகக் காணப்படுகிறது.

அதாவது வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு நிலவுகிறது, தமிழ் மக்களின் நிலங்கள் சிங்கள இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளன போரில் உயிரிழந்த தமிழர்களது கல்லறைகள் அழிக்கப்பட்டுள்ளன, தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர், தமிழ் மக்கள் நாட்டின் பொருளாதாரச் செயற்பாட்டிலிருந்து ஓரங்கட்டப்பட்டுள்ளனர். என்பவைபோன்ற பல்வேறு சிக்கல்கள் நிலவுகின்ற போதிலும், நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானத்தை தமிழ் மக்கள் ஏற்றேயாக வேண்டும் என்பதே ஆஸ்திரேலிய அரசாங்கங் களின் நிலைப்பாடாகக் காணப்படுகிறது.

”

தமிழ் மக்களுக்கு எதிரான படுகொலை என்கின்ற தனது கோட்பாட்டை மறைப்பதற்கான முழு ஆதரவை ராஜபக்ச அரசாங்கம் ஆஸ்திரேலியாவிலிருந்து பெற்றுக் கொண்டது. சிறிலங்காவிலிருந்து படகுகள் மூலம் தமிழ் மக்கள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காக சிறிலங்காவின் காவல் துறை மற்றும் கடற்படையினருக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் உதவியது. ஆனாலும் ஆஸ்திரேலியாவிலிருந்து சட்டத்திற்கு முரணாகத் திருப்பி அனுப்பப்படும் தமிழ் மக்கள் சிறிலங்காவில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

**சிறிலங்கா அரசின் தமிழர் மீதான படுகொலைகள் குறித்து உறுதிப்படுத்தத்தக்க ஆதாரங்கள்**


சிறிலங்கா தொடர்பான மக்கள் தீர்ப்பாயத்தின் விசாரணை 2013ல் பிறேமனில் இடம்பெற்றபோது, அதில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக சிறி லங்கா அரசால் திட்டமிட்ட படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை உறுதிப்படுத்துவதற் கான வலுவான ஆதாரங்கள் உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அத்துடன் இன்றும் தமிழ் மக்களுக்கு எதிரான படுகொலைகள் தொடர்வதும் உறு திப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விசாரணையின்போது புல் வேறு குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன. அதாவது தமிழ் ஆயுதக் குழு உறுப்பினர்கள் கொல்லப்பட்டமை, இவர்கள் மிகத் தீவிர காயங்களுக்கும், மன வடுக்களுக்கும் உள்ளாகியமை போன்றவை நிரூபிக்கப்பட்டன.

அதிபர் மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசும் நாட்டில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு அனைத்துலக சமூகத்தின் கண் காணிப் புடன் கூடிய விசாரணைக்கு அனுமதிக்கப்படும் என 2015ல் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது.

எனினும், அனைத்துலக விசாரணைய எதிர்த்து சிறிலங்காவிற்குள் அழுத்தம் அதிகரித்து வருவது தொடர்பாக அதிபர் சிறிசேன பதிலளித்திருந்தார். அதாவது மனித உரிமைகள் பேரவையின் அனைத் துலக சமூகத்தை உள்ளடக்கிய போர்க் குற்றச்சாட்டு விசாரணையைத் நடை முறைப் படுத்தத் தாம் அனுமதிக்க இய லாது என சிறிசேன தெரிவித்திருந்தார்.

இந்த விசாரணை இடம்பெறுவது மிகவும் முக்கியமானது எனவும், இதன் மூலம் சிறிலங்கா தனது தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள முடியும் எனவும் ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹூசேன் 2016 மார்ச் மாதம் சிறிலங்காவுக்கு வருகை தந்த போது தெரிவித்திருந்தார்.

ஐ.நா வின் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எவ்வித நிர்ப்பந்தத்தையும் சிறிலங்கா மீது ஆஸ்திரேலியா வழங்கவில்லை. படகு மூலம் ஆஸ்திரேலியாவிற்குள் நுழையும் இலங்கையர்கள் அவர்களது நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என 2016 ஆகஸ்ட் மாதம் ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பீற்றர் டற்றோன் கட்டளையிட்டிருந்தார்.



# வாசகர் திருமுகம்

## இது பகல் கொள்ளை தானே?

தனது பாரம்பரியப் பெருமையைத் தக்க வைக்கும் பாங்கில், உதயனது 'புதுவருட மலர் 2017' பின்னைய சில விமர்சனங்களுக்கு அப்பாலும் அமைந்திருந்ததை அக மகிழ்வோடு அண்மையில் நுகர்ந்திருந்தோம். இந்தத் தருணத்தில், உதயனது சீர்மைக்கு ஒரு கரும்புள்ளி' எனும்படியாக, எமது சனசமூக நிலையத்தின் (இடைக்காடு மாணிக்க இடைக்காடர் ச.ச.நிலையம்) பழைய உதயன்' பிரதிகளைத் தேர்ந்தொதுக்கும் பணியின் போது கவலைதரத்தக்க அம்சமொன்று எனது கவனத்துக்கு ஆளாகியது. அதாவது, 'ஆசிரியர்' எனும் தலைப்பில் 2014ஆம் ஆண்டில் பிரசுரமாகியிருந்த இடைக்காடு மகாவித்தியாலய மாணவியொருவரின் கவிதையொன்று, ஒன்றரை ஆண்டுகள் கழித்து அதே தலைப்பில் அப்படியே பிறிதொரு பாடசாலை மாணவர் ஒருவரின் பெயரில் மறு பிரசுரமாகியிருந்தது.

இதன் உண்மைத் தன்மையை நிரூபிக்க, சம்பந்தப்பட்ட உதயன் பக்கங்களின் நிழல் பிரதிகளை இணைத்துள்ளேன். கண்டும் காணாதது போலப் புறமொதுக்கக் கூடியதல்ல இந்தச் சங்கதி. வளர்ந்து வரும் ஓர் இளங் கவிஞரின் மன உத்வேகத்துக்கு உளைச்சல் தரவல்ல ஒரு வகைக் கௌரவப் பிரச்சினை இது. இப்படியான கலை,இலக்கிய ஆக்கங்களின் பகல் கொள்ளை இடம் பெறாது தவிர்க்க, உதயன் மனம் கொள்ளக் கூடாதா?

*ச.எ.கந்தசாமி, அச்சுவேலி*

## சைவ சமயிகள் கருத்தில் கொள்வார்களா?

இன்னமும் இருவார காலத்துள் வரவிருக்கும் சிவராத்திரி தினத்தை சைவசமயிகள் பக்திபூர்வமாக கடைக்கொள்ள வேண்டுமென இந்து சமயப்பேரவை விடுத்துள்ள வேண்டுகோள் இன்றைய காலத்தின் தேவையொன்றே.

கடந்த சில ஆண்டுகளாக குறித்த சிவராத்திரி தினம் கேளிக்கைக்கான ஒன்றாக வெறும் பொழுதுபோக்கை மையப்படுத்திய ஒன்றாக குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அனுட்டிக்கப்பட்டமை, தீவிர சைவசமய ஈடுபாடு கொண்டோரை மனம் நோக வைத்து வந்தது.

அந்த வகையில், வரவிருக்கும் சிவராத்திரி தினத்தை பக்திபூர்வமாக அனுட்டித்துப் பயன்பெறுவோமே!

*க.தவநாதன்*
*கைதடி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் பொ.ஜெசிதரன்

# பாடசாலையின்

## சுகாதாரக் கழகமும் சுகாதார மேன்னிலையும்

பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுகாதாரத் தகவல்களைக் கொண்டு சேர்ப்பதற்கும் அவற்றை அவர் தம் வாழ்வில் கடைப்பிடிக்கும் வழிமுறைகளை தம் செயற்பாடுகள் மூலம் அறிந்து கொள்வதற்குமாகவும் பாடசாலை சுகாதாரக் கழகங்கள் உருவாக்கப்பட்டன. மாணவர்களின் சுகாதார நன்னிலையை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு பாடசாலையிலும் இந்தக் கழகம் உருவாக்கப்படல் வேண்டும். ஏற்கனவே இருக்குமாயின் அதனை உயிர்ப்பாக்கி அதன் செயல்வீச்சை அதிகரித்திடல் வேண்டும். பாடசாலைகளை சுகாதாரத்தை மேம்படுத்தும் அமைப்புக்களாக மாற்றுவதில் இந்தக் கழகங்கள் முக்கிய பங்காற்ற முடியும்.

இந்தக் கழகம் செவ்வனே இயங்குவதை பாடசாலை அதிபர் கண்காணித்து அதன் செயற்பாட்டை ஊக்குவித்தல் நன்று. இதன் மூலம் அந்தப் பாடசாலையானது, மாணவரினதும் அவர் குடும்பத்தினதும் சுகாதார - வாழ்வியல் மேன்னிலையை உயர்த்துவதில் பங்களிப்பு செய்திட முடியும். இது எதிர்காலத்தில் சமூகத்தின் உடல், உள, சூழல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

மாணவர்கள் தம் சொந்த ஆரோக்கியத்தைப் பாதிக்கும் காரணிகளைக் கட்டுப்படுத்தக் கூடியவர்களாகவும், ஆரோக்கியத்தை மேம்படுத்தக் கூடியவர்களாகவும், இருக்கும் திறனை வளர்த்துக் கொள்ளவும் இந்தக் கழகம் உதவிடும். மனித வாழ்க்கை முறை மாற்றம், சூழல் நேயமற்ற செயற்பாடுகளால் ஏற்படும் தொற்றும் தொற்றா நோய்களின் தாக்கங்கள் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்புக்களை ஏற்படுத்தி குடும்பத்தினருக்குள்ளும் சமுதாயத்தினருக்குள்ளும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான மாற்றங்களை ஏற்படுத்தும் கருவிகளாகச் செயற்படுவதற்காக பாடசாலை மாணவர்களுக்கு இந்தக் கழகம் அதிகாரமளிக்கிறது என்றால் அது மிகையல்ல. மாணவர்கள் மத்தியில் போஷாக்கு நிலையை முன்னேற்றுதலுக்கும் நல்ல சுகாதார நடைமுறைகளை ஊக்கப்படுத்துவதற்கும் வாழ்க்கைத்திறன் தேர்ச்சிகளை பெற்றுக் கொள்வதற்கான அறிவு உளப்பாங்கு மற்றும் செயற்திறன்களை உருவாக்குவதற்கும் இந்தக் கழகம் உதவுகிறது.

கழகத்தின் பொறுப்பாசிரியர்கள் தமது ஆக்கபூர்வமான சிந்தனைகள் Creative ideas மூலம் கழக அங்கத்தவர்களின் சுகாதார அறிவு வீச்சை உயர்த்துவதோடு பாடசாலையின் ஏனைய மாணவர்கள் மத்தியில் இந்த எண்ணக் கருத்துக்களை விதைத்திட தகுந்த நடவடிக்கைகளை எடுத்தல் சிறப்பானதாக இருக்கும். இது இன்றைய மாணவர்கள் எதிர் கொள்ளும் ஆற்றலை வளர்க்கும். எனவே இந்தக் கழகங்களை சிறப்பாக செயற்படுத்தி எதிர் கால சமூக நன்னிலையை பேணிட முடியும்.

கழகத்தின் வருடாந்த செயற்திட்டங்களை ஒழுங்குபடுத்தி நிறைவேற்றுதல் முக்கியமானதொன்றாகும். மாதாந்தக் கூட்டங்களைத் தவறாது நிகழ்த்துதல் மூலம் திட்டங்களை செயற்படுத்துவது இலகுவாக அமையும். பாடசாலை சுகாதாரக் கழகங்களினால் மேற்கொள்ளப்படக் கூடிய செயற்பாடுகளாவன.

01. விசேட தினங்களில் அதாவது உலக புகைத்தலுக்கு எதிரான தினம், போசணை மாதம், உலக விலங்கு விசர் நோய்த் தினம், சர்வதேச உள நாள், கை கழுவும் தினம், சர்வதேச சிறுவர் தினம், விபத்துத் தடுப்பு தினம், சர்வதேச AIDS தடுப்பு தினம், மார்பக புற்று நோய் விழிப்புணர்வு மாதம் போன்ற தினங்களில், விருந்தினர் உரை, குழுக் கலந்துரையாடல்கள், உரையாடல்கள், நாடகங்கள், விழிப்புணர்வு ஒளிக் காட்சிகள், பாத்திர மேற்று நடித்தல் போன்ற நிகழ்வுகளை நடத்துதல்.

02. ஒலி பெருக்கி வசதியுள்ள பாடசாலைகளில் தினமும் ஒரு சுகாதார உரையை நிகழ்த்துதல், மாணவர்கள் மற்றும் மக்கள் எதிர் கொள்ளும் தற்போதைய உடல், உள, சூழல் சார் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்தல் சிறப்பாகும்.

03. சுகாதாரம் தொடர்பான போட்டிகள் நடத்தி மாணவர்களை ஊக்கப்படுத்துதல், மாணவர்கள் தம் திறமைகளை ஏதோ ஒரு விதத்தில் வெளிப்படுத்தும் முகமாக நாடக, ஓவிய, உரை, விவாதப் போட்டிகளாக ஒழுங்குபடுத்துதல் சிறப்பாகும்.

04. தினமும் ஒரு சுகாதாரத் துணுக்கை கரும்பலகையில் எழுதிக் காட்சிப் படுத்துதல். சுவர் செய்தித்தாள்" கலாசாரத்தை மீள அறிமுகம் செய்தல்

05. பாடசாலை உணவகத்தில் ஆரோக்கியமான உணவு வழங்கலை ஏற்படுத்த உதவுதல். இந்தக் கழகமானது உணவகத்தை கண்காணித்து அதிபருக்கு அறிக்கை அளித்து ஆரோக்கிய உணவுண்ணும் கலாசாரத்தை தோற்றுவித்தல். பாடசாலை உணவகத்தில் இருக்கக் கூடாத ஆரோக்கியமற்ற உணவு வகைகளின் பட்டியலை உணவகத்தில் காட்சிப்படுத்தல், ஆரோக்கிய உணவை தெரிவு செய்வதற்காக பேரக்குவரத்து சமிக்ஞை விளக்கு" வர்ண சுவரொட்டியை தயார் செய்து காட்சிப்படுத்துதல்.

06. சுகாதாரத் தகவல்களைப் பெற்றுக் கொள்ள உதவும் சுகாதார வளமையத்தை Resource Center உருவாக்குதல். இங்கு துண்டுப் பிரசுரங்கள், வீடியோ, சுவரொட்டிகள், செய்தித்தாள்கள், கட்டுரைகள் ஆகியவற்றைச் சேகரித்து பாவிக்கும் நிலையில் பேணுதல்

07. பாடசாலை சுகாதார தினத்தில் நடைபெறும் பாடசாலை மருத்துவ பரிசோதனையில் உதவுதல். உதாரணமாக மாணவர்களை ஒழுங்குபடுத்துதல், இனங்காணப்பட்ட சுகாதாரப் பிரச்சினைகளைக் கண்டறிதல், அவற்றுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தல்.

08. சுகாதார செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மாணவர்களை வலுவூட்டுதல், தத்தமது உடல் திணிவுச் சுட்டியை அளவிட்டு அதனைச் சீர்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் சுயமாக ஈடுபடுதல், தமது பார்வைக் கூர்மையை தாமாகவே பரிசோதித்தல், தமது ஆகாரத்தின் போசணையை மதிப்பிடல், தமது உடற்தகைமையை அளவிடல்.

09. வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல். இது மாணவர்கள் மத்தியில் ஆச்சரிய மிகு மாறுதல்களை தோற்றுவிக்கும். மன எழுச்சிகளை எதிர்கொள்ளல், தன்னைப்புரிந்து கொள்ளல், பயன் மிகு ஆளிடைத் தொடர்புகள், ஆக்கபூர்வமான சிந்தனை, பகுத்தறிவுச் சிந்தனை, தீர்மானம் செய்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல் என பல ஆரோக்கியமான திறன்களை வளர்க்கும். இதன் மூலம் பாடசாலையின் முரண்பாடுகள், வன்முறை, துஷ்பிரயோகம், பாதுகாப்பற்ற பாலியல் நடத்தைகள் ஆகியவற்றை முடிந்தவரை குறைத்திட முடியும். மாணவர்கள் ஒரு நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் குழுவாக வேலை செய்யும் தன்மையை ஏற்படுத்தும்.

10. பாடசாலை சுற்றாடலை சுத்தமாகப் பேணுதல், திண்மக் கழிவுகளை கழிவுத் தொட்டிகளில் வழிப்படுத்தல், கழிவுகளை வகை பிரித்து மீள் சுழற்சிக்கு உதவுதல். கழிவுகளை வகை பிரித்து சேமிக்கும் நிற நியமக் குறியீட்டைக் காட்சிப்படுத்தல்.

11. நுளம்பினால் பரவும் டெங்கு நோயை கட்டுப்படுத்த உதவுதல், இதற்காக விழிப்புணர்வு செய்தல், பாடசாலை சுற்றாடலை வாரத்துக்கு ஒருமுறை பரிசோதித்து நுளம்புக்குடம்பிகள் மற்றும் நுளம்புகள் பெருகும் இடங்கள் இல்லாதிருப்பதை உறுதி செய்தல், பாடசாலைச் சுற்றாடலை ஆரோக்கியமானதும் பாதுகாப்பானதாகவும் விருத்தி செய்ய உதவுதல்.

12. நீர் மாசடைதலை தவிர்த்தல் மற்றும் மலசலகூடங்களைத் துப்புரவாக பேணுவதன் அவசியத்தை உணர்த்துதல்.

13. சுகாதாரப் பிரச்சினைகள் உள்ள மாணவர்களை தொடர்ந்தும் கண்காணித்தல், அவர்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுக்க உதவுதல்.

14. ஆரோக்கியமான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்வதற்கு பாடசாலைச் சமூகத்தினரை ஊக்கப்படுத்துதல், தொடர்ந்தும் முயற்சித்தல்.

15. வாகன விபத்துத் தடுப்பு விழிப்புணர்வு, முதலுதவி வழங்கும் செயற்பாடுகளை தொடர்ந்தும் பேணுதலும் முடியுமாயின் முதலுதவி மையங்களை உருவாக்குதலும்.

இங்கு குறிப்பிட்ட செயற்பாடுகளை ஆர்வத்துடன் மேற்கொள்ள மாணவர்களை வழிப்படுத்தினால் அது இந்தக் கழகத்தின் வெற்றி மட்டுமல்ல அந்தப் பாடசாலையின் சாதனையாகவே பார்க்கப்படும்.

சுகாதார வைத்திய அதிகாரி,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

> மாணவர்கள் மத்தியில் போஷாக்கு நிலையை முன்னேற்றுதலுக்கும் நல்ல சுகாதார நடைமுறைகளை ஊக்கப்படுத்துவதற்கும் வாழ்க்கைத்திறன் தேர்ச்சிகளை பெற்றுக் கொள்வதற்கான அறிவு உளப்பாங்கு மற்றும் செயற்திறன்களை உருவாக்குவதற்கும் இந்தக் கழகம் உதவுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன்

# இராணுவம் விரித்த கொலைப்பொறி ஒயில் குழி

■ தி.சோபிதன்

"நாங்கள் இந்தக் கிராமத்தில் குடியிருக்க வர முன்னரே இந்தக் குழிகளைச் சுற்றிப் பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தாருங்கள், அந்த ஒயில் கலந்த நீர்த்தொட்டியை மூடித்தாருங்கள் என இராணுவத்தினரிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் கோரியிருந்தோம். அவர்களும் அதைச் செய்து தருவம் என்றார்கள். ஆனால் இன்றுவரை அவர்கள் எதையும் செய்யவேயில்லை... இண்டைக்கு என்ர பிள்ளை அதுக்க விழுந்து செத்துப்போச்சுது...." கதறியழுகிறார் இரணுவத்தினரின் ஒயில் குழிக்குள் வீழ்ந்து சாவடைந்த சிறுவனான கஜீபனின் தாயார்.

கடந்த ஞயிற்றுக்கிழமை காங்கேசன் துறைப் பகுதியில் புதிதாக மீள்குடியேற்றப்பட்ட நல்லிணக்கபுரத்தில் நிகழ்ந்த பரிதாபச் சம்பவமே இது. காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் தரம் 5இல் கல்வி கற்று வந்த மாணவனான கஜீபன், இராணுவம் பயன்படுத்திவிட்டுப் பாதுகாப்பற்ற நிலையில் கைவிட்டிருந்த வாகனச் சுத்திகரிப்பு நிலைய கழிவு எண்ணெய்க் குழிக்குள் வீழ்ந்து சாவடைந்திருந்தான். தமது காணிகளுக்காகப் போராடி ஒருவாறு அங்கு குடியேறினாலும் இராணுவம் எனும் எமன் விரித்திருந்த கொலைப் பொறிகள் இன்னும் அங்கிருந்து அகற்றப்படாமலிருக்கின்றன என்பதைப் புடம் போட்டுள்ளது சஜிந்தனின் சாவு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"இந்த ஒரு உயிருடனாவது அதைப் பாதுகாப்பாக்குங்கள். எங்கள் கிராமத்தில் அதிகளவான பிள்ளைகள் இருக்கின்றனர். எஞ்சியுள்ள அந்தப் பிள்ளைகளின் உயிர்களையாவது பாதுகாக்க உதவுங்கள். இந்த ஒரு இழப்பு மட்டும் போதும் மற்றைய பிள்ளைகளின் உயிரை யாவது காப்பாற்றுங்கள்" என்றவர் தனது பிள்ளையை இழந்தாலும் பெருந்தன்மையுடன் கூறி, அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் விக்கி விக்கி அழுத வண்ணமே தொடர்கிறார்.

"சவுக்காரத்தையும் சறத்தையும் அப்பம்மாவிடம் வாங்கிக் கொண்டு வாடா கஜீ எண்டு என்ர பிள்ளைய அனுப்பினன். ஆனா இப்பிடி விதியின் வலையில் சிக்குவான் எண்டு கொஞ்சங் கூட நான் நினைக்கேல்லை. என்ர புள்ள ஐஞ் சாமாண்டு படிக்கிறான். இந்த வருசம் கொலசிப். என்ர பிள்ளை பள்ளிக்குடத்தில பெரும்பாலும் 3ஆம் பிள்ளை யாத்தான் வருவான். அவன் கொலசிப் பாஸ் பண்ணிப் படிச்சுப் பிற்காலத்தில நல்ல வேலை கிடைச்சு எங்களைப் பார்ப்பான், பக்க பலமாக இருப்பான் என்றெல்லாம் கனவு கண்டுகொண்டிருந்தன். ஆனால் எல்லாம் ஏமாற்றமாப் போச்சுது. என்ர பிள்ளை அநியாயமாச் செத்துப்போச்சுது" அந்தத் தாயின் கண்ணீர் பத்துமாதங்கள் சுமந்து பத்து வருடங்கள் வரை வளர்த்தெடுத்ததன் வலியை வெளிப்படுத்தி பெருகி வழிகின்றது.

"எனது பிள்ளை அப்பம்மா வீட்டுக்குச் செல்வது வழக்கம். அதே போலவே அன்றைய தினம் காலையும் அங்க போனான் .அவன் போக வெளிக்கிட சாப்பிட்டுப் போங்கோ கஜீ என்று அவனுக்குக் காலமைச் சாப்பாடு குடுத்தன். சாப் பிட்டுட்டு அம்மா, அப்பம்மா வீட்டை போட்டு வாறன் என்று சொல்லிப்போட்டுப் போனவன் தான்... என்ர பிள்ளை என்னை விட்டு ஒரேயடியாய்ப் போயிற்றான்..." அப்பம்மா வீட்டுக்குச் செல்லும் கஜீபன் கதைத்துச் சந் தோசமாக அங்கிருப்பதுடன் அப்பம்மாவுக்குச் சிறுசிறு உதவிகள் செய்வதும் வழக்கம். அன்றைய தினமும் அப் பம்மாக்குச் சில வேலைகள் செய்து கொடுத்திருக்கிறான். பின்னர் "அப்பம்மா நான் முன்பள்ளித் திறப்புவிழாக்குப் போகப்போறன். எனக்கு இண்டைக்குப் பரிசு தருவினம்" என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டிருக்கிறான் தனக்கு விரிக்கப்பட்டிருந்த அந்த சாவுப்பொறிபற்றி அறியாத அந்தப் பிஞ்சுப்பாலகன்.

"என்ர பிள்ளை அங்கதானே நிக்கிறான் என எண்ணி நானும் வீட்டு வேலையளோட இருந்திற்றன். பின்னேரம் கணவர் வேலை முடிஞ்சு வீட்டுக்கு வந்ததும் பிள்ளை எங்க? எனக் கேட்டார். அவன் அப்பம்மா வீட்டை, காலை யில போனவன் என்னும் வரயில்லை எண்டு சொன்னன். அவர் தனது தாயாருக்குப் போன்பண்ணிக் கேட்டார். அவர் கஜீ காலையிலேயே இஞ்சயிருந்து வெளிக்கிட் டுட்டான். உங்கட வீட்டுக்கு வந்திற்றானே என்றார். ஆனாலும் எனது கணவர் அதனை நம்பவில்லை. மீண்டும் தனது தாயாரிடம் பகிடிவிடாமல் உடன அவனை இங்க வரச் சொல்லுங்கோ என்றார். இல்லையடா அவன் அப்போதயே போயிற்றான் என்றார். அதன் பின்னர் எனது கணவர் உடனடியாகத் புள்ளையத் தேட வெளிக் கிட்டார். பல இடங்களிலும் அயல் வீடுகளிலும் தேடினம். இரவு 7 மணிக்கு எல்லாம் படிக்கப் புத்தகத்துடன் இருக்க வேண்டும் என்பதற்கு பயந்து ஒளித்து இருக்கின்றான் என்றுதான் நினைத்தோம். ஆனால் இப்படி நிரந்தரமாக எங்களை விட்டுப் பிரிவான் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை"

"அப்பம்மா வீட்டுக்குப் போயிற்று வாறன் எண்டு சொல்லிப் போட் டுப் போன பிள்ளை எங்க போயி ருக்கும்? என அனைத்து இடத்தி லும் தேடினோம். எங்கு தேடியும் கிடைக்காததால் காங்கேசன் துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்தேன். முறைப்பாட்டுக்குச் சென்ற என்னிடம் மீண்டும் ஒருமுறை தேடிப்பாருங்கள், நாங்களும் விசாரணைகளை ஆரம்பிக்கின்றோம் எண்டு சொல் லிச்சினம். நான் அதிகாலை 3 மணிவரை மீண்டும் அனைத்து இடங்களிலும் தேடி அலைந் தேன். ஒரு கட்டத்தில் எனது மகன் ஒருவேளை கீரிமலை கடற்கரைப் பக்கம் போயிருப் பானோ என எண்ணி அங்கும் சென்று பார்த்தேன் ஆனால் அங்கும் அவனைக் காணவில் லை. அதற்கிடையில் அதிகாலை வேளை காங்கேசன்துறைப் பொலிஸார்எனதுவீட்டுக்குவருகை தந்தனர். உங்கள் பிள்ளையின் படம் ஒன்றைத் தாருங்கள் அது எங்களின் விசாரணைக்கு உதவியாக இருக்கும் என்றனர். நாங்களும் எங்களின் பிள் ளையின் படத்தைக் கொடுத்து அனுப்பினோம். அதன் பின்னர் சிறிது நேரத்தில் இருவர் மோட்டார் சைக்கிளில் வந்தனர். உங்கட பிள்ளையா காணாமல் போனது அவன் கடைசியாக எங்க போனான் என விசாரித்தனர். நாங்களும் சம்பவத்தை விவரமாகச் சொன்னம். அந்த இருவரும் இராணுவப் புல னாய்வாளர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் என்ர பிள்ளை கிடைத்துவிட வேண்டும் என்று நடந்த சம்பவத்தை அவர்களுக்கும் கூறினேன். அதுக்குப் பிறகும் நான் தேடாத இடமில்லை. என்ர பிள்ளை யைத் தேடித் திரிஞ்சுகொண்டிருக்க, எனது அயலவர்களிடம் இருந்து அலைபேசி அழைப்பு வந்தது உன்ர பெடியன் ஒயில் குழிக்குள்ள செத்துக் கிடக்கிறான் எண்டு" கஜீப னின் தந்தையின் கண்களிலிருந் தும் கண்ணீர் கசிந்து கொள்கிறது.

"அப்பம்மா வீட்டுக்குப் போயிற்று வாறன் எண்டு சொல்லிப் போட் டுப் போன பிள்ளை எங்க போயி ருக்கும்? என அனைத்து இடத்திலும் தேடினோம். எங்கு தேடியும் கிடைக்காததால் காங்கேசன் துறைப் பொலிசில் முறைப்பாடு செய்தேன். முறைப் பாட்டுக்குச் சென்ற என்னிடம் மீண்டும் ஒருமுறை தேடிப்பாருங் கள், நாங்களும் விசாரணை களை ஆரம்பிக்கின்றோம் எண்டு சொல் லிச்சினம். நான் அதி காலை 3 மணிவரை மீண்டும் அனைத்து இடங்களிலும் தேடி அலைந்தேன்.



# புகையும் போதையுமே பகைவன்



புகைத்தல் போல வேறு
பகைவன் இல்லை
புரிந்திடாமல்
இளையோர் பெரியோர்
முப்பொழுதும்
நெருப்பை விழுங்கி
புகைத்து புகைத்துத்
தள்ளு கிறார்

வகை வகையாய்
உணவை உண்டால்
உடலும் வலிமையை
அடைந்திடும்
முகை அரும்பா
மொட்டுக்களும்
மூலை முடுக்கில்
ஒளிந்து மறைந்து
புகையாய் இழுத்தே
களிக்கின்றார்.

போதை வஸ்தைப்
புகைக்குள் வைத்தே
பணத்தைக் கறக்கும்
பாதகர்கள்
கணக்கில்லாமல்
இளையோர் சிறுவர்
யாவரையும்
கண்ணியில் சிக்கிட
வைக்கிறார்
பொறியினில்
அகப்பட்டவர் போல
போதையைத் தேடி
அலைந்திவர்
நெறிகெட்ட நிதியற்ற
செயல்கள் செய்து
நாதி இன்றியே வீதியில்
மதி கெட்டு நடக்கிறார்

புகையை இழுக்கும்
மாத்திரத்தில்
பாவ புண்ணியம் பாராது
அடித்துதைத்து சேதமாக்கி
அட்டகாசம் புரிகிறார்
தடுத்திட யாரும்
துணிந்திடா நிலையில்
அவலங்கள் தொடர்ந்திடவே
அமைதி இழந்தே
வாழ்கின்றோம்

நீதியாளர் காவல் துறையோர்
நினைத்தால் இதனை
மாற்றிடலாம்
விலை கொடுத்தேனும்
போதை புகையை
அகற்றிடா விட்டால்
பகைவன் வேறு
தேவையில்லை
எம்மினத்தை அழித்திட
விழித்திடுங்கள்
பெற்றோரே! வீணே பிள்ளைகள்
ஊர் சுற்றாது விழுமியம்
கல்வி ஒழுக்கம் நிறைந்த
வினைத்திறன் கொண்டவராய்
வளர்த்திடுங்கள்

■ அபிர்ராஜன் அன்ரனி பீற்றர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அயல் நாட்டில் ஒரு பனிப்போர்

## பன்னீர்செல்வம் - சசிகலா

தவபாரதி

இந்தியாவின்தமிழகத்தில்கடந்த 2016இல்நடந்த சட்டப்பேரவைப் பொதுத்தேர்தலில் அ.தி.மு.க வெற்றி பெற்று 2ஆவது முறையாகவும் தொடர்ந்து ஆட்சியைப் பிடித்தது. இதையடுத்து, தமிழக முதலமைச்சராக 6ஆவது தடவையாக ஜெயலலிதா பதவியேற்றார். கடந்த செப்ரெம்பர் 22ஆம் திகதி இரவு உடல்நலக்குறைவு காரணமாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அதையடுத்து, ஜெயலலிதாவால் நியமிக்கப்பட்ட பதில் முதலமைச்சரான பன்னீர்செல்வம் முதலமைச்சருக்குரிய அரச காரியங்களை ஆற்றி வந்தார். இந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்ட ஜெயலலிதா சாவடைந்தார். இதன் பின்பு முதலமைச்சராக பன்னீர்செல்வம் பதவியேற்றார். இதைத் தொடர்ந்து, அ.தி.மு.கவின் பொதுச்செயலாளர் யார்? என்ற கேள்வி எழுந்தது. பொதுச்செயலாளராகச் சசிகலாவை பன்னீர்செல்வமே முன்மொழிந்தார். அதன்பின் நடந்த அ.தி.மு.க பொதுக்குழுவின் செயற்குழுக் கூட்டத்தில், சசிகலா ஒருமனதாகப் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அதே மாதம் 31ஆம் திகதி பொதுச்செயலாளராகப் பொறுப்பும் ஏற்றுக்கொண்டார். கட்சி, ஆட்சி நிர்வாகங்கள் இரண்டும் ஒருவரிடமே இருக்க வேண்டும். அதனால், முதல்வர் பொறுப்பையும் சசிகலா ஏற்க வேண்டும் என அ.தி.மு.க மூத்த நிர்வாகிகளும் அமைச்சர்களும் வெளிப்படையாகவே கோரிக்கை விடுத்தனர். அவ்வேளை சசிகலா அமைதி காத்து வந்தார். பொங்கலுக்கு முன்னதாக அவர் முதல்வராகவும் பதவியேற்பார் எனத் தகவல்கள் வெளியாகின. அதற்கிடையில் ஜல்லிக்கட்டுப் போராட்டம் தீவிரமானதால் அந்த முயற்சி தள்ளிப்போனது. அதற்குப் பின்னர் சட்டப்பேரவைக் கட்சித் தலைவராக சசிகலா தெரிவு செய்யப்பட, முதல்வர் பதவியிலிருந்து ஓ.பன்னீர் செல்வம் விலகினார். வரும் 9ஆம் திகதி ஆளுநர் மாளிகையில் தமிழகத்தின் 21ஆவது முதலமைச்சராக சசிகலா பதவியேற்கவுள்ளார் என்னும் அறிவிப்பு வெளியானது. இதற்குப் பின்னர் தற்போது முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அ.தி.மு.க பொதுச் செயலாளர் சசிகலா இருவருக்கும் இடையே பனிப்போர் ஏற்பட்டுத்தமிழக அரசியல்சூழல்பெரும் பரபரப்பிலுள்ளது.

### தியானத்தின் பின் வெகுண்டெழுந்த பன்னீர்செல்வம்

கடந்த செவ்வாய்க்கிழமை ஜெயலலிதாவின் சமாதிக் கருகே திடீர்த் தியானப் புரட்சி செய்த ஓ.பன்னீர்செல்வம், அதன் பின்னர், "என்னைக் கட்டாயப்படுத்திப் பதவியை விட்டு விலக வைத்துள்ளனர். மக்கள் விரும்பி னால் நான் வழங்கிய பதவி விலகல் கடிதத்தைத் திரும்பப் பெறுவேன். அ.தி.மு.கவுக்குச் சிறப்பான தலைமை தேவை. தற்போது கட்சியில் நடைபெறும் நிகழ்வுகளால் தொண்டர்களும் மக்களும் அதிருப்தி அடைந்திருக்கின்றார்கள். மக்களுக்காகத் தனித்துப் போராடத் தயாராக இருக்கிறேன்" என்று அதிரடியாகக் கூறினார். இதனையடுத்தே தமிழக அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. அங்கு பல்வேறு திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலமை சசிகலாவுக்கும் பன்னீர்செல்வத்துக்குமிடையிலான பனிப்போராகவே உருவெடுத்துள்ளது. "பன்னீர்செல்வம் துரோகம் செய்தார் என்ற அவப்பெயர் எப்போதும் வந்ததில்லை. ஜெயலலிதாவின் சுவடுகளை நான் பின்பற்றுகிறேன். அவரது விருப்பத்துக்கு மாறாக எப்போதும் செயற்படமாட்டேன். கட்சியின் சட்டதிட்டங்களின் அடிப்படையில்தான், கட்சிக்குரிய பொதுச் செயலாளரைத் தொண்டர்களே தெரிவு செய்ய வேண்டும். அதுவும் முறைப்படி தேர்தல் நடத்தியே. விரைவில், அ.தி.மு.க பொதுக்குழுவைக் கூட்டிக் கட்சியின் நிரந்தரப் பொதுச் செயலாளர் தெரிவு செய்யப்படுவார். தமிழகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று மக்களைச் சந்திக்கப் போகிறேன். ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா ஜெயக்குமார் எனக்கு ஆதரவு தெரிவித்தால் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.பதவி விலகல் கடிதத்தைத்திரும்பப்பெற வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டால் நிச்சயமாக அதைச் செய்வேன். ஆளுநரைச் சந்தித்து சட்டப்பேரவையைக் கூட்டுமாறு அவரிடம் அனுமதி கோருவேன். சட்டப்பேரவையில் எனக்கான ஆதரவைப் பெறுவேன் அப்போது எனது பலம் தெரியும். வேறு கட்சியினர் என்னை இயக்குவதாகக் குற்றஞ் சாட்டுவது முற்றிலுமான பொய். ஜெயலலிதாவின் சாவு குறித்து விசாரிப்பதற்கு விசாரணைக்குழு அமைக் கப்படும். உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தலைமையில் விசாரணை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்றவாறு பன்னீர்ச் செல்வம் கருத்துத் தெரிவித்து வருவது மேலும் தமிழக அரசியல் களத்தைச் சூடுபிடிக்க வைத்துள்ளது.

### பிரபலங்களின் பதிவுகள்

"சரியானதைச் சிந்திக்கும், செயற்படுத்தும் ஆற்றலும் தகுதியும் முதல்வர் பன்னீர்செல்வத்துக்கு இருக்கிறது" என்று, இத்தகைய இழுபறி அரசியல் ஆட்டத்துக்குள் தனது கருத்தையும் புகுத்தியிருக்கிறார் நடிகை கௌதமி. இதற்கு முன்னர் ஜெயலலிதாவின் சாவு குறித்துத்தெளிவு கோரிப் பிரதமர் மோடிக் குக் கடிதம் ஒன்றை இவர் எழுதியிருந்தார். அதற்கு மோடி எந்த ஒரு பதிலும் அளிக்காததால், திரும்பவும் அது குறித்துக் கடிதம் எழுதியிருந்தவர்கௌதமி. இப்போது, முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் தியானத்தின் பின்னான பேச்சைத் தொடர்ந்து "இதனால் தான் அம்மா பன்னீர்ச் செல்வத்தைத் தனக் கடுத்தாகத் தெரிவு செய்தார். சரியானதைப் பின்பற்றும் தைரியம் அவருக்கு இருக்கிறது. இது தமிழ்நாட்டுக்கான நீதி.
"அம்மாவுக்கான நீதி" என்றவாறு பன்னீர்செல்வத்துக்கு ஆதரவளித்துத் தனது கருத்தைச் சமூக வலைத்தளப் பக்கமொன்றில் பதிவேற்றியுள்ளார்.

"முதலமைச்சர் பதவியைக் கைவிடுமாறு வற்புறுத்தப் பட்டிருப்பதாகப் பன்னீர்ச்செல்வம் கூறியிருப்பது மிகுந்த வருத்தமளிக்கின்றது" என்று நடிகரும் சமத்துவ மக்கள் கட்சித் தலைவருமான சரத்குமார் கூறியிருக் கிறார். தான் பொறுப்பேற்றது முதல் தனது வேலையைச் சிறப்பாகச் செய்துவரும்பன்னீர்செல்வம், கட்டாயப்படுத்தப் பட்டேன் என்று கூறியிருப்பது மிகுந்த வருத்தமளிக்கிறது. அவரின் உண்மைக்கும் உழைப்புக்கும் மதிப்பளித்து அவரின் எண்ணங்களுக்கு வழிவகுத்து, ஒன்றுபட்டு, ஜெயலலிதா மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான செயல்களை உடனடியாகச் செய்யவேண்டும்" என்றும் சரத்குமார் கூறியிருப்பவைகளும் பன்னீர்ச்செல் வத்துக்கான உறுதிப்பாட்டை அங்கே நிலை நிறுத்தி யுள்ளது.

### பதிலுக்குப் பன்னீர்செல்வத்தின் மீது குற்றம்

"முதல்வர் பதவியை விட்டு விலகியதன் பிறகே சசிகலாவைப் பன்னீர்செல்வம் எதிர்க்கிறார் என்ற கருத்தும் அங்கு வலுப்பெற்றுள்ளது. பன்னீர் செல்வம் தன்னைக் கட்டாயப்படுத்தி பதவி விலக வைத்தனர் என்று சசிகலா மீது குற்றஞ்சாட்டியிருக்கையில், அ.தி.மு.கவின் செய்தித் தொடர்பாளர்கள் "முதல்வர் பதவி அவரி டமிருந்து பறிக்கப்பட்ட பிறகுதான் பன்னீர்செல்வம் இவ்வாறு கூற ஆரம்பித்துள்ளார்" என்றிருக்கிறார்கள். அதுவும் பதவி விலகல் கடிதத்தைப் பிரதமர் மோடி மற் றும் தமிழகப் பொறுப்பு ஆளுநர் வித்யாசாகர் ராவிடம் வழங்கிய பிறகு. இதுவரை அவர் தன்னிச்சையாகவே செயற்பட்டார். அவரது செயற்பாடுகள் மூலம் கட்சிக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை. மாறாக ஜல்லிக்கட்டு, போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதல் விளைவைத்தான் சந்தித் தது என்றிருக்கின்றார்கள். இதைவிடப் பன்னீர் செல்வம் ஏனைய சில கட்சிகளாலும் வழி நடத்தப்படுகிறார் என்ற குற்றச்சாட்டுக்களும் அங்கு வலுவாகவுள்ளன. ஆனாலும் சசிகலா மீதான சொத்துக்குவிப்பு வழக்கு மீதான தீர்ப்பின் பின்னர் இந்த விடயம் இன்னும் சூடுபிடிக்கும் என்பதில் எந்தவித சந்தேகங்களுமில்லை.

“கட்சி, ஆட்சி நிர்வாகங்கள் இரண்டும் ஒருவரிடமே இருக்க வேண்டும். அதனால், முதல்வர் பொறுப்பையும் சசிகலா ஏற்க வேண்டும் என அ.தி.மு.க மூத்த நிர்வாகி களும் அமைச்சர்களும் வெளிப் படையா கவே கோரிக்கை விடுத்தனர். அவ்வேளை சசிகலா அமைதி காத்து வந்தார்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மனோவின் கனவு

ஸ்டோ ஸ்வாமி



## 'தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியம்'

கடந்த 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரும் கொழும்பு மாவட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தனது முகநூலில் பின்வருமாறு பதிவிட்டிருந்தார்:

எனது யோசனைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாரா என எவராவது கேட்டுச்சொல்லுங்கள். அரசியல் தீர்வு தொடர்பில் ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேறு நிலைப்பாடுகள் உள்ளன. ஆனால் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமற்போனோர் விவகாரம் ஆகியவை உள்ளிட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் மத்தியில் ஒத்த கருத்துத்தான் உண்டு. இவை தொடர்பாக ஆளும் அணியில் இருப்பவர்கள் தனியாகவும் எதிரணியில் இருப்பவர்கள் தனியாகவும் அரச உயர்மட்டத்துடன் பேசுவது ஒரு முறைமையாகும். அடுத்தது, அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரச உயர் மட்டத்துடன், எதிரணி சிங்களத் தலைவர்களுடன், கட்சிகளுடன், தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கும், காணி, கைதுகள், காணாமற்போனோர், இன்னும் பல பொது விவகாரங்கள் தொடர்பில் கலந்து பேசுவது இன்னொரு முறைமையாகும். இதற்காக அனைத்துத் தமிழ் கட்சிகளும் குறிப்பாக கூட்டமைப்பும் (த.தே.கூ), கூட்டணியும் (த.மு.கூ) நாடாளுமன்றத்தில் கூடிப் பேசி, 'தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியம்' அமைக்க வேண்டும் என்றும், அதன் மூலம் தமிழ் மக்களின் பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் அரச, எதிரணி சிங்களக் கட்சிகளிடம் பேசுவோம் என்றும் என் யோசனையை நான் முன்வைத்தேன். இந்த எனது யோசனை- திட்டம் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, சிறிதரன், சிவசக்தி ஆனந்தன், சுமந்திரன், ஆகியோரிடம் நான் ஒரு மாதத்துக்கு முன்பே தெரிவித்துள்ளேன். ஆனால், இதுவரை அது தொடர்பில் கூட்டமைப்பிடமிருந்து தெளிவான பதில் இல்லை. போராடும் அப்பாவி மக்கள் குறிப்பாகத் தாய்மார்கள் படும்பாட்டைப் பார்க்க மனம் கொந்தளிக்கிறது. ஓர் அமைச்சராக இருந்து கொண்டு இதைவிடவும் என்ன செய்ய முடியும் என நான் யோசிக்கிறேன். எனதுயோசனைக்குத்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தயாரா என எவராவது கேட்டுச்சொல்லுங்கள்.

**தேர்தல் எதிர்வுகூறல்கள் மத்தியில் எழுந்த கருத்து!**

தயவு செய்து பகிருங்கள் எனும் முற்குறிப்புடன் இடப்பட்ட அவருடைய இத்தகைய பதிவின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட முதலாவது முறைமை (ஆளும் அணியில் இருப்பவர்கள் தனியாகவும் எதிரணியில் இருப்பவர்கள் தனியாகவும் அரச உயர்மட்டத்துடன் பேசுவது) என்ற எண்ணக்கருவுக்கு என்ன நடந்தது என்று குறிப்பிடாமலே இரண்டாவது முறைமை தொடர்பில் சிந்திக்க அழைத்திருந்தார் அமைச்சர் மனோ. பதிவு என்னவோ இரண்டாவது முறைமையை முன்னிலைப்படுத்தியே தான் அமைந்திருக்கிறது. அதுவும் சமீபமாகத் தேர்தல்கள் எதிர்வுகூறப்படாத காலத்தில் தான் இந்தப் பதிவும் வெளிவந்திருக்கிறது.

இலங்கை வாழ் தமிழ் பேசுவோருக்கான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கவலைக்குரிய ஒன்று என்றால், அப்படிப் பிரதிநிதித்துவ அந்தஸ்துப் பெற்றுச் செல்வோர் தங்களுக்கு வாக்களித்தவர்களின் நல மேம்பாட்டுக்காகத் தம்மால் இயன்ற அனைத்தையும் செய்கிறார்களா என்றால் ... அதுவும் கவலைக்குரிய ஒன்றாகவே இருக்கின்றது.

அதுவும் இலங்கை நாடாளுமன்றில் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் ஒன்றாக உட்கார்ந்திருந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் கூடிக்கதைத்த - தீர்மானம் எட்டிய - நடவடிக்கை எடுத்த ஒரு சந்தர்ப்பத்தையேனும் உதாரணம் காட்டத் தேடினால் ஏமாற்றமே மிஞ்சுகின்றது.

**எட்டு ஆண்டுகளுக்கு முன்பு...**

போருக்குப் பின்னதாக 2009இல் அடம்பன் கொடி திரண்டதை நிகர்த்த சம்பவம் ஒன்று வரலாற்றுப் பதிவாகியிருந்தது. இலங்கையின் சிறுபான்மைக் கட்சிகள் அல்லது சிறுபான்மையினரின் அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகள் முதல் தடவையாக ஒன்றாகக் கூடி ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வருவதற்கு முயற்சித்த அந்தச் சம்பவம், சுவிற்சர்லாந்தின் சூரிச் நகரில் இடம்பெற்றிருந்தது. அந்த ஒன்றுகூடல் ஒன்றும் கட்சிப்பிரதிநிதிகளின் தன்னார்வத்தினால் இடம்பெற்றதல்ல.

நிறுவனம் ஒன்றினால் ஒழுங்கமைக்கப்பட்ட சந்திப்பில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளடங்கலாக இலங்கைத் தமிழ் பேசும் கட்சிகள் கலந்துகொண்டிருந்தன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆறுமுகம் தொண்டமான் மற்றும் முத்து சிவலிங்கம், மலையக மக்கள் முன்னணியின் பி. சந்திரசேகரன், முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்னணியின் மனோகணேசன், ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தா, தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஆனந்தசங்கரி, புளொட் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல். எவ். சுரேஷ் பிரேமச்சந்திரன் இவர்களுடன் சம்பந்தன், மாவை சேனாதிராசா மாத்திரமின்றி சிவநேசதுரை சந்திரகாந்தனும் பங்குகொண்டிருந்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து சிறப்பித்தவர்கள் மேலும் தொடர்ந்து பேசுவோம் என்று அறிக்கை விட்டு வெளியேறிய பின்னர் எங்கேனும் ஒன்றாகத் தன்னும் சந்தித்தார்களா என்பது கேள்விக்குரியது.

அதற்குப் பிற்பாடும் சில தேர்தல் காலகாளான் கூட்டுக்கள் மக்கள் பிரதிநிதிகளிடம் தோன்றி மறைந்தன.

இன்னும் சில, தேர்தலைக் கண்டவுடன் மரித்துவிட்டன. இவற்றுள் சில தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிரானவை என்று தெளிவாக அடையாளப்படுத்தக் கூடியவை.

**கூட்டமைப்பு ஒரு தடவை முயற்சித்தால் என்ன?**

வெளிக்கூட்டுகள் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது தமக்குள் இருக்கும் உட்கட்சி முரண்பாடுகளை தீர்க்கத் தெரியாமல் திண்டாடும் அவலநிலையும் நமது கட்சிகளுக்கு உரித்தான ஒன்று. தற்போது அது முஸ்லிம் காங்கிரஸில் தனது குணங்குறியைக் காட்டியிருக்கிறது.

கடந்த மார்கழி மாதம் வன்னி மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத மனோ கணேசனின் தம்பி பிரபா கணேசன் ஜனாதிபதியால் நியமனம் பெற்றிருக்கும் வேளையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒன்றியத்தை அமைக்க மனோ கணேசன் முரசறைந்திருக்கிறார். அதற்குக் கூட்டமைப்பிடமிருந்து பதில் கிடைக்கவில்லை என்றும் போட்டுடைத்திருக்கிறார்.

ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி மற்றும் மலையக மக்கள் முன்னணி என்பவற்றை உள்ளடக்கி, 2015ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணி, வடக்கு கிழக்குக்கு அப்பால் வாழும் (சுமார் 15 லட்சம்) தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அதன் உருவாக்கத்தின்போது உரிமை கோரியிருந்தார் மனோ கணேசன்.

தன்னுடைய பதிவில் மனோ கணேசன் குறிப்பிட்டது போன்று அரசியல் தீர்வு நிலைப்பாடுகள் தொடர்பில் வெவ்வேறு வியாக்கியானங்களைக் கொண்டிருந்தாலும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் ஒரே நிலைப்பாட்டைக்கொண்டிருக்கும் மனோவின் 'கனவு ஒன்றியம்' உருப்பெற்று எதையாவது சாதிக்குமெனில் நாமே நமது பிரதிநிதிகளைப் பிடித்துத் தள்ளியாவது பங்கேற்கச் செய்யலாம். முன்னொரு போதும் சாத்தியமாகியிராத இத்தகையதோர் ஒன்றிணைவை ஏன் கூட்டமைப்புப் புரீட்சார்த்தமாகத்தன்னும் முயற்சித்துப் பார்க்கக்கூடாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எனக்கு வாய்த்த அடிமைகள்

தகவல் தொழில்நுட்பத்துறையில் வேலை செய்யும் கிருஷ்ணா (ஜெய்), தன்னுடன் வேலைசெய்யும் திவ்யாவைக் (ப்ரணிதா) காதலிக்கிறார். ஒரு கட்டத்தில் கிருஷ்ணாவை உதறித் தள்ளும் திவ்யா, வேறொருவரை விரும்புகிறார். இதனால் மனமுடையும் கிருஷ்ணா தற்கொலை செய்து கொள்ள முடிவெடுக்கிறார். சாகும் முன்பு தனது உயிர் நண்பர்களான ரமேஷ் (கருணாகரன்), மொய்தீன் (காளி வெங்கட்), சௌமி நாராயணன் (நவீன்) ஆகிய மூவருக்கும் தான் சாகப்போவதாகத் தகவல் கொடுக்கிறார். பதறும் நண்பர்கள் கிருஷ்ணாவைத் தேடிப் புறப்படுகிறார்கள். அந்த முயற்சியில் அவர்கள் ஆளுக்கொரு பிரச்சினையில் மாட்டிக்கொள்கிறார்கள். அவற்றிலிருந்து அவர்களால் வெளியே வர முடிந்ததா? கிருஷ்ணாவைக் கண்டுபிடித்துக் காப்பாற்ற முடிந்ததா? கிருஷ்ணாவின் காதல் என்ன ஆயிற்று? என்பவை தான் 'எனக்கு வாய்த்த அடிமைகள்'படம்.

அறிமுக இயக்குநர் மகேந்திரன் ராஜமணி, புதுமையான கதையைத் தேடிக் கொள்ளாமல் மாறாக, திரைக் கதை, கதாபாத்திரங்கள், சுவா ரஸ்யமான திருப்பங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தியிருக்கிறார். படம் முழுவதிலும் நகைச்சுவையை அழுத்தமாகப் படர விட்டிருக்கிறார். காதல் தோல்வி, தற்கொலை, கொலைவெறித் தாக்குதல் ஆகியவை திரைக் கதையில் இருந்தாலும் நகைச்சுவையே பிரதான இடம் வகிக்கிறது. கிட்டத்தட்ட எல்லாக் காட்சிகளிலுமே சிரிப்புக்கு உத்தரவாதம் உண்டு.

நண்பர்கள் கிருஷ்ணாவைப் பதற்றத்துடன் தேடிக் கொண்டிருக்க, அவரோ ஒரு விடுதியில் சாராயப் போத்தல்களையும் விசத்தையும் வைத்துக்கொண்டு செய்யும் அட்டகாசங்கள் ரசிக்கவைக்கின்றன. சிறைக் காட்சி உள்ளிட்ட சில காட்சிகள் நேர்த்தியாக உள்ளன. தம்பி ராமய்யாவிடம் ஜெய் பேசும் காட்சிகளில் திரையரங்கம் சிரிப்பில் அதிர்கிறது. ஆனாலும் முக்கியமான திருப்பங்களில் பாலியல் அம்சங்களைக் கலந்திருப்பது முகம் சுளிக்க வைக்கிறது.

கிருஷ்ணா, அவனது நண்பர்கள், கருப்பு ராக் ஆகியோரின் பாத்திரங்களுக்குத் தந்திருக்கும் முழுமையைக் கதாநாயகி திவ்யாவின் கதாபாத்திரத்துக்குத் தராமல்போனது உறுத்தல். துளியும் வலுவற்ற மேலோட்டமான பாத்திர வார்ப்பு, கதாநாயகியின் பாத்திரத்தை மலினப்படுத்துவதுடன் கதையையும் பலவீனப்படுத்துகிறது.

காதல் தோல்விக்கான தீர்வு சாவதில் இல்லை என்ற விழிப்புணர்வுச் செய்தியை சுவாரஸ்யமான காட்சிகள் வழியே சொல்ல முயல்கிறது படம். விறுவிறுப்பாக நகரும் படத்தில் கதாநாயகன் தற்கொலைக்கு முயற்சிக்கும் காட்சிகள் இழுத்துக் கொண்டே போவதும், ரவுடி கருப்பு ராக்கைப் பலர்துரத்திச் செல்லும் காட்சிகளின் நீளமும் அலுப்பூட்டுகின்றன. ஆனால் வசனங்கள் படத்தின் பெரிய பலம்.

காதல் தோல்வி என்றால் அதற்குப் பெண்தான் காரணமாக இருப்பாள் என்னும் தமிழ் சினிமாவுக்கே வழமையான பொறுப்பற்ற குற்றச் சாட்டையே இந்தப் படமும் முன்வைக்கிறது. சந்தானம் வரும் காட்சியிலும் இதே அம்சம் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. இந்தக் கருத்து மீண்டும் மீண்டும் திரைப்படங்களில் முன்வைக்கப்படுவதால் யதார்த்த உலகில் பெண்களுக்கு எதிரான உணர்வுகள் அதிகரிப்பதற்கான அபாயம் இருக்கிறது. பெண்களுக்கு எதிரான நியாயமற்ற வாதம் இது என்று தமிழ் இயக்குநர்கள் உணர்வதில்லை என்பதை இந்தப் படமும் உணர்த்துகின்றது.

ஜெய்யின் நடிப்பு மெருகேறிவருகிறது. ஆனால், அவர் ஒரே மாதிரி வசனம் பேசுவதைத் தாங்க முடியவில்லை. காளி வெங்கட், தம்பி ராமையா, ராஜேந்திரன், நவீன் ஆகியோரும் கவர்கிறார்கள். சந்தானம், அஞ்சலி இருவரும் ஆளுக்கு ஒரு காட்சியில் வந்தாலும் நிறைவு.

பளிச்சென்று தோற்றமளிக்கும் ப்ரணிதா பலவீனமான கதாபாத்திரத்தில் வந்து செல்கிறார் என்றாலும் அவதூறைச் சுமக்கும் கதாபாத்திரத்தைத் துணிச்சலாக ஏற்றுக்கொண்டதற்காகவே அவரைப் பாராட்டலாம்.

துள்ளலான பாடல்கள், காட்சிகளுக்கேற்ற பின்னணி இசை ஆகிய இரண்டிலும் கலக்கியிருக்கிறார் இசையமைப்பாளர் சந்தோஷ் தயாநிதி. ஒளிப்பதிவாளர் மகேஷ் முத்துசாமி தனது பங்களிப்பைச் சரியாகச் செய்திருக்கிறார்.

இவற்றைவிட யதார்த்த நடப்புகள் மீதான எள்ளல், நட்பின் உயர்வைக் காட்டும் காட்சிகள், அளவான குடும்பப் பிணைப்பு, கொஞ்சம் சண்டை என்று பொழுது போக்குப் படத்துக்கான கலவையைச் சரியாகக் கொடுத்திருக்கிறார் இயக்குநர்.

சினிமா





புகைப்பிடிப் பென்பது புன்செயல் என்றே
பகைத்து நீக்கி வாழ்தல் நன்(று) இன்றேல் - தகைசார்
உடலுருகி உள்ளென்பும் உக்க விரைந்தே
இடம்பிடிப்பாய் சாக்காடு சென்று.

கழிவுகள் காய்ச்சிக் கலக்கி வடிக்கும்
இழிவான நாற்றக் கசிப்பைத் - தழுவி
உழைப்பைக் கொடுத்துக் குடிக்கும் மனிதர்
உழைப்பை அழிக்கும் பிசாசு.


உயிர்தந்த அன்னை உயிர்என்று அறிந்து
பயிர்வாடப் பெய்யும் மழைபோல் - உயிர்சோர்ந்து
உடல்தளரும் பின்பருவத் தும்காக்கும் மக்கள்

## ஆறறிவே உணர்...

உடல்பெற்ற நல்ல உயிர்.
துள்ளிய போது துடுக்கடக்கிச் செல்வாயே
பள்ளியென்று பாடம் படிப்பித்த கள்ளமில்லாத்
தந்தையைப் போற்றி நன்கு காக்கும் தனையரே
இந்த உலகில் இறை.

பெண்பிறப்பை போகம் தரவந்த ஓர்பிறப்பாய்க்
கண்டுகொண்டு வீதியிலும் வேறெங்கும் - கிண்டலால்
திண்டாட வைத்துத் திரியும் மனிதரோ
கண்கெட்டு அலையும் குருடு.

நா.நவராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்

## பேசாதனவெல்லாம்பேசி...

வேலணையூர்-தாஸ்



இலக்கியங்கள் என்பவை அறக் கோட்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். சமூகத்துக்கு நல்ல போதனைகளைத்தர வேண்டும். வாழ்வின் முன்மாதிரிகளை அறிமுகப்படுத்த வேண்டும் என்பவையே பலருடைய கருத்துக்களாக இருக்கின்றன. இதன்படி தமிழிலக்கியத்தின் வளர்ச்சியும்மரபும் அறக்கருத்துக்களுக்கு முதன்மை அளித்தே வந்திருக்கிறது. சிலப்பதிகாரம் அறம் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும் என்கிறது. சங்கமருவிய காலத்தில் எழுந்த பதினென் கீழ் கணக்கு நூல்கள் பலவும் இதனையே பின்பற்றுகின்றன. நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி ஆகிய பதினொரு நூல்களும் அறப் போதனையை அடிப்படையாகக் கொண்டவையாகும். இதன் தொடர்ச்சியாகத் தமிழில் எழுந்த ஏனைய இலக்கியங்களும் எப்போதும் நீதிப் போதனை செய்து சமூகத்தை நெறிப்படுத்த முயன்றிருக்கின்றன.


இதிலே அறம் என்பது என்ன என்பதில் பல மாற்றுக்கருத்துக்களும் வாதங்களும் உள்ளன. ஒரு காலத்தில் அறமாக இருப்பது இன்னொரு காலத்தில் அறமற்றதாகவும், ஒரு இனக்குழுவுக்கு அறமாக இருப்பது இன்னொரு சமூகத்துக்கு அநீதியாக இருப்பதுவும்தான் இத்தகைய கருத்து முரண்பாடுகள் ஏற்படக் காரணமாகிறது.

எது எவ்வாறு இருப்பினும், ஒரு சமூகத்தில் தொன்மையானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் என்பவற்றுக்கு அமைவானவையே அறமெனக்கருதப்படுகிறது. இவைதான் பிற்காலத்தில் நீதி போற்றும் சட்டமாகவும் எழுத்துருக் கொண்டது எனலாம்.

ஆனால் நவீன இலக்கியவாதிகளில் சிலர் படைப்பு(இலக்கியம்) என்பதற்கு அறத்தினைப் போதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருதுகோளுடன் எழுத முனைகிறார்கள்.

சமூக அநீதிகளையும் அதன் இருண்ட பக்கங்களையும் சொல்ல வருகிறபோதும் போர்க்குரலாகக் கிளர்ந்து எழுகிறபோதும் தர்ம போதனை செய்து கொண்டிருக்க முடியாது என்பது அவர்களின் வாதம். இலக்கியத்தைச் சட்டவரன்முறைகளுக்குள் அடக்கிவிட முடியாது. ஒருகுழந்தையின் கிறுக்கலைக்கூட அலட்சியப்படுத்திவிட முடியாது என்கிறது பின் நவீனத்துவம். புதியன படைக்க விழைகிறபோதும் சில அடிமைத்தனங்களைத் தகர்க்கமுற்படுகிற போதும் இலக்கியம் என்பது பண்பாட்டு நிலைகளை மீறிப் பேச விழையலாம். ஆயினும் பொதுவெளிகளில் பேசாதனவெல்லாம் பேசலாமா? என்பது பற்றிக் கருத்தாடல்கள் உண்டு.

உள்ளதை உள்ளவாறே சொல்ல வேண்டும் என்கிற யதார்த்தவாதம் சில படைப்புகளில் வரம்பு மீறிப்போகிறதோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. இப்போது நவீன இலக்கியமாய் வெளிவருகிற சில கதை, கவிதைகளை வீட்டில் வளர்ந்த பெண்களுக்கு முன்னால் வைத்துப் படிக்க முடியவில்லை. ஒளித்துப் படிக்க வேண்டியிருக்கிறது என்பது பலருடைய ஆதங்கம். அது சரி புத்தகத்தை ஒளித்துப் படிக்கலாம். முகப்புத்தகத்தை எப்படி ஒளிப்பார்களாம்! இப்போதெல்லாம் பிள்ளைகள் தொலைபேசியோடுதானே தூங்குகிறார்கள்.



1




# வேண்டாமே மணமுறிவு

எஸ்.மல்லிகா



### இளவயதுத் திருமணம்

திருமண நாளில், ஒவ்வொரு பெண்ணும் ஆணும் ஒரு புதிய ஆரம்பத்துக்குள்- ஒரு புதிய வாழ்க்கைக்குள்- ஒரு புதிய சந்தோசத்துக்குள்- ஒரு புதிய சூழ்நிலைக்குள்- ஒரு புதிய உறவுக்குள் பிணைக்கப்படுகின்றனர். இந்த வாழ்வின் ஆரம்பமும் முடிவும், இனிமையானவை. இந்த ஆரம்பத்துக்கும் முடிவுக்கும் இடையிலுள்ள காலத்தைக் கடந்து செல்வது, பலருக்குக் கடினமானது. அதிலும் இளவயதில் (திருமண வயதுக்கு முன்னர்) திருமணம் முடித்தவர்கள், பெரும் அவஸ்தைக்கு உள்ளாகின்றனர். இந்த வாழ்வின் இன்பத்தை வெகு விரைவில் சுவைத்து முடிக்கின்றனர். அடுத்தென்ன என்று நினைக்கின்றனர். மொத்தத்தில், பிஞ்சில் பழுத்த பழங்களாகி விடுகின்றனர். எடுத்ததுக்கெல்லாம் பிரச்சினைப்பட்டு, இறுதியில் திரு மண ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ள முனைகின்றனர்.

பொதுவாக இந்தவகைத் தம்பதிகள், வெறும் உடல் இன்பத்தை மட்டும்தான் விரும்புவர். அது தீர்ந்ததும், வேறு தேடலில் தம்மைத் தொலைத்து நிற்பர். இதன் ஒரு கட்டம்- ஆண், அழகைக் காண்கையில் மயங்குகிறான். பெண், அன் பான பேச்சைக் கேட்கையில் மயங்குகிறாள். தன் துணை எப்போதும் தன்னுடனேயே இருக்க வேண்டும் என்று ஏங்குகிறாள். இருவருக்கும் இடையில் மூன்றாம் நபர்களின் தலையீடு இருப்பதை அடியோடு வெறுக்கிறாள். இதற்கு மாறாக நடக்கும் பொழுது, குடும்பத்தில் அமைதிக் குறைவு ஏற்பட்டுவிடுகிறது. தம்பதியர் மனதில் விரிசல் எழுகிறது. இது பலருக்கும் புரிவதில்லை. பொதுவாக, இளவயதுத் தம்பதிகளுக்குப் புரிவதில்லை. புரிதலற்ற ஒன்றால், அவர்கள் தினமும் அலைக்கழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

ஒரு வீட்டில் வசிக்கும் கணவனும் மனைவியும் பார்த்துக் கொள்வது என்பது அன்றாட நிகழ்வுதான் என்றாலும், அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் தருணங்களில் முதன் முதலாகப் பார்ப்பது போன்ற பரவசத்தை உணர ஆரம்பிக்கின்றனர். பரவசப்படுத்தும் தன்மை உடைய காரியங்கள் மீது எமக்குச் சலிப்பு உண்டாக வாய்ப்பில்லை. இது தம்பதிகள் மனதில் நல்லதொரு புரிதலையும் அனுபவத்தையும் கொடுக்கிறது. மதுரமாக இனிக்கிறது. இந்தப் பரவசம், இளவயதுத் திருமண பந்தத்தால் பிணைக்கப்பட்டவர்களுக்கு அதிகம் இனிப்பதில்லை.

திருமண வாழ்வின் முற்பகுதியில் தம்பதிகளுக்கிடையே உண்டாகும் பரவசத்தை விட, திருமணத்தின் பிற்பகுதியில் அனுபவத்தினால் வரும் பரவசம் ஆழமானது- ஆனந்தமானது. அந்த ஆழத்தையும் ஆனந்தத்தையும், மதுவனும் ஜான்சியும் அனுபவிப்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மழுங்கிய குரல்...

தேவி பரமலிங்கம்

கும்....கும்....கும்....கும்...

உரலில் இருக்கும் தானியத்தின் மீது விழுந்து ஒலி எழுப்பிக் கொண்டிருக்கிறது உலக்கை. பொழுதும் கருகி இரவு பன்னிரண்டு மணியானால், பாலன் பிறப்பு. அந்த ஊரில் அதிகமாக வாழ்பவர்கள் கிறிஸ்தவர்களாதலால், அடுத்தநாள் மலரும் நத்தார் திருநாளைக் கொண்டாடுவதற்கான ஆயத்தங்களைச் செய்வதில் ஊரே களைகட்டி இருந்தது.

கடந்த நாலாம் வருடம் யாழ்ப்பாணப் பகுதியில் வீசிய பயங்கரச் சூறாவளிக்கு கணவனை இரையாக்கிய பின்பு மரியம்மாவின் வாழ்க்கை தடம்மாறியது. மறைந்த கணவன் ஞாபகமாக அவளிடம் அளித்துவிட்டுச் சென்ற ஒரு பெண் குழந்தையும் அவளுடன் ஒட்டிக் கொண்டு வாழ்கிறது. அந்தக் குழந்தைக்காகவே மரியம்மா வாழ்க்கையைப் போராட்ட களமாக்கிக் கொண்டாள்.

கும்... கும்...கும்... கும்...

பெருநாள் அடுத்த நாளாக இருந்தத னால் மரியம்மாவுக்கும் இன்று நல்ல உழைப்பு. மதியம் சாப்பிடக்கூட இல்லை. ஆருக்காக இத்தனை கஷ்டங்களையும் ஏற்றுக் கொண்டாளோ– அந்தச் சீவன் கடுமையான காய்ச்சலில் இருக்கையில் அவளுக்கு உணவா பெரிது? பகல் பொழுது வீட்டுக்குப் போன மரியம்மா, மகளுக்கு கடையில் வாங்கிப்போன றஸ்குடன் தேநீரும் வைத்துக் கொடுத்துவிட்டு வந்தவள்தான்– இன்னமும் வீட்டுப் பக்கம் தலைகாட்டவில்லை.

பட்...படார்...

படார்...டுமில்...பட்...பட் ..

ஊரே பெருநாள் வருகையை நினைத்து மகிழ்ந்திருந்தது. பட்டாசு கொளுத்திச் சிறுவர்களெல்லாம் திருநாளை வரவேற்றுக்கொண்டிருந்தார்கள்.

கும்...கும்...கும்...கும்...கும்...

மரியம்மாவின் உடல் உறுப்புக்கள் இயந்திரமாக மாறி இயங்கிக் கொண்டிருந்தன. அவள் மனம் மதியம் வீட்டுக்குப் போயிருந்த சமயம், தனது வயிற்றில் உதித்த பிஞ்சுக் குருத்து அந்தச் சுகவீனத்துக்குள்ளும் கேட்டதை நினைத்தே சுற்றிக்கொண்டிருந்தது.

"அம்மா.... பக்கத்து வீட்டு றோஸின்ர அப்பா அவளுக்குப் பட்டுச்சட்டை வாங்கிக் குடுத்திருக்கிறாராம்... எங்கட அப்பாவும் இருந்திருந்தால், எனக்குப் பெருநாளுக்குப் புதுச்சட்டை வாங்கித் தந்திருப்பார் தானேம்மா?"

இந்த வார்த்தைகளை அந்த வருத்தத்தினூடும் மகள் உச்சரிக்கும்போது, ஆயிரம் சம்மட்டிகளால் மண்டையைப் பிளப்பது போன்று இருந்தது மரியம்மாவுக்கு. எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும் தனது மகளின் மனதைத் திருப்திப்படுத்த முடியவில்லையே என்ற ஏக்கம் அவளது மனதைக் குடைந்தது. இயலாமை அவளுள் தலையெடுத்தபோது, அவளுக்கு வந்த கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"உனக்குப் பட்டுச் சட்டையா வேணும்? சனியன்... உனக்காக நான் படுற பாட்டைப் பார்த்துக் கொண்டும், பட்டுச் சட்டையா கேட்கிறாய்... ஏன் உயிரோடயிருந்து என்ரை உயிரை வாங்கிறாய்...? என்றவளாய் பளாரென அறைந்தாள் குழந்தைக்கு.

மதியம் நடந்த சம்பவத்தை நினைத்துப் பார்க்கையில், அவளுடைய மனம் வேதனைப் பட்டது. குழந்தையை அறைந்த தனது கைகளைப் பார்த்துவிட்டு, உலக்கை மீது மோதிக் கொள்கிறாள்.

"டும்...பட்.படார்......
புஸ்........டும்...டும்"

பாலன் பிறப்புக்கான நேரமும் நெருங்க நெருங்க ஊரெங்கும் ஒரே கலகலப்பு. மரியம்மாவும் கடமையை முடித்துக்கொண்டு உழைப்புக்குக் கிடைத்த ஊதியத்தைக் கணக்கிடுகிறாள். மொத்தமாக முந்நூறு ரூபா தேறுகிறது. அவளுக்கு ஒரு எண்ணம் தோன்ற, பெரியகடை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தாள். நேரமும் நன்றாகக் கழிந்திருந்ததனால், வியாபாரத்தை முடித்துக் கொண்ட கடைகள் மூடிக்கிடந்தன. ஆங்காங்கே ஒருசில கடைகளைத் தவிர நகரமே தூங்கிக்கொண்டிருந்தது. ஒற்றைக் கதவில் திறந்து கிடந்த புடைவைக்கடை ஒன்றினுள் நுழைந்த மரியம்மா, முந்நூறு ரூபாவையுமே கொடுத்து மகளுக்கு அளவான சட்டை ஒன்றை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு விரைகிறாள்.

"பட்... படார்...டும்.......டும்"

வழி நெடுகிலும் அவளை வரவேற்பது போன்று ஊரெல்லாம் வெடி கொளுத்தி ஒரே ஆரவாரம். ஆனந்தமாக வந்துகொண்டிருந்த மரியம்மா குடிசைக்குள் நுழையும்போது, மதியம் வளர்த்தி விட்டுப்போன கிழிந்த பாயின் மீதே கிடந்தாள் மகள் திரேசு. அவளுக்கென வாங்கி வந்த சட்டையைப் பின்புறமாக மறைத்துக் கொண்டே, "திரேசு... திரேசு...எழுந்து இஞ்ச பார், அம்மா என்ன கொண்டு வந்திருக்கிறனெண்டு..."

குரல் எழுப்பியவாறு உடம்பில் தட்டியும் பிள்ளை எழுந்திருக்கவில்லை.

தூக்கி நிறுத்துகிறாள் மரியம்மா. வேரற்ற மரமாகச் சக்தியற்றுச் சாய்கிறது உடல். மரியம்மா இத்தனை காலமும் எந்த உயிருக்காக வாழ்ந்தாளோ– அந்த உயிர் அவளைத் தனிக்க விட்டுவிட்டுப் பிரிந்துவிட்டது.

"ஐயோ... என்ர ராசாத்தி....." பட்டாசு ஒலிகளுக்கு மத்தியில், ஓங்கி ஒலிக்கின்றது மரியம்மாவின் குரல்.

வழி நெடுகிலும் அவளை வரவேற்பது போன்று ஊரெல்லாம் வெடி கொளுத்தி ஒரே ஆரவாரம். ஆனந்தமாக வந்து கொண்டிருந்த மரியம்மா குடிசைக்குள் நுழையும்போது, மதியம் வளர்த்தி விட்டுப்போன கிழிந்த பாயின் மீதே கிடந்தாள் மகள் திரேசு. அவளுக்கென வாங்கி வந்த சட்டையைப் பின்புறமாக மறைத்துக் கொண்டே, திரேசு... திரேசு.. எழுந்து இஞ்ச பார், அம்மா என்ன கொண்டு வந்திருக்கிறனெண்டு..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மார்பகப் புற்றுநோய்க்கு இவையும் காரணம்...

நாம் தினமும் அருந்தும் பால், மார்பகப் புற்றுநோயின் அபாயத்தை அதிகரிப்பதாகச் சமீபத்திய ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

சமீபத்தில் நோர்வே ஆய்வாளர்கள் மேற்கொண்ட குறித்த ஆய்வில், தினமும் 1 அல்லது 1/2 கிண்ணம் பால் அருந்துபவர்களை விட, 3 கிண்ணம் பால் குடிப்பவர்களுக்கு 3 மடங்கு அதிகமாக மார்பகப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது என்று தெரியவந்துள்ளது.

**பால்எப்படிப்புற்றுநோயைஉண்டாக்கும்?**

பாலிலுள்ள ஓமோன்களும் குறிப்பிட்ட உட்பொருள்களும் புற்றுநோயை உண்டாக்கக் கூடியவை. பாலில் சுத்திகரிக்கப்பட்ட உயிர்ச்சத்து–டி சேர்க்கப்படுகிறது. மருத்துவ நிபுணர்கள், மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களது உடலைப் பரிசோதித்ததில், சிந்தடிக் உயிர்ச்சத்து–டி இருமடங்கு அதிகம் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.

ஒருவருக்கு மார்பகப் புற்றுநோய் வருவதற்கு மோசமான உணவுக் கட்டப்பாடு, காய்கறிகள், மீன் போன்றவற்றைக் குறைவாக உட்கொள்வது, சீனியை அதிகம் சாப்பிடுவது போன்றவையும் காரணங்களாகும்.

மேலும், பெண்கள் அணியும் மார்புக் கச்சையும் மார்பகப் புற்றுநோய் வருவதற்கான அபாயத்தை அதிகரிக்கிறது.

அதை மிகவும் இறுக்கமாக அணிந்தால், மார்பகப் புற்றுநோய் மிகவும் வேகமாகத் தாக்கும். அதுவும் தொடர்ந்து 12 மணி நேரம் இறுக்கமான அணிந்தால், மார்பகப் புற்றுநோய் தாக்கும் அபாயம் அதிகரிக்கும்.



# பீட்ஸா தோசை

**தேவையானவை:**

தோசை மாவு - ஒரு கப்
பெரிய வெங்காயம் (பொடியாக நறுக்கியது) - இரண்டு மேசைக்கரண்டி
குடமிளகாய் (பொடியாக நறுக்கியது) - இரண்டு மேசைக்கரண்டி
தக்காளி (பொடியாக நறுக்கியது) - இரண்டு மேசைக்கரண்டி
காளான் (பொடியாக நறுக்கியது) - ஒரு மேசைக்கரண்டி
தக்காளிச் சோஸ் - இரண்டு மேசைக்கரண்டி
சீஸ்(துருவியது) - இரண்டு மேசைக்கரண்டி
எண்ணெய் - ஒரு மேசைக்கரண்டி

**செய்முறை**

அடுப்பில் தாச்சியை வைத்துச் சூடானதும் எண்ணெய் சேர்த்து சூடாக்கி அதில் பொடியாக நறுக்கிய வெங்காயம், குடமிளகாய், தக்காளி, காளான் ஆகியவற்றை சேர்த்து ஒரு நிமிடம் வதக்கிக் கொள்ளவும். அடுப்பில் தோசைக்கல்லை வைத்து எண்ணெய் தடவிச் சூடானதும் ஒரு கரண்டி மாவை சற்றுக் கனமாக பரப்பிவிடவும். தோசை அரைவேக்காடு வெந்ததும், அதன் மேற்புறத்தில் ஒரு மேசைக் கரண்டி அளவு தக்காளி சோஸையும், அதன் மேல் வதக்கிய காய்கறிகளையும், துருவிய சீஸையும் பரப்பிவிட்டு வேகவிடவும். சீஸ் உருகியதும் பீட்ஸா தோசையை எடுத்து சூடாகப் பரிமாறலாம்.





# சிறுநீரகக் கல் அறிகுறி என்ன?

- ★ பக்கவாக்கில் இடுப்புப் பகுதியில், கீழ் விலா எலும்புப் பகுதியில் தாங்க முடியாத வலி.
- ★ கீழ் வயிற்றில் இருந்து இடுப்பு வரை வலி பரவும்.
- ★ விட்டு விட்டு வலி வந்து செல்லும்
- ★ சிறுநீர் கழிக்கும்போது தாங்க மடியாத வலி.
- ★ சிறுநீரில் துர்நாற்றம் வீசும்
- ★ கொஞ்சம் கொஞ்சமாக சிறுநீர் வெளியேறும்.



# மீண்டும் சூடேற்றினால் விசமாகும் உணவுகள்

மீதமுள்ள உணவை வீணாக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் அவற்றைச் சுட வைத்து மீண்டும் சாப்பிடுவது என்பது நம்மில் அனைவருமே செய்வதாகும். அப்படிச் செய்வது சிக்கனம் தான் என்றாலும், அது ஆரோக்கியமானதாக இருக்குமா என்பது கேள்விக்குறியே. இப்படிச் செய்கையில் சில உணவுகள் விசத்தன்மையைப் பெற்றுவிடும். ஊட்டச்சத்துக்களை இழந்துவிடும். அந்த உணவுகள் பின்வருமாறு–

**1.உருளைக்கிழங்கு:** உருளைக் கிழங்கு உடல் ஆரோக்கியத்துக்கு அதிக நன்மையை அளிக்கிறது என்பதற்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. இதில் ஊட்டச்சத்துக்கள் மிக உயர்ந்த அளவில் உணடு. ஆனால், எவ்வளவு தூரம் அதனைக் குளிர்சாதனப்பெட்டியில் வைக்கிறீர்களோ, அவ்வளவு தூரம் அதன் ஊட்டச்சத்துக்களை அது இழந்துவிடும். அவற்றை மீண்டும் சுட வைப்பதால், அது நச்சுத்தன்மையை அடைந்துவிடும்.

**2.கோழிக்கறி:** இன்றைய அவசர உலகில், மீண்டும் சுட வைக்கப்படும் உணவில் முக்கிய பங்கை கோழிக்கறி பெறுகிறது. ஆனால், அதனை மீண்டும் சுட வைத்து உண்பது மிகவும் ஆபத்தானது. இந்த உணவிலுள்ள அளவுக்கு அதிகமான புரதம்தான் அதற்குக் காரணம். இதனை மீண்டும் சுட வைக்கும்போது, நமக்குச் சமிபாட்டுப் பிரச்சினைகளை ஏற்படுத்தும். அப்படி உண்ண வேண்டுமானால், அதை அப்படியே குளிர்ச்சியாகவே உண்ணுங்கள்.



**3.காளான்கள்:** காளானைப் பொறுத்தவரை, அதனைத் தயார் செய்த உடனேயே சாப்பிட்டு விட வேண்டும். ஆறப்போட்டு விட்டால், அதிலுள்ள புரதத்தின் அளவுகளில் மாற்றம் ஏற்படும். இதனால் சமிபாடு கஷ்டமாக இருக்கும்.

**4.பீட்ரூட்:** பீட்ரூட் கிழங்கு, இதயத்தை வலுப்படுத்தும் சிறப்பு வாய்ந்தது. ஆனால், அதை மீண்டும் சுட வைக்கும்போது, அது ஆரோக்கியமற்றதாகி போய்விடும்.

**5.கீரை வகைகள்:** எந்தவகைக் கீரைகளையும் மீண்டும் சுட வைப்பது ஆபத்தானது. இது உடலுக்குப் புற்றுநோய் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும்.

**6.முட்டைகள்:** அளவுக்கு அதிகமான வெப்பத்தில் இருக்கும்போது முட்டை நச்சுத்தன்மையைப் பெற்றுவிடும். எனவே, மீண்டும் சுட வைத்த அவித்த முட்டைகள் அல்லது பொரித்த முட்டைகளை உட்கொள்வது ஆபத்தானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும் முடிகிறது, மறுநாள் மீண் டும் விடிகிறது. இதற்கு நடுவில் நாம் எதனைச் சாதித்து விட்டோம் என்று சலித்துக்கொள்ளும் பெண்கள் தான் இன்று எமது மத்தியில் அதிகம். இந்தச் சலிப்பைத் தள்ளிவைத்துவிட்டு, நம்பிக்கைச் சிறகுகளை விரித்திட அவர்கள் முயல்வதில்லை. பெண்கள் மனமுடைந்து விடுவதற்கும், வாழ்க் கையில் பிடிப்பற்று இருப்பதற்கும் நிறையக் கார ணங்கள் உண்டு.




இதில், மேற்படிப்புப் படிப்பதற்கான வாய்ப்புக்கள் கிட்டாத பெண்கள்தான் எளிதில் மனமுடைந்து விடுகின்றனர். இதிலும், க.பொ.த. (சா/த) அல்லது க.பொ.த. (உ/த) பரீட்சையில் முழுமையாகச் சித்தி எய்தத் தவறும் பெண்கள், இவ்வளவுதான் வாழ்க்கை என்று மனதளவில் விரக்தியுறுகின் றனர். அடுத்தென்ன என்று சிந்திப்பதற்கு அவர் கள் தயாராக இல்லை.

கல்வியில் சித்தியெய்தி, மேற்படிப்புப் படிப்பது மட் டும்தான் வாழ்க்கை என்றில்லை. அதற்கு அப்பாலும் விரிந்து பரந்து கிடக்கிறது வாழ்க்கை. அது வானம் போன்றது. அதில், வாழ்வதற்கான வழிகள் குவிந்து கிடக்கின்றன. தையற் கலை, கைவேலை என வீட்டில் இருந்தவாறே செய்யக்கூடிய பணிகளும், கற்ற அறிவுக் கேற்ற வேலைகளும் அவர்களுக்காக வெளியில் காத்துக்கிடக்கின்றன.

ஒவ்வொரு சாதனைப் பெண்ணும், சாதனைகளைச் சுமந்தவாறு பிறப்பதில்லை. அவர் களின் சாதனைக்குப் பின்னால், கடின உழைப்பும் விடாமுயற்சியும் ஒளிந்திருக்கும். தூக்கம் தொலைத்த இரவுகள் நிறைந்திருக்கும். அவற்றை உன்னாலும் செய்ய முடியும். பெண்ணே! வாய்ப்புக்கள் உன்னைத் தேடி வரட்டும் என்று காத்திருக்காது- அவற்றை நாடிச் செல்ல, உன் நம்பிக்கைச் சிறகுகளை விரித்திடு.

வாழ்வின் உச்சம் தொட்டதும், மனதால் சிரித்திடு. ஒருவரின் உழைப்பும் அதன் மூலம் கிடைக்கும் புன்னகையும்தான் அகிலத்தில் என்றுமே விலை மதிப்பற்றவை.

# சிறகுகள் விரித்திடு மனதால் சிரித்திடு




# கோபத்தை கட்டுப்படுத்தும் வழிகள்

கோபத்தை ஆக்கபூர்வமாக எப்படி மாற்ற முடியும்? இதை எப்படிக் கையாள்வது? எவருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் எப்படிக் கட்டுப்படுத்துவது?

கோபம் வரும்போது உங்கள் உணர்வு எப்படி இருக்கிறது என்பதை முதலில் கவனியுங்கள். இதயத்துடிப்பு அதிகமாவது, நகங்களைக் கடிப்பது, வேகமாகச் சுவாசிப்பது, பற்களைக் கடிப்பது, கைகளை இறுகப் பிடிப்பது இவற்றில் ஏதேனும் சிலவற்றை நீங்கள் செய்துகொண்டிருந்தால், உடனடியாக உங்கள் மனதைச் சாந்தப்படுத்துங்கள். இதுபோன்ற செய்கைகளில் நீங்கள் ஈடுபடும்போது, உங்களுக்கு நீங்களே "அமைதியாக இரு... பொறுமையுடன் இரு... சாந்தமாக இரு" எனத் தொடர்ந்து சொல் லுங்கள். இவை எல்லாம் தற்காலிகமாக உங்கள் கோபத்தைத் தள்ளிப்போட உதவும்.

சுவாசிப்பதில் கவனம் செலுத்தலாம். உதாரணமாக, ஒன்று முதல் ஆறு வரை மனதில் எண்ணிக்கொண்டே மெதுவாக மூச்சை உள்ளிழுங்கள். பின்னர், அதேபோல ஒன்று முதல் ஏழு வரை எண்ணிக்கொண்டே மூச்சை அடக்க முயற்சி செய்யுங்கள். இறுதி யாக, மனதில் ஒன்று முதல் எட்டு வரை எண்ணிக்கொண்டு மூச்சை மெதுவாக வெளியே விடுங்கள். இப்படி பத்து முறை செய்து பாருங்கள்... கோபம் மட்டுமல்லாமல், பதற்றமும் பயமும்கூடக் குறைந்துவிடும்.

அதிகமாகக் கோபப்படுபவர்கள், வேகமாக நடைப் பயிற்சி செய்யலாம். இதுபோன்ற பயிற்சிகளின்போது நிதானமாக இருப்பது எப்படி என்பதையும் சேர்த்துக் கற்றுக் கொள்வீர்கள். எதற்காகக் கோபம் வர வேணும், வரக் கூடாதே... என்ற புரிதல் கிடைக்கும். இந்தக் கலை களைக் கற்றவர்கள் பொறுமைசாலிகளாகவும் மாறுவார் கள். இதனால், கோபம் வெகுவாகக் குறையும்.





# பெண்களின் நட்சத்திர பொதுப்பலன்கள்

1.அச்சுவினி: கவர்ச்சியானவர்கள். கனிவானவர்கள். சுத்தமானவர்கள். காம வேட்கை, கடவுள் பக்தி அதிகமிருக்கும்.

2.பரணி: சுத்தமில்லாதவர்கள். சண்டைகளை விரும்புபவர்கள். வஞ்சகம் மிக்கவர்கள். திரை மறைவில் தீமை புரிபவர்கள்.

3.கிருத்திகை: கொள்கைப் பிடிப்பற்றவர். கோபம் அதிகமிருக்கும். சண்டை போடுபவர்கள். சுற்றத்தை வெறுப்பவர்கள்.

4.ரோகிணி: செல்வம் படைத்தவர்கள். அழகானவர்கள். மூத்தோரை மதிப்ப வர்கள்.

5.மிருகசீரிடம்: சுகாதாரமானவர்கள். அழகானவர்கள். ஆடை, ஆபரண யோகம் பெற்றவர்கள். தரும காரியங்களில் ஈடுபாடு உடையவர்கள்.

6.திருவாதிரை: குரோத குணமும், நயவஞ்சகமும் படைத்தவர்கள். ஆத்திரம் மிக்க வர்கள். வீண் செலவு செய்பவர்கள்.

7.புணர்பூசம்: பண்பானவர்கள். அடக்கமானவர்கள். அழகும், இலட்சணமும் மிக்க கணவரைப் பெறுவார்கள். சுய கௌரவம் படைத்தவர்கள்.

8.பூசம்: வீடு, நிலம், வாகனம் ஆகிய வளங்களைப் படைத்தவர்கள். அழகா னவர்கள்.

9ஆயிலியம்: அழுது ஆர்ப்பரிப்பவர். ஆபாச வார்த்தைகளை அள்ளி வீசுபவர். விசுவாசமில்லாதவர்கள். இரகசியம் காக்கத் தெரியாதவர்கள்.

10. பூரம்: சந்தோசல்லாபம் மிக்கவர். செல்வாக்கு மிக்கவர். நீதி நெறி வழி நடப்பவர். தைரியமானவர்கள்.

11.உத்திரம்: சரச சல்லாபத்தை அனுபவிப்பவர். ஒழுக்கமானவர்கள்.

12.அத்தம்: சுகபோகமாக வாழ்வார்கள். கவர்ச்சியானவர்கள். நுண்கலை வல்லுநர்கள்.

13.சித்திரை: வனப்பும் வசீகரமும் உடையவர்கள். அழகானவர்கள்.

14.சுவாதி: ஒழுக்கமானவர், நல்லோர் நட்பைப் பெற்றவர். எதிர்ப்பை வெல்லும் குணமுடையோர்.

15.விசாகம்: சாஸ்திர, சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பவர். அறிவாற்றல் மிக்கவர்கள்.

16.அனுசம்: தியாக குணம் படைத்தவர்கள். பொதுச் சேவையில் நாட்டம் உடையவர்கள்.

17.கேட்டை: சத்திய நெறி காப்பவர். சந்தோசமானவர்கள். சுற்றத்தாரை நேசிப்பவர்.

18.மூலம்: குரோதமானவர்கள். வெறுப்பும், விகற்பமும் மிக்கவர்கள்.

19.பூராடம்: குடும்பத்தில் சிறந்தவர்கள். அதிகார அந்தஸ்து மிக்கவர்கள்.

20.உத்தராடம்: பேரும், புகழும் மிக்கவர்கள். சந்தோமும் சல்லாபமும் அனுப விப்பவர்கள். உல்லாசவாசிகள்.

21.திருவோணம்: பிறருக்குச் சேவை செய்பவர்கள். நம்பிக்கையும், நேர்மையும் மிக்கவர்கள். இரக்க மனம் படைத்தவர்கள்.

22.அவிட்டம்: சகல சௌபாக்கியங்களையும் பெற்றவர்கள். பெருந்[illegible]மையான வர்கள். கருணை மிக்கவர்கள். நேர்மையானவர்கள்.

23.சதயம்: பிற பெண்களை நேசிப்பவர்கள். சுற்றத்தாரால் [illegible]ம்பப்படு பவர்கள். கலகலப்பாக இருப்பவர்கள்.

24.பூரட்டாதி: சமுதாயத்தில் உயர் அந்தஸ்துப் பெற்றவர்கள். அறி[illegible]ாவர்கள். கல்வி மற்றும் கலைகளில் வல்லவர்கள்.

25.உத்தரட்டாதி: பாசமானவர்கள். அறிவும் ஆற்றலும் மிக்கவர்கள். உ[illegible]மையை விரும்புபவர்கள்.

26.ரேவதி: சம்பிரதாயங்களை மதிப்பவர்கள். சட்டதிட்டங்களுக்[illegible]மதிப்புக் கொடுப்பவர்கள். நேசம் மிக்கவர்கள்.

27.மகம்: ஆசார, அனுஷ்டானங்களை அனுசரிப்பவர்கள். பா[illegible] மிக்கவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சமகாலத்தில் பெண்ணியக் கவிதைகள் 2

அனார்



உனக்காக நான்
தனிமையில் தோய்ந்தவளாய்
இங்கே காத்திருக்கிறேன்...

சிவரமணியின் அந்தக் கவிதை அன்றைய காலச் சூழலின் பெண்ணியப் பிரதிபலிப்பு. அது பெண்ணவள் எதிர்கொள்ளும் துயரம். இது போன்றே 'அவர்கள் பார்வை' எனும் தலைப்பில் சங்கரி எழுதும்போது,

எனக்கு முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை

அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன

சமையல் செய்தல்
படுக்கையை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே எனது
கடமைகளாகும்

கற்பு பற்றியும்
மழை பெய்யெனப் பெய்வது
பற்றியும்
கதைக்கும் அவர்கள்
எப்போதும் எனது உடலையே
நோக்குவர்

கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்

என்கிறார்.

இவர்களைப் போன்றே கவிதை செய்கிறார் மற்றொரு ஆளுமைமிக்க பெண் கவிஞர் ஊர்வசி. மொழி நேர்த்தியாலும் கவிதைத் தன்மையான கனவுகளாலும் இயற்கையினைக் கொண்டாடுகிற காதலினாலும் வாசிப்பனுபவத்தையும் சிலிர்ப்பையும் அதிர்வுகளையும் தரக்கூடியது இவரது கவிதை. பசுமையும் பரிவுமான அவரது 'வேலி' என்ற கவிதை மிகுந்த நினைவுத் துயரை ஏற்படுத்துகிறது.

நட்சத்திரப் பூக்களை
எண்ண முடியாமல்
மேலே கவிழ்ந்தபடி கூரை
ஒட்டடைகள் படிந்து
கறுப்பாய்ப் போனது
கம்பி போட்ட சாளரம்கூட
உயரமாய்
ஆனாலும் திறந்தபடி
அதனூடே காற்று
எப்பொழுதும்
மிகவும் இரகசியமாய்
உன்னிடம் என்னை
அழைக்கிற காற்று

என்னைச் சூழவும்
சுவர்கள்தான்
நச் நச் என்று
ஓயாமல் கத்திக்கொண்டிருக்கிற
பல்லிகள் ஊர்கிற சுவர்கள்
அவையும்
ஒட்டடைகள் படிந்து
எப்போதோ கறுத்துப்போனவை

உனக்காக நான்
தனிமையில் தோய்ந்தவளாய்
இங்கே காத்திருக்கிறேன்

பழைய பஞ்சாங்கங்களில்
புதிதாக
நம்பிக்கை தருவதாய்
ஒரு சொல்லைத் தேடிப்பார்த்தபடி
எப்பொழுதுதான் என்னால்
நீ வசிக்கின்ற அந்த
திறந்த வெளிக்கு வர முடியும்

உன் இருப்பிடம்
இங்கிருந்து வெகு தொலைவோ
இரண்டு சிட்டுக்குருவிகளை
இங்கே அனுப்பேன்
அல்லது
இரண்டு வண்ணத்துப்
பூச்சிகளையாவது

'எல்லை கடத்தல்' எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து ஔவையின் 'சுயம்' என்ற கவிதையின் இறுதிப்பகுதி இவ்வாறமைகின்றது,

இப்போதுதான் என்னை மீட்டு
எடுத்திருக்கிறேன்
அடக்குமுறைக்குள்ளிருந்தும்
அச்சம் தரும் இருளிலிருந்தும்
உணர்வுகள் பிடுங்கி எறியப்பட்ட
வாழ்விலிருந்தும்
என்னை மீட்டுள்ளேன்
ஒளியைப் பிறப்பித்தபடி செல்
லும் சின்னஞ்சிறு
மின்மினிப் பூச்சியாய் என்னைக்
கண்டு எடுத்துள்ளேன்
யாவருமறிய நிலவைப்போல
இரவல் ஒளியில்
வாழ்தலில் உயிர்ப்பில்லை

சிறிய மின்மினியாய்
சுயஒளியில் வாழ்தலே
இன்று சுகமென்றறிந்தேன்
பூவின் மலர்விலும் வாழ்வு
உயிர்க்கின்றது
காற்றின் அசைவிலும் வாழ்வு
விரிகிறது

இதன்படி 1990களில் புதிய சிந்தனைப் போக்குகளோடு பல பெண்கள் கவிதைத்துறையில் ஒரு பாய்ச்சலை நிகழ்த்தியிருக்கிறார் கள் எனத் திடமாகக் கூற முடியும். முஸ்லிம் பெண் கவிஞர்களின் பங்களிப்பும் இதன்போது நிகழ்ந்தது.

இக்காலப்பகுதியானது இன முரண்பாடுகள் அதிகரித்துக் கிழக்கிலும் வடக்கிலும் பல கசப் பான அழியாத வடுக்களையும் தோற்றுவித்தது. 1990 ஒக்ரோபரில் யாழ்.குடாநாட்டிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னரான இவ்விடைவெளி, புதிய பல முஸ்லிம் கவிஞர்களையும் உருவாக்கியது.

பெண்மொழி, உடலரசியல், உடலைக் கொண்டாடுதல், போர்க்கால நெருக்கடிமிகுந்த அனுபவங்களை முனைப்போடு வெளிப்படுத்தியவர்களாகப் பல பெண்கள் கவிதைத் துறைக்குள் நுழைந்தனர்.

மைதிலி, ரேவதி, வினோதினி, ஆகர்ஷியா, சுல்பிகா, ஆழியாள், சுமதிரூபன், பெண்ணியா, ரஞ் சினி, தமிழ்நதி, பானுபாரதி, பஹீமாஜஹான், உருத்திரா எனப் பல பெண்கள் தமக்கெனத் தனித்துவமான பாதையைக் கொண்டவர்களாக வெளிப்பட்டனர். (தொடரும்)

## தோழி...

யாழினை நீ இசைக்க
யாவையும் நான் மறக்க
நேர்வது ஏனோடி;


காற்றென நீயிருக்க
அதில் கலந்து நானிருக்க
காரணம் ஏனோடி;

அன்றது நிகழ்ந்தது
இன்றது நடந்ததாய்
ஞாபகம் வருவதேனோடி;

ஆயிரம் வாதங்கள்
ஆயினும்
உள்ளன்பு குறைவில்லை
பொங்குவதேனோடி;

தோழி...

இதுதானோ
உண்மைக் காதல்
உண்மை சொல்லடி...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் நிவாரணியாகும் அற்புத மூலிகைகள்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆனால், இந்தக் குறைவற்ற செல்வத்தைக் கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை இன்று மிகக் குறைவு. இதற்கு வாழ்க்கை முறை, கால மாற்றம், உணவுப் பழக்க வழக்கங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இவற்றால் நோயுற்றவர்களுக்குக் கைகொடுக்கும் மூலிகைகள் பற்றி நோக்குவோம்.



**அறுகம்புல்:**

மூல வியாதியைக் குணப்படுத்தும். வித்தின் வீரியத்தை முறிக்கும். குடற் புண் வராமல் காக்கும். ஆஸ்துமா, நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும்.



**வல்லாரை:**

ஞாபகசக்தியை அதிகரிக்கும். காமாலைக்கு மருந்தாகிறது. மலச்சிக்கலைக் குணப்படுத்தும்.



**நில வேம்பு:**

காய்ச்சல் மற்றும் கபம் அகற்றும். தலையில் நீர் கோர்த்திருந்தால் அதனை வற்றச் செய்யும்.



**நெல்லிக்காய்:**

பித்தத்தைத் தணிக்கும். குருதிச் சோகையைக் குணப்படுத்தும். பித்தத்தைக் கரைக்கும். மூலம் மற்றும் நீரிழிவு நோய்களைக் குணமாக்கும்.



**வெந்தயம்:**

பித்தத்தையும் உடல் சூட்டையும் தணிக்கும். சீனியின் அளவைக் கட்டுப்படுத்தும். காச நோய்க்கு மருந்தாகும்.



**ரோஜாப்பூ:**

இதயத்தைப் பலப்படுத்தும். கல்லீரல், நுரையீரல் மற்றும் சிறுநீரகக் கோளாறுகளைக் குணப்படுத்துகிறது. வயிற்றுப் போக்கைச் சரிசெய்கிறது.



## கற்றாழை

இளமையைப் பராமரிக்கும் மூலிகை. தோல் சீவி, கற்றாழையின் சதைப்பகுதியை மட்டும் எடுத்து, நன்றாகக் கழுவி மோர் அல்லது கருப்பட்டியுடன் சாப்பிட்டுவர, கர்ப்பப்பை தொடர்பான பிரச்சினைகள் தீரும். உடல் வெப்பம், வெள்ளைப்படுதல் குணமாகும்.



# மல்லிகையின் மருத்துவ குணங்கள்

மன அழுத்தம், உடல் சூடு போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள், ஒன்றுமே செய்ய வேண்டாம். மல்லிகைப் பூவைத் தலையில் சூடினால் போதும். மன அழுத்தம் குறையும், உடல் சூடும் நீங்கும்.

கடையில் உணவை வாங்கி உட்கொள்பவர்களுக்கு, வயிற்றில் பூச்சித் தொல்லைகள் அதிகமாக இருக்கும். இதனால் உடல் மெலியும், சருமத்தில் வெள்ளைத் திட்டுக்கள் ஏற்படும். இதற்கு, 4 மல்லிகைப் பூவை தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்து அந்த நீரை அருந்தி வரவேண்டும். இவ்வாறு செய்தால், வயிற்றிலுள்ள கொக்கிப் புழு, நாடாப் புழு போன்றவை அழியும். இந்த அறிகுறிகள் இருப்பவர்கள் மட்டுமல்லாமல், அடிக்கடி பூச்சி மருந்து சாப்பிடுபவர்கள் தவிர அனைவருமே இந்தத் தண்ணீரை அருந்தலாம்.



இதே போன்று மல்லிகைப் பூக்களை நிழலில் வைத்து உலர்த்தி அவை காகிதம் போல ஆனதும், அவற்றைப் பொடியாக்கித் தண்ணீரில் கலந்து குடித்து வர, சிறுநீரகக் கற்கள் தாமாகவே கரைந்து போகும். அதேபோல நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாதவர்கள் மல்லிகைப் பூக்கள் ஒன்றிரண்டை உண்டு வர, நோய் எதிர்ப்புச் சக்தி உயரும். இது மட்டுமல்லாமல் அவ்வப்போது ஏற்படும் சில உடல்நலப் பிரச்சினைகளுக்கும் மல்லிகை சிறந்த நிவாரணியாக உள்ளது. அதாவது, சிலருக்கு மல்லிகை வாசனை தலைவலியை ஏற்படுத்தும். ஆனால் தலைவலியை குணமாக்கும் குணம் மல்லிகைக்கு உள்ளது என்பது பலருக்கும் தெரியாது. தலைவலி ஏற்படும் போது, சில மல்லிகைப் பூக்களைக் கையில் வைத்துக் கசக்கி அதனைத் தலையில் பத்திடுவது போல தேய்த்து விட்டால், தலைவலி காணாமல் போகும்.

மல்லிகைப் பூவில் இருந்து ஒரு வகை எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் பல்வேறு உடல் உபாதைகளுக்கு அருமருந்தாக உள்ளது. உடலில் அடிபட்டு அல்லது சுளுக்குப் பிடித்து வீக்கம் காணப்பட்டாலும், நாட்பட்ட வீக்கமாக இருந்தாலும், மல்லிகைப் பூவை அரைத்துப் பூசினால் வீக்கம் குறையும்.

குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க முடியாத நிலையில் இருக்கும் தாய்மார்கள், மார்பில் கட்டியுள்ள பாலை வெளியேற்றவும் வலியை நீக்கவும் மல்லிகைப் பூ சிறந்த நிவாரணி. மல்லிகைப் பூவை அரைத்து மார்பகத்தில் பற்றுப் போட்டால், அந்த வலி குறைந்து, பால் சுரப்பதும் படிப்படியாக நிற்கும்.

மல்லிகை மொட்டுக்களைச் சாப்பிட்டு வந்தால்- கண் நோய்கள், மஞ்சள் காமாலை மற்றும் சில பால்வினை நோய்களும் குணமாகும். மல்லிகைப் பூவை நீரில் கொதிக்க வைத்து, அதனுடன் பனங்கற்கண்டு சேர்த்துக் குடித்து வந்தால், கண்ணில் வளரும் சதை வளர்ச்சி குறைந்து, படிப்படியாகத் தெளிவான பார்வை பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எதிர்வினை

ஒரு பண்ணையார் வீட்டில், எலியொன்று தனது இரவுநேர இரை தேடலுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தது. வளையை விட்டு மெதுவாகத் தலையை உயர்த்திப் பார்த்தது. அப்போது, வீட்டின் எஜமானனும் எஜமானியும் ஒரு பொதியைப் பிரித்துக்கொண்டிருந்தனர். ஏதோ நாம் சாப்பிடக்கூடிய பொருள்தான் உள்ளே இருக்கும் என்று ஆவலோடு பார்த்தது. ஆனால், அவர்கள் வெளியே எடுத்தது- ஒரு எலிப்பொறி. அதைப் பார்த்ததும் எலிக்கு மூச்சே நின்றுவிடும் போல இருந்தது.

வீட்டிலிருந்த கோழியிடம் சென்று, பண்ணையார் ஒரு எலிப்பொறி வாங்கி வந்துள்ளார். எனக்குப் பயமாக இருக்கிறது என்று பதற்றத்துடன் கூறியது. அதற்கு கோழி, உன்னைப் பொறுத்த வரை, இது கவலைப்பட வேண்டிய விடயம்தான். நல்ல வேளையாக இந்த எலிப்பொறியால் எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்று கூறி விட்டது.



உடனே எலி, பக்கத்தில் இருந்த வான்கோழியிடம் அதே விடயத்தைக் கூறியது. வான்கோழியும் கோழியின் பதிலைச் சொல்லியதோடு, நான் எலிப்பொறியெல்லாம் பார்த்துப் பயப்பட மாட்டேன் என்றது. மனம் நொந்து போன எலி, அடுத்து பக்கத்தில் இருந்த ஆட்டிடம் போய் அதே விடயத்தைச் சொல்லியது.

ஆடு, கோழி, வான்கோழி கூறிய அதே பதில்களைச் சொல்லியது. அத்தோடு நின்றிருந்தாலும் பரவாயில்லை. எலிப்பொறியைப் பார்த்து என்னையும் பயப்படச் சொல்கிறாயா? என்று நக்கலும் அடித்தது.

அன்று இரவு எலிப்பொறியில் ஒரு பொரித்த மீன் துண்டை வைத்து விட்டு பண்ணையாரும் அவர் மனைவியும் தூங்கப்போயினர். ஒரு அரைமணி நேரத்தில் டமால் என்றொரு சத்தம். எலி மாட்டிக்கொண்டு விட்டது என்று பண்ணையார் மனைவி ஓடிவந்து, எலிப்பொறியைக் கையில் தூக்கினார். மறுகணம், ஆஆஆ எனக் கத்தினார். எலிக்குப் பதிலாக பாதி மாட்டியிருந்த பாம்பு ஒன்று எஜமானியம்மாவைக் கடித்துவிட்டது. உடனே, எஜானியம்மாளை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். விசத்தை முறிக்கத் தடுப்பூசி போட்டபின்னும், பண்ணையார் மனைவிக்கு விசம் இறங்கவில்லை. அத்துடன், காய்ச்சலும் காய்ந்தது. அருகிலிருந்த ஒரு மூதாட்டி, பாம்புக் கடிக்குப் பின்னால் வரும் காய்ச்சலுக்கு சிக்கன் சூப் வைத்துக்கொடுத்தால் நல்லது. விசம் இறங்கிவிடும், காய்ச்சலும் குறைந்துவிடும் என்று கூறினார்.

பண்ணையார் வீட்டில் மேய்ந்துகொண்டிருந்த கோழிக்கு வந்தது வினை. கோழியைக் கொன்று சூப் வைக்கப்பட்டது. அப்போதும் பண்ணையார் மனைவியின் காய்ச்சல் தணியவில்லை. விசம் இறங்கவில்லை. அவரைப் பார்க்க உறவினர்கள் சிலர் வந்தனர். அவர்களுக்குச் சமைத்துப்போட வான்கோழியை அடித்தனர். வான்கோழியும் மரித்தது.

சில நாள்களில் பண்ணையாரம்மாவின் உடல் நலம் தேறியது. மனைவி பிழைத்துக்கொண்டதைக் கொண்டாட, வீட்டில் இருந்த ஆட்டை அடித்து ஊருக்கே விருந்து வைத்தார் பண்ணையார். ஆடும் உயிரை விட்டது. நடந்த அத்தனை நிகழ்வுகளையும் எலி வருத்தத்தோடு கவனித்துக்கொண்டிருந்தது. பண்ணையார், தனது மனைவியின் பாம்புக்கடிக்குக் காரணமான எலிப்பொறியைத் தூக்கிப் பரணில் போட்டுவிட்டார். எலி தப்பித்துவிட்டது. இப்போது எலிக்கு நிம்மதி!

நீதிக்கருத்து- அருகில் இருப்பவர்கள் தமக்கொரு பிரச்சினை என்று உதவி கேட்டு வந்தால், உதவிடுங்கள். ஏனென்றால், அந்தப் பிரச்சினை நாளை நமக்கும் வரலாம்.



## நேரத்தின் மதிப்பு

மனித வாழ்க்கையில், நேரம் பொன்னானது. அதன் முக்கியத்துவத்தையும் மதிப்பையும் இவர்களிடம் கேட்டுப் பாருங்கள்...ஒரு மில்லி கணத்தின் மதிப்பை, ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் வாங்கியவரைக் கேட்டால் தெரியும்.

ஒரு கணத்தின் மதிப்பை, விபத்தில் உயிர் தப்பியவரைக் கேட்டால் தெரியும்.

ஒரு நிமிடத்தின் மதிப்பை, தூக்கிலிடப்படும் கைதியைக் கேட்டால் தெரியும்.

ஒரு மணி நேரத்தின் மதிப்பை, உயிர் காக்கப் போராடும் மருத்துவரைக் கேட்டால் தெரியும்.

ஒரு நாளின் மதிப்பை, அன்று வேலை இல்லாத தொழிலாளியைக் கேட்டால் தெரியும்

ஒரு வாரத்தின் மதிப்பை, வாரப் பத்திரிகை நிறுவனம் ஒன்றின் ஆசிரியரைக் கேட்டால் தெரியும்.

ஒரு மாதத்தின் மதிப்பை, குறைப் பிரசவம் ஆகும் ஒரு தாயைக் கேட்டால் தெரியும்.

ஒரு வருடத்தின் மதிப்பை, தேர்வில் தோல்வியுற்ற ஒரு மாணவனைக் கேட்டால் தெரியும்.

எனவே, நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தைப் பாருங்கள். அதில் ஓடுவது முள் அல்ல, உங்கள் வாழ்க்கை என்பதை உணருங்கள்.

டி.அதிசயா

# முட்டை மதிப்பெண் பெற்ற மாணவன்



ஒரு மாணவன் பரீட்சை ஒன்றில், முட்டை மதிப்பெண் கிடைத்ததால் பெரும் அதிர்ச்சியடைந்தான். காரணம், அனைத்துக் கேள்விகளுக்கும் சரியாகப் பதிலளித்திருப்பதாகவே அவன் நம்பினான். அத்துடன், சரியான பதிலை எழுதியதாகப் பாடசாலை நிர்வாகத்திடம் வாதாடினான். அவனுடைய பரீட்சை வினாக்களும் விடைகளும் வருமாறு-

கே: எந்தப் போரில் இராவணன் உயிரிழந்தான்?
ப: அவனது கடைசிப் போரில்.
கே: சுபநிகழ்ச்சிகளில் வாழை மரங்கள் எதற்காகக் கட்டப்படுகின்றன?
ப: அவை கீழே விழாமல் இருப்பதற்காகக் கட்டப்படுகின்றன.
கே: விவாகரத்துக்கான முக்கிய காரணம் என்ன?
ப: திருமணம்
கே: இரவுபகல் எவ்வாறு ஏற்படுகிறது?
ப: கிழக்கே உதித்த சூரியன் மேற்கில் மறைவதாலும், மேற்கில் மறைந்த சூரியன் மீண்டும் கிழக்கில் உதிப்பதாலும் இரவு-பகல் ஏற்படுகிறது.



கே: மகாத்மா காந்தி எப்போது பிறந்தார்?
ப: அவரது பிறந்த நாளன்று.
கே: தாஜ்மஹால் யாருக்காக, யாரால் கட்டப்பட்டது?
ப: சுற்றுலாப் பயணிகளுக்காக, கொத்தனார்களால் கட்டப்பட்டது.
கே: 8 மாம்பழங்களை, 6 பேருக்கு எப்படிச் சரியாகப் பிரித்துக் கொடுப்பது?
ப: ஜூஸ் போட்டு, 6 கிண்ணங்களில் சரியான அளவாக ஊற்றிக் கொடுக்கலாம்.

இதற்கு எப்படி வாத்தியார் ஒரே ஒரு முட்டை புள்ளி போட்டார்? ஆயிரம் முட்டைகளை அல்லவா அளித்திருக்க வேண்டும்???



## சிந்தனைக்கு-

சிந்தனைக்கு- கர்வம், ஒருநாள் கொல்லும். கருணை, அதனை வெல்லும்.

–ஓர் அறிஞர்

# பாடம் படித்த பூக்கள்

*(கடந்த வாரத் தொடர்ச்சி)*

நீண்ட நேரம் விடைத்தாளை வைத்துக்கொண்டு யோசித்தாள். படித்தது எதுவும் ஞாபகத்தில் இல்லை. திடீரென்று சுதமதிக்கு ஒரு யோசனை உதித்தது. தோட்டத்தில் உட்கார்ந்து படித்த நாள்களை எண்ணிப் பார்த்தாள். ஆமாம்! அறிவியல் பாடத்தை அடுக்குச் செம்பருத்திச் செடிக்குக் கீழே உட்கார்ந்து தான் படித்தாள்.

ஒவ்வொரு நாளும் படித்த பாடங்கள் பற்றி ஒவ்வொன்றாக ஞாபகப்படுத்திக் கொண்டாள். செடியிடம் பேசுவதைப் போலத் தனக்குத் தானே பேசினாள்.


செம்பருத்திச் செடியே! உழவனின் நண்பன் என்று மண் புழுவை ஏன் சொல்கிறோம்? ஐயோ! விடை தெரியலையே. மண் புழுக்கள் மண்ணில் வாழும் என்பதைத் தவிர மற்றவை மறந்து விட்டதே. தயவுசெய்து, நீதான் எனக்கு உதவணும் என்றாள்.

தேர்வறையில் உட்கார்ந்திருந்த சுதமதியின் குரல் எப்படியோ செம்பருத்திச் செடியைப் போய் அடைந்திருக்க வேண்டும். சிறிது நேரத்தில், பரீட்சை அறையின் சன்னல்கள் வழியே நுழைந்த இளங்காற்று சுதமதியின் உடம்பைத் தொட்டு வருடியது.

கேள்வித்தாளில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள் மெல்ல மெல்ல ஞாபகத்தில் வரத் தொடங்கின. பதில்கள் அனைத்தையும் வரிசையாகப் பிழையில்லாமல் எழுதினாள். அறிவியல் பரீட்சையில் வெற்றி பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கை அவளுக்குத் திரும்பியிருந்தது. ஆசிரியர் கைகளில் விடைத்தாளை ஒப்படைத்த சுதமதிக்குத் திடீரென்று ஒரு ஞாபகம் வந்தது.



ஐயோ! பாட்டி ஆசைஆசையாக வளர்த்த செடிகளுக்கு நான்கு நாள்களாக யாரும் தண்ணீர் ஊற்றவில்லையே. செடிகளுக்குத் தாகமாக இருக்காதா? எனக்கு உதவிய நண்பர்களை நான்தானே காப்பாற்ற வேண்டும். தேர்வு அறையை விட்டு வெளியேறிய சுதமதி, வீட்டை நோக்கி வேகமாக ஓடினாள்.




சி.பிரவீன்,
தரம் - 2
விசாலம் சர்வதேச பாடசாலை



ந.ஹரிஷ்ராம்
சிமாட் கிட்ஸ் முன்பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனுறு செல்வம்



அராலியூர் நிலா

திருமண வாழ்க்கையின் பயன், நன்மக்களைப் பெற்றெடுப்பதும் அவர்களை நாட்டுக்கு உகந்த வகையில் வளர்த்தெடுப்பதும்தான். அன்னையிடம் அன்பையும் தந்தையிடம் அறிவையும் பெற்று வளரும் இத்தகைய மக்கட் செல்வங்களே பாரிற் சிறந்த பயனுறு செல்வங்கள். இந்தச் செல்வங்களின் சிறப்பைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பாங்குடன் எடுத்துரைக்கின்றன.

பெற்றவரின் நினைவும் கனவும், தம் பிள்ளைகள் நல்லவர்களாக- வல்லவர்களாக வளரவேண்டும் என்பதே. அவ்வாறு வளர்ந்திட்ட மைந்தனைச் சான்றோன் (சகல வித்தையிலும் சிறந்தவன்) எனப் பெரியவர்கள் அழைக்கும் போது தாய் அடையும் மகிழ்ச்சிக்கும், தன்னைக் காட்டிலும் மைந்தன் அறிவிற் சிறந்தவன் என்று அகிலம் பாராட்டும் பொழுது தந்தை அடையும் மகிழ்ச்சிக்கும் ஈடில்லை. அந்த உயர்நிலைக்குத் தம் மைந்தனை ஆக்கவேண்டும் என்ற கனவுடன் பிள்ளையைத் தழுவிக் கிடக்கும் தலைவனையும், இருவரும் நலமுடன் வாழவேண்டும் என்று அணைத்துக் கிடக்கும் தலைவியையும்- சொற்சித்திரம் ஆக்கியுள்ளது, ஐங்குறுநூறு.


புதல்வற் கவைஇயினன் தந்தை மென்மொழிப்
புதல்வன் தாயோ இருவரும் கவையினள்
இனிது மன்றஅவர் கிடக்கை
நனியிரும் பரப்பின் இவ்உலகுடன் சுறுமே
(ஐங்குறுநூறு:409)

தன் ஆருயிர் மகனை, தந்தையானவன் தழுவிக் கிடந்தான். மழலை பேசும் அக்குழந்தைக்குத் தாயாகிய தலைவியோ, மகனையும் தன் காதல் தலைவனையும் ஒருசேரத் தழுவிக்கிடக்கிறாள். அவர்கள் மூவரும் அன்பால் ஒருங்கிணைந்த அந்தக் காட்சி இனியது. அதற்கு ஈடாக இந்த உலகம் முழுவதையும் ஒரு சேரக் கொடுத்தாலும் தகும்- என்கிறது அப்பாடல்.

இன்று இத்தகைய இல்லறங்கள், காணாமல் போய்விட்டன. மேலைநாட்டு கலாசாரங்கள், இல்லங்களில் நிறைந்துவிட்டன. பெற்றவர்கள் ஓர் அறையிலும், பிள்ளைகள் இன்னோர் அறையிலும் என்று ஆகிவிட்டன. இப்படியான இல்லறங்களில், எப்படிப் பயனுறு செல்வங்கள் விளையும்?



# நூல் அறிமுகம்



**நூல்- யாழ்ப்பாண நினைவுகள்:**
**பாகம்- 01**
**ஆசிரியர்- வேதநாயகம் தபேந்திரன்**
**வெளியீடு- சிவகாமி பதிப்பகம்,**
**தேன் தமிழ், கைதடி வடக்கு.**
**விலை- 390 ரூபா**

**பசிய நினைவுகளின் பெட்டகம்**

யாழ்ப்பாண மண்ணுக்கே உரித்தான பசிய நினைவுகளின் பெட்டகமாகத் திகழ்கின்றது, யாழ்ப்பாண நினைவுகள்- பாகம்-01 நூல். எம் மண்ணுக்கு உரித்தான பழக்க வழக்கங்கள், பண்பாட்டு விழுமியங்கள், வாழ்வியல் கோலங்களைத் தன்னகத்தே அழகுறப் பொதிந்து வைத்துள்ளது இந்நூல். சந்தைகளுடன் பிணைக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முறை முதல், சவாரிப் போட்டிக் காலங்கள் வரை 30 நினைவுகளைச் சுமந்து, யாழ். மண்ணின் கடந்த காலங்களை மீட்டிப் பார்க்க வைக்கின்றது இந்நூல். அழகிய அட்டைப்படம், எளிய மொழிநடை, பேசும் படம் என்பன நூலை வாசிக்கத் தூண்டுகின்றன.

ஓர் அரச உத்தியோகத்தராக இருக்கும் வேதநாயகம் தபேந்திரன், வேலைப் பளுக்களின் மத்தியிலும் எழுத்தின்பால் பெருவேட்கை கொண்டு இயங்குபவர். அதன்வழி பல விருதுகளைச் சொந்தமாக்கியவர். தொடர் தேடல்களில், அதிகமதிகம் தன்னைத் தொலைப்பவர். ஈழத்து இலக்கியப் புலத்தில் தனக்கென்றும் ஒரு தடத்தைப் பதித்தவர். அவரது எழுத்துலகம் மேலும் வளர, வாழ்த்துக்கள்.




நூல்- Pain (ko)
(A Book of Poemsd
**கவிதைத் தொகுப்பு)**
**ஆசிரியர்- அன்ரன் அருள்வண்ணன்**

**வலி பேசும் கவிப்பூக்கள்**

கவிதை, உணர்ச்சிகளின் கலவை. அந்தக் கலவையைத் தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் அழகுறச் சுமந்து நிற்கிறது- Pain (வலி) எனும் நூல்.

புத்தகத்தைத் திறந்ததுதம் ஒரே மூச்சில் படித்து முடித்துவிடும் அளவுக்கு, மிக எளிய மொழிநடையில் அமைந்துள்ளன கவிதைகள். போர்க்கால அவலம், இடப்பெயர்வு, புலம்பெயர்வு உள்ளிட்ட அவலங்கள் கவிப்பொருள்களாகியுள்ளன.

இவ்வருடம் புதுவருடம்
இனிப்பாகுமோ பௌத்தரிடம்?
இங்கே இடம்புகுவோரிடம்
இனியும் தாங்குமோ
எங்கள் வாழிடம்?

இவ்வாறு அனைத்துக் கவிதைகளும், வலி பேசும் கவிப்பூக்களாக அமைந்துள்ளன.

ஆசிரியர் அன்ரன் அருள்வண்ணன், புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வசித்த அனுபவம் உடையவர். அந்தப் பண்பாட்டுத் தாக்கங்கள், வாழ்வியல் தரிசிப்புக்கள்- எழுதத் தூண்டியுள்ளன. கல்வியில் உயர்ந்தும் தேடலில் சிறந்தும் விளங்கும் இவருடைய எழுத்துலகம் மலர, வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கஞ்சாவுக்குள் ஒரு ஊடுருவல்

ந.லோர்கதயாளன்

100 கிராம் நிறைகொண்ட அந்தப் பொருளை 30 பங்குகளாக்கி, அந்த 30பங்குகளையும் தனித்தனியே பொதியாக்கி, ஒரு பொதியை 100ரூபாவுக்கு விற்பது தான் இந்தக் கஞ்சா வியாபாரம். அது வெறும் 100கிராம் என்ற அலட்சியம் இப்போது உங்கள் அனைவரது மனங்களிலும் எழும். ஆம், அது இயல்பானதே. ஆனால் அதன் பாதகம், அது பரவியுள்ள சமூகத்தைச் சீரழித்து அழிக்கும் ஆற்றலுடையது என்ற உண்மையும் உங்கள் மனங்களில் இப்போது இடங்கொண்டிருக்க வேண்டும். அந்த 100கிராமின் ஒரு சிறு பகுதி ஏற்படுத்தும் போதையின் விளைவுகள் தாம் இன்றைய இளைஞர்களிடம் பரவியுள்ள வாள்வெட்டு மற்றும் வன்முறைக்கலாசாரங்களைத் தோற்றுவித்து வலுப்படுத்துகின்றன. வடக்கு மாகணத்தில் அதிகரித்து வளர்ச்சி கொள்ளும் வழி செய்யும் கஞ்சா வியாபாரம் இந்தியாவின் கேரள மாநிலத்திலிருந்து சட்டவிரோதமாக இங்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

### கஞ்சா வரும் வழி

கட்டுப்பாடுகளையும் தடைகளையும் மீறி அதிகரித்து வரும் கஞ்சா விற்பனையும் அதன் பாவனையும், கேரளாவிலிருந்து தமிழ்நாட்டின் ஊடாக நகர ஆரம்பிக்கின்றது. இதுவரைக்கும் கடல் மார்க்கமாகவே எமது நாட்டுக்குள் ஊடுருவிக் கொண்டிருக்கின்றது. இதுவரை நம் யாவருக்கும் தெரிந்த மேலோட்டமான கஞ்சாவின் நகர்வு இதுதான். ஆனால் மேற்படி கஞ்சா, இலங்கையில் அதிகளவு இராணுவக் குவிப்பைக் கொண்ட வடபகுதிக்குள், இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி மீன் பிடிக்கும் இந்திய மீனவரைக் கண்காணிக்கும் கடற்படையினரின் பலத்த பாதுகாப்பையும் தாண்டி மும்முரமாக உள்நுழைவதும் அது பரவியுள்ள மார்க்கங்கள் தொடர்பில் இதுவரை எந்தவொரு உறுதியான கட்டுப்பாடுகளோ தடைப்படுத்தல்களோ நிகழாமை மட்டும் ஒரு சிலருக்கே தெரிந்துள்ள உண்மை.

உலர்த்தப்பட்ட கஞ்சாச் செடிகள் பாரம் குறைந்தவை. அதனால் அவை ஒரு கிலோவுக்குள் அதிக இலைகள் கொண்டவையாகக் காணப்படும். இவை அதிக நிறையில் கடல் மார்க்கமாகக் கடத்தப்படுபவை. ஆதலால் நீர் புகாவண்ணம் பொதி செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பாகத் தமிழ்நாட்டின் ஊடாக எடுத்து வரப்பட்டுக் கடற்துறைகளை வந்தடைகின்றன. பின்னர் பலத்த கடற்பாதுகாப்பையும் தரைப் பாதுகாப்பை யும் தாண்டி எமது நாட்டுக்குள் புகுந்து விடுகின்றன.

### விற்பனையும் தரகர்களும்

உலர்த்தப்பட்ட கஞ்சாவின் ஒரு கிலோவுக்குரிய மதிக்கப்பட்ட பெறுமதி ஒரு இலட்சத்து 25ஆயிரம் ரூபா, ஆகையால் உள்ளூரிலுள்ள சில பணக்காரப் போதைத் தரகர்களைத் தவிர கொள்வனவு செய்ய அனைவராலும் பணக்கார வியாபாரிகளினால் இந்த விலைக்குக் கிலோக் கணக்கில் பெறும் வியாபாரிகளுக்குக் கடத்தப்பட்டு. அவர்களிடம் கிராம்களாகப் பிரிகை பண்ணப்பட்டுச் சில்லறைக் கடத்தல்காரர்களின் கைகளுக்குக் கிடைக்கின்றது. இவர்களிடம் விலைகளில் தளம்பல் காணப்படும். இத்தகைய சில்லறை வியாபாரிகளிடமிருந்து கைமாறும் கஞ்சா இன்னும் அடிமட்டத்தினரிடையே மேலும் கைமாற்றப்படுகின்றது. அதன் விலைகள் கூடிக் குறைந்து காணப்படும்.

இங்கே கிலோக் கணக்கில் பெறுபவர்கள் சிறு வியாபாரிகளுக்கு 100கிராம் 200கிராம் எனச் சிறு பொதியாக்கி விற்பனை செய்கின்றனர். இதை வாங்கும் வியாபாரிகளே மேற்கூறியவாறு 100 கிராம் கஞ்சாவை 30பொதிக்குக் குறையாமல் பங்கு போட்டு ஒரு சரையை 100ரூபாவுக்கு விற்பனை செய்கின்றனர். இப்போது மிகவும் பெறுமதிமிக்கதும் அதி உச்ச போதையைத் தருவதுமான போதைப் பொருள் மிகக் குறைந்த விலைக்கு இளைஞர்களின் கைகளுக்குக் கிடைக்கின்றது.

### பொலிஸிடம் சிக்கும் சிறு வியாபாரிகள்

பொலிஸாரிடம், பெரிய தொகையில் கஞ்சா கடத்தும் வியாபாரிகளோ அல்லது கிலோக்கணக்கில் விற்பனை செய்பவர்களோ அகப்படுவது கிடையாது. இவர்களிடம் அகப்படுவது வெறும் 100 கிராம், 200கிராம் கஞ்சாவைப் பாவனையாளர்களுக்குக் கடத்தும் கடைசி வரிசையிலுள்ள சில வியாபாரிகளும் அவர்களிடம் கஞ்சாவை வாங்கி நுகரும் சில பாவனையாளர்களுமே. ஏனெனில் கஞ்சாவைச் சிறிது சிறிதாகப் பிரித்துத் தனிநபரின் பாவனைக்கு ஏற்றவாறு கடத்தும் இவர்களே ஏனைய மேல் வரிசையிலுள்ள கடத்தல்காரர்களை விட வாடிக்கையாளர்களுடன் அதிகளவில் தொடர்புகளைப் பேணுபவர்கள். அதற்கு மேற்பட்ட அளவில் கஞ்சாவைக் கைமாற்றுபவர்கள் இதுவரை பொலிஸாரால் பிடிக்கப்பட்டது கிடையாது. இந்தச் சிறு அளவு விற்பனையாளர்கள் கூடக் குறித்த கஞ்சாப் பொட்டலங்களைத் தமது உடைமையில் வைத்து விற்பனை செய்வது கிடையாது. குறிப்பிட்ட சரைகளை பொதுப் பிரதேசத்தின் மறைவான இடங்களில் வைத்துவிட்டு தூரமாக நின்று கண்காணித்தவாறு நிற்க வாடிக்கையாளர் சென்று பணத்தை வழங்குகின்றார். பணத்தைப் பெற்றுக் கொண்டவர் தான் கஞ்சா வைத்திருக்கும் இடத்தைக் கூறியதும் அதன்படி சென்று வாடிக்கையாளர் அதனை எடுத்துச் செல்கின்றார்.

> கஞ்சா விற்பனையின்போது பொலிஸாரிடம் எவரும் சிக்குவதில்லை. தவிரக் கடல் மார்க்கமாக வந்திறங்கும்போதே சில கஞ்சாப் பொதிகளுடன் கடத்தல்காரர்கள் சிக்குகின்றனர். ஆனால் நுகர்வுக்காக வாங்கி வைத்திருக்கும் ஒரு சிலரும் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

### சீரழியும் புலிகளில்லாத தேசம்

கஞ்சா விற்பனையின்போது பொலிஸாரிடம் எவரும் சிக்குவதில்லை. தவிரக் கடல் மார்க்கமாக வந்திறங்கும்போதே சில கஞ்சாப் பொதிகளுடன் கடத்தல் காரர்கள் சிக்குகின்றனர். ஆனால் நுகர்வுக்காக வாங்கி வைத்திருக்கும் ஒரு சிலரும் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் தலைவிரித்தாட ஆரம்பித்திருக்கும் இந்தக் கோர வர்த்தகத்தை ஏன் பொலிஸாரால் ஒழிக்க முடியவில்லை? கடற்படையினரால் கட்டுப்படுத்த முடியவில்லை? இது பற்றி ஆராய முற்பட்டாலும் அதிர்ச்சியான தரவுகளே எட்டுகின்றன. இவ்வாறு கடத்துபவர்கள் முன்னர் இராணுவத்தினருடன் ஒட்டி உறவாடிப் புல னாய்வாளார்களாகச் செயற்பட்டவர்களாக இருக்கலாம். அவர்களுக்கான நிதிக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட இத்தகைய கடத்தல் வர்த்தகத்தில் அவர்கள் ஈடுபடலாம். இல்லாவிடில், யாழ்ப்பாணக் குடாநாட்டைச்சுற்றி நிலைகொண்டுள்ள 40ஆயிரம் படையினருட்பட வடக்கு மாகாணத்தில் மட்டும் 90 ஆயிரம் இராணுவம் மற்றும் 10ஆயிரம் கடற்படையினர், விமானப் படையினர் நிலை கொண்டிருக்க இவ்வளவு தடைகளையும் தாண்டி எவ்வாறு போதைப்பொருள் நாட்டுக்குள் வருகின்றது? அவ்வாறு வந்தாலும், உள்ளிருக்கும் 44 பொலிஸ் நிலையங்களின் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளையும் பல்லாயிரக்கணக்கான பொலிஸா ரின் கண்காணிப்புக்களையும் மீறி எவ்வாறு உள்நாட்டில் இது சுதந்திரமாக உலாவுகின்றது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிராமத்து அழகி

முல்லைப் பூவின்
மென்மையவள்
துள்ளித் திரியும் பருவமவள்
கள்ளிக்காட்டு நிலத்திலே
பூத்துச் சிரிக்கும் புதுமையவள்

பச்சை மண்ணில் தலைகுனிந்து
பாதம் பதிய நடந்திடுவாள்
கொஞ்சிடும் கால் கொலுசினிலே
கொஞ்சம் சங்கீதம் தந்திடுவாள்

அன்னை தந்தை பாசம்
பாட்டன் பாட்டி நேசம்
அத்தனையும் தன் சொத்தென
அழியாது என்றும் காத்திடுவாள்

பள்ளிக் கூடம் சென்றதில்லை
பாடம் நன்றாய் படித்ததில்லை
பாவை அவள் விழிதனிலே
பலநூறு பாடம் சுவைத்திடலாம்

கண்டாங்கி சேலை உடுத்தியே
கடமைகள் எலாம் முடித்திடுவாள்
சேலை ஓரத்து கிழிஞ்சல்களுடன்
காலம் முழுதும் வாழ்ந்திடுவாள்

கொத்திடும் கொண்டை சேவலுடன்
கொட்டம் அடித்து சிரித்திடுவாள்
தத்திடும் வெண் வாத்துகளுடன்
தாளம் போட்டு நடந்திடுவாள்

கள்ளம் கபடமிலா சிரிப்பினிலே
காய்ந்த நிலமும் செழித்திடுமே
கன்னி அவள் பார்வையிலே
இயற்கையும் இளமை பெற்றிடுமே

- பாலகி





# ஒவசி...

## நகைச்சுவைத் தொடர்... 3

மிருசுவில் தமிழ்தாசன்

ஒரு கிழட்டுச் சிங்கமாகக் கர்ச்சித்தார். வாடா இஞ்சாலை! வா எண்டால் வா! வந்திடவேணும். உன்னைப் போலை எத்தினை பேற்றை பழமும் திண்டு கொட்டையும் பொட்டவனடா இந்தச் சிவகுரு வாத்தி! நீ என்னையே பேய்க்காட்ட வெளிக்கிட்டியோ!" கையில் கிடந்த பிரம்பை எடுத்து வளைத்து நிமிர்த்தினார் வாத்தியார். சேர் சேர்! நான் உண்மைதான் சொன்னனான் சேர்! நீங்கள் தான் விளங்காமல்...!

என்னடா! எனக்கு விளங்கயில்லையோ! எனக்கு விளங்கப்படுத்த நீ வந்திட்டியோ! ஒவ்டியுட்டியிலிருந்த அவரின் கொய்யாப் பிரம்பு தனது கடமைக்குத் தயாராகிவிட்டது. கச்சேரி ஆரம்பம். இதோ வண்! ரூ! த்திறீ....

சேர் அடிக்காதையுங்கோ சேர்! அடிக்காதையுங்கோ நான் ஒண்டும் பொய் சொல்லயில்லை சேர்

வாத்தியார் தனது வீர விளையாட்டை நிறுத்தும் உத்தேசமில்லை. ஆனால் அவரின் துர்திர்ஷ்டமோ! சிங்கார வேலனின் அதிர்ஷ்டமோ யாரறிவார்! இவர் அடித்த அடிக்களத்தனையும் சிங்கார வேலனின் உடலில் இதுவரை பட்டதேயில்லை. மாறாக வாத்தியாரின் மேடை மீதே பட்டுக் கொண்டிருந்தன. சொல்லப் போனால் எல்லாமே விழலுக்கிறைத்த நீராகவேயிருந்தது. சிங்கார வேலு வாத்தியாரின் அடிக்குப் பயந்து அவரின் மேசையைச் சுற்றிச் சுற்றி ஓட, அவனைச் சுற்றி அவரும் விட்டேனோ பார் என்றபடி ஓட அது ஓர் அருமையான கண்காட்சியாகவிருந்தது. அடிகளொன்றும் அவன் மீது படவில் லையென்பது ஒருபுறமிருக்க, அவரது மந்திரக் கோலான பிரம்பினடிகள் மேசையிலே பட்டுப்பட்டுத் தன்னுயிரை மாய்த்து இரண்டாக முறிந்து கொண்டது. இது வாத்தியாருக்கு ஒரு சிக்கல் நிலையாகவேயிருந்தது. இருந்தும் மனம் தளரவில்லை மனிதர்.சிவகுருவாத்தியார் ஐம்பது வயதைத் தொட்டுக் கொண்டிருப்பவர். நடிகர் ஓமக்குச்சியை நினைவூட்டும் ஒல்லி உடல்வாகு. கடந்த காலத்தில் வீசிய நிசாவும் அண்மைக் காலத்தில் வீசிவிட்டு மறைந்த வர்தாப்புயலும் இவரைத்தங்களுடன் அழைத்துச் செல்லாமல் விட்டுப் போனது அதிசயமாகவே நோக்கப்பட வேண்டியதொன்று. அப்படியயாரு காட்போட் தேகம் அவருக்கு இருந்தும் அந்தப் பலவீனமான உடலில் கோபம் மட்டும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. முன்னைய பிறப்பில் நாகமாகப் பிறந்திருப்பாரோ! அல்லது மூலரோகம் கீலரோகம் ஏதாவது.. ! என்ன இழவோ! வாத்தியாரின் பிரம்புமுறிந்து போய்விட்டது உண்மைதான். அதற்காக இன்று போய் நாளை வா! என்று போரை நிறுத்திக் கொள்வதற்கு இது என்ன இராமாயணப் போரா! மீண்டும் தாக்குதல் படலம் ஆரம்பமாகிவிட்டது. இப்போது எல்லாமே கைவிளையாட்டுத்தான். முன்னைய பிரம்பாட்டத்துக்கு எப்படித் தப்பிச் சுற்றி சுற்றி ஓடினானோ இப்போதும் அதேபாணி யிலிருந்து சற்றும் வழுவாது ஒரு செக்கு மாடாகச் சிவனேயென்று சுற்றிக் கொண்டிருந்தான். வாத்தியாரும் தனது அதே பாணியைப் பின்பற்றி அதேஒழுங்கு முறைப்படி அவனைச் சுற்றிச் சுற்றித் துரத்திக் கொண்டிருந்தார். உண்மையில் அது ஒரு கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. தென் னாபிரிக்க நடன மொன்றை நேரில்பார்த்துவிட்ட பிரமை! கடிகாரத்து வினாடிமுள்ளும் நிமிட முள்ளும் ஒன்றையயான்று துரத்தி விளையாடுவது போல இருவரும் ஒருவரையொருவர் துரத்திக் கொண்டிருந்தனரே தவிர, இதுவரை வாத்தியாரின் தாக்குதல் என்று எதுவுமே பதிவு செய்யப்படா மலேயிருந்தது. இங்கே நடந்து கொண்டிருக்கும் இலவசக் கண்காட்சியைப் பார்த்து இரசிப்பதற்காக பக்கத்து ஏழாம் வகுப்பு மாணவர்கள் முண்டி யடித்துக் கொண்டிருந்தனர். தங்கள் வகுப்பறையின் ஸ்கிறீன்" ஊடாகத் துவாரங்களில் கண்களைப் பதித்துப் பூராயம் பார்த்துக் கொண்டிருந்தனர் பயந்த மாணவர்கள். மற்றும் துணிந்தவர்களோ வருவது வரட்டுமென நேரடியாகவே நின்று அந்தச் சுற்றியோடி விளையாடும் நிகழ்வினைக் கண்டு களித்துக் கொண்டிருந்தனர்.

எட! இவ்வளவு நேரமாய் உன்ரை ஒரு அடி கூட உவன் பாவியிலை படாமலியிருக்குதே! ஏதேன் தற்காப்புக் கலையைக் கிலையைப் படிச்சிருப்பானோ! சொல்லேலாது." வாத்தியாரின் மனத்தில் இப்படியொரு நியாயமான சந்தேகம் உதிக்கவும் தவற வில்லை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போகன்

வித்தியாசமான ஆள் மாறாட்டத்தின் மூலம் தகாதன வற்றைச் செய்யும் ஒரு சுகவாசியின் கதைதான் போகன்.

நகைக் கடை, வங்கி என்று அடுத் தடுத்துப் பெரிய அளவில் இரண்டு பணக் கொள்ளைகள் நடக்கின் றன. இரண்டு கொள்ளைகளை யும் அதே நிறுவனத்தில் பணி புரிபவர்கள் செய்வதாக அங்கே உள்ள சி.சி.டி.விக் கமராக்களில் பதிவாகிறது. அப்படிச் சிக்குபவர் களில் ஒருவர் நரேன். அவரது மகன் உதவி ஆணையர் விக்ரம் (ஜெயம் ரவி). தனது அப்பாவின் மீது படிந்த கறையைப் போக்க அவர் களம் இறங்குகிறார். ரவி மேற்கொள்ளும் துப்பறியும் முயற்சியில் ஆதித்யா (அரவிந்த் சாமி) சிக்குகிறார்.

கொள்ளைகளின் சூத்திரதாரி அரவிந்த் சாமிதான் என்று தெரிந்தாலும் அவர் அதை எப் படிச் செய்தார் என்பது மர்மமா கவே இருக்கிறது. அதைக் கண்டு பிடிக்க முனையும் ரவி மீது தன் னுடைய சக்தியை இரகசியமாகப் பிரயோகிக்கிறார் அரவிந்த்சாமி. இதனால் ரவியின் வாழ்க்கை அடியோடு மாற, அடுத்தடுத்துப் பல இன்னல்களை ரவி எதிர் கொள்கிறார். இந்த இன்னல் களுக்குப் பின்னணி என்ன? அரவிந்த் சாமி என்ன செய்கி றார்? எப்படிச் செய்கிறார்,? அதை ரவி எப்படி எதிர்கொள் கிறார்? என்பவற்றுக்கான பதில்தான் போகனின் கதை.

மன்னர் பரம்பரையில் வந்த அர விந்த்சாமிக்கு வாழ்க்கையை எப்போதும் ஆனந்தமாகக் களிக்க வேண்டும் என்பது இலட்சியம். சுகபோகத்தின் மீது மித மிஞ்சிய ஆசை கொண்ட இந்தச் சுக வாசிக்குக் கிடைக்கும் வித்தியாச மான சக்தியால் பெரும் பணத் தைச் சுருட்டுகிறார். அரவிந்த் சாமியின் பாத்திரத்தையும் அவ ரது வித்தியாசமான சக்தியையும் கச்சிதமாகச் சித்திரிக்கும் இயக்கு நர் லஷ்மன், அந்தச் சக்தியின் பின்னணியின் மீது சாமர்த்திய மாக மர்மத் திரையைப் போர்த்தி விடுகிறார். இதனால், படத்திலுள்ள பாத்திரங்களைப் போலவே பார்வை யாளர்களும் குழம்புகி றார்கள்.

அந்த மர்மத் திரை விலகிய பிற கும் அந்தச் சக்தியின் தாக்கம் திரைக் கதையைத் தாங்கிப் பிடிக்கிறது. அரவிந்த் சாமியின் சித்து விளை யாட்டுக்கள் திரைக் கதையின் விறு விறுப்பைக் கூட்டுகின்றன. நாயகனின் ஒவ் வொரு நகர்வுக்கும் தடை வைக் கும் எதிர்நாயகனின் செயல்கள் பரபரப்பூட்டுகின்றன. அடுத்து என்ன நடக்குமோ? என்னும் பதற் றத்தை உருவாக்குவதில் இயக்கு நர் வெற்றி பெறுகிறார்.

கொள்ளைகளை அரவிந்த் சாமிதான் செய்தார் என்பதைக் கண்டுபிடித்து அவரைப் பொறி வைத்துப் பிடிக்கும் காட்சிகள் விரைவாக நகருகின்றன. இரண் டாம் பாதியில் வேகம் இருந்தா லும், காட்சிகள் முழுக்க ஜெயம் ரவி, அரவிந்த் சாமி ஆள் மாறாட்டக் களத்திலேயே பயணிக்கின்றது. சுவாரஸ்யமான விடயத்தைக் கொண்டிருந்தாலும் திரைக்கதை யிலுள்ள ஓட்டைகள் அதைப் பலவீனப்படுத்துகின்றன. ஆள் மாற்றாட்டத்தில் ஈடுபடும் அரவிந்த் சாமியைப் பற்றித் தன்னுடை ஆள்களுக்கு எச்சரிக்கக் கைபேசி மூலமே முயற்சி செய்கிறார் ரவி. இவரால் எச்சரிக்கப்படுபவர்கள் அடுத் தடுத்துக் கொல்லப்படும் போதும் அவர் தொடர்ந்தும் அதையே செய்து கொண்டிருக் கிறார். பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்துக்குள் நாசர் அவ்வ ளவு இலகுவாக நுழைவது நம் பும்படியாக இல்லை. கடைசிக் காட்சியில் ஹன்ஸிகா எப்படிப் பொலிஸ் ஆணையாளர் அலுவல கத்துக்கு வந்தார் என்பது தெரிய வில்லை. அந்தக் காட்சியில் மற்ற பொலிஸ்காரர்கள் எல்லாம் என்ன செய்துகொண்டிருக்கிறார் கள் என்பதும் தெரியவில்லை.

வில்லன், நாயகனின் குணாதி சயங்கள் இடம் மாறி வெளிப் படும் இடங்களில் இருவருமே சிறப்பாக நடித்திருக்கிறார்கள். அதில் அரவிந்த் சாமியின் வசீகர மான நக்கல் சிரிப்பு மட்டும் ஜெயம் ரவியிடம் இல்லை, வில் லத்தனம் செய்யும்போது, ஜெயம் ரவி தனது உடல்மொழியில் இன் னும் கவனம் செலுத்தியிருக்கலாம். அதே 'அழகான அசட்டுப் பெண்' கதாபாத்திரம்தான் ஹன்சிகா வுக்கு. உற்சாகமும் துள்ளலு மாய் அவர் நடிப்பு வசீகரிக்கிறது. பேராசிரியராக வரும் நாசர், ஆணையராக வரும் பொன் வண்ணன் கதாபாத்திரங்களும் திரக்கதைக்கு வலுச் சேர்க்கின் றன. பணிவாகத் தோற்றமளிக் கும் நாசர் திடீரென்று தீவிர முகம் காட்டும்போது அசரவைக்கிறார். டி.இமானின் இசையில் 'டமாலு டுமீலு' அதிரடிக் குத்து. தாமரை யின் வரிகளில் மிளிரும் 'செந் தூரா' வித்தியாசமான தொனி யில் வசீகரிக் கிறது. சவுந்தர ராஜனின் ஒளிப்பதிவு படத்துக்குச் சிறந்த தோற்றத்தைத் தருகிறது. சில பல குறைபாடுகள், இழுவை கள் இருந்தாலும் விறுவிறுப் பான திரைக்கதையாலும் நடிப் பாலும் போகனை ஒருதடவை பார்க்கலாம்.






## சிரி..சிரி...



"கோபம் வந்துட்டா என் மனைவி காளியாயிருவா"
"நீ என்னாவே?"
"நான் காலியாயிடுவேன்"

"அவர் போலி பல் டாக்டர்னு எப்படி கண்டுபிடிச்சே?"
"பல் ஆடுதுன்னு சொன்னதும் குத்துப் பாட்டுக்கு ஆடுதா பக்திப் பாட்டுக்கு ஆடுதான்னு கேக்கறாரு!"



## பேனைகள் எழுதட்டும்

பேனைகள் எழுதட்டும்
பேசாத மௌனங்களை
புடம் போட்டுக் காட்டட்டும்
புரியாத அவலங்களை

எரித்து விட்டு போகட்டும்
ஏழைகளின் கவலைகளை
பகல் நேர கனவுகளை
பலித்திட வைக்கட்டும்

முக்காடிட்ட மனிதர்களின்
முழுத்திரை விலக்கட்டும்
முற்றிடும் வதைகளுக்கு
முற்றுப்புள்ளி வைக்கட்டும்

அன்னையின் முத்தங்களுக்கு
ஆலாபனை செய்யட்டும்
ஆகாய இடர்களை
அஞ்சாது சொல்லட்டும்

தயங்கிடாது பேனா
எழுதட்டும் என்றும்
மயங்கிடாது
வீரத்தோல் போர்த்தி
வீறு கொண்டு எழுதட்டும்

பா.பாலாஜினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரே தளத்தில் இலங்கை - சிரியா

யாதுமாகி

கடந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் தான் நிறைவுக்கு வந்தது சிரியாப் போர். அலப்போ நகருடன் கிளர்ச்சியாளர்கள் ஒடுக்கப்பட்டு முடிவு காணப்பட்டது. அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப்போராடிய அவர்கள் சிரியாவுக்கு ரஷ்யா அளித்த ஆதரவுடன் ஒடுக்கப்பட்டனர். ஆனாலும், சிரியா அவர்களை விடவும் ஏராளமான ஆயுதக் குழுக்களைக் கொண்ட ஒரு நாடு. சிரியாவில் அமைதியை நிலைநாட்டவும் ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்தவும் பன்னாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. சிரியாவில் நடைபெற்று வந்த உள்நாட்டுப் போரை நிறுத்த ஐ.நா. சபையால் புதிய அமைதித் திட்டங்கள் பலவும் செயற்படுத்தப்பட்டுள்ளன. ஐ.நா. எப்போதும் சிரியாவைக் கண்காணித்துக் கொண்டே இருக்கின்றது.



**இங்கு பயங்கரவாதிகள்; அங்கு கிளர்ச்சியாளர்கள்**

சிரியா சன்னி முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தேசம். தற்போதைய சிரியாவின் ஜனாதிபதி பார் அல்-ஆசாத் ஷியா முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர். அவருக்கு எதிராகச் சன்னி பிரிவைச் சேர்ந்தவர்கள் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வந்தனர். இலங்கையில் உரிமை வேண்டிப் போராடிய தமிழர்கள் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டதைப் போன்றே சிரியாவில் பெரும்பான்மையினர், கிளர்ச்சியாளர்கள் முத்திரை குத்தப் பட்டு ஒடுக்கப்பட்டனர். இவர்கள் தவிர அல்-கொய்தா ஆதரவு அமைப்பான அல்-நுஸ்ரா முன்னணித் தீவிரவாதிகளும் மிதவாத எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த பல்வேறு கிளர்ச்சிக் குழுக்களும் சிரியாவில் சிரிய அரசுக்கு எதிராகத் தனியாகத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் கணக்கெடுப்பின்படி சிரியாவில் சுமார் 160 கிளர்ச்சிக் குழுக்கள் செயற்படுகின்றன.

**மன்னிப்புச்சபை புடம்போடும் மனிதப் புதைகுழி**

அரசுக்குப் பெருமளவில் ஆபத்தைக் கொடுத்துவந்த கிளர்ச்சியாளர்கள் ஒடுக்கப்பட்டுவிட்டனர். அவர்களுக்கெதிரான போரின்போது பல மனித உரிமை மீறல்களையும்-குற்றங்களையும் சிரிய அரசு புரிந்திருந்தது வெளிப்படுத்தப்பட்டது. இதுவும் இங்கு தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்டதைப் போன்ற ஒன்றே. கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாக அங்கு நீடித்த உள்நாட்டுப் போரில் இதுவரை 3இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆனால் தற்போது சிறையில் அடைக்கப்பட்ட அரசுக்கு எதிரானவர்கள் 13000பேர் கொல்லப்பட்டனர் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் அப்பாவித் தமிழர்களைக் கொன்று மனிதப் புதைகுழிகள் புதைத்ததைப் போன்று அங்கும் நிகழ்ந்துள்ளது. இதற்குச் சிரியாவில் இராணுவ முகாமுக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழிகளை ஆதாரமாக்குகின்றது பன்னாட்டு மன்னிப்புச் சபை. சிரியா கடந்த 5 ஆண்டுகளில் 13,000 சிறைக்கைதிகளுக்கு சாவுத்தண்டனை அளித்துள்ளது என்று பன்னாட்டு மன்னிப்புச் சபையால் அறியப்பட்டது. 2011 முதல் 2015 ஆம் ஆண்டுக்குள் சிரியாவில் இருக்கும் இராணுவச் சிறைக்குள் தான் அந்தப் 13,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பின்னர் அதற்கான காரணங்களைக் கண்டறிய முற்பட்ட வேளையில், சிரியாவில் கடந்த ஐந்து வருடங்களாக நடந்த உள்நாட்டுப் போரில் ஜனாதிபதி பார் அல் ஆசாத்துக்கு எதிராகப் போராடிய கிளர்ச்சியாளர்களில் ஒருபகுதியினரே அவர்கள் எனக் கண்டறியப்பட்டது. அவர்களில் 13,000 பேர் இரகசியமாகக் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் துன்புறுத்தப்பட்டு, உணவு அளிக்கப்படாமல் கொல்லப்பட்டுள்ளனர். இன்றளவும்கூட அங்கு வாரந்தோறும் 50 பேருக்கு சாவுத்தண்டனை வழங்கப்பட்டு வருகிறது.

என்றும் கண்டறிந்த, மன்னிப்புச்சபை தற்போது அதுபற்றிய அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அதன்படி கைதிகள் மேற்படிச் சிறைக்குள் சாவுத்தண்டனை வழங்கப்பட்டு, அந்தச்சடலங்கள் பெரும் மனிதப் புதை குழிகளாக இராணுவ முகாம்களுக்கு அருகில் புதைக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

**விச ஊசி விவகாரமும் முதலிடத்தில்**


இலங்கையைப் போன்றே சிரிய அரசும் அப்பாவி மக்களைக் கொன்று குவித்துவருகின்றது. இங்கு காணாமலாக்கப்பட்டவர்களின் நிலையும் குற்றவாளிகளுக்கு எதிரான நீதியான விசாரணைகளை முன்னெடுக்க இழுத்தடிக்கும் அரசின் பின்புலத்திலும் சிரியாவைப் போன்றதொரு பயங்கரமே இருக்கும். இந்த உண்மையை மூடி மறைக்கவும் குற்றவாளிகளைக் காப்பாற்றவுமே இலங்கை அரசும் போர்க்குற்ற விசாரணைகளுக்கு முகம்கொடுக்காமல் இழுத்தடிக்கின்றது. சிரியாவின் மேற்படிச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களில் சிலர் இனங்காணப்படாத நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் முன்பிருந்த தோற்றத்திலிருந்தும் மாறுபட்டிருப்பதுடன் சரி அரைவாசியாக அவர்களது உடல் எடை குறைந்திருக்கின்றது. இங்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு நடந்ததைப் போன்றே, சிரியாவிலும் அரசுக்கு எதிரானவர்கள் நடத்தப்பட்டிருக்கிறார்கள். இதனை பன்னாட்டு மன்னிப்புச் சபையின் வெளிப்படுத்தல்கள் புலப்படுத்துகின்றன. இலங்கையில் சிங்கள அடக்குமுறைகளுக்கு எதிராகத் தமிழர்கள் கடந்த மூன்று தசாப்தங்களாகப் போராடி ஒடுக்கப்பட்டார்கள். இன்று உலகில் அமைதியற்ற நாடுகளில் ஒன்றாகச் சிரியா இனங்காணப்பட்டுள்ளது. இலங்கைகூட அதற்கு ஒன்றும் விதிவிலக்கல்ல.

> இலங்கையைப் போன்றே சிரிய அரசும் அப்பாவி மக்களைக் கொன்று குவித்து வருகின்றது. இங்கு காணமாக்கப்பட்டவர்களின் நிலையும் குற்றவாளிக ளுக்கு எதிரான நீதியான விசாரணைகளை முன்னெடுக்க இழுத்தடிக்கும் அரசின் பின்புலத்திலும் சிரியாவைப் போன்றதொரு பயங்கரமே இருக்கும். இந்த உண்மையை மூடி மறைக்கவும் குற்றவாளிகளைக் காப்பாற்றவுமே இலங்கை அரசும் போர்க்குற்ற விசாரணைகளுக்கு முகம்கொடுக்காமல் இழுத்தடிக்கின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மைத்திரி ரணில் இருவருக்கும் ஒரு வாய்ப்பு



ஜோதா

ஆட்சி மாற்றம் வேண்டி வாக்களித்த மக்கள் இந்த நாட்டு ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவையும் பிரதமராக ரணில் விக்ரமசிங்கவையும் தெரிவு செய்தனர். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அரசியல் நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருக்கிறது இவர்கள் இருவரும் இணைந்த அரசு. பத்தாண்டு காலமாக, கடும் கண்காணிப்பு, அச்சுறுத்தல்கள், ஊடகங்கள் மீதான அடக்குமுறை, ஜனநாயக அமைப்புக்களைப்- பலவீனப்படுத்துதல் என்று மகிந்த நடத்திய சர்வாதிகார ஆட்சி, 2015 ஜனவரி 9இல் முடிவுக்கு வந்தது. மகிந்தவின் ஆட்சியில், வளர்ச்சித் திட்டங்களை விடவும் ஊழல்கள், பாரபட்ச நடவடிக்கைகள் போன்றவைதான் பிரதானமாக இருந்தன. போர் வெற்றியிருந்தாலும் பெரும்பான்மை மக்களான சிங்களவர்கள் சிலரிடம் இதனால் அவருக்கு உருவான செல்வாக்கும் வலுவிழந்துபோனது.

**முதல் தேசியக் கூட்டணி**

மாற்றத்தை உருவாக்கும் எந்த ஒரு புதிய அரசியல் பலத்துக்கும் வாய்ப்பு உண்டு எனும் அளவுக்கு நாட்டில் ஓர் அரசியல் சூழல் உருவானது. 'மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்றும், நல்ல நிர்வாகத்தைத் தருவோம்' என்றும் பரப்புரை செய்து, தற்போதைய மைத்திரி - ரணில் அரசு ஆட்சிக்கு வந்தது. கிராமப்புறங்களைச் சேர்ந்த கணிசமான சிங்களவர்கள், வடக்குப் பகுதியைச் சேர்ந்த தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் ஆகியோருடன் பன்னாட்டு அளவிலும் ஆதரவுகள் கிடைத்ததால் மகிந்தவை மைத்திரியால் தோற்கடிக்க முடிந்தது. மைத்திரியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அவரது அரசியல் எதிரியான ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து இலங்கையின் முதல் தேசியக் கூட்டணி அரசை ஏற்படுத்தின. அரசியல் களத்தில் நிகழ்ந்த மிகப் பெரிய மாற்றம் அது. மக்களும் அது பயனளிக்கும்என்றுநம்பிக்கையுடன்இருந்தார்கள். ரணிலினால் இலங்கை மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்ட அர்ஜுன மகேந்திரன், ஊழலில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்டபோதும், குறைந்தபட்சம் தனது முதலாவது ஆண்டை இந்த அரசு முன்னைய அரசிலுமிருந்து சமாளித்துக்கொண்டது. இந்த அரசுக்கு மீண்டும் வாய்ப்பளிப்பதில் உறுதியாக இருந்த எமது மக்களில் பெரும்பாலானோர் 2015 ஓகஸ்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் இந்தக் கூட்டணிக்கே வாக்களித்தனர்.

**குழப்பங்களை எதிர்கொள்ளும் அரசு**

ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைக் குறைக்க, அரசியல் சட்டத்தில் திருத்தத்தை இந்த அரசு கொண்டு வந்தது. ஊடகங்களுக்கான வெளியைத் திறந்துவைத்தது. சமரசத்துக்கு விரிவான வியூகத்தை வளர்த்தெடுத்தது. நான்கு அம்சம் கொண்ட அணுகுமுறையை வழங்குவதாக ஐ.நா மனித உரிமைகள் சபையிடம் உறுதியளித்தது. அத்துடன், புதிய அரசியல் சட்ட வரைவுக்கான வேலைகளையும் தொடங்கியது. வடக்குக்கு மைத்திரி பலமுறை வந்ததுடன் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்த காணிகளில் ஒரு பகுதியையும் விடுவித்தார். தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தனது கடமை என்றும் கூறினார்.

இரண்டாவது ஆண்டில் நுழையும் இந்த அரசு, தற்போது பல குழப்பங்களை எதிர்கொள்கிறது. நாட்டின் பொருளாதாரம் மோசமடைந்திருப்பதுடன், கூட்டணி அரசுக்குள்ளே கருத்து வேறுபாடுகள் காணப்படுவது வெளிப்படையாகத் தெரிகிறது. மைத்திரியும் ரணிலும் தெரிவிக்கும் முரண்பாடான கருத்துகள் அவர்களிடம் இருக்கும் ஒற்றுமையின்மையைப் பகிரங்கப்படுத்துகின்றன. அத்துடன், மகிந்த ஆட்சியினர் சம்பந்தப்பட்ட ஊழல் விசாரணைகள், கொலை வழக்குகள் போன்றவற்றை இந்த அரசு மென்மையாகக் கையாள்வது, அரசுக்கும் மகிந்தவுக்கும் இடையில் திரைமறைவுப் பேச்சுவார்த்தை நடக்கிறதோ எனும் சந்தேகத்தைத் தோற்றுவித்திருக் கிறது.

மைத்திரியும் ரணிலும் தெரிவிக்கும் முரண்பாடான கருத்துகள் அவர்களிடம் இருக்கும் ஒற்றுமையின்மையைப் பகிரங்கப் படுத் துகின்றன. அத்துடன், மகிந்த ஆட்சியினர் சம்பந்தப்பட்ட ஊழல் விசாரணைகள், கொலை வழக்குகள் போன்றவற்றை இந்த அரசு மென்மையாகக் கையாள்வது, அர சுக்கும் மகிந்தவுக் கும் இடையில் திரைமறைவுப் பேச்சு நடக்கிறதோ எனும் சந்தேகத்தைத் தோற்றுவித்திருக்கிறது

**கவலை தரும் விடயம்**

பிக்குகள் தகாத அரசியல் நடத்தைகளில் ஈடுபட்டுவருவதைக் கண்டுகொள்ளாமல் அரசு மௌனமாக இருப்பது கவலை தரும் மற்றொரு விடயம். மட்டக்களப்பில் தமிழ் அரச அதிகாரியை இனவெறியுடன் மோசமாகத் திட்டியதுடன், கொலை மிரட்டலும் விடுத்த பிக்கு மீது அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பன்னாடுகள், குறிப்பாக அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளைப் பொறுத்தவரை, ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் எமது நாட்டுடனான உறவு என்பது பெரும்பாலும் பொருளாதார ஒத்துழைப்பு அல்லது பாதுகாப்பின் அடிப்படையிலேயே இடம்பெறுகிறது. இந்த இரு நாடுகளும் எமது நாட்டில் சீனாவின் இருப்புத் தொடர்பாகவே கவனம் செலுத்திவருவதால், இங்குள்ள அரசியல் நிகழ்வுகள் தொடர்பாக அந்த நாடுகளின் பார்வை கணிசமாகக் குறைந்துள்ளது.

**சாதகமான சூழல்**

அரசியல்ரீதியான பின்னடைவு, நிச்சயமற்றதன்மை ஆகியவற்றுக்குப் பிறகும் அரசியல் சட்டச் சீர்திருத்தத்தை நோக்கி முன்னேற இன்றைய அரசுக்கு வாய்ப்பு இருக்கிறது. அதாவது, அரசியல் தீர்வுக்கான சூழல் இதற்கு முன்னர் இத்தனை சாதகமாக இருந்ததில்லை. காரணம், இரண்டு முக்கிய கட்சிகளும் ஆட்சியில் இருக்கின்றன என்பது மட்டுமல்ல. வடக்கு மாகாணத் தமிழர்களின் பிரதிநிதியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்த அரசைப் புறக்கணிப்பதை விடவும் ஒன்றிணைந்து செயல்படவே விரும்புகிறது. முக்கியமான எதிர்க்கட்சியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்ததுடன், அரசின் பெரும்பாலான திட்டங்களுக்கும் ஆதரவாக இருப்பதன் மூலம் அரசுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதை வெளிக்காட்டி நிற்கின்றது. மேலும் பொறுப்புக்கூறல், போர்க்குற்றம் தொடர்பாகப் பன்னாடுகள், மனித உரிமை அமைப்புகள் கொடுத்த அழுத்தம் கடந்த இரண்டு ஆண்டுகளில் கணிசமாகக் குறைந்திருக்கிறது. பொறுப்புக்கூறல் தொடர்பான கோரிக்கையை எழுப்புவதன் மூலம் அரசியல்ரீதியான குழப்பங்கள் ஏற்படும் என்பதால், அதைவிடவும் அரசியல் சட்டச் சீர்திருத்தம்தான் முக்கியமானது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கருதுகிறது. முன்பே சொன்னதுபோல், அரசியல் தீர்வை எட்டுவதற்கான சூழல் இதற்கு முன்னர் எமது நாட்டில் இத்தனை சாதகமாக இருந்ததில்லை.

**அரசின் முன் உள்ள அழுத்தங்கள்**

அரசுக்குள் ஏற்பட்டிருக்கும் பலவீனம் கவனிக்க வேண்டிய விடயம். இந்தப் பிரச்சினை இந்த அரசுக்கு எளிதாக இருக்கப்போவதில்லை. 225 ஆசனங்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் மைத்திரி - ரணில் கூட்டணிக்கு 155 ஆசனங்கள் உள்ளன.



46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்ப்புகளுக்கு மத்தியில் சுதந்திர தினம்

சந்திரசேகர ஆசாத்

இலங்கையின் 69ஆவது சுதந்திர தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற அந்த விழாவில் பிரதமர், அமைச்சர்கள், பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கான வெளிநாட்டு தூதுவர்கள் எனப்பலரும் வழமைபோல கலந்து கொண்டு சிறப்பித்தனர். பிரமாண்டமான முறையில் இந்த விழா கொண்டாடப்பட்ட போதிலும் நாட்டின் பல பகுதிகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் இடம்பெற்றன என்பது முக்கியமான விடயம்.

**வடக்கிலும் தெற்கிலும் புறக்கணிக்கப்பட்ட சுதந்திர நாள்**

இலங்கையின் வரலாற்றில் முதல் முதலாக தலைநகரான கொழும்பில், 'இது கறுப்புச் சுதந்திர தினம்' என்ற கோசத்துடன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மின்சாரசபை ஊழியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டித்தும் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஐக்கிய சோலிசக் கட்சியின் தலைமையிலான தொழிற்சங்க ஒன்றியத்தால் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆனாலும் சுதந்திரதினத்தன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற எதிர்ப்பு நடவடிக்கைகளே ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன.

யாழ். மாவட்டச் செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திர தின விழாவில் பொதுமக்கள் பெரிய அளவில் கலந்து கொள்ளவில்லை. ஆயுதப்படையினரும் அரச ஊழியர்களுமே அங்கு காணப்பட்டனர். ஆனால், செயலக முன்றிலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட ஏராளமானோர் நீதிமன்றத்தடையையும் மீறிக் கலந்து கொண்டனர். அங்கு காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற விடயங்கள் தொடர்பாகக் கோசங்கள் எழுப்பப்பட்டன. செயலகத்தைச் சுற்றி அமைதியான முறையில் போராட்டம் தொடர்ந்தது.

மன்னாரில் நடைபெறவிருந்த கறுப்புக் கொடிப் போராட்டம் நீதிமன்ற உத்தரவால் கைவிடப்பட்டது. முல்லைத்தீவில் கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் மக்கள், தங்கள் காணிகளை விடுவிக்கக் கோரி தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அதற்கு ஆதரவு தெரிவித்து சுதந்திர தினத்தன்று அந்த மாவட்டம் முழுவதுமே கடையடைப்புப் போராட்டம் நடந்தது. இவ்வாறு வடக்கு, கிழக்கு எங்கும் சுதந்திர தினத்தைப் புறக்கணித்து சிறிதும் பெரிதுமாகப் போராட்டங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்டன.

**ஏற்றுக்கொள்ள முடியாத சுதந்திர நாள்**

போரின் பின்னராவது தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு விடிவு கிடைக்கவும் ஏற்கனவே இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கும் நீதி கிடைக்குமென்ற நம்பிக்கையுடனுமே தமிழ் மக்கள் ஆட்சிமாற்றத்துக்குப் பங்களிப்பை வழங்கினார்கள். ஆனால், கடந்த ஆட்சியாளர்கள் நடந்துகொண்டதைப் போலவே இந்த ஆட்சியினரும் தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கருதி ஒடுக்குமுறைகளைத் தொடர்கின்றனர். இதனால் தமிழ் மக்கள் சுதந்திர தினக் கொண்டாட்டங்களை நிராகரிப்பதிலோ அல்லது எதிர்ப்பதிலோ ஆச்சரியப்பட எதுவுமில்லை. சிங்கள மக்களைப் போன்று தமிழ் மக்களுக்கு இயல்பு வாழ்க்கை கிட்டாத நிலையில் எவ்வாறு சுதந்திர தினத்தை ஏற்றுக் கொள்ள முடியும்?

சிறுபான்மையினருக்குத் தொடர்ந்து இழைக்கப்படும் அநீதிகளை நியாயப்படுத்தும், அவற்றைத் தொடரும் அரசின் போக்கை மேலும் உறுதி செய்யும் வகையில் ஜனாதிபதியின் சுதந்திர தின உரையில் சில விடயங்களை உணரமுடியும். அவர் இன, மத, சமத்துவம் மூலமே நல்லிணக்கத்தைக் கட்டியமைக்க முடியும் எனத் தெரிவித்திருந்தார். அவரின் அந்தக் கருத்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால், அதே வாயால் பௌத்த மதத்துக்கு முதலிடம் வழங்கும் விடயத்துக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாது எனவும் தெரிவித்திருந்தார். பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கும்போது ஏனைய மதங்களுடன் எவ்வாறு சமத்துவம் பேண முடியும்?

தனியார் காணிகளில் புத்தர் சிலைகளை அமைப்பது, பௌத்த தொல்பொருள் சின்னங்கள் இருப்பதாகக்கூறி முஸ்லிம்களின் காணிகளை அபகரிப்பது, இந்து ஆலயச் சுற்றாடலில் புத்தர் சிலைகளை அமைப்பது போன்ற ஏனைய மதத்தினரின் உரிமைகளை உதாசீனப்படுத்துகின்றனர். அவற்றை மேற்கொள்ளும் பிக்குகள் தடுக்கப்படுவதும் இல்லை, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதும் இல்லை. இதிலிருந்து இன, மத சுதந்திரத்தின் போலித்தனம் பௌத்தமதத்துக்கான முன்னுரிமை என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது.

**பாரபட்சமற்றவரே தலைவராக முடியும்**

ஜனாதிபதி என்பவர் தமிழ், முஸ்லிம் மக்கள் உட்பட இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதியா? அல்லது சிங்கள மக்களுக்கு மட்டும் ஜனாதிபதியா? அதாவது எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளைத் தோற்கடித்து நாட்டைக் காப்பாற்றிய இராணுவத்தைப் பாராட்டுவதுடன் அவர்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதில் உறுதியாயிருப்பதாகவும் தெரிவித்திருந்தார். போர்க்களங்களில் நின்று களமாடியவர்கள் என்ற வகையில் அவர்களை அந்த அதிகார பீடங்கள் பாராட்டுவதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

போர்க்குற்றங்கள், மனித குல விரோத நடவடிக்கைகள் காரணமாகப் பன்னாட்டு மட்டத்தில் அபகீர்த்திக்கு உட்பட்டுள்ள இலங்கை இராணுவத்தினருக்குக் கௌரவம் உண்டு என்றும் அதைக் காப்பாற்றுவதில் தனக்கு உறுதிப்பாடு இருப்பதாகவும் அவர் தெரிவிப்பது, தானும் சிங்கள அதிகார பீடங்களில் ஒருவர் என்பதைத் துல்லியமாகத் தெரியப்படுத்துகிறார். குற்றவாளிகளைக் காப்பாற்ற முனைப்புடன் செயற்படும் ஒருவர் நாட்டின் எல்லா மக்களினதும் தலைவர் என்பதை ஏற்றுக் கொள்ள முடியுமா?

தமது அடிப்படை உரிமைகளைப் பெற்று வாழ முடியாத மக்கள் குழுமம் பிரிந்து போக முயல்வது தவிர்க்க முடியாது. அதன் பயனாகவே தமிழர்கள் மத்தியில் தனிநாட்டுக் கோரிக்கை எழுந்தது. அதன் பரிணாம வளர்ச்சியில் ஆயுதப் போராட்டம் வெடித்தது. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவே போராடினர். அந்த வகையில் அவர்கள் தமது மண்ணையும் தமது மக்களையும் விடுவிக்கப் போராடிய விடுதலைப் போராளிகள். இன சமத்துவம் மூலமே நாட்டில் நல்லெண்ணத்தைக் கட்டி வளர்க்க முடியும் எனக் கூறும் ஜனாதிபதி, தமிழ் மக்களைக் கொன்று தள்ளிய ஆயுதப் படையினர் கௌரவிக்கப்பட வேண்டியவர்களெனவும் தமிழ் மக்களின் விடுதலைக்குப் போராடிய போராளிகளைப் பயங்கரவாதிகள் எனவும் குறிப்பிட்டால் அதில் எங்கே இன சமத்துவம் இருக்கிறது? அந்த வழியில் நல்லிணக்கம் உருவாக முடியுமா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும் நடைமுறைப்படுத்த எந்தவித நேர்மையான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் இலங்கை ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்ற மேலும் கால அவகாசம் கோரவுள்ளதாகவும் தெரிகிறது. மேலும் சில நாடுகளைத் தமக்கு ஆதரவாக வளைத்துப் போடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அரசு கூட இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணவோ தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் வழங்கவோ நேர்மையான அணுகுமுறையைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு.



> முல்லைத்தீவில் கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் மக்கள், தங்கள் காணிகளை விடுவிக்கக் கோரி தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அதற்கு ஆதரவு தெரிவித்து சுதந்திர தினத்தன்று அந்த மாவட்டம் முழுவதுமே கடையடைப்புப் போராட்டம் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா. கணேசதாசன்

# நீளும் போராட்டம்




## போராட்டக்காரர்களுடன் சில நெடிகள்...

"இன்றைக்கு நாங்கள் இந்த இடத்துக்கு வந்து எத்தினை நாளாகப் போராட்டம் நடத்துறம். நாங்கள் பெரும் செல்வந்தர்கள் இல்லை; அன்றாடம் வேலைக்குப்போய் அன்றாடம் சாப்பிடுறனாங்கள். கூலி வேலைக்கு போய் அன்று வரும் வாருமானத்தில் சீவியம் நடத்துற நாங்கள். சில தேவைகளுக்காக வாராந்தம் செலுத்தும் கடன், மாதாந்தம் செலுத்து கடன் பெற்றிருக்கிறம். கடன் தந்தவன் இஞ்சயே வந்திட்டான். என்ன செய்வது என்று எமக்குத் தெரியவில்லை, பிள்ளைகள் இத்தனை நாளா பள்ளிக்கூடம் போகேல்லை. அதுகளின்ர படிப்பு ஒன்றுதான்; எங்கட மூச்சு அதிலையும் இடி விழுந்து விட்டது. இப்படியே தெருவில் கிடக்கின்றார்களே என்ற ஒரு கரிசனை கூட இந்த அரசுக்கு ஏற்பட வில்லையா? இவ்வளவு காலமும் நாங்கள் எத்தனையை இழந்திட்டம்; இனியும் எங்களிடம் இழப்பதற்கு ஒன்றுமில்லை. நாங்கள் இழந்ததையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மீட்டு, நல்ல நிலைக்கு வருவதற்கு எங்கட காணிகள் எங்களுக்கு வேண்டும். இலங்கையின் சுதந்திர தினம் எங்களுக்குக் கரிநாள். இனி வரும் சுதந்திர தினங்கள் எப்பிடியிருக்கும் என்பதை இந்த நல்லாட்சி அரசு தான் முடிவெடுக்க வேண்டும். தனது காணிக்காக, இராணுவ முகாம் தொடங்கி காட்டுத் திணைக்களம், பிரதேச செயலகம் எனப் போராட்டங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மூன்று பிள்ளைகளின் தாயான கௌசல்யா திடமாகச் சொல்கிறார்.

"பூர்வீகக் காணிகளைக்க கோரியே எங்களுடைய போராட்டம் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளது. பத்தாவது நாள் தென்பகுதியில் இருந்து மதகுருமார்கள், அருட்சகோதரிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சிங்கள ஊடகவியலாளர்கள் எனப்பலரும் எங்களுடன் ஒன்றுகூடியிருகிறார்கள். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போராட்டக்காரர்களில் ஐந்து பேரை காணி விடயமாகப் பேசி நல்ல முடிவுகள் எடுப்பதற்காகப் பேச்சுக்கு அழைத்திருக்கிறார். என்ன நடந்தாலும் நாங்கள், எங்கள் காணிகள் விடுபட்டு அங்கு சென்று சமைத்து உணவருந்தும் வரைக்கும் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை. எங்களுக்கு பல்கலைக்கழக மாணவர்கள், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணம் அரசு, அரசசார்ப்பற்ற ஒன்றியம், பிரசைகள் அமைப்புக்கள் ஆதராவு தருகின்றனர். எங்களுடைய மண் மீட்புப் போராட்டம் தொடரும்" எனத் தொடர்போராட்டக்களத்தில் நிற்கும் செல்வி தெரிவிக்கிறார்.

"எங்களுடைய காணிகளில் எங்களை வாழ விடாது கடந்த அரசு ஏமாற்றி வந்தது. இப்போது நாட்டில் நிலவுவதாகச் சொல்லப்படும் நால்லாட்சியாவது எங்கள் காணிளை விடுவித்து, எங்கள் வாழ்க்கைக்கு நல்ல பாதையை ஏற்படுத்தித் தரும் என நாங்கள் எல்லோரும் நினைத்திருந்தோம். ஆனால் அதுவும் இப்போது ஏமாற்றமாக மாறிவிட்டது" முல்லைத்தீவு – பிலக்குடியிருப்பில் பொதுமக்கள் காணியில் அமைந்துள்ள வன்னிப்பிராந்திய விமானப்படை தலைமைக்காரியாலயத்துக்கு முன்னால் தொடர்ந்து பத்து நாள்களையும் தாண்டி நீண்ட போராட்டம் ஒன்றை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கும் மக்களுள் ஒருவரான இந்திராணி ஆதங்கப்பட்டுக் கொள்கிறார்.

ஒருநாள் அல்ல இரண்டு நாள் அல்ல கடந்த பத்து நாள்களுக்கும் மேலாகத் திறந்த வெளியில் அமைக்கப்பட்ட தகரக் கொட்டகைக்குள் வெயிலையும், பனியையும் பொருட்படுத்தாது எமது காணியே எமக்கு வேண்டும் என கேப்பாபிலவு – பிலக்குடியிருப்பு மக்கள் மனஉறுதியுடன் போராடிவருகின் றனர்.

"ஐயா எங்களுக்கு அரசியலும் தெரியாது, நாங்கள் எவரையும் ஏமாற்றவும் இல்லை நாங்கள் கேட்பதெல்லாம் எங்கட காணிகள எங்களுக்குத தாங்கோ. நாங்கள் வீட்டில தோட்டத்தை வைச்சு இந்த நந்திகடலில மீனப்பிடிச்சு எங்கட பிள்ளைகள வளர்த்திடுவம். இனியும் நாங்கள் இந்த, மாதிரிக்கிராமம் என்ற நலன் புரிமுகாமில வாழ முடியாது" தகரக் கொட்டகையைத் தாங்கிக் கொள்ளும் குத்துக் காலுடன் வாடிச் சோர்ந்த உடலுடன் சரிந்து இருக்கிறார். இது பிலக்குடியிருப்பில் விமானப்படைத் தலைமைக் காரியாலயத்துக்கு முன்னால் தனது காணிக்குச் செல்லவேண்டும் என்ற இலக்கோடு தவம் கிடக்கும் முதிய தாய் ஒருவர்.

கேப்பாபிலவு – பிலக்குடியிருப்பு, வற்றாப்பளை – புதுக்குயிருப்பு வீதியில் நந்தி கடல் ஓரமாக அமைந்தள்ளது. இராணுவம் கையகப்படுத்த முன்னர் பிலக்குடியிருப்பைப் பூர்வீகமாகக் கொண்ட மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று 54 வரையிலான வீடுகளைக் கட்டிக் கொடுத்திருந்தது. அந்த மக்களின் குடிதண்ணீர்த் தேவைக்காக எட்டுப் பொதுக் கிணறுகளும் அமைக்கப்பட்டன. சிலர் தங்கள் வீடுகளிலும் தாமே கிணற்றை வெட்டிக் கொண்டார்கள். வளமான பூமி. அருமையான சூழல். முகிழ்ச்சியாக வாழ்ந்தபோதும் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்தனர். பின்னர் இன்று வரையில் அகதி முகாம் வாழ்க்கையையே அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

"அண்டைக்கு விமானப்படை எங்கள உள்ளுக்குக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டேக்க வீடுகள் எல்லாம் தரைமட்டமாக் கிடந்தது. பொதுக்கிணறு எட்டும் உருப்படியாக் கிடக்குது, வைச்ச தென்னையெல்லாம் தேங்காய் சிலிர்த்துப் போய்க்கிடக்கு. காணியைப் பார்க்கவே ஆசை ஆசையாக் கிடக்கு. விட்டுட்டாங்கள் என்று கொஞ்சம் அசைப்பட்டோம். பாவிகள் அதிலையும் மண்ண அள்ளிப்போட்டுட்டாங்கள்" என்று ஆதங்கப்பட்டுக் கொள்ளும் கௌசல்யாவின் முகத்தில் ஏமாற்றமும் கண்ணீரும் கவலையும் கலந்த உணர்வே இழையோடிக் கொண்டிருக்கின்றது. அவரால் மேற்கொண்டு எதுவும் பேச முடியவில்லை. கண்களில் இருந்து வந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தரையில் அமர்கின்றார் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அந்தத் தந்தை.



1931ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தகமானியின் அடிப்படையில் வனத்திணைக்களம் தனக்குரிய பகுதிகளை அடையாளப்படுத்தி எல்லைக் கற்களை நிறுவியுள்ளது. பொதுமக்கள் வாழும் பல இடங்களிலும் அவர்கள் எல்லைக் கற்களை நிறுவ முற்பட்டபோது தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால் பிலக்குயிருப்புக் காணிகளை வனத் திணைக்களம் தனக்குச் சொந்தமான காணி என அடையாளமிட்டுள்ளது. இன்று மக்கள் போராடுவதற்கும் இந்தச் சிக்கல் வருவதற்கும் அதுவே முக்கிய காரணம். பிலக்குடியிருப்பு மக்களுடைய தொடர் போராட்டத்துக்குப் பின்னர் தான் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், வனத்திணைக்களம் என்பன இணைந்து பிலக்குடியிருப்பு மக்களுக்குச் சொந்தமான 42 ஏக்கர் காணிகளை அடையாளப்படுத்தி, விமானப்படையினருக்கு வழங்கியிருக்கின்றன. அது இன்று வரை அந்த மக்களின் கைகளுக்குக் கிடைக்காமல் அவர்களைப் போராட்டம் வரைக்கும் கொண்டுசென்றுள்ளது.

இந்த நாட்டில் தமிழர்கள் தமது நிலத்தில் வாழும் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக அங்காங்கே சிதறி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிலக்குடியிருப்பு மக்களுடைய போராட்டமே தமிழ் மக்களுடைய நிலமீட்புக்கான இறுதிப் போராட்டமாக இருக்கவேண்டும்.

வடகிழக்குப் பகுதியில் மக்களின் காணிகளைக் கையகப்படுத்தி வைத்திருக்கும் அனைத்து அரச படைகளும் மக்களின் தலையில் ஏறி இருப்பதைத் தவிர்த்து, தமக்குரிய இடங்களில் மக்களுக்குத் தொல்லையில்லாமல் தமது பீடங்களை நிறுவினாலன்றி மக்களின் ஓலமும், போராட்டமும் என்றும் ஓயாது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவின் கட்சியை காப்பாற்ற களத்தில் இறங்குவேன்! பிரபல நடிகை அதிரடி



தமிழ்நாட்டில் நிகழ்ந்துகொண்டிருக்கும் அரசியல் அதிரடி நிகழ்வுகள் பலரையும் திசை திருப்பியுள்ளன. அடுத்தடுத்த முடிவுகளை எதிர்நோக்கி திரையுலக பிரபலங்களும் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில் நடிகை லதா, எம்.ஜி.ஆர் நடித்த உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் அறிமுகமானவர். இவர் ஆரம்பம் முதலே எம்.ஜி.ஆரின்வழியைப்பின்பற்றிவருகிறார். தற்போது நடக்கும் அரசியல் மாற்றங்களால் கொதித்துப் போய் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் லதா.

அதில் தெரிவித்ததாவது,

எம்.ஜி.ஆர் கட்சியை வழிநடத்த எவ்வளவு சிரமப்பட்டார் என்பதை நான் அறிவேன். சேவை நோக்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கட்சியின் நிலை கண்டு அதிர்ந்துள்ளேன்.

ஜெயலலிதாவிடம் நல்ல பெயர் எடுப்பது அவ்வளவு சுலபமல்ல. ஓ.பி.எஸ். அப்படியொரு பெயர் வாங்கியிருக்கிறார் என்றால் அவரது விசுவாசம் தான் அதற்குக் காரணம். தற்போது இருக்கும் குழப்பநிலை நீடித்தால் நான் களத்தில் இறங்கி அதிரடி நடவடிக்கை எடுப்பேன் என்றார்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பொதுநலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை சமாளிக்க முடியாமல் திணறுவர். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும்.

**இடபம்:**. குடும்ப சிரமத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். ப்ணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** மனதில் துணிச்சல் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். வருமானம் அதிகரிக்கும். பணக் கடனில் ஒருபகுதி அடைபடும். நண்பர்களால் உதவி உண்டு.

**கடகம்:** உங்களின் செயலை சிலர் பரிகாசம் செய்வர். அவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேற தாமதம் உண்டாகும். பெண்கள், யாருக்கும் தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம்.

**சிங்கம்:** பேச்சில் அன்பும், பண்பும் மிகுந்திருக்கும். உறவினர் உங்களை மதிப்புடன் நடத்துவர். தொழில், வியாபாரத்தில் சீரான வருமானம் கிடைக்கும். பெண்களுக்கு பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

**கன்னி:** பேச்சு, செயலில் கவனச் சிதறல் ஏற்படலாம். இல்லறத்துணையின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாரான அளவில் இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** எந்தச் செயலையும் சவாலாக அணுகுவீர்கள். திகைப்பு தந்த பணி கூட, எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்தியளிக்கும். மனைவி விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** பேச்சு, செயலில் விவேகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் இரட்டிப்பாகும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**தனுசு:** குடும்பப் பிரச்சினைக்கு சுமுகத்தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**மகரம்:** பெருந்தன்மையுடன் பிறர் குற்றம் பொறுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி குறுக்கிடும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கப் பெறுவீர்கள். எதிர்கால வளர்ச்சி குறித்து புதிய திட்டம் தீட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**மீனம்:** உதவும் மனப்பான்மையுடன் உறவினரை ஆதரிப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்காக விடாமுயற்சியுடன் பாடுபடுவீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | | 4 | |
| | 3 | | | 9 | | | | 1 |
| | 5 | | | | 8 | | | |
| 6 | | | | | | 7 | | |
| 2 | | | 7 | | 5 | | | 9 |
| | | 8 | | | | | | 5 |
| | | | 9 | | | | 1 | |
| 4 | | | | 2 | | | 9 | |
| | 2 | | | | 6 | | | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 1 | 3 | 8 | 5 | 2 | 7 | 9 |
| 9 | 5 | 2 | 1 | 7 | 6 | 4 | 3 | 8 |
| 7 | 3 | 8 | 2 | 9 | 4 | 5 | 6 | 1 |
| 1 | 2 | 6 | 4 | 5 | 7 | 9 | 8 | 3 |
| 8 | 7 | 5 | 9 | 2 | 3 | 1 | 4 | 6 |
| 3 | 9 | 4 | 8 | 6 | 1 | 7 | 2 | 5 |
| 4 | 1 | 7 | 6 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 8 | 3 | 7 | 1 | 2 | 6 | 9 | 4 |
| 2 | 6 | 9 | 5 | 4 | 8 | 3 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"உழைப்புக்கேற்ற பயன் இல்லையே" என்று கடவுளிடம் புலம்பினேன்
"இது உன் போன ஜென்ம சோம்பேறித் தனத்துக்கான தண்டனை" என்றார்...
"போன ஜென்ம பாவத்துக்கு இந்த ஜென்மத்தில் தண்டிக்கும் உன் சோம்பேறித் தனத்துக்கு யார் தண்டனை கொடுப்பார்?" கடவுளை நோக்கிக் கேட்டேன்
"இந்த வாய்க்கு, உனக்கு அடுத்த ஜென்மத்திலும் தண்டனை இருக்கு" என்று சொல்லி மறைந்தார்...




"மறைந்த முதல்வர் ஜெயலலிதா மரணம் கு... முற்றுப்புள்ளி வைக்க... செய்தியாளர்கள் சந்திப்... லண்டன் மருத்துவர் ரிச்சர்ட் பீலே




பேசாம மூடிக்கிட்டு இருந்திருக்கலாம்... இந்த மருத்துவ பயலுக விளக்கம் குடுக்கிறோம் என்று சொல்லி, குழப்பத்தை அதிகமாக்கிவிட்டு போயிட்டானுக... இதுக்கு மேல ஒரு பய அதிமுக -வை நம்பமாட்டான்...




நம்ப சினிமால தான் இப்படியெல்லாம் வரும். மருத்துவக் கல்லூரி மாணவிகள் கணினிப் புத்தகத்தையும் ஸ்டெதஸ்கோப்பையும் எடுத்துக்கிட்டு போவாங்க

நாடாளுமன்றத்தின் முன்புறம் ஒரு சிறுவன் சைக்கிளை நிறுத்தி விட்டு, பக்கத்தில் எங்கோ நடந்து செல்வதை பார்த்து, அருகில் நின்ற பொலிஸ்காரர் அழைத்தார்.
"தம்பி... இந்த வீதி எது என்று தெரியாதா? நீ பாட்டுக்கு சைக்கிளை நிறுத்தி விட்டுச் செல்கிறாய்? எம்பிக்கள், சமயங்களில் முதலமைச்சர், சில கபினெட் அமைச்சர்கள், ஏன்... குடியரசுத் தலைவர், அரசியல் தலைவர்கள் எல்லோரும் இந்த வழியாகத்தான் போவார்கள்..."
சிறுவன் இயல்பாகச் சொன்னான்
"பயப்பட வேண்டாம் சேர்... நான் சைக்கிளை லொக் பண்ணிட்டுத்தான் போகிறேன்.."




# மோசமான தோல்விகளிலும் தரங்கவில் திருப்தி

இலங்கை அணி கடந்த சில வாரங்களாக தொடர்ந்து தோல்விகளைச் சந்திக்கின்ற போதிலும் தனிநபர் பெறுபேறு என்ற அடிப்படையில் தரங்க நம்பிக்கை கொடுப்பவராக அமைந்தார்.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர், மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர், ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் ஆகியவற்றில் விளையாடியது இலங்கை அணி.

டெஸ்ட் தொடரை 0:3 என்றும், ரி-20 தொடரை 1:2 என்றும், ஒருநாள் தொடரை 0:5 என்றும் இழந்தது. ரி-20 தொடரில் கிடைத்த வெற்றியொன்றே இந்தத் தொடரில் தென்னாபிரிக்காவுக்குக் கிடைத்த ஒரேயொரு வெற்றியாக அமைந்தது. ஒட்டுமொத்தமாக இந்தத் தொடர் இலங்கையைப் பொறுத்த மட்டில் படுதோல்வியே. இலங்கை அணியின் தெரிவுக் குழுவினரும், ரசிகர்களும் இலங்கையின் பெறுபேற்றைப் பொறுத்த மட்டில் மிகையாக ஏமாந்திருப்பார்கள். ஆனால் தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில் ஒரு சிலரில் திருப்தி கொள்ளும்படியாக அவர்களின் பெறுபேறுகள் அமைந்தன. அவர்களில் முக்கியமானவர் தரங்க.

இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ் தென்னாபிரிக்காவுக் எதிரான ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டத்துடன் காயம் காரணமாகத் தொடரில் இருந்து விலகினார். மத்தியூஸின் விலகலை அடுத்து தலைமைத்துவம் தரங்கவுக்குக் கொடுக்கப்பட்டது. ஒரு தலைவராக தரங்க தோற்றார். ஆனால், ஒரு வீரராக வென்றார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் அந்த அணி 368 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 9 பந்துப்பரிமாற்றங்களிலேயே 100 ஓட்டங்களைத் தொட்டது. தரங்கவின் அதிரடியே இலங்கையின் எழுச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. 90 பந்துகளில் 119 ஓட்டங்களை தரங்க குவித்தார். 11 பவுண்டரிகள் 7 சிக்சர்கள் அவற்றில் அடங்குகின்றன.

தரங்கவின் ஆட்டத்தில் சங்கா, மகேல காலத்தில் அவர் அணியில் வெளிப்படுத்திய அதிரடி எதிரொலித்தது. குறிப்பாக வேகப்பந்து வீச்சை எதிர்கொள்வதில் தரங்க அற்புதமாகச் செயற்பட்டார். எனவே குறைந்தது அடுத்த இரு ஆண்டுகளுக்காவது அவர் அணியில் தொடரக்கூடிய தகுதியுடன் உள்ளார் என்பது தெரிந்தது. சங்கா, மகேல, டில்சான் போன்ற நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர்கள் இல்லாவிடத்து அனைவரினதும் எதிர்பார்ப்பும் தரங்க இன்னும் சிலகாலம் வேண்டும் என்றவாறாகவே அமைந்துள்ளது என்றால் அது மிகையாக ஒன்றும் இல்லை.



# இரட்டைச் சதங்களை அடுக்குகிறார் கோக்லி

இந்திய அணியின் தலைவரான கோக்லி சதங்களில் அமர்க்களப்படுத்தியது போதாதென்று தற்போது இரட்டைச் சதங்களில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளார். இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி, இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடி வருகிறது. நாயணச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதல் நாள் முடிவில் அந்த அணி 356-3 என்றிருந்தது. கோக்லி 111 ஓட்டங்களுடன் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் களமிறங்கினார். தனது சதத்தை அவர் இரட்டைச் சதமாக மாற்றினார். 204 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இது கோக்லியின் நான்காவது இரட்டைச் சதமாகவும் அமைந்தது. இந்திய அணி இறுதியாக எதிர்கொண்ட இங்கிலாந்து, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு எதிராகவும் கோக்லி இரட்டைச் சதம் விளாசியிருந்தார். பங்களாதேஷுக்கு எதிரான இரட்டைச் சதம், தொடர்ந்து நான்காவது தொடரில் கோக்லி பதிவுசெய்த இரட்டைச் சதமாக அமைந்தது. இந்த அடைவை நிகழ்த்தியவரென்றால் கிரிக்கெட் வரலாற்றில் அது கோக்லி ஒருவரே.

கோக்லி தனது ஐந்தாவது இரட்டைச் சதத்தையும் விரைவில் பதிவுசெய்வார் என்பதே கிரிக்கெட் ரசிகர்களின் கணிப்பு. அதற்கு நியாயமான காரணமொன்றும் உள்ளது. ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து 4 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. தொடர் இந்தியாவில் நடைபெறுவதால் கோக்லி மீண்டும் ஒருமுறை மிரட்டலாம்...



# எப்போது வருவார் பேல்?

வேல்ஸ் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான கரீத் பேல் எப்போது களத்துக்குத் திரும்புவார் என்பதே தற்போது பலரினதும் ஒரே கேள்வியாக உள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற ஆட்டமொன்றில் பேல் களமிறங்கினார். தொடைப்பகுதியில் காயம் ஏற்பட்டு தற்காலிக ஓய்வில் இருந்தார். அவருக்கு அறுவைச் சிகிச்சையும் செய்யப்பட்டது. காயத்தில் இருந்து மீண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், அவர் எப்போது களத்துக்குத் திரும்புவார் என்பதில் உறுதியற்ற நிலையே உள்ளது.

ஜனவரி மாதம் அவர் களந்திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அணியுடன் பேல் இணையவில்லை.

இந்த மாதத்தில் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இன்னும் வரவில்லை. அவர் விரைவில் களமிறங்க வேண்டும் என்பதே கால்பந்து ரசிகர்கள் பலரினதும் எதிர்பார்ப்பு. ரியல் மட்ரிட் அணியில் றொனால்டோ, ராமோஸ், பென்சிமா, லூக்கா போன்ற வீரர்கள் உள் ளனர். எனினும் பேல் இல்லாமல் அணி முழுமை பெறாது என்பது மட்டும் வெளிப்படை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விதியின் வலி

வெள்ளி நிலவொளியில்
விழித்தெழுந் நான்
வீசுவலைதானெடுத்து விரைந்தேன்
வல்வைக்கடல் நோக்கி

காற்றடித்த வேகத்துடன் மழை பொழிய
கடலங்கே கொந்தளித்து நுரை பொங்கி
கரையெல்லாம் படகதனை கண்முன்னே
கடல் கொண்டு சென்றது காண். என்
கண்ணீரோ கடல் நீரில் கலந்தன்றோ

என்னவளும் பிள்ளைகளும் பசித்த வயிற்றோடு
எனைப்பார்த்து விழிநோக்கிக்காத்திருப்பார்
வலைவீசி மீன்பிடித்து வருவான் என
வந்த வழிநோக்கிக் காத்திருப்பாள் மனைவி
விழிவை துக்காத்திருக்கும் மனையாள் முன்
வீடு செல்வது தகுமா என்றெண்ணி

வலையை எடுக்கின்றேன் வீசுவதற்கு
வெறும் கையுடன் வீடு செல்ல எண்ணாது.
காற்றும் மழையும் சேர்ந்து கடல் பொங்கிக் கனைக்கிறது
கட்டறுத்த கட்டாறு போல் கடல் வெள்ளம் நுரைக்கிறது
எடுத்தேன் வலைதனை வீசினேன் கடல் மடியில்
என்ன செய்வேன் என் நிலையும் அதுவாச்சே
விதிக்குக் கூட என்னுடன் விளையாட விருப்பம் போல்
வீசினேன் வலையை வீசிய வலையுடன் என்னையும்
கடல் கொண்டு சென்றது தான் கரையில்லா இடத்துக்கு
கடல் நீரும் என் கண்ணீரும் ஒன்றானது

என்னுள் என்னவளும் என் பிள்ளைகளும்
என்னை எதிர்பார்த்திருக்கும் காட்சி
என்னைக் குடைந்தெடுக்கிறது நெஞ்சை
என் விதியை என்னவென்று சொல்வேன்

*புதுவை ஆனந்தன்*



## சொற்சிலம்பம் - போட்டி இல: 458

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | ■ | 5 |
| 6 | | | ■ | 7 | | 8 | |
| 9 | | ■ | 10 | | | | ■ |
| 11 | | 12 | ■ | ■ | | ■ | 13 |
| | ■ | 14 | | 15 | | ■ | |
| ■ | 16 | | | | ■ | 17 | |
| ■ | 18 | | ■ | 19 | 20 | | ■ |
| 21 | | ■ | 22 | ■ | 23 | | |

அனுப்புபவர் பெயர்:........................................................
முழுமையான தபால் விலாசம்: ......................................
..........................................................................................
கையொப்பம்:...........................................................

### இடமிருந்து வலம்

1. ஆரோக்கியமான உடல் நிலை கொண்டவன்
6. மன்மதன்
7. தெய்வப் பசு என்பர்
9. ஒரு பனை வகை
10. மயானம்
11. இந்திரன் சபையில் ஆடும் அழகி
14. உடல் (குழம்பியுள்ளது)
16. வன்முறையல்லாத வழி
17. உடைமை கவர்
18. ஜலதோஷம் பிடித்தால் இதனாலும் கஷ்டமுண்டு
19. தகுதி (குழம்பியுள்ளது)
21. நான்கில் ஒரு பகுதி
22. ஓர் அசைச் சொல்
23. அற்பத்தனம்

### மேலிருந்து கீழ்

1. (நோயில்லாமல்) உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கு ஏற்றநிலை
2. தாமரை
3. தேனீக்கள் இதனைத் திரட்டும்
4. ஒத்த கால வேளை
5. பெற்றெடு
7. வனம்
8. கண்டு பிடிக்க முயற்சி செய்
12. பச்சைக்கிளி
13. நுதல்
15. உடல் உறுப்புக்களின் இயக்கம்
16. போலியானதல்ல
17. நிதான்மிழந்து அவசரப்படு
20. இரங்கு/ அழு

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 456 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1) தவிடு (3) சாதகம் (5) குரு (6) பசு (7) திட்டம் வகு (10) பதவி (11) சம்சாரம் (12) பாகு (13) சாதி (15) கறுப்பி (17)குமுறுதல் (18)புரி

### மேலிருந்து கீழ்

(1) தகுதி (2) விருட்சம் (3) சாசுவதம் (4) கணை (6) பம்பரம் (8) குவி (9) மிளகு (11) சவுக்கு (12) பாதிப்பு (13) சாறு (14) நாறு (15) கல் (16)பிரி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 456 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
பி.கஸ்தூரி,
இல.77, 2ஆம் பகுதி,
விசுவமடு மேற்கு, விசுவமடு.

**2 ஆம் பரிசு**
தி.தங்கவடிவேலு,
இல.02, நான்காம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
யூ.ஹெவன்லி பச்சேக்,
வங்காலை - 01,
மன்னார்.

**4 ஆம் பரிசு**
திருமதி ஸ்ரீ கிருஷாந்தி,
உமாபதிசிவம்,
இல.18, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
இ.செல்லம்மா,
மே/பா வே.இராசநாயகம்,
சோறன்பற்று, பளை.

### பாராட்டுப் பெறுவோர்

தி.ரா.மாதவன்,
பிருந்தாவனம், ஆத்தியடி,
பருத்தித்துறை.

வாகினி கிருபாகரன்,
இல.6, சேர் பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

மு.கந்தையா,
தபாலகவீதி,
சாவகச்சேரி.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.458
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(22.02.2017 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.458இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 26.02.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 456 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

## 12.02.2017 முதல் 18.02.2017 வரை

உங்களுக்கு எப்படி?

### மேடம்

குரு, கேது, சூரியனால் நன்மை உண்டாகும். அக்கம் பக்கத்தவர் அன்புடன் நடந்து கொள்வர். வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் பெற வழி பிறக்கும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும். வெளிநபர்பிரச்சினையில்தலையிட்டால், உங்களுக்கு பிரச்சினை வரும். இதைத் தவிர்க்கவும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் நன்றாக இருக்கும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். வெளியூர் பயணம் செல்ல வேண்டி வரும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்கான திட்டங்களை வகுப்பர்.

### இடபம்

செவ்வாய், புதன், சந்திரன் நன்மை தருவர். உங்கள் பேச்சும், செயலும் மற்றவர்களைக் கவரும். புதியவர்களின் நட்பு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்துக்குள் சில பிரச்சினைகள் வரலாம். பயணங்களால்லாபம்ஏற்படும். புத்திரர்கள்விரும்பிக்கேட்டபொருள்வாங்கித் தருவீர்கள். கணவன், மனைவி இடையே சிறு பிரச்சினை வந்து நீங்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற சில மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கும். பணியாளர்களுக்கு, நிர்வாகத்துடன் கருத்துமோதல்ஏற்படலாம். பெண்கள், உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். மாணவர்கள், கவனமாகப் படித்தால்தான் முன்னேறலாம்.

### மிதுனம்

ராகு, சுக்கிரன், குரு, சனீஸ்வரர் வியத்தகு பலன் தருவர். பணிகள் சிறப்பாக நிறைவேறும். தம்பி, தங்கையின் பாசம் நெகிழ்ச்சி தரும். தாராளமாக செலவழிக்கும் வகையில் பணவரவு இருக்கும். புத்திரர்களின் மனதில் நல்ல சிந்தனை வளரும். உறவினர்களின் ஒத்துழைப்பு மகிழ்ச்சி தரும். குடும்பப் பிரச்சினைகளில் இருந்த ஒன்றிரண்டு பிரச்சினைகளும்தீரும். மனைவியின்நற்செயல் பெருமை தேடித்தரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். பணியாளர்கள், பொறுப்புணர்வுடன் பணிபுரிவர். பெண்கள், தாராள செலவில் விரும்பிய பொருள் வாங்குவர். மாணவர்கள், படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

### கடகம்

சுக்கிரன், புதன், சந்திரன் நன்மை வழங்குவர். சில முடிவுகளை மறு பரிசீலனை செய்வீர்கள். வீண் பேச்சு பேசுபவர்களிடம் பழக வேண்டாம். பயணங்களால் அதிக பலன் இராது. புத்திரர்களால் சில பிரச்சினைகள் வந்து நீங்கும். பணவரவு சுமார் என்பதால், செலவில் சிக்கனம் நல்லது. உடல் நலத்தில் கவனம் வேண்டும். மனைவியின் அன்பும், உதவியும், மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு, ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள், தாய் வீட்டு உதவி பெறுவர். மாணவர்கள், நன்றாகப் படித்து பாராட்டு பெறுவர்.

### சிங்கம்

சூரியன், சந்திரனால்நன்மை ஏற்படும். திட்டங்களை மன உறுதியுடன் செயற்படுத்தி வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வாகனப் பராமரிப்பு செலவு அளவுடன் இருக்கும். புத்திரர்களின் உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். பகைவரால் உருவான சிரமம் இஷ்டதெய்வ அருளால் விலகும். மனைவி வழிசார்ந்த உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தை நிலைநிறுத்த அதிக பணம் தேவைப்படும் என்பதால் வங்கி இருப்பில் கை வைக்க வேண்டி வரலாம். மாணவர்களுக்கு, படிப்பில்அதிககவனம் வேண்டும்.

### கன்னி

குரு, சனி, புதன், கேது அனுகூல பலன்களைத் தருவர். குடும்பத்தினரின் ஆதரவுடன் திட்டங்களைச் செயற்படுத்துவீர்கள். மனதில் நம்பிக்கை வளரும். புதிய வீடுசி வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்கள் படிப்பு, வேலையில் தங்கள் திறமையை வெளிப்படுத்துவர். உடல்நிலை நன்றாக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவது முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். அரசியல்வாதிகள் புதிய பதவி பெற யோகம் உண்டு. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை செழித்து பணவரவு கூடும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். பெண்களுக்கு, ஆடை, ஆபரணம்சேரும். மாணவர்கள், படிப்பில்சாதனை படைப்பர்.

### துலாம்

சுக்கிரன், செவ்வாய், ராகு நற்பலன் தருவர். படிப்பினை தரும் வகையிலான சம்பவம் ஒன்று நிகழலாம். இடம் சூழல் உணர்ந்து பேசுவதால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். வீடு, வாகன வகையில் பாதுகாப்பாக இருப்பது பொருள் நஷ்டத்தை தவிர்க்கும். புத்திரர்கள் பொது விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். உடல்நிலை சீராக இருக்கும். எதிரியால் உருவான தொந்தரவு பலயிழக்கும். மனைவியின் நல்ல செயலால் குடும்பத்துக்கு பெருமை சேரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற புதியவர்களின் ஆதரவு துணை நிற்கும். பணியாளர்கள், பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றி சலுகை பெறுவர். மாணவர்களுக்கு, படிப்பில் முன்னேற்றம் ஏற்படும்.

### விருச்சிகம்

சூரியன், சுக்கிரன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். எவரிடமும் மதிநுட்பத்துடன் பேசி ஆதாயம் பெறுவீர்கள். பயணத்தில் ஆர்வம் வளரும். புத்திரர்கள் உங்கள் சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி, ஒற்றுமைகூடும். சத்தான உணவும், சீரான ஓய்வும் ஆரோக்கியம் தரும். எதிர்ப்பாளர்களிடம் இருந்து விலகவும். மனைவி கருத்து ஒற்றுமை கொள்வார். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து, உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள், துரிதமாக பணி களை முடித்து, நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர். பெண்கள், வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம் பெறுவர்.

### தனுசு

கேது, சுக்கிரன், குரு நற்பலன் தருவர். மனம், செயலில் புத்துணர்வு ஏற்படும். உடன்பிறந்தவர்கள் அன்புடன் நடந்து கொள்வர். தாயின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள். வெளியூர் பயணம் பயனுள்ளதாக அமையும். புத்திரர்களின் திறமை வளர ஆலோசனை சொல்லி முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்வீர்கள். பூர்வீகச் சொத்தில் ஓரளவு பணவரவு கிடைக்கும். நோய் தொந்தரவு குறையும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி உற்சாக மனதுடன் குடும்ப பணிகளில் ஈடுபடுவார். பணியாளர்கள், பொறுப்புடன் பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள், விருந்து விழாவில் கலந்து கொள்வர்.

### மகரம்

சுக்கிரன், செவ்வாய், சனீஸ்வரர் அளப்பரிய நற்பலன் தருவர். பணிகளை பரிசீலனை செய்து தொடங்குவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். தம்பி, தங்கைகள் அன்புடன் நடந்து கொள்வர். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் படிப்புடன் ஆன்மிகத்தை அறிவதிலும் ஆர்வம் கொள்வர். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்க தாமதமாகலாம். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு அதிகரிக்கும். பெண்கள், உறவினர் குடும்ப சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள், படிப்புடன் கலைகளிலும் சிறந்து விளங்குவர்.

### கும்பம்

சுக்கிரன், குரு, புதனால் நன்மை கிடைக்கும். வாழ்வில் முன்னேற்றம் பெற வாய்ப்பு உருவாகும். உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். வாகனப் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர்கள் மகிழ்ச்சியுடன் தகுதி திறமையை வளர்த்துக் கொள்வர். புதிய சொத்து வாங்க யோகம் உண்டு. உடல்நிலை சீராக இருக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். வெளியூர் செல்ல வேண்டி வரலாம். பெண்கள், குடும்ப நலனுக்கான திட்டங்களை வகுப்பர். மாணவர்கள், நன்றாகப் படித்து பரிசு, பாராட்டு பெறுவர்.

### மீனம்

ராகு, புதன், சூரியன், சுக்கிரன் தாராள நற்பலன் தருவர். மனதில் மகிழ்ச்சியும் உற்சாகமும் கூடும். திட்டங்கள் முழு அளவில் வெற்றி பெறும். உறவினர்களுடன் சுமுக உறவு இருக்கும். வீடு, வாகனத்தில் கூடுதல் வசதி செய்ய சற்று அதிகமாகவே செலவழிப்பீர்கள். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். இஷ்ட தெய்வ அருள் கிடைக்கும். வந்த சுவடு தெரியாமல் துன்பங்கள் விலகும். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். கணவன், மனைவி உறவுநன்றாக இருக்கும். தொழில், வியாபாரம் செழித்து சமூகத்தில் உயர்வு கூடும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனார்கலி

# தென்கிழக்குத் திசையினிலே...



**வெடி கொளுத்தி ஆரவாரம்**

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர் பீடக் கூட்டத்தில், கட்சியின் தவிசாளர் பஸீர் சேகுதாவூத்தை தவிசாளர் பதவியிலிருந்து இடைநிறுத்துவதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டதையடுத்து, தென்கிழக்கின் சில முஸ்லிம்பிரதேசங்களில், கட்சி ஆதரவாளர்கள் வெடி கொளுத்தி ஆர்ப்பரித்தனர்.

**ஏமாற்றினார் தலைவர்**

இலங்கையின் முதலாவது ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை நிந்தவூரில் அமையவிருக்கின்றது. இந்த வைத்தியசாலையின் ஆரம்ப நிகழ்வு பிரதி சுகாதார அமைச்சர் பைசால் காசிம் தலைமையில் நடைபெற்றபோது முஸ்லிம் காங்கிரஸின் நிகழ்வை யொட்டிய பெரும்பொதுக் கூட்டமொன்றும் நடைபெற்றது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் இறுதியாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் உரையாற்றுவதற்காக அழைக்கப்படும் தறுவாயில், ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பாளர் இப்படிக் கூறினார் "வரவிருக்கும் புதிய அரசமைப்பு மாற்றத்தில் முஸ்லிம்களின் நிலை" - "வடக்கு - கிழக்கு இணைப்பு" - "முஸ்லிம்களுக்கான தீர்வு முயற்சி" - என்பவை பற்றி தலைவர் ஹக்கீம் தனது உரையில் தெளிவுபடுத்துவார் இப்படி அமைந்தது அவரது அறிவிப்பு.

நடந்தது என்ன? சுமார் ஒன்றரை மணி நேரம் (இரவு) அங்கு உரையாற்றிய தலைவர் ஹக்கீம், மேற்படி விடயங்கள் தொடர்பில் துளியும் தொட்டுப் பேசவே இல்லை! இது தான் ஹக்கீம் கூறும் சாணக்கியமோவென கூட்டத்தில் திரண்டிருந்த பலரும் அங்கலாய்த்துக் கொண்டனர்.

**ரணில் உறுதியளித்தால்...**

மௌலவி ஆசிரியர் நியமனத்துக்காகக் காத்திருப்போர் அண்மையில் நிந்தவூரில் வைத்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துத் தமது நியமனத்தைத் துரிதப்படுத்த உதவுமாறு கோரினர். இந்த நியமனங்களை வழங்குவதாக தேசிய மீலாத் விழாவின் போது பிரதமர் ரணில் உறுதியளித்துள்ளார். பிரதமர் அளிக்கும் வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவார்.

எனினும் நான் இந்த விடயத்தைத் துரிதப்படுத்த சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பேன்'' என ஹக்கீம் இந்தச் சந்திப்பில் உறுதியளித்தார்.

இந்தத் தகவலறிந்தோ என்னவோ அமைச்சர் ரிசாத்தும் சும்மா இருந்துவிடவில்லை.

தல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தை இஸ்லாமிய ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் சென்று சந்தித்து மௌலவி ஆசிரியர் நியமனத்தைத் துரிதமாக வழங்க வலியுறுத்தியுள்ளார். எப்படியோ காரியம் நிறைவேறினால் மகிழ்ச்சி தான்.

**தொல்பொருள்!**

அம்பாறை மாவட்டத்தில் 340 தொல்பொருள் அமைவிடங்கள் காணிகள் இனம்காணப்பட்டுள்ளதுடன் பொலிஸ், சிவில் படைகள் மூலம் இவற்றுக்கு பாதுகாப்பளிக்கவும் ஏற்பாடுகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய பாது காப்பு நடவடிக்கை சிறுபான்மையினரை அச்சமூட்டும் செயற்பாடெனவும், நாட்டில் நல்லிணக்கம் முழுமையாக ஏற்படும் வரை இத்தகைய நடவடிக்கை ஒத்திவைக்கப்பட வேண்டுமெனவும் முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரி. ஹஸனலி அறிக்கை மூலம் வலியுறுத்தியுள்ளார் அரச மேலிட உத்தரவல்லவா இது?

**ஊடக நம்பகத்தன்மை**

அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் சார்ந்த பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், கூலிக்கு அமர்த்தப்பட்ட சிலர் முஸ்லிம் காங்கிரஸுக்கும் தனக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் பத்தி எழுத்துக்களை எழுதிவருவதாகக் கடிந்து கொண்டார். இவர்கள் ஊடக நம்பகத்தன்மை பற்றி கருத்தில் கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

'[illegible]' என்னநடக்கும் என்பதை இத்தகையவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென அவர் எச்சரிக்கவும் தவறவில்லை.

> புதிய அரசமைப்பில் அம்பாறை, கரையோர மாவட்டமாக உருவாக்கப்படாவிட்டால், பிரதி அமைச்சர் பதவியைத் துறந்து விட்டு மக்கள் முன்வருவேன் என பிரதி விளையாட்டுத்துறை அமைச்சர் எச். எம்.எம்.ஹரீஸ் வெகுண்டெழுந்து கூறியுள்ளார். கரையோர மாவட்டம் தொடர்பில் தமிழர்களுக்குள்ள சந்தேகங்களையும், வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பில் முஸ்லிம்களுக்குள்ள சந்தேகங்களையும் பற்றி இவர்களெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் வீரவசனம் பேசித் திரிவதில் அர்த்தமில்லை.

**கிழக்கில் பரபரப்பு**

இறுதியாக நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடக்கூட்டத்தில், தவிசாளர் பதவியிலிருந்து பஸீர் சேகுதாவூதை இடைநிறுத்தும் தீர்மானம் எடுக்கப்பட்ட போது செயலாளர் நாயகம் ஹஸனலியும் கை உயர்த்தி ஆதரவு தெரிவித்த விடயம் கிழக்கின் பல முஸ்லிம் பிரதேசங்களிலும் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. அந்த' ஒற்றுமைக்கு என்ன நடந்தது எனவும் அங்கலாய்த்துக் கொள்கின்றனர்.

**பதவி துறப்பேன்!**

புதிய அரசமைப்பில் அம்பாறை, கரையோர மாவட்டமாக உருவாக்கப்படாவிட்டால், பிரதி அமைச்சர் பதவியைத் துறந்து விட்டு மக்கள் முன்வருவேன் என பிரதி விளையாட்டுத்துறை அமைச்சர் எச். எம்.எம்.ஹரீஸ் வெகுண்டெழுந்து கூறியுள்ளார்.

கரையோர மாவட்டம் தொடர்பில் தமிழர்களுக்குள்ள சந்தேகங்களையும், வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பில் முஸ்லிம்களுக்குள்ள சந்தேகங்களையும் பற்றி இவர்களெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் வீரவசனம் பேசித் திரிவதில் அர்த்தமில்லை.

**களப்பயணம்**

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் 20 பேர் வடபகுதிக்கான களப்பயணம் ஒன்றை இந்த மாத இறுதி வாரத்தில் மேற்கொள்ளவுள்ளனர். சம்மேளனத் தலைவர் கலாபூசணம் மீரா எஸ். இஸடீன் தலைமையில் அவர்கள் இந்தக் களப்பயணத்தை மேற்கெள்ளவுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மைத்திரி - ரணில்...



(38 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் 50 பேர் மைத்திரி வசம் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் மகிந்தவுக்கு ஆதரவளிக்கப்போவ தாகவும் மிரட்டிவருகிறார்கள். எஞ்சி இருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களையும் பிற ஆதரவாளர்களை யும் வைத்துக் கொண்டு, எதிர் வரிசையிலிருக்கும் மகிந்த, விரைவில் அரசைக் கவிழ்க்கப்போவதாக மிரட்டிவருகிறார். ஆனாலும், ரணிலும் - மைத்திரி யும் அவரது கருத்துக்களை அலட்சியம் செய்து வருகின்றனர். நாடாளு மன்றத்தை முன்கூட்டியே கலைப்பதை அரசியல் சட்டம் அனுமதிக்க வில்லை. மேலும், மகிந்த தலைமையிலான அரசு மீண்டும் எழுவது என்பது அரசியல்ரீதியாகச் சாத்தியமில்லை என்றும் - அவர்கள் சுட்டிக்காட்டுகிறார் கள். ஆனாலும், இந்த அரசுக்குத் தோல்விகள் ஏற்படும்போதெல்லாம் மகிந்த பலம் பெற்றுவருகிறார்.

புதிய அரசியல் சட்டம் தொடர்பான பொது விவாதங்கள் மிகக் குறை வாக நடக்கின்றன. பெரும்பான்மையாக உள்ள சிங்களச் சமூகத்தைச் சீர்திருத்தத்தில் ஈடுபடுத்தாதவரை, பிற அரசியல் அழுத்தங்களைச் சமா ளித்துக்கொண்டு, புதிய அரசியல் சட்ட உருவாக்கப் பணிகளை முன் னெடுத்துச் செல்வது அரசுக்குக் கடினமானதாகவே இருக்கும். இது சிக்கலானது.

காலமும் கடந்துகொண்டிருக்கிறது. மைத்திரியும்- ரணிலும் இணைந்து செயற்பட்டுச் மேற்படிச் சீர்திருத்த நடவடிக்கையைச் செய்வதன் மூலமே இலங்கை மரபில் புதிய அத்தியாயத்தை உருவாக்கலாம். இல்லை யென்றால், ஒரு மிகப் பெரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறிய தலைவர்கள் என்றே இருவரும் பார்க்கப்படுவார்கள்!



விளையும்
வயலைத் தா...
பரந்த
கடலைத் தா...
படர்ந்த
காட்டைத் தா...
பரம்பரை
வீட்டைத் தா...

படித்த
பள்ளியை விடு...
உழைத்த
இடத்தை விடு...
எங்கள்
மண்ணை விடு...
எங்களை
வாழ விடு...

நிராயுத
பாணியாகச்
சொல்கிறோம்
போ...
அகிம்சை முரசு
முழங்குகிறோம்
போ...
பட்டினி கிடந்து
உரைக்கிறோம்
போ...
நாம் பலரும் கூடிட
முன்னர் போ...

காலம் கடந்தும்
ஞாலம் மலர்ந்தும்
சிங்களவன் - நீ
திருந்தாத வரையில்
உரிமைப் போரும்
உண்மையும்
எப்போதும்
ஓயாது காண்...

-நாவண்ணா

# சனத்தொகையில் எப்போதுமே முதலிடத்தில்

# சீனா!



உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடாகத் தொடர்ந்தும் முதலிடத்தில் இருக்கின்றது சீனா. இந்நிலையில் அதனை மேலும் உலகுக்கு வெளிப்படுத்தும் வண்ணம் புதிய சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது சீனாவில். அது என்னவெனில் உலகின் மிகப் பெரிய குடும்பம் ஒன்று, 500பேரைக் கொண்ட அங்கத் தவர்களுடன் ஒளிப்படம் ஒன்றை எடுத்து, சீனா வில் வெளியிட்டிருக்கிறது. ரென் வம்சத்தைச் சேர்ந்த 500 உறவினர்கள் ஒன்றுகூடி, ஒளிப் படம் ஒன்றை எடுத்திருக்கின்றனர்! ரென் வம் சத்தைச் சேர்ந்த இவர்கள், பல்வேறு இடங் களுக்கு வாழ்வாதாரம் தேடிச் சென்றுவிட்டனர். பரந்து வாழும் இவர்களைத் தேடி ஒன்றி ணைக்கும் வேலை இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வந்திருக்கிறது.



பெய்ஜிங், ஷாங்காய், ஸின்ஜியாங், தாய்வான் போன்ற இடங்களில் வாழ்ந்த இவர்கள் எல் லாம் மேற்படி ஒளிப்படத்துக்காகத் தங்களு டைய பூர்வீகமான சீனாவின் ஜெய்ஜியாங் மாகா ணத்தில் உள்ள கிராமத்துக்கு வந்து அங்கேயே இந்த ஒளிப்படத்தை எடுத்துள்ளனர். ஒரு குன்றின் மீது எல்லோரும் வரிசையாக நிற்க, பறக்கும் ரோபோக் கமரா மூலம் ஒளிப்படம் எடுத்ததால், 500 பேரையும் ஒரே ஒளிப்படத்தில் பார்க்க முடிகின்றது.

'சீனர்கள் எவ்வளவுதான் முன்னேறினாலும் தங்கள் வேர்களை மறக்க மாட்டார்கள். அப்படித் தான் எங்கள் வம்சத்தைச் சேர்ந்தவர்களைத் தேட ஆரம்பித்தோம். இரண்டு ஆண்டு களில் 500 பேரைக் கண்டுபிடித்துவிட்டோம். எங்கெங்கோ வசிக்கும் உறவினர்கள் எல்லாம் இணைந்தோம். எங்கள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பலரை முதல்முறை யாகச் சந்தித் திருக்கிறோம்.

ஒளிப்படத்துக்கு அனைவரையும் ஒழுங்கமைக்க அரைமணி நேரத்துக்கும் அதிகமானது. உலகின் மிகப் பெரிய குடும்ப ஒளிப்படம் எங்களுடையதுதான் -என்கிறார் சமூக வலைத்தளமொன்றில் இதனைப் பதிவேற்றியிருக்கும் அவர்களில் ஒருவரான யென்.

# காணி - நிலம் வேண்டும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் என்ற போர்வையில் தமிழர்களின் காணிகள் சுவீகரிப்பு

## யோகேஸ்வரன் எம்.பி குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.12

'தொல்பொருள் என்ற பெயரைப் பயன்படுத்தி, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழர்களின் காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கையை, தற்போது அரசு ஆரம்பித்துள்ளது. தொல்பொருள்துறை கல்வி அமைச்சுக்குள் இணைக்கப்பட்டுள்ளதன் காரணமாக, நாங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்'-இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, வாழைச்சேனை இந்துக்கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் 20 மதுபானசாலைகள் இருக்க வேண்டும். ஆனால் இங்கு மூன்று மடங்கு மதுபானசாலைகள் காணப்படுகின்றன. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர், 11 மதுபானசாலைகள் அதிகரித்துள்ளன. இத னால், எமது மக்களின் பணம் அங்கு செலவிடப்படுகிறது. மாணவர்கள் மத்தியில் மதுபாவனை அதிகரித்துள்ளது. இதன் காரண்மாக, நாங்கள் வறுமையின் உச்ச கட்டத்தில் காணப்படுகின்றோம்.

வாழைச்சேனைப் பகுதியில் வெளியிடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு தற்போது கேரளா கஞ்சா விற்பனை நடைபெறுகிறது. இந்த விடயத்தை ஒரு மாணவனுக்கூடாக நான் அறிந்துகொண்டேன். மாணவர்கள், இறப்பு வீடுகளில் மது அருந்துகிறார்கள். இதனை நான் நேரடியாக பார்க்கக்கூடியதாக விருந்தது. இந்த விடயத்தில் பெற்றோர் அவதானமாக இருக்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 759 தொல்பொருள் பெறுமதிமிக்க இடங்கள் இருப்பதாகவும், தற்போது 23 இடங்கள் மாத்திரம் பாதுகாக்கப்படு வதாகவும், ஏனைய இடங்களைப் பாதுகாக்க நடவடிக்கையெடுப்பதாகவும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கூறியுள்ளார்.

தொல்பொருள் என்ற ரீதியில், எமது பகுதிகள் சுரண்டப்படவுள்ளன. இந்த விடயத்தில், நாங்கள் அவதானமாக இருக்க வேண்டும். கல்வி தொடர்பான தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பதைத் தவறிவிட்டு, மக்களின் வாழ் விடங்களை, தொல்பொருள் பிரதேசம் என்று அடையாளத்துவதை நாங்கள் எதிர்க்கின்றோம்.

கிழக்குப் பல்கலைக்கழகமானது, மாகாணத்திலுள்ள தமிழ்,முஸ்லிம் இனங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஆனால், அந்தப் பல்கலைக்கழ கத்தில் கலைபீடம் தவிர்ந்த ஏனைய பீடங்களில் 80 சதவீதத்துக்கு மேல் சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். எமது மாணவர்களின் நலனுக்காக ஆரம் பிக்கப்பட்ட பல்கலைக்கழகம் தென்பகுதி மாண வர்களின் கல்விக்கூடமாக மாறியுள்ளது. எமது மாணவ்ர்கள், பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்கும் போது கிழக்குப் பல்கலைக்கழகத்தை முன்னிலைப்படுத்தாது, ஏனைய பல்கலைக் கழகங்களை முன்னி லைப்படுத்துவதால் பல்லைக்கழக அனுமதி வேறு பிரதேங்களில் கிடைக்கிறது. கலைத்துறை தமிழ்மொழியில் உள்ளதன் காரணமாகவே, தமிழ் பேசும் மாணவர்களின் ஆதிக்கம் அதிகம் உள்ளது. கலைத்துறை ஆங்கிலத்துக்கு மாற்றப்படுமாயின், சகல பீடங்களிலும், சிங்கள மாணவர்களின் ஆதிக்கம் அதிகரித்துவிடும். மாணவர்கள், கலைத்துறையைத் தெரிவு செய்வதைத் தவிர்த்து, கணித விஞ்ஞானத் துறையில் ஆர்வம் காட்ட வேண்டும். நீங்கள் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டால், உங்களது கல்வியை முடிக்கும் வரை உதவிகளை வழங்கத் தாயாராக உள்ளோம்.- என்றார். (ஐ)

# தீவிர நோய்களால் அவதியுறும் சிறுவர்கள் நலனுக்காக நிதிசேகரிக்கும் பாதயாத்திரை

கொழும்பு,பெப்.12

இதய நோய் மற்றும் தீவிர சிகிச்சை பெறும் சிறுவர்களின் எதிர்கால உடல் நலனுக்காக நிதி சேகரிக்கும் வகையில், பாதயாத்திரை ஒன்று நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை கொழும்பு உட்பட பல பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சிறுவர் இதயநோய் வைத்திய நிபுணர் துமிந்த சமரசிங்க தெரிவித்ததாவது:

எமது நாட்டில் இதய நோய் மற்றும் வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களில் 1000-1500 இக்கும் மேற்பட்டோர் வருடந்தோறும் சிகிச்சைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

இதய நோய் தொடர்பான எல்லா விதமான சிகிச்சைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில், சத்திர சிகிச்சை நிலையமொன்றை அமைப்பதற்கான நிதி எங்களிடம் போதுமானதாக இல்லை. ஆதலால், 'சிறிய இதயத்துக்கு சுகம் தாருங்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ், நிதி சேகரிக்கும் பாதயாத்திரையை கொழும்பு உட்பட பல பிரதேசங்களில் ஏற்பாடு செய்துள்ளோம்.

இதன் மூலம் சேகரிக்கப்படும் நிதியைக் கொண்டு, தேசிய குழந்தைகள் மருத்துவமனைக்கான 10 மாடிகளைக்கொண்ட நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

இந்தப் பாதயாத்திரை, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை நடத்தப்படவுள்ளது.

இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்க இருப்பதோடு, அவர்களூடாக நிதியைச் சேகரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.- என்றார். (ஐ)




இலட்சியக் கனவைக் கொண்டிருந்தவரின் வரலாறு

## 'Max Pora' ஆக மாறிய நுவனின் வெற்றிப்பயணம்

ஃபெயார் அண்ட் லவ்லி மெக்ஸ் ஃபெயார்னஸ் (Fair and Lovely Max Fairness) ஆனது இலங்கையில் இளையோர் மத்தியில் அவர்களின் இதயநாதமாக விளங்கும் ஒரு உற்பத்தியாகும். ஆண்கள் மத்தியில் வெண்மைத் தோற்றத்தை மேம்படுத்துவதில் அது தன்னை உறுதியாக நிலைநாட்டியுள்ளது. இருந்தபோதும், அத்துடன் மட்டும் அது நின்றுவிடவில்லை. இளைஞர்களை 'Max Pora' ஆக மாற்ற உதவும் வழிமுறைகளை ஒரு வர்த்தகநாமம் என்ற வகையில், மெக்ஸ் ஃபெயார்னஸ் ஆனது தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ளது. அந்த வகையில், வெற்றியாளர்களுக்கு அதிநவீன Tivoli SUV வாகனங்களை வெகுமதியளிக்கும் வகையில் 'இரு உலகிற்கு இரு SUV வாகனங்கள்' என்ற பணம் கொடுத்தாலும் வாங்க முடியாத Tivoli Max SUV வாகனங்களை வழங்கும் ஊக்குவிப்புப் பிரச்சாரத்தை ஃபெயார் அண்ட் லவ்லி மெக்ஸ் ஃபெயார்னஸ் முன்னெடுத்துள்ளது. மத்திய கண்டியில் உள்ள நவந்தகல என்ற இடத்தைச் சேர்ந்த நுவன் விக்கரமசிங்கவும் வெற்றியாளர்களுள் ஒருவர். அவர் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அவரை நாம் சந்தித்த போது அவரின் மட்டற்ற மகிழ்ச்சியை இன்னும் உணரக்கூடியதாக உள்ளது

**நீங்கள் Tivoli மோட்டார் காரைப் பெற்றுக்கொண்ட பின்னர் உங்களுடைய வாழ்க்கை எந்த அளவிற்கு மாற்றம் கண்டுள்ளது?**

நான் உண்மையில். Tivoli இனை வெல்வேன் என்ற நம்பிக்கையை அவ்வளவாகக் கொண்டிருக்கவில்லை. அது நடக்குமென என நான் ஒருபோதும் நினைக்கவுமில்லை. இந்த வெற்றியையிட்டு நானும் எனது குடும்பத்தினரும் மட்டற்ற அளவில் மகிழ்ச்சியடைந்துள்ளோம்.

**மெக்ஸ் ஃபெயார்னஸ் ஊக்குவிப்பு தொடர்பில் நீங்கள் எவ்வாறு அறியப்பெற்றீர்கள்?**

முதலில் தொலைக்காட்சி மூலமாக இதனை நான் கண்ணுற்றேன். அதன் பின்னர் முகநூலிலும் கண்டுகொண்டேன். கார் ஒன்று வழங்கப்படவுள்ளதை அறிந்தபோது இதில் சற்று ஆர்வம் ஏற்பட்டது. ஒரு ஆண்மகனுக்குத் தேவையான பொருத்தமான வாகனமாக Tivoli கார் உள்ளது. ஆகவே ஊக்குவிப்பின் ஒரு பகுதியாக, 6997 என்ற இலக்கத்திற்கு பல செய்திகளை அனுப்பி வைத்தேன். இதனை முயற்சிக்குமாறு எனது நண்பர்களுக்கும் கூறினேன். Tivoli ஊக்குவிப்புக்காக நான் செய்திகளை அனுப்பிய காலகட்டத்தில் அது எனது பிரதேசத்தில் பரபரப்பான ஒரு செய்தியாக மாறியது. ஏனையவர்களைப் போலவே, வெற்றி தொடர்பில் எனக்குள்ளும் சிறிது ஆர்வ உந்துசக்தி ஏற்பட்டது.

**தங்களது குடும்பத்தை பற்றி எமக்கு சற்று கூற முடியுமா?**

எனது குடும்பத்தில் அம்மா, அப்பா, இளைய சகோதரி மற்றும் இளைய சகோதரன் ஆகியோர் உள்ளனர். நாங்கள் மகிழ்ச்சி பொங்கும் ஒரு ஒற்றுமையான குடும்பம். Tivoli இனை வென்ற பின்னர் அந்த மகிழ்ச்சி இன்னும் அதிகரித்துள்ளது. கிராம சேவகராகப் பணியாற்றிய எனது தந்தை, தற்போது ஓய்வு பெற்றுள்ளார். எனது அம்மா ஒரு இல்லத்தரசி.

**நீங்கள் Tivoli இனை வென்றுள்ளதாக மெக்ஸ் ஃபெயார்னஸ் உங்களுக்கு அறியத்தந்ததா?**

நான் பரிசொன்றை வென்றுள்ளதாக மெக்ஸ் ஃபெயார்னஸ் என்னிடம் கூறிய போதிலும், அது என்ன பரிசு என்பதையோ அல்லது நான் Tivoli இனை வென்றுள்ளதாகவோ தெரிவிக்கவில்லை. அவர்கள் எனது விபரங்களைக் கேட்டறிந்தனர். ஆகவே ஆறுதல் பரிசொன்றை வென்றுள்ளதாகவே நான் எண்ணினேன்.

**நீங்கள் முதன்முதலாக Tivoli இனை எப்போது காணப்பெற்றீர்கள்?**

நான் முதலில் கூறியவாறு, கார் என்பதை அவர்கள் என்னிடம் கூறவில்லை. பரிசு ஒன்று உள்ளதாகமட்டுமே குறிப்பிட்டனர். எனினும், ஒரு நாள் அவர்கள் எனது வீட்டிற்கு நேரடியாகவே வருகை தந்து, நவம்பர் 22 ஆம் திகதியன்று எங்கும் செல்லாது வீட்டிலேயே இருக்குமாறு கூறிச் சென்றனர். அதனைத் தவிர நான் எவ்விதமான விசேட உணர்வையும் கொண்டிருக்கவில்லை. வேறு யாரோ ஒருவர் காரை வென்றுள்ளதாக நான் தொடர்ந்தும் எண்ணினேன். அவர்கள் என்னை நேர்காணல் செய்த சமயத்தில், அவர்கள் காரைக் கொண்டு வந்து எனக்குப் பின்னால் தரிப்பு செய்துள்ளதை நான் உணர்ந்திருக்கவில்லை. அதைக் கண்ட போது நானும், எனது குடும்பத்தினரும் வியப்பில் ஆழ்ந்தோம். என் வாழ்க்கையில் ஒரு நாள் இவ்வாறான கார் ஒன்றைப் பெற்றுக்கொள்வேன் என்று நான் ஒரு போதும் எண்ணியதில்லை.

**நுவன் வார்த்தைகளால் வெளிப்படுத்தியதை விடவும் அவர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளதை அவரது உடல் அசைவுகள் மற்றும் உணர்வு வெளிப்பாடுகள் மூலமாக எம்மால் அனுமானித்துக்கொள்ள முடிந்தது. உங்களது பாடசாலை நாட்கள் மற்றும் தற்போது ஆற்றுகின்ற தொழில் தொடர்பில் சற்று கூறுங்கள்?**

நான் ஆரம்பத்தில் எனது கிராமத்திலுள்ள பாடசாலைக்குச் சென்றேன். அதன் பின்னர் மத்திய கல்லூரிக்குச் சென்ற நான், அங்கு உயர் தரம் வரை கல்வி கற்றேன். கம்பளை தொழில்நுட்பக் கல்லூரியில் பட வரைஞர் கற்கைநெறியைப் பூர்த்தி செய்தேன். நான் தற்போது இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றி வருகின்றேன். மேலும், இரத்மலானை தொழில்நுட்பக் கல்லூரியில் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் கற்கைநெறியில் இறுதியாண்டு மாணவனாகவும் கல்வி கற்றுவருகின்றேன். வாழ்க்கையில் இன்னும் அதிகமான தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்று, எனது தொழிலில் மேலும் முன்னேற வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.




**Max Pora ஆண்மகனின் கம்பீரத்திற்கு இணையான கார் ஒன்றை நீங்கள் தற்போது சொந்தமாகக் கொண்டுள்ளீர்கள். நீங்கள் அதன் மூலமாக முதலில் எங்கு பிரயாணம் செய்ய விரும்புகின்றீர்கள்?**

அனேகமாக, முக்கியமான குடும்ப நிகழ்வொன்றின் போது முதலில் கண்டி தலதா மாளிகைக்கு செல்லலாம் என்று எண்ணியுள்ளேன். எனது குடும்பத்தினருடன் இணைந்து அத்தகைய பிரயாணம் ஒன்றை மேற்கொள்ளும் எனது உணர்வை வர்ணிக்க முடியாது. அந்த வாய்ப்பை மெக்ஸ் ஃபெயார்னஸ் எனக்கு வழங்கியள்ளது.

**மெக்ஸ் ஃபெயார்னஸ் வர்த்தகநாமம் தொடர்பில் உங்களது கருத்து என்ன?**

அந்த வர்த்தகநாமத்தின் மீது எனக்கு மிகவும் உறுதியான நம்பிக்கை உள்ளதுடன், மிக நீண்ட காலமாக அதனை நான் உபயோகித்து வருகின்றேன். ஒரு ஆண்மகனின் சருமத்திற்கு அது மிகவும் நேர்த்தியானது. நான் உபயோகிக்க ஆரம்பித்த பின்னர், எனது நண்பர்களில் பலரும் அதனை உபயோகிக்க ஆரம்பித்துள்ளனர்.

**Tivoli உடன் உங்களது எதிர்கால வாழ்க்கை எவ்வாறு அமையப்போகின்றது?**

இந்நாட்களில் Tivoli மட்டுமே எனது வாழ்க்கை. இந்த காரை நான் தீவிரமாக நேசிக்கின்றேன். என்னால் முடிந்தவரை இதனை என்னுடன் வைத்துப் பேணிப் பாதுகாப்பேன்.

**நுவன் முன்னெடுக்க எண்ணியுள்ள முயற்சிகள் அனைத்திலும் வெற்றிபெறுவதற்கு அவரை வாழ்த்தி , அவரிடமிருந்து நாம் விடை பெற்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் செயலாளரும், வவுனியாவின் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீகரன் கேசவன் கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் மாதாந்த பௌர்ணமி கலை விழாவில் கௌரவிக்கப்பட்டார். (ஐ)







வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம் பெற்றது. கல்லூரி அதிபர் கி.நந்தபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்க நாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (10)





யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இந்த விழா மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் பாடசாலை அதிபர் ச.செல்வானந்தன் தலைமையில் நடைபெற்றது. விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களையும் வழங்கினார்.




எம்.ஜி.ஆரின் 100 ஆவது பிறந்த தின நிகழ்வுகள் வட மாகாண எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழகத் தலைவர் வ.இ.செல்வக்குமார் தலைமையில் பண்டத்தரிப்பு அமெரிக்கன் இலங்கை மிசன் ஆலயத் திருச்சபை வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் மன்றத்தால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களும், வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவிக்கு துவிச்சக்கர வண்டியும், 100 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ஐ)



புதிய சோனகதெரு முதியோர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு, புதியகுடியிருப்பு இளையநிலா சனசமூக நிலையத்தில் வைத்து யாழ். [illegible] பணியகத்தின் தலைவர் சுபியான் [illegible] வழங்கினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



IMSESO நிறுவனத்தினால் வறிய மானவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் மடுக்கோட்டத்திற்குட்பட்ட மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த 45 மாணவர்களுக்கு நிறுவனத்தின் தலைவர் கொண்சன்ரைன் தலைமையில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதியுதவியை கம்பகா மாவட்டத்தைச் சேர்ந்த பொறியியலாளர் கம்புர வலவும், அவருடைய குழுவினரும் வழங்கினர். (ஐ)



மன்னார் அளவக்கை புனித கார்மேல் மாதா ஆலயத்தின் கட்டுமானப் பணிகளுக்காக வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் தனது 2016ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து ரூ. 50 ஆயிரம் நிதியை ஆலயசபையினரிடம் வழங்கினார். (ஐ)

www.hearingsolutionsl.com

தெளிவாகக் காண உதவும் VISION CARE OPTICAL SERVICES இடமிருந்து



இப்போது
தெளிவாகக் கேட்க
அனைத்து செவிப்புலன் கருவிகளும் சேவைகளும்

25 வருடங்களாக கண் சிகிச்சை, சேவைகள் மற்றும் உற்பத்திகளை உங்களுக்கு வழங்கிய விஷன் கெயாரிடமிருந்து இப்போது உலகின் சிறந்த செவிப்புலன் தொடர்பான உபகரணங்கள் மற்றும் சேவைகள்.
கண் சிகிச்சைகள் மற்றும் சேவைகளை வழங்கிய அந்த நம்பிக்கையைக் காத்துக்கொண்டு, இப்போது செவிப்புலன் பரிசோதனையை செய்வதற்கும் உலகின் முதற்தர செவிப்புலன் தொடர்பான உற்பத்திகளை எமது நாடு முழுவதும் காணப்படுகின்ற அனைத்து கிளைகளிலும் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ளலாம் என்பதை இதன்மூலம் அறிவிக்கின்றோம்.

openeye

VISION CARE HEARING SOLUTIONS

Starkey
oticon PEOPLE FIRST

அழையுங்கள் : 0768 554 976

## யாழ்...

சூழலில் ஏற்பட்ட பாதிப்புக்களால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதா? என்று பொது மக்கள் 'உதயன்' பத்திரிகையிடம் அச்சம் வெளியிட்டனர். குளத்தில் பெருமளவு கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டுள்ளன. இது தொடர்பில் யாழ்ப் பாண மாநகர சபையினர் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பில் எமது செய்தியாளர்களும் அங்கு சென்று பார்வையிட்டனர். குளத்தில் போத்தல்கள் உள்ளிட்ட கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டுள்ளமையை அவர்களால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

"யாழ்ப்பாண நகரில் சில நீர் நிலைகள்தான் உள்ளன. அவற்றைப் பேணுவது மற்றும் சுத்திகரிப்பது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபையினர் அக்கறை செலுத்துவதில்லை. ஆரிய குளத்தின் நீர் கடந்த சில நாட்களாக சிவப்பு நிறமாகக் காட்சியளிக்கின்றது. இவ்வாறு நிறம் மாறியமைக்கான காரணம் என்ன? அது பற்றி யாழ்ப்பாண மாநகர சபை அதிகாரிகளோ அல்லது யாழ். மாநகர சபையின் சுகாதாரத் துறையினரோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த மாற்றத்தால் சுற்றுச் சூழலில் ஏதாவது தீங்கு ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்ற அச்ச நிலை உள்ளது. கழிவுப் பொருள்கள் குளத்தில் போடப்படுவதனால்தான் இவ்வாறான சிவப்பு நிற மாற்றம் குளத்து நீரில் ஏற்பட்டுள்ளதோ என்பது தொடர்பில் ஆராயப்பட வேண்டும். அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பொது மக்கள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

**இனிமேல்தான்
நடவடிக்கையாம்**

"ஆரியகுளத்தின் நிறமாற்றம் தொடர்பில் இதுவரை எமக்கு எந்த முறைப்பாடும் கிடைக்கப்பெறவில்லை. எனினும் இந்த விடயத்தைக் கவனத்திலெடுத்து எமது பிரதேச சுகாதார பரிசோதகர்களையும் இணைத்து இது தொடர்பில் ஆராயப்படும். பெரும்பாலும் ஏதாவது கழிவுப் பொருள்களை இதற்குள் சிலர் வீசுவதால் இந்த நிலை ஏற்பட்டிருக் கலாம் எனக் கருதுகின்றேன். ஏனெனில் தற்பொழுது பொது இடங்களில் குப்பைகளை கொட்டுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்களை எடுத்து வருகின்றோம்.

இதனால் உணவு விடுதி நடத்துபவர்கள் தங்கள் விடுதியின் உணவுக் கழிவுகளை சில வேளைகளில் கொட்டுகின்றார்களோ தெரியவில்லை. அவ்வாறு ஏதாவது நடந்தால் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் குளத்து நீர் மாதிரி பெறப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாவரவியல் துறையினரிடம் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்க நடவடிக்கைள் எடுக்கப்படும்" என்று யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

**முறைப்பாடுகள் எவையும்
கிடைக்கவில்லையாம்**

'ஆரியகுளத்துநீர்நிறமாற்றம்தொடர்பில்முறைப்பாடுகள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. இந்த நிறமாற்றம் தொடர் பில் ஆராயப்படும். சில வேளைகளில் சிவப்பு ஐதா தாவர[illegible] இருக்கலாம். பொதுவாக இந்தத் தா[illegible] சிறிய சிறிய நுண்கலனாக இருக்கும். ஆ[illegible] இந்த நீர் மாதிரி யாழ்ப்பாணப் பல்க[illegible] கழக தாவரவியல் துறையினரிடம் [illegible] பாய்வுக்கு அனுப்பி வைக்கப்படும். [illegible] களின் முடிவுகளுக்கு அமைய மே[illegible] நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று ய[illegible] பாண மாநகர சபையின் ஆணைய[illegible] பொ. வாகீசன் தெரிவித்தார். (வ-[illegible]

## அரிசி...

ஈடுபடுபவர்களைப் பற்றிய தகவல்களை 1977 எனும் அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறியத்தருமாறு பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதாரன அறிவித்தார்.

இந்த இலக்கத்தினூடாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு தொடர்பு கொண்டு அறிவித்தால், சம்பந்தப்பட்ட வியாபாரிகளை சட்டத்தின் முன் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வ-5)

softlogic
Softlogic Retail (Pvt) Ltd
softlogic MAX maximum experience

பதவி வெற்றிடங்கள் - யாழ் மாவட்டம்

- காட்சியறை முகாமையாளர் (Show Room Manager)
- வாடகைக் கொள்வனவு முகாமையாளர் (Hire Purchase Manager)
- விற்பனை முகவர் ( Sales Agent )
- விற்பனை நிறைவேற்று அதிகாரி (Sales Executive)
- காசாளர் (Cashier)

தகைமைகள்:
- க.பொ.த. சாதாரணதரம் / உயர்தரத்தில் சித்தி
- விற்பனைத்துறையில் குறைந்தது 1 வருட அனுபவம்.
- இலத்திரனியல் விற்பனைத்துறையில் அனுபவம் விசேட திறமையாக கருதப்படும்.
- வாடகைக் கொள்வனவுத்துறையில் அனுபவம் விசேட திறமையாக கருதப்படும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் உங்கள் CV ஐ
careers@softlogic.lk எனும் முகவரிக்கு அனுப்பவும்

நேர்முகத் தேர்வு:
தினம் : 15.02.2017
நேரம் : மு.ப. 9.30 முதல்

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் :
Yarl Town Inn
(இலங்கை வங்கிக்கு முன்பாக)
ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

JOIN US.



The District Manager
Softlogic Retail (Pvt) Ltd
Jaffna District
Mobile : 0777 390 988

BlackBerry Russell Hobbs Kelvinator

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 614
சீட்டிழுப்பு திகதி 11.02.2017
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
01 44 50 70 E
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.49,849, 099/=

## பணியாளர் தேவை

* புத்தகம் கட்டுநர்
* கணனி
* உதவியாளர், பழகவிரும்புவோர்,
* பகுதிநேர வேலையாட்கள்

கவர்ச்சிகரமான திறமைக்கு ஏற்ப சம்பளம்
நேரில் வரவும்
(13,14,15 - 02.2017)
T.P :0763016203

## கண்ணீர்க் காணிக்கை

### அல்பிறட் யூலியன் பற்றிக் (யூஜின்)



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் எனது அன்புக்குரிய தர்சிகா விற்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
மனோஜ் குடும்பத்தினர்

### வீடு வாடகைக்கு தேவை

அரசாங்க தொழில் புரியும் இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு தனிவீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு :- 077 504 8095

### நாய்கள் விற்பனைக்குண்டு

1 1/2 வயது நிரம்பிய கிறேடன் இன நாய்கள் (ஆண்+பெண்) விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 077 525 5438

### சொகுசு பஸ் விற்பனைக்கு

Toyota Coaster (டொயோட்டா கோஸ்ரர்) சொகுசு பஸ் (27 இருக்கைகள்) உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு 077 525 5438

### பணிப் பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு. வீட்டில் தங்கியிருந்து. பணிபுரிவதற்கு பணிப் பெண் தேவை.
தொடர்பு :- 077 262 6944,076 636 7091

### சாரதி தேவை

மானிப்பாய் பகுதியை அண்மித்த இடத்தில் வசிக்கக்கூடிய அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்த அனுபவம் மிக்க வாகனசாரதி தேவை.(சொகுசு வாகனம்)
தொடர்பு:- 077 525 5438

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை வீதி, சுண்டுக் குளியில் மாநகர சபை எல்லைக் குட்பட்ட ஒன்றே முக்கால் (1 3/4) பரப்புக் காணியுடன் கூடிய நவீன முறையில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற வீட்டின் கட்டடம் மலிவு விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 077 659 0322, 077 324 6663, 0061 420 344 582

## 116 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்வெட்டித்துறை - தொண்டமானாறு பகுதியில் நேற்று மீட்கப்பட்டன. அதனைக் கடத்திய குற்றச்சாட்டில் 3 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

“வல்வெட்டித்துறை தொண்டமானாறு காட்டுப் புலம் சுடலைப்பகுதியில் வைத்து நேற்று அதிகாலை கஞ்சா போதைப் பொதிகள் மீட்கப்பட்டன. அவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் 34, 27 மற்றும் 23 வயதுடைய இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

2 பேர் கெருடாவிலையும் மற்றவர் காட்டுப் புலத்தையும் சேர்ந்தவர்கள். வல்வெட்டித்துறை கடற்பகுதியில் 100 மீற்றருக்கு அப்பால் சந்தேகத்துக்கு இடமான முறையில் படகு நிற்பதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு வந்த தகவலை அடுத்தே பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டனர். 3 பேரும் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருள்கள் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. விசாரணையிலுள்ள அவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(வ-4,10,26,10)

### IPS

இலவச கணினி வகுப்புக்கள் - பிரிவு -V
மாணவர்கள், உத்தியோகத்தர்கள், கணினி பரீட்சைகளிற்கு தோற்றுபவர்களுக்கான கற்கைகள்
*Diploma in Msoffice
*Diploma in Internet Technology
ஆரம்பம் - 18.02.2017, 10.00 AM
* பெறுமதிமிக்க சான்றிதழ் * காலம் - 3 மாதங்கள்
IPS திருநெல்வேலி (சாயி சமித்திக்கு அருகில்)
Hot line - 076 685 2529

## மரண அறிவித்தல்

### திருமதி நாகபூசணி சின்னத்தம்பி (அம்மாக்கா)

பெருங்குளம் சங்கத்தானை வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி நாகபூசணி சின்னத்தம்பி 08.02.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் விக்னேஸ்வரன், சிவயோகேஸ்வரி, இராஜேஸ்வரி(ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (கனடா),கேதீஸ்வரன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.02.2017 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெருங்குளம் -சங்கத்தானை வீதி
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.

## VACANCY

### CUSTOMER SERVICE MANAGER



**General Duties**

Reporting to the Manager, Customer Service, the Customer Service Specialist is responsible for ensuring all client inquiries are dealt with and processed on a timely basis and in accordance with the company's policy.

**Primary Duties**

**Answering incoming calls on the customer service queue**
- Identify and solve inquiries in a timely fashion
- Follow-up with client to confirm resolution customer satisfaction

**Processing various requests received by phone**
- Identify and process request in a timely fashion
- Confirmation of processed request to client in a timely fashion

**Coaching new Customer Service Representatives**
- Aid new Customer Service Representatives in Learning the department's policies and procedures through job shadowing.

**Back up the Customer Service Administration team When requird**
- Processing various requests received by fax, mail and email
- Complete special projects as assigned by Manager, Customer Service.

**Ideal Skills/Qualifications:**
- You have strong communication skills, both written and verbal
- Excellent telephone manner
- You have a proven customer service focus
- Ability to resolve problems with customers

Please send your CV, before 15th of February 2017 to below E-mail
jaffnavacancy@gmail.com

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி (செல்லம்மா) ஆனந்தசிவநடராசா



உடுப்பிட்டி வாசிகசாலையடியைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவு மற்றும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி (செல்லம்மா) ஆனந்தசிவநடராசா நேற்று (11.02.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான நடராசா - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் ஆனந்தசிவநடராசா (கண்ணன் சாமியார்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, சந்திரகாந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் அருணன், அம்ஸ்மால் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் 14, முத்தட்டு வீதி, கோண்டாவிலிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. ஆனந்தசிவநடராசா
(கணவர் - கண்ணன் சாமியார்)
077 6423 597
021 221 5694

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லூர்து அன்னை பிரான்ஸில் காட்சி கொடுத்த குகையிலிருந்து எடுத்துவரப்பட்ட கல்லுடன் அமைக்கப்பட்ட கெபி நாவாந்துறையில்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை



லூர்து அன்னை பிரான்ஸில் காட்சி கொடுத்த குகையிலிருந்து எடுத்துவரப்பட்ட கல்லுடன் நாவாந்துறையில் அமைக்கப்பட்ட கெபியின் முதலாம் ஆண்டு திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி பங்குத்தந்தை சீ.யே. அன்ரனிபாலா அடிகளார் தலைமையில் நடைபெறு வதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

இந்த ஆக்கத்துக்கான தகவல்களை நாவாந்துறை பங்குத் தந்தை சீ.யே. அன்ரனிபாலா அடிகளாரும், நாவாந்துறை மண்ணின் மைந்தருமாகிய செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்த ஏ.எம். ஞீபன் அடிகளாரும் வழங்கியுள்ளனர்.

**நாவாந்துறை பங்குத்தந்தை சீ.யே. அன்ரனிபாலா அடிகளார் கூறுகையில்**

நாவாந்துறை லூர்து அன்னையின் கெபித் திருவிழா பற்றி நாவாந்துறை பங்குத்தந்தை சீ.யே. அன்ரனிபாலா அடிகளாரிடம், தொடர்பு கொண்டபோது திருநாள் கூட்டுத் திருப்பலி சுகவாழ்வு நிலைய இயக்குநரும் இறையியலகம் ஆன்மிக இயக்குநருமான செலஸ்ரின் மஸ்கிறின்ஞ அ.ம.தி அடி களாரால் எதிர்வரும் 18ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்னையின் திருச் சொரூப செபமாலை மெழுகுவர்த்திப் பவனி இடம் பெறு வதுடன் அன்னையின் ஆசீரும் வழங்கப்படும். அன் னையின் பக்தர்கள் அனை வரும் திரண்டு வந்து நாவாந் துறை லூர்து அன்னையின் ஆசீர்பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறோம் என அழைப்பு விடுத்தார்.

**நாவாந்துறை மக்கள் அனைவரும் அன்னையின் பக்தர்கள்**

நாவாந்துறை மக்கள் அனைவரும் வரலாற்றுக் காலம் தொட்டே கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களாகவும் புனித கன்னிமரியாவில் பக்தி உடையவர்களாகவும் வாழ்கின்றனர். நாவாந்துறையில் புனித நீக்கிலார் ஆலயம் மற்றும் புனித பரலோக அன்னை ஆலயம் என இரண்டு கத்தோலிக்க ஆலயங்கள் உள்ளன.

இங்குள்ள மக்கள் எல்லா வேளைகளிலும், குறிப்பாக மாலை வேலைகளில் திருச் செபமாலையை குழுக்களாகவும், குடும்பங்களாகவும், தனியாகவும், செபிப்பதைத் தமது நாளாந்த ஆன்மிகக் கடமையாக நினைக்கின்றனர். அன்னைமரியா தமது கிறிஸ்தவ வாழ்வின் பாதுகாவலி என்ற உண்மையை ஏற்று அதற்கு சாட்சியம் பகர்ந்து மரியன்னை வழியாக ஆண்டவர் இயேசுவிடம் என்ற வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்து வருகின்றனர். நாளாந்தம் மாதா நாவந்துறை மண்ணையும் மக்களையும் ஆசீர்வதிக்கின்றார் என்ற தளராத நம்பிக்கையில் வாழ்கின்றனர்.

**நாவாந்துறையில் மாதாவுக்குக் கெபி அமைக்க வேண்டும்**

நாவாந்துறை மண்ணில் மாதாவுக்கு கெபி அமைக்க வேண்டும் என்ற எண்ணம் நாவாந்துறை மக்கள் மத்தியில் என்றும் இருந்து கொண்டே வந்துள்ளது. போரினால் பாதிக்கப்படும் மக்களுக்கு என்றும் பரிவு காட்டும் அன்னை, போரினால் பாதிக்கப்பட்ட நாவாந்துறை மண்ணிலும் தமது பிரசன்னம் அதிகம் தேவை என்பதை உணர்ந்து பிரான்ஸ் நாட்டில் லூர்து நகரில் அமைந்த கெபியைப் போலவே ஒரு கெபியை அமைக்கத் திருவுளம் கொண்டார். இது பிரமாண்டமான தோற்றத்தையும், இயற்கைச் சூழலுக்கு ஏற்ற அமைப்பையும், பிரான்ஸ் நாட்டு லூர்து திருத்தலத்தின் தோற்றத்தையும், புனித பெர்னதேத் கையேந்தி செபமாலை செபிக்கும் காட்சியையும், பரந்த மேடையைக் கொண்ட திறந்த வெளி அமைப்பையும் கொண்டு சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

**பிரான்ஸ் லூர்து பதியில் அன்னை காட்சி கொடுத்த குகைப்பாறையின் சிறிய கல்லின் சிறு பகுதி**

பிரான்ஸ் லூர்து பதியில் அன்னை காட்சி கொடுத்த போது நின்ற குகைப்பாறையின் புனித சிறிய கல்லின் சிறு பகுதி ஒன்றும் அங்கிருந்து பெறப்பட்டு இங்கு மக்களின் தரிசனத்திற்காகமாதாவின் திருப்பாதத்தின் அடியில்வைக்கப்பட்டுள்ளமை நாவாந்துறை கெபியின் சிறப்பு அம்சமாகும்.

**நாவாந்துறை பரலோக அன்னை ஆலய வளாகத்தில் லூர்து அன்னையின் கெபி**

நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலய வளாகத்தில் லூர்து அன்னையின் கெபியை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தை இதை அமைத்த குடும்பத்தினர் அன்று நாவாந்துறைப் பங்கின், பங்குத் தந்தையாக இருந்த, இராசசிங்கம் அடிகளாரிடம் தெரிவித்து அதற்கான எல்லா உதவிகளையும் தாம் செய்வதாகவும் தெரிவித்தனர்.

அவரும் இது அன்னையின் செயல் என்பதை உணர்ந்தவராக தனது மனப்பூர்வமான சம்மதத்தையும் வழங்கினார். 2014 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் தேதி தேவ அன்னை விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பெருவிழாத் திருப்பலியின் பின்னர் இதற்கான அடிக்கல் நடப்பட்டது. எஸ்.வி.பி. மங்களராஜா அடிகளார் மற்றும் ஏ.எம். ஞீபன் செ.தா. அடிகளார் ஆகியோரின் செபத்தோடு அடிக்கல் நடப்பட்டது.

**மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறப்பு விழா**

யாழ். மறைமாவட்டத்தின் புதிய ஆயரான மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் 13 ஆம் திகதி அன்று கெபி திறந்து வைக்கப்பட்டது.

அப்போது புதிய ஆயருக்கு நாவாந்துறைப் பங்கின் சார்பில் மாபெரும் வரவேற்பும் கொடுக்கப்பட்டது. ஆயர் அவர்கள் நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்திற்கு வருகை தந்து புனித நீக்கிலார் ஆலய முன்றிலில் குத்துவிளக்கேற்றிய பின்னர் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட பெரிய வாசலைத் திறந்து வைத்தார். பின்னர் புனித பரலோக அன்னை ஆலய வளாகத்திற்கு அழகாக அமைக்கப்பட்ட திறந்த வாகனத்தில் பவனியாக மங்கல இசையோடு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு நாடாவை வெட்டி கெபியைத் திறந்து வைத்து வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டு கெபியில் வைக்கப்பட்டிந்த மாதாவின் ஆறு அடியிலான திருச் சொரூபத்தையும் புனித பெர்னதேத்தின் திருச்சொரூபத்தையும் திருப்பீடத்தையும் திருச்சிலுவையையும் கெபியையும் ஆசிர்வதித்தார்.

**அன்னையின் ஆசீர் யாழ் மறைமாவட்டத்துக்குத் தேவை - யாழ். ஆயர்**

ஆயர் தமது மறையுரையில், இந்தப் புனித லூர்து அன்னையின் கெபியானது உங்களுக்கு இறைவனுடைய ஒரு பெரும் கொடையாகும். எனது ஆயர் பணியின் ஆரம்பத்திலேயே இது கொடுக்கப்பட்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. மரி அன்னையின் அருளும் ஆசீரும் எப்போதும் யாழ். மறைமாவட்டத்துக்குத் தேவை. இந்தக் கெபியை அழகுற அமைத்த அனைவருக்கும் நன்றிகள் என்றார்.

**நாவாந்துறை லூர்து அன்னை கெபியின் சிறப்புகள்**

நாவாந்துறை லூர்து அன்னை கெபி பல சிறப்புக்களைக் கொண்டது. மிகப் பிரமாண்டமான தோற்ற அமைப்பு, இயற்கையான கெபியின் மலைச் சாயல், பிரான்ஸ் நாட்டின் புனித லூர்து திருத்தலத்தின் பிரதிபலிப்பு, புனித லூர்து அன்னையின் திருக்காட்சி எழில் கொஞ்சும் தோற்றம், பிரமாண்டமான புனித பரலோக அன்னை ஆலய வளாகம், மாதாவின் காட்சி பெற்ற புனித பெர்னதேதத் கையேந்திச் செபிக்கும் காட்சி, பரந்த மேடையைக் கொண்டுள்ள திறந்த வெளியமைப்பு என்பவற்றோடு பிரான்ஸ் நாட்டில் லூர்து நகரில் அன்னை காட்சி கொடுத்தபோது பாதம்பட்ட குகையிலிருந்து ஆசியாவுக்கு முதலில் எடுத்துவரப்பட்ட கல் மாதாவின் பாதத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளமையே அவையாகும்.

**நாவாந்துறை லூர்து அன்னையின் கெபியில் நிகழும் புதுமைகள்**

கடந்த ஒரு வருடகாலத்தில் நாவாந்துறை லூர்து அன்னையின் கெபியில் புதுமைகள் பல நிகழ்ந்துள்ளன. குழந்தைச் செல்வமின்றி ஒன்பது வருடங்களாக ஏங்கித்தவித்த இளம் குடும்பம் கெபி திறப்பு விழாவன்று தங்கள் வேண்டுதல்களை முன்வைத்து குழந்தையைப் பெற்றெடுத்தார்கள். இளம் வயது மகளும் மனைவியும் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்ற போதும் கணவனுக்கு விசா கிடைக்காததால் அங்கு செல்ல முடியவில்லை. பத்து வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து சோர்வுறாமல் அன்னையிடம் வேண்டுதல் செய்தார். அன்னை இவரின் மன்றாட்டைக் கேட்டார்.

ஒவ்வொரு மாதத்தின் முதல் சனிக்கிழமைகளிலும், மைதானம் நிறைந்த மக்கள் மத்தியில் திருப்பலி நடைபெறுகிறது. முழந்தாளிட்டு கையேந்தி நிற்கும் புனித பெர்னதேத் கன்னிகையைப்போல் படியேறிக் கையேந்தும் இளம் பெண்களும் கண்ணீர் விட்டழுது துன்பங்களை நீக்க உள்ளம் குமுறி வரம் கேட்கும் அந்ததரித்தோர் - நேரம் தாழ்த்தி வந்து அமைதிச் சூழலில் சனநடமாட்டம் குறைந்த நேரத்தில் பெருங் குரலெடுத்துப் புலம்பித் தங்கள் சுமைகளைத் தாயின் சந் நிதானத்தில் ஒப்படைத்து தலைசாய்த்து நிம்மதி தேடி மன்றாடும் மக்கள் என பலர் நாளாந்தம் நாவந்துறைத் தாயின் பதம் நாடி வருகின்றனர்.

**பிரான்ஸ் நாட்டில் லூர்து நகரில் மசபியேல் குகையில் அன்னை மரியாவின் காட்சிகள்**

பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் பிறந்தவர் பெர்னதெத் சூபிரூஸ். இவருக்கு 14 வயது நடந்தபோது 1858ஆம் ஆண்டு பெப்ரவரி 11ந்தேதி இவர் தனது சகோதரி மற்றும் தோழியுடன் விறகு பொறுக்க மசபியேல் குகை அருகே சென்று கொண்டிருந்த வேளையில் ஒரு காட்சியைக் கண்டார். அன்னை மரியா ஓர் இளம் பெண்ணாக அந்தக் குகையில் தோன்றினார். அவர் வெண்ணிற ஆடையும் முக் காடும் அணிந்திருந்தார். அவர் நீல நிறத்தில் இடைக் கச்சையை உடுத்தியிருந்தார். கையில் ஒரு செபமாலை வைத்திருந்தார். அவரது காலடியில் காட்டு ரோஜாச் செடிகள் காணப்பட்டன. அவர் கைகளைக் கூப்பி வானத்தை நோக்கி யவாறு இருந்தார். பெப்ரவரி 18ஆம் திகதி மரியாவைக் கண்டு பெர்னதெத் பரவச நிலையில் இருந்ததை அவரோடு சென்றவர்கள் கண்டனர். ஒரு காட்சியில் மரியன்னை தனக்கு அங்கு ஓர் ஆலயம் கட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**பெர்னதெத் மண்ணைத் தோண்டியபோது தோன்றிய நீரூற்று இன்றும் இருக்கிறது**

பெப்ரவரி 25ஆம் திகதி காட்சியின்போது மரியாவின் கட்டளையை ஏற்று பெர்னதெத் மண்ணைத் தோண்டியபோது அந்த இடத்தில் நீரூற்று ஒன்று தோன்றியது. அது பின்பு ஓடையாக மாறி திருப்பயணிகளைக் கவர்ந்திழுக்கும் அற்புத இடமாக இன்றும் திகழ்கிறது. மார்ச் 25ந்தேதி அன்னை மரியா பெர்னதெத்திடம் - நானே அமல உற்பவம் - என்று தன்னைப் பற்றிக் கூறினார். இதற்கு பாவம் எதுவுமின்றி பிறந்தவர் என்பது அர்த்தம்.

**அன்னை மரியா காட்சி அளித்த மசபியேல் குகையின் அருகே பெரிய ஆலயம்**

அதன் பிறகு அன்னை மரியா காட்சி அளித்த மசபியேல் குகையின் அருகே மரியாவின் பெயரில் பெரிய ஆலயம் ஒன்று கட்டி எழுப்பப்பட்டது. காட்சியின்போது தோன்றிய நீரூற்றும், பெரிய ஓடையாக மாறி ஆற்றில் கலப்பதுடன் நம்பிக்கையோடு அதன் நீரைப் பருகுவோருக்கு குணமளிக்கும் மருந்தாகவும்அமைகிறது. ஆண்டுதோறும் உலகெங்கும் இருந்து இலட்சக்கணக்கான திருப்பயணிகள் லூர்து அன்னை பேராலயத்தை நாடிச் செல்கின்றனர்.

புனித லூர்து அன்னை தம் அருள்மழையை மதபேதமின்றி தம்மிடம் வரும் அனைவர் மேலும் பொழிந்து பாதுகாப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12ஆவது நாள்...

நேரில் சென்று தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். அவர்களின் போராட்டம் 12 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

பிலக்குடியிப்பு மக்களுடைய காணிகளை விடுவிக்கக் கோரி பொதுமக்களால் முன்



னெடுக்கப்பட்டு வரும் தொடர் அறவழிப் போராட்டத்துக்கு நாளுக்கு நாள் ஆதரவு அதிகரித்து வருகிறது. விசுவமடுப் பிரதேசத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் அபிவிருத்தி சங்கம், கமக்காரஅமைப்புக்கள் ஆகிய பொது அமைப்புக் களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் பிலக்குடியிருப்பு தொடர் அறவழிப் போராட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்து தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

இலங்கை மனித உரிமை, அபிவிருத்திக்கான சங்கத்தின் பிரதிநிதிகளும் பிலக் குடியிருப்புப் பகுதிக்கு நேரில் சென்று தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். அத்துடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரும் நேற்று நேரில் சென்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களைச் சந்தித்தனர். (வ-7)

## அமெரிக்காவுக்குள்...

காவற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரி விக்கப்பட்டது.

கியூபாவில் இருந்து அமெரிக்காவில் குடியேறிய ஒருவரே, இந்த சட்டவிரோத குடியேற்ற நடவடிக்கையை ஒழுங்கு செய்திருந்தார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட 15 பேரில் அவரும் அடங்கியுள்ளார்.

அமெரிக்க சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்பு பிரிவு கண்காணிப்பு வானூர்தி ஒன்றால் கடந்த செவ்வாய்க்கிழமை பஹாமாஸ் அருகே கப்பல் ஒன்றில் இந்தக் குடியேற்றவாசிகள் இருப்பது கண்டறியப்பட்டது.

மியாமிக்கு தென்கிழக்காக 12 கடல் மைல் தொலைவில் இந்தக் கப்பலைத் தடுக்க சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்புப் பிரிவினர் முனைந்தனர். ஆனால் கப்பல் நிறுத்தப்படவில்லை.

இதையடுத்து அதிகாரிகள் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர் என்று கடலோரக் காவற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடலோரக் காவற்படையின் 'போல் கிளார்க்' கப்பல் வந்தவுடன், கப்பலில் இருந்தவர்கள் இறக்கப்பட்டனர்.

கப்பலில் இருந்தவர்களில் 14 பேர் 4 நாடுகளைச் சேர்ந்த சட்டவிரோத குடியேற்றவாசிகள் என்று அடையாளம் காணப்பட்டனர். இலங்கையைச் சேர்ந்த 6 பேர், சீனாவைச் சேர்ந்த 6 பேர், ஜமைக்கா மற்றும் ஈக்வடோரைச் சேர்ந்த தலா ஒருவர் அதில் இருந்தனர். இவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## கால அவகாசம்...

கைக் கொள்ளப் போகின்றது என்பது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை கொழும்பு அரசு தாமதிக்கின்றது. இது தமிழ் மக்களிடையே கடும் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் கிடைக்க வேண்டும்என்பதும், அவர்கள்திருப்தி அடைய வேண்டும் என்பதும்தான் தீர்மானத்தின் நோக்கம். அது அடையப்படவில்லை.

தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படாமைக்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். கால அவகாசம் கேட்பதாக இருந்தால், திட்டவட்டமான செயற்பாடுகள் நடைபெறுவது அவசியம். காலத்தை மேலும் இழுத்தடிப்பதற்கு தவணை கேட்பதில் எந்த அர்த்தமுமில்லை. கொழும்பு அரசின் கால நீடிப்புக் கோரிக்கையை ஐ.நா. எப்படி நோக்கப் போகின்றது என்பது எமக்குத் தெரியவில்லை. இருப்பினும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பல அங்கத்துவ நாடுகள், கொழும்பு அரசுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட கால அவகாசம் போதும் என்றே கூறுவார்கள் என்று நான் நினைக்கின்றேன். ஒருவேளை, கொழும்பு அரசின் கால நீடிப்புக் கோரிக்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் சபை இணங்கினால், ஐ.நா.வின் மேற்பார்வையில் செயற்படுத்தப்படும் வகையிலேயே தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும். ஐ.நா. தனது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்கு முன்னர் எமது நிலைப்பாட்டை நாமும் வெளிப்படுத்துவோம்.

காணி விடயம், காணாமற்போனோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடயம், உண்மை, நீதி அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரம், இந்த விடயங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருக்க நிரந்தர அரசியல் தீர்வைக் காணுதல் உள்ளிட்ட விடயங்களில் நாம் திருப்தியடையக் கூடிய விதத்தில் எதுவும் நடைபெறவில்லை. இந்த நிலை தொடராமல் இருக்க வேண்டும். இவ்வாறான சூழலில் கால அவகாசம் வழங்கப்படுமானால், அதற்கு ஐ.நா. மேற்பார்வை அவசியம். அதனை அழுத்தம் திருத்தமாகக் கூற விரும்புகின்றோம் -என்றார். (வ-5)

## கருணா...

முரளிதரன் புதிய அரசியல் கட்சியை நேற்று ஆரம்பித்துள்ளார்.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி என்னும் பெயருடன் இந்தக் கட்சி உருவாக்கப்பட்டுள்ளது. ஆரம்ப நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை மட்டக்களப்பு மத்திய வீதியில் உள்ள போக்கஸ் விடுதியில் நடைபெற்றது.

கட்சியின் பொதுச் செயலாளராக மட்டக்களப்பு மாவட்ட சிவில் குடிமக்கள் அமைப்பின் தலைவர் வி.கமலதாஸ் நியமிக்கப்பட்டார். கட்சியைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளவும், மட்டக்களப்பில் கட்சி அலுவலகம் திறப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுக்கும் வகையிலும், குடும்பத் தலைவிகளாகக் கொண்ட பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டை மேற்கொள்ளும் வகையிலும் செயற்படவுள்ள அதேவேளை வடக்கு, கிழக்கில் அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபடவுள்ளதாகவும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். (வ-5)

## சைட்டம்...

சிறிசேன தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரி கள் சங்கம் மற்றும் இலங்கை மருத்துவ பேரவை என்பன நேற்று மைத்திரிபால சிறி சேனவைச் சந்தித்து சைட்டம் தொடர்பிலான தங்களது முன்மொழிவுகளை சமர்ப்பித்தன.

அரச தலைவர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. மாலபே சைட்டம் மருத்துவக் கல்வி வழங்கும் நிறுவனம் தொடர்பில் நாட்டில் எழுந்துள்ள கொந்தளிப்பு நிலை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதன்போதே நிபுணர் குழு நியமிக்கப்பட்டு ஆராயப்படும் என்று அரசை தலைவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்ததாவது:

மாலபே நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட முறை தொடர்பிலும், அவர்கள் மருத்துவக் கல்வியின் தரத்தை பேணாமை தொடர்பிலும், அதற்கு இலங்கை மருத்துவ சபையின் அங்கீகாரம் இல்லாமை தொடர்பிலும் அரச தலைவரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய தராதரங்களை பேணாமல் மருத்துவர்களை உருவாக்கும்போது நோயாளர்கள் சேவையில் ஏற்படக்கூடிய ஆபத்தையும், நோயாளர் சேவையின் தராதரத்தைப் பேண அரசுக்கு உள்ள கடப்பாடு பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்களை [illegible] படும் என்று அரச தலைவர் தெரிவித்தார். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சிலரை ஏற்கனவே சந்தித்துள்ளதாக அவர் கூறினார். மாணவர்கள் வீதிக்கு இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதைக் கண்டு தாம் கவலை அடைவதாகவும் இது தொடர்பில் அனைவருக்கும் பொருத்தமான தீர்வு ஒன்றைதான் விரைவில் வழங்குவதாகவும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார் என்று சங்கம் தெரிவித்தது. (வ-4)

## கொழும்புக்கு...

கம் தெரிவித்துள்ளபோதிலும், அது தொடர்பில் முன் வைக்கப்பட்டிருக்கும் 11 நிபந்தனைகளை நிறைவேற்றாவிட்டால் அந்தச் சலுகை வழங்க முடியாது என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், மோசடிகளையும் முறைகேடுகளையும் ஒழித்தல், இலாபமீட்டாத நிறுவனங்களை விற்றுவிடுதல், நீதிமன்றங்களின் சுயாதீனத்தை உறுதி செய்தல் உள்ளிட்ட 11 நிபந்தனைகளை நிறைவேற்றினால் மாத்திரமே இந்த வரிச்சலுகை கிடைக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியம் உறுதியாக இருக்கின்றது.

ஏப்ரல் 21ஆம் திகதி பிரான்ஸின் பொதுத் தேர்தல் நடைபெறவிருப்பதால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை இலங்கை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். தவறினால் அந்தச் சலுகை நிரந்தரமாகவே கிடைக்காமல் போகலாம் என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை செய்திருப்பதாக அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-4)

## புதிய...

ஆராயவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

புதிய அரச மைப்பை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட வழி காட்டல் குழுவின் கடந்த இரண்டு கூட்டங்களும் உருப்படியான முடிவு எதுவும் எட்டப்படாமல் கூடிக் கலைந்தன. இவ்வாறான தொரு நிலையிலேயே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்படி முயற்சியைக் கையில் எடுத்துள்ளதாக அறிய முடி கின்றது.

அரசமைப்பு உருவாக்கும் முயற்சிக்காக வழிநடத்தல் குழு நாடாளுமன்றினால் நியமிக்கப்பட்டது. வழிநடத்தல் குழுவினால் உப குழு நியமிக்கப்பட்டது. அரசமைப்புத் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட உப குழு நவம்பர் மாதம் 19ஆம் திகதி தனது இடைக்கால அறிக்கை யைச் சமர்ப்பித்தது. அதுவரையில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி வேகமாக இடம்பெற்றிருந்தாலும் பின்னர் மந்த நிலையை அடைந்தது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி, புதிய அரசமைப்பின் மூல விடயங்களை ஆராயும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் குறித்த திகதியில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. ஜனவரி மாதம் 5ஆம் திகதி தொடக்கம் மூன்று நாள்கள் வழிநடத்தல் குழுக் கூட்டம் நடைபெறும் என்றும், ஜனவரி மாதம் 9ஆம் திகதி தொடக்கம் மூன்று நாள்கள் உப குழுவின் அறிக்கை மீது நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஜனவரி 5ஆம் திகதி கூடிய வழிநடத்தல் குழு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி கோரிய கால அவகாசத்தை வழங்கிக் கலைந்தது. உபகுழு அறிக்கை மீதான நாடாளுமன்ற விவாதமும் ஒத்திவைக் கப்பட்டது.

ஜனவரி மாதம் 26ஆம் திகதி வழிநடத்தல் குழு கூடி 10 நிமிடங்களில் கலைந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பில் பதிலளிப்பதற்குக் கால அவகாசம் தேவை என்பதால் முடிவு எடுக்கப்படாமல் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. கடந்த 7ஆம் திகதி வழிநடத்தல் குழுக் கூட்டம் நடைபெற்றிருந்தாலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பங்கெடுக்கவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய - மூத்த அமைச்சர்களால் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்குப் போடப்பட்டு வரும் முட்டுக்கட்டைகள் - தடைகளை, அரச தலைவர் மைத்திரி தகர்த்தெறிந்துள்ளதாகவும், அந்த அமைச்சர்களையும் சமாளித்து அரசமைப்பு உருவாக்க முயற்சிகளை அடுத்த கட்டத் துக்குக் கொண்டு நகர்த்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் செய்திகள் வெளிவந்திருந்த நிலையிலேயே, கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பங்கெடுக்காது விட்டிருந் தனர். புதிய அரசமைப்புப் பணி பெரும் தடங்கலைச் சந்தித்துள்ள நிலையில், அரசியல் தீர்வு விடயத்தில் பொது இணக்கப்பாடு காண்பதற்கு அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு அரச தலைவர் தீர்மானித்துள்ளார்.

'அரச தலைவர் மைத்திபால சிறிசேனவால் விரைவில் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டு அரசமைப்பு முயற்சிகள் குறித்த தொடர் பேச்சுக்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது' என்று வழிநடத்தல் குழுவின் முக்கிய உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்ரமரட்ண தெரிவித்தார். (வ-5)

## 110 கிலோ...

செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் - தலைமன்னார் முதன்மை சாலை 2 ஆம் கட்டைச் சந்தியில் வைத்து நேற்று அதிகாலை குறித்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. அவற்றின் பெறுமதி ஒரு கோடியே 10 இலட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தலைமன்னாரில் இருந்து தென் பகுதிக்குக் கொண்டு செல்வதற்காக வாகனத்தில் ஏற்றிச் சென்றதாக ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் பொலிஸ் நிலைய போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து நடவடிக்கை இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டுள்ள இரண்டு பேரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக் கப்பட்டு விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,56)

## அகதிகளாக...

மக்கள் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணியை விடுவிக்க கோரி காணி உரிமையாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களிது தொடர் அறவழிப் போராட்டம் ஒன்பதாவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அகதி வாழ்க்கையை எங்களுடனேயே முடிய வேண்டும். எங்கள் பிள்ளைகளும் அகதிகளாக அலைந்து திரிவதற்கு நாங்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். எங்களுடைய காலத்திலேயே அதற்கு ஒரு நிரந்தரமான முடிவு எட்டப்படவேண்டும். இந்த பனியையும், வெயிலையும் பொருட்படுத்தாது, தகரக் கொட்டகைக்குள் இருந்து தொடர் அறவழிப் போராட்டத்தின் ஊடாக எங்கள் காணிகளுக்கே செல்வோம். அதுவரைக்கும் நாங்கள் இந்த இடததை விட்டு நகரமாட்டோம் என்று காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன் நேற்று மாலை புதுக்குடியிருப்பு பகுதிக்குச் சென்று மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (வ-7)

## மூவர்...

மளிக்க மூவர் அடங்கிய சிறப் புக் குழுவொன்றை ஜெனிவாவுக்கு அனுப்ப இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

ஐ.நாவில் கால அவகாசத்தைக் கோருவதற்கு இந்தியாவின் ஆதரவையும் இலங்கை அரசு நாடியுள்ளதாகவும் கொழும்பு அயலுறவு அமைச்சின் தகவல் தெரிவித்தது.

ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வு எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில் இலங்கை விடயம் எடுத்துக் கொள்ளப்படும். அத்துடன், மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பான சிறப்பு அறிக்கையை முன்வைப்பார்.

ஜெனிவா செல்லும் இலங்கைக் குழுவில் நீதித்துறையில் பாண்டித்தியம் பெற்ற இருவரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். ஐ.நாவில் இருக்கும் ஐ.நாவுக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் நிக் கெலியை சந்தித்து இலங்கையின் கால அவகாசத்தை கோரிக்கை தொடர்பில் மேற்படி குழுவினர் விளக்கமளிக்கவுள்ளனர்.

இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் நிலைப்பாட்டை இதுவரை அந்த நாட்டின் புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவிக்கவில்லை. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அ.தி.மு.கவை உடைக்கச் சதி

# ஆளுநர் மீது பழி போடுகிறார் சசிகலா

சென்னை, பெப். 1

அ.தி.மு. கழகத்தை உடைக்க தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ் சதி செய்கிறார் என்று குற்றம் சுமத்தினார் அ.தி.மு. கழக பொதுச் செயலாளர் சசிகலா.

கடந்த செல்வாய்க்கிழமை இரவு அ.தி.மு. கழகத்தின் தலைமைக்கு எதிராக பல விமர்ணங்களை முன்வைத்தார் ஓ.பன்னீர்செல்வம். தான், வற்புறுத்தலின் அடிப்படையிலேயே பதவி விலகினார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார். சசிகலா ஓ.பி.எஸ். இடையே தற்போது பெரும் வார்த்தை மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தக் குழப்பமான நிலையில், சசிகலாவுக்கும் - அ.தி.மு. கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமாலை நடை பெற்றது. இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே சசிகலா இவ்வாறு தெரிவித்தார். ஆளுநர் ஆட்சியமைக்க இன்று (நேற்று) அழைப்பு விடுப்பார் என்று எதிர்பார்த் தோம். எனினும், எவ்வித பயனும் கிடைக்கவில்லை. ஆளுநரின் இந்த நிலைப்பாடு அ.தி.மு. கழகத்தை உடைப் பதற்கான சதி என்றே நான் கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தமது முடிவுகளில் உறுதியாக உள்ளனர். அவர்களைச் சந்தித்தமை குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்ததைப் போன்ற மனநிறை வைத் தருகிறது என்று சசிகலா மேலும் தெரிவித்தார். (வ-ம)

## குமாரபுரம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூவி உறவி னர்கள் அஞ்சலி செலுத்தினர். 26 பேரின் பெயர்கள் அடங்கிய கல்வெட்டு அங்கு திரைநீக்கம் செய்யப்பட்டது. 'குமுறல் மாறாத குருதிமண் குமாரபுரம்' என்ற தலைப்பில் ஊடக செய்திகள், கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்று மூத்த ஊடகவியலாளர் பொ.சற்சிவானந்தத்தால் தொகுத்து வெளியிடப்பட்டது. நினை வேந்தலை முன்னிட்டு பிரதேச மக்கள் சார்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு மனுவும் அனுப்பி வைக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

நாங்கள் வறுமையான, பின்தள்ளப்பட்ட, அப்பாவி மக்கள். எமது சிறுவர்கள், பெண்கள், துப்பாக்கியால் சூடு நடத்தியும், வெட்டியும், வன்புணர்ந் தும் படுகொலை செய்யப்பட்டார்கள். இன்று (நேற்று)டன் 21 வருடங்கள் கடந்துவிட்டன.

எமக்கு நன்கு பரிச்சயமுள்ள இராணுவத்தினரால்தான் இந்தப் படுகொலை நிகழ்த்தப்பட் டது. அதனை மூதூரிலும், அனுராகபுரத்திலும் பொலிஸ் மற்றும் நீதிமன்ற விசாரணை களில் 6[illegible]டத்தெளிவாகக் குறிப்பிட்டோம். அடையாளமும் காட்டியுள்ளோம்.

படைமுகாம்களில் இருந்து வந்த படையினர் மதுபோதையில் சட்டம், நீதி, பாதுகாப்பு ஒழுங்குக்கு மாறாகச் செய்யப்பட்ட நீதிமீறல் படுகொலைதான் இது.

நடந்த விசாரணைகள் அனைத்தும் குற்றம் சாட்டப்பட்ட படையினரின் உயரிய நலன் கரு தியே நிகழ்த்தப்பட்டன. அதனை அறங்கூறும் அவையின் தீர்ப்பும் நன்குணர்த்தியது. எம்மை இந்த நாட்டின் மக்களாக அரசும் அதிகாரிகளும் கருதவில்லை. எமது சாட்சியங்களை சுதந்திரமாக வழங்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இந்த வழக்கு சிங்கள மக்கள் நிறைந்த, எமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள அனுராதபுரத்தில் நடத்தப்பட்டமை அதற்கு ஒரு சான்று. அதனை திருகோணமலைக்கு மாற்றுமாறு கோரியும் பயன் கிடைக்கவில்லை.

விசாரணைகள் நடைபெற்ற காலத்தில் எமது கிராமத்தில் [illegible]துகாப்பான சூழல் இருக்கவில்லை. எங்களுடன் யார் பேசினாலும் அதனைப் புலனாய்வு அதிகாரிகள் கண்காணிக்கும் நிலமையே இருந்தது. அதற்கான பல அழுத் தங்கள் இருந்தன.

நம்பிக்கை வைத்து 19 வருடங்களாகக் களைப் புற்றநாம், மாறி வந்த கூட்டு அரசிலும் அதன் அரச தலைவர் மீதும் நம்பிக்கை வைத்தோம். சற்று நீதிகிடைக்கும் என்ற நப்பாசையில் இறுதி விசாரணைகளில் பங்கு கொண்டோம். ஆனால் அதே நீதி அமைப்புத்தான் தற்போதும் உள்ளது என்பதை விசாரணை முடிவுகள் தெளிவாக்கிவிட்டன. அதனால் தங்கள் நீதி அமைப்புக்கள்மீது எமக்கு நம்பிக்கை மீளவும் இல்லாமல் போயுள்ளது. உங்கள் ஆட்சியிலும் அதற்கான முயற்சிகளை, பரிந்துரைகளைக் காணவில்லை. இனியும் நாம் யாரை நம்புவது? கடந்த 69ஆவது சுதந்திர தினச்செய்தியில் கூறியது போன்று எல்லா மக்களையும் சமத்துவமாக மதிப்பதாக இருந்தால், எமது பாதிப்புக்குரிய நீதி, நிவாரணம், இழப்பீடு, மறு வாழ்வு, வழங்கி எமது மனக் கவலைகளை நீக்க நீங்கள் முன்வர வேண்டும்.

ஐ.நா. போன்ற அமைப்புக்கள் செய்தி அறிக்கை களை விடுவதை விடுத்து செயலில் காட்ட முன்வரவேண்டும். நாங்கள் அநாதைகள் இல்லை. அநாதைகளாக்கப்பட்டுள்ளோம்-என்றுள்ளது. இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்டம் தழுவியதாக சமூக ஆர்வலர்களும் பொது மக்களும் மக்கள் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (வ-4,40)

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி பாலகிருஸ்ணன்



வடக்கம்பராய், - சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் பரந்தன் கோரக்கன் கட்டினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி பாலகிருஸ்ணன் 10.02.2017 வெள்ளிக்கிழமை அகால மரணமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - இராஜேஸ்வரி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் பாலகிருஸ்ணனின்(பெயின்ரர்) அன்பு மனைவியும் சரண்யா (கிளிநொச்சி மகாவித்தியாலய உயர்தர மாணவி), விதுஷிகா, லோஜிதன், கயல்விழி(புனித அந்தோனியார் பாடசாலை 2ஆம் கட்டை மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்துராணி, சுசிலாதேவி, கருணாகர், சுதாகரன், காலஞ்சென்ற நிர்மலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோரக்கன்கட்டு பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


ஓராங்கட்டை,
கோரக்கன் கட்டு,
பரந்தன்.

தகவல்:
கணவர் **பாலகிருஸ்ணன்** (பெயின்ரர்), **பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்

### விசுவர் கிருஷ்ணபிள்ளை

**(ஓய்வு பெற்ற நீதிமன்ற உத்தியோகத்தர்- மாவட்ட நீதிமன்றம் மல்லாகம்)**



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கல்வளை வீதி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவர் கிருஷ்ணபிள்ளை 10.02.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவர்- செல்வி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் பாசமிகு கணவரும் வாசுகிதேவி, தயாபரதேவி (முன்பள்ளி ஆசிரியர்), ஜெயக்குமார் (பிரான்ஸ்), பொய்யா மொழி (பிரான்ஸ்), தமயந்தி, மலர்விழி (முகாமைத்துவ உதவியாளர் கல்வி அமைச்சு - வடமாகாணம்) வளர்மதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சற்குணம் (ஓய்வு பெற்ற சாலைப்பரிசோதகர் - கோண்டாவில்), தயாளகுமார் (முன்னாள் ஊழியர், லங்கா சிமெண்ட் லிமிட்டெட்- காங்கேசன்துறை), சகாயதேவி (பிரான்ஸ்), கவிதா(பிரான்ஸ்), தர்மராஜா, குகனேசராஜா (வர்த்தகசங்கம் - யாழ்ப்பாணம்), புஸ்பராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் முகுந்தன், அகல்யா, சஜீபன்(பிரான்ஸ்), டொறின், ஏஞ்சலின், கிருஸ்ஷா(பிரான்ஸ்), ஜெயநிஷா (பிரான்ஸ்), சகாயினி (பிரான்ஸ்), ரஸ்மியா(பிரான்ஸ்), அருஷாந்(பிரான்ஸ்), அனுபிகா, அபினுஜா, தனுக்ஷன், தனோஜன், துஷானன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கல்வளை வீதி,**
**சண்டிலிப்பாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



### பொன்னப்பா இராசமணி
### (பெரியம்மா)

நவாலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னப்பா இராசமணி (பெரியம்மா) 10.02.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற பொன்னப்பாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகநாதி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், தில்லைமுத்து, காலஞ்சென்ற பொன்னரியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சண்முகம் மற்றும் சோமராஜேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ச.அருள் சோதிராஜா (சுவிஸ்), ச.ஜெக சோதிராஜா (வேவி), ச.சிவசோதி ராஜா (வசந்தன்), ச.தர்ம சோதிராஜா ( மோகன் - ஜேர்மனி), ச.நிமலசோதிராஜா (ரூபன்-நோர்வே), தில்லைசண்முக நாதன் (தில்லை - சுவிஸ்), ஜெ.புஸ்பமாலினி (மாலினி - பிரான்ஸ்), உ.சுவர்ண மாலினி, சோ.பாலமுரளி (ஆஸ்தி ரேலியா), சோ.பாலகோபன் (கோபி - கனடா) ஆகியோரின் பாசமிகு பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2017) காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நவாலி கிழக்கு**
**மானிப்பாய்.** (ஜே. 8087) (13)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி கனகாம்பிகை நடனமூர்த்தி

6ஆம் வட்டாரம், மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், காளி கோயிலடி, அம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை நடனமூர்த்தி 10.02.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடனமூர்த்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் ஒரே அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலசிங்கம், மகாலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சந்திர காந்தன் (லண்டன்), சகுந்தலா (ஜேர்மனி), மஞ்சுளா (இலங்கை), சியாமளா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகேஸ்வரன், சீராளதேவன், காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, பழனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சசிகாந், கிருஷ்ண வேனி, துளசிகாந், சகானா, திலீபன், திலக்ஷனா, திலக்ஷன், சரண்யா, பிரதீஸ்வர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தன்றியாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.02.2017 செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி பால்பண்ணை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் வீதி, காளிகோயிலடி,**
**திருநெல்வேலி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(J/8092) (11,17) **077 815 1798**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ். பிரதேச செயலகம் ஹொக்கியில் சாதித்தது

யாழ்ப்பாணம், பெப். 12
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஹொக்கித் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ். பிரதேச செயலக அணி சம்பியனானது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணி மோதியது. இரு அணிகளும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதற் பாதி.

இரண்டாம் பாதியின் 5ஆவது நிமிடத்தில் யாழ். பிரதேச செயலக அணியின் சங்கீதன் தனது அணியின் முதற் கோலைப் பதிவுசெய்தார். 1:0 என்ற நிலையிலேயே ஆட்டத்தில் ஏனைய நிமிடங்கள் நகர்ந்து முடிந்தன. முடிவில் யாழ். பிரதேச செயலக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ம-23)

## கிரிக்கெட்டின் அனைத்து சாதனையும் கோக்லியால் உடையும்

கவாஸ்கர் தெரிவிப்பு

"கிரிக்கெட் உலகில் உள்ள அனைத்து துடுப்பாட்டச் சாதனைகளும் கோக்லியால் உடையும்"

இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய வர்ணனையாளருமான கவாஸ்கர். பங்களாதேஷுக்கு எதிராக தற்போது நடைபெற்று வரும் டெஸ்ட் ஆட்டத்தில் இரட்டைச் சதம் விளாசினார் கோக்லி.

இதற்கு முன்னர் இந்திய அணி விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான தொடரிலும் கோக்லி இரட்டைச் சதம் விளாசியிருந் தார். இதனால் பங்களாதேஷுக்கு எதிரான இரட்டைச் சதம், தொடர்ந்து நான்கு தொடரில் கோக்லி பதிவுசெய்த நான்காவது இரட்டைச் சதமாக அமைந்தது.

இதற்கு முன்னர் பிரட்மன், ராவிட் இருவரும் தொடர்ந்து மூன்று தொடர்களில் இரட்டைச் சதத்தைப் பதிவு செய்தனர். இவர்களின் சாதனையையே கோக்லி முறியடித்தார். இதனையடுத்து கருத்துத்தெரிவிக்கையிலேயே கவாஸ்கர் இவ்வாறு தெரிவித்தார். (ம)



# ஈஸ்வரன் அணி சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 12
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் வவுனியா லீக்கில் சம்பியனானது ஈஸ்வரன் அணி.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. வவுனியா லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள், சிறுவர் பூங்கா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வந்தன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து அல் அல்ஜிரா அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் ஈஸ்வரன் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

## யாழ். பி.செயலக கால்பந்தாட்டம் அன்ரனிஸ் – மேரிஸ் இறுதியில்

யாழ்ப்பாணம், பெப். 12
யாழ். பிரதேச செயலகத்தில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியும் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டு கழக அணியும் இறுதிக்குத் தகுதி பெற்றன.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த அரையிறுதியாட்டங்கள் நடைபெற்றன. ஓர் அரையிறுதியில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி மோதியது. இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

பிறிதொரு அரையிறுதியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து பாரதி அணி மோதியது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# சமநிலைக்காக பங்களாதேஷ் போராட்டம்

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தை சமநிலையில் முடிப்பதற்காக பங்களாதேஷ் அணி பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 687-6 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக கோக்லி 204 ஓட்டங்களையும், முரளி விஜய் 108 ஓட்டங்களையும், சகா 106 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தயுல் இஸ்லாம் 3 இலக்குகளையும், மிராஸ் 2 இலக்குகளையும், தஸ்கின் அகமட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் இரண்டாம் நாள் முடிவில் பங்களாதேஷ் 41-1 என்றிருந்தது. தமீம் இக்பால் 24 ஓட்டங்களுடனும், கக்கியூ ஓர் ஓட்டத்துடனும் மூன்றாம் நாளான நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் பெறாமல் ரண்அவுட் ஆனார் இக்பால். 12 ஓட்டங்களுடன் கக்கியூவை வீழ்த்தினார் யாதவ். சகிப் அல் ஹசன், ரகிம் இருவரும் இணைந்து பெரியதொரு போராட்டத்தை வெளிப்படுத்தினர். இந்தியப் பந்துவீச்சை எதிர்த்து தமது ஆதிக்கத்தை வலுவாகவே நிலைபெறச் செய்தனர். 82 ஓட்டங்களுடன் அஸ்வினிடம் வீழ்ந்தார் சகிப் அல் ஹசன். சபீர் ரகுமானை 16 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் ஜடேயா.

எனினும் தொடர்ந்தும் நிலைத்து நின்றார் ரகிம். நாள் முடிவில் பங்களாதேஷ் 322-6 என்றுள்ளது. ரகிம் 81 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ம)



## கோல்டன் பிரதர்ஸ் அபாரமான ஆட்டம்

யாழ்ப்பாணம், பெப். 12
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால் பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கோல்டன் பிரதர்ஸ் அணி வெற்றிபெற்றது.

யங்ஸ்ராரின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், யங்ஸ்ரார் பி அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் அணி மோதியது. இதில் கோல்டன் பிரதர்ஸ் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தொடர் புகழ் சேர்க்கும்

## சிமித் நம்பிக்கை

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர், ஆஸ்திரேலிய அணிக்குப் புகழைச் சேர்க்கும் தொடராக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்தார் அந்த அணியின் தலைவரான ஸ்ரீவ் சிமித்.

நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் செல்லவுள்ளது. முதலாவது ஆட்டம் புனேயில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகிறது. தொடர் இந்தியாவில் நடைபெறுவதால் இந்திய அணியின் ஆதிக்கம் மிகுந்திருக்கும் என்று பொதுவான எதிர்பார்ப்பு நிலவுகிறது. குறிப்பாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் ஜாம்பவான் இயன் சப்பல், ஆஸ்திரேலிய அணிக்கு பெரும் ஆபத்து காத்திருக்கிறது என்று இருமுறை எச்சரித்துள்ளார். இந்த நிலையில் இந்தியத் தொடர் தமக்கு புகழ் சேர்க்கும் தொடராக அமையும் என்ற நம்பிக்கையை சிமித் வெளிப்படுத்தினார்.

இந்தியாவில் சிறப்பாக விளையாடினால், அது பெரிய புகழைச் சேர்க்கும். இந்தத் தொடரில் சிறப் பாகச் செயல்படுவதன் மூலம் எல்லா நேரத்திலும் சிறந்த அணி நாங்கள்தான் என்ற அந்தஸ்தைப்



பெறமுடியும். இந்தியத் தொடர் பெரிதுதான். எங்கள் வழியில் நாங்கள் விளையாடினால் நிச்சயம் சிறப்பாகச் செயல்பட முடியும். தொடர் சமனில் முடிவடைந்தாலும் அது எங்களுக்குச் சாதகமே. நாங்கள் ஆட்டத்தின் முடிவுகளை பற்றிச் சிந்திக்கவில்லை. எங்களது திட்டங்களை சரியாக செயல்படுத்துவதே நோக்கம். கற்ற பாடங்களை திறனுடன் வெளிப்படுத்த வேண்டும். மற்றும் கடினமான சூழ்நிலைகளில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவதற்கான வழிகளைச் கண்டறிந்து செயற்பட வேண்டும்.

இலங்கைத் தொடரில் இருந்து நான் அதிகம் கற்றுக்கொண்டேன். மிகப்பெரிய அளவில் ஓட்டங்களைக் குவிப்பது என்பது மிகவும் முக்கியமானது. இந்தியப் பந்து வீச்சாளர்களின் யோசனையை கணக்கிட்டு, அதற்குத் தகுந்தபடி கால்நகர்வுகளை பயன்படுத்துவேன். ஆட்டத்தின் பல்வேறு தருணங்களுக்குத் தகுந்தபடி நான் என்னை தகவமைத்துக் கொள்வேன். ஏனைய துடுப்பாட்ட வீரர்களும் சுழலை திறம்படக் கையாள வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் நிச்சயம் வெற்றிபெறலாம் என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)



# வழித்துத் துடைத்தது தென்னாபிரிக்க அணி

## தரப்படுத்தலிலும் முதலிடம்

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரின் இறுதி ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரை வழித்துத் துடைத்தது தென்னாபிரிக்க அணி.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவது ஒருநாள் ஆட்டம், செஞ்சூரியன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 6 இலக்குகள் இழப்புக்கு 384 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அம்லா 154 ஓட்டங்களையும், குயின்டன் 109 ஓட்டங்களையும், பிளாசிஸ் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லக்மல் 3 இலக்குகளையும், மதுசங்க 2 இலக்குகளையும், வண்டர்சே ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி ஒரு கட்டத்தில் 82-5 என்று தடுமாறினாலும், அசல குணரத்ன, பதிரண ஆகியோரின் ஆட்டத்தால் சரிவில் இருந்து மீண்டு கௌரவ நிலைக்குச் சென்றது. எனினும் 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் இலங்கையால் 296 ஓட்டங்களையே பெறமுடிந்தது. அதிகபட்சமாக குணரத்ன 114 ஓட்டங்களையும், பதிரண 56 ஓட்டங்களையும், டிக்வெல்ல 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மொறிஸ் 4 இலக்குகளையும், பார்நெல் 2 இலக்குகளையும், தாகிர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக அம்லாவும், தொடராட்ட நாயகனாக பிளாசிஸூம் தெரிவாகினர்.

பன்னாட்டு கிரிக்கெட் சபை இறுதியாக வெளிப்படுத்திய தரப்படுத்தலில், ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகள் இரண்டும் தலா 118 புள்ளிகளுடன் இருந்தன. எனினும் சராசரியின் அடிப்படையில் ஆஸ்திரேலியா முதலிடத்தில் இருந்தது. இந்தத் தரப்படுத்தலில் பின்னர் இலங்கைக்கு எதிராக இரண்டு வெற்றிகளைக் கண்டுள்ளது தென்னாபிரிக்கா. இதனால் அந்த அணி அடுத்து வெளிப்படுத்தப்பட்ட தரப்படுத்தலில் முதலிடத்துக்குச் சென்றுள்ளது. (ம)

# இந்தியா சாதனை

தொடர்ந்து மூன்று டெஸ்ட் ஆட்டங்களில் 600 ஓட்டங்களுக்கும் மேல் ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்தது இந்திய அணி.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் அண்மையில் டெஸ்ட் தொடர் நடைபெற்றது. இந்தத் தொடரின் நான்காவது ஆட்டத்தில் கோக்லியின் இரட்டைச் சதத்தால் இந்திய அணி 631 ஓட்டங்களைக் குவித்தது. பின்னர் சென்னையில் நடைபெற்ற ஐந்தாவது ஆட்டத்தில் கருண் நாயரின் முச்சதத்தால் இந்திய அணி 759 ஓட்டங்களைக் குவித்தது. தற்போது நடைபெற்று வரும் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் கோக்லியின் இரட்டைச் சதத்தால் இந்திய அணி 687 ஓட்டங்களைக் குவித்தது. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இதற்கு முன்னர் எந்தவொரு அணியும் தொடர்ச்சியாக மூன்று தடவை 600 க்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்ததில்லை. (ம)

# டோனியின் சாதனை முறியடிப்பு

பன்னாட்டு ஒருநாள் ஆட்டங்களில் விரைவாக 3 ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டிய இலக்குக் காப்பாளர் என்ற மைல் கல்லை தென்னாபிரிக்க அணியின் இலக்குக் காப்பாளரான குயின்டன் டி ஹொக் எட்டினார்,

இலங்கைக்கு எதிரான இருதரப்புத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐந்தாவதும், இறுதியானதுமான ஒருநாள் ஆட்டத்தில் குயின்டன் 87 பந்துகளில் 109 ஓட்டங்களைக் குவித்தார். அவர் 36 ஓட்டங்களை எடுத்திருந்தபோது விரைவாக 3 ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டிய இலக்குக்காப்பாளர் என்ற அடைவை நிலைநாட்டினார்.

90 இன்னிங்ஸில் தோனி இந்த மைல் கல்லை எட்டியதே சிறந்த பெறுபேறாக இருந்தது. தற்போது குயின்டன் 74 இன்னிங்ஸில் அதை ஊதித் தள்ளினார். (ம)



# கால்பந்தாட்ட ரசிகர்களிடையே நெரிசல் 17 பேர் உயிரிழப்பு; 80 பேருக்குக் காயம்

ஆபிரிக்க நாடான அங்கோலாவில் யுஜி நகரில் நடந்த கால்பந்தாட்டப் போட்டி ஒன்றைக்காண வந்திருந்த மக்கள் கூட்டத்தின் நெரிசலில் சிக்கி நேற்று முன்தினம் 17 பேர் உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். 8 ஆயிரம் பேர் மட்டுமே அமரக்கூடிய அரங்கில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் பேர் ஒன்றுதிரண்டனர். ஆட்டம் ஆரம்பமாவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னரேயே மைதானத்தின் கதவுகள் திறக்கப்பட்டு ரசிகர்கள் உள்நுழைய அனுமதிக்கப்பட்டனர். இதனாலேயே கூட்ட நெரிசல் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்த 17 பேரில் சிலர் குழந்தைகள் என்று தெரிவிக்கப்பட்டது. 80 பேர் காயமடைந்தனர். அவர்களில் சிலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

# ஸ்ரோக்ஸ், ரூட், புரோட் மூவரும் பரிசீலிக்கப்படுகின்றனர்

இங்கிலாந்து அணியின் டெஸ்ட் தலைமைத்துவத்துக்கு ரூட், ஸ்ரோக்ஸ், புரோட் மூவரையும் பரிசீலித்து வருகிறது இங்கிலாந்து கிரிக்கெட் சபை.

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக இருந்த அலிஸ்டர் குக் சில தினங்களுக்கு முன்னர் பதவியில் இருந்து விலகினார். இதனையடுத்து புதிய தலைவரைத் தெரிவுசெய்வதில் இங்கிலாந்து கிரிக்கெட் சபை தீவிரம் காட்டி வருகிறது.

அணியின் உபதலைவரான ரூட், தலைவராக வருவார் என்று பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், ரூட் மட்டுமல்லாமல் புரோட், ஸ்ரோக்ஸ் ஆகியோரும் தமது பரிசீலிப்புப் பட்டியலில் உள்ளனர் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்தது.

ரூட் தலைவரானால் புரோட், ஸ்ரோக்ஸ் இருவரில் ஒருவர் உபதலைவராக நியமிக்கப்படுவர். இவர்களில் ஒருவர் தலைவரானால் ரூட் உப தலைவராகத் தொடர்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



திருமதி
**மேரிஞானமணி மேரியோசவ்**

சில்லாலையைச் சேர்ந்த மேரிஞானமணி மேரியோசவ் 10.02.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மெல்கியோர் மரியாம் பிள்ளை - பார்பரா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் மேரியோசவ் அவர்களின் அன்பு மனைவியும் மதுரம் செபஸ்ரியன்(லண்டன்), ராணி விஜயசிங்கம், காலஞ்சென்ற அருட்சகோதரி சன்றா(கார்மேல் சபை), தவராஜ் (லண்டன்), யோகா கிறிஸ்தோப்பர்(லண்டன்), புவிராஜ் (பணிப்பாளர், நிதி அமைச்சு - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 7/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 13.02.2017 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் யாழ் புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

No.7/1, ஈச்சமோட்டை றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## A/L தொழில்நுட்ப பிரிவு

Group Class 2019, 2018, 2017 Day Class

பொறியியல் தொழில்நுட்பவியல்-
சி.நிசாந்தன் -B.Sc, M.Sc in Bio System Engineering
உயிர் முறைகள் தொழில்நுட்பவியல்-
நி.சசிகரன் -B.Sc in Agriculture (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
ஆரம்பம் - 15.02.2017 (யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில்)
077 326 1648

## வேலைவாய்ப்பு!

ANDRA DIGITAL IMAGE நிறுவனத்திற்கு அனுபவமுள்ள

**வேலைக்கு ஆட்கள் தேவை!**

- **கணினி வடிவமைப்பாளர்-04** (Senior Graphic Designer)
- **புத்தக வடிவமைப்பாளர்-02** (Book Layout Designer)
- **சிற்றூழியர்-02** (Office Boy)
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

செவ்வாய்க்கிழமை (14, February 2017) காலை 9.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

தொடர்புக்கு:
ANDRA DIGITAL IMAGE
379,Kasthuriyar Road, Jaffna.
0776622981 | 0777481696

## தரப்படுத்தலில் தாகிர் முதலிடம்



பன்னாட்டு கிரிக்கெட் சபை, தனது தரப்படுத்தல்களை நேற்றுப் புதுப்பித்தது. ஒருநாள் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் பந்து வீச்சாளர்களில் தென்னாபிரிக்க வீரர் தாகிர் முதலிடம் பிடித்தார்.

முதலிடத்தில் இருந்து வந்த நியூசிலாந்து வீரர் போல்டை அவர் பின்தள்ளினார். இலங்கைக்கு எதிரான தொடரில் வெளிப்படுத்திய சிறந்த பெறுபேறுகளை அடுத்தே தாகிருக்கு இந்தச் சிறப்புக் கிடைத் தது. புதிய தரப்படுத்தலின்படி, 761 புள்ளிகளுடன் தாகிர் முதலிடத்திலும், 757 புள்ளிகளுடன் போல்ட் இரண்டாவது இடத்திலும், 711 புள்ளிகளுடன் நரைன் மூன்றாவது இடத்திலும், 700 புள்ளிகளுடன் ஸ்ராக் நான்காவது இடத்திலும், 684 புள்ளிகளுடன் ஹசில்வூட் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் 10 வரையிலான இடங்களில் முறையே சகிப் அல் ஹசன், ரபாடா, ஹென்றி, ரசிட், நபி ஆகியோர் உள்ளனர். இந்திய,இலங்கை வீரர்கள் எவரும் முதல் பத்து இடங்களில் இடம்பெறவில்லை. (ம)

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதிக்கு அண்மித்து,மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 1 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 9131128

### யப்பான் சைக்கிள் மலிவு விற்பனைக்கு

யாழ். மண்ணில் மீண்டும் உதயம். Original Japan Ladies & Gents சைக்கிள்கள் மலிவு விற்பனைக்கு உண்டு. விலை 6500/=
கொட்டடி லைடன் சந்தி, யாழ்ப்பாணம்.
0773836424,0777905333

### தேவை

எமது ஸ்தாபனத்திற்கு சிட்டை எழுதுநர் தேவை. குறைந்தது இரு மொழிகளும் பேசத்தெரிந்தவர் விரும்பத்தக்கது.
லிங்கம் கிறீன் ஹவுஸ், 213, ஸ்ரான்லி Rd. யாழ்ப்பாணம்.

### ஒப்படைத்து உதவவும்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கோண்டாவில் பகுதிகளில் கல்வித் தரவுகள் அடங்கிய Pendrive வும் Dongle உம் சிறிய கறுப்பு நிற பேர்சுடன் நேற்று முன்தினம் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
071 566 2897, 077 069 1573

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 33 வயது அவிட்டம் நட்சத்திரம் உடைய மாற்று திறனாளி மணமகனுக்கு மணமகள் தேவை.
(சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)
021 221 5591, 077 189 5008

### ஆள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள AJ SYSTEMS i (Pvt)Ltd நிறுவனத்திற்கு CCTV Camera Installation வேலைக்கு ஆள் தேவை. முன் அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: 075 667 6767

நாள் 800/- 1000/- வரை
தமிழ் காரியாலய சம்பர்வைவர்கள்
077 68 38 226 | 077 83 90 501

### கோழிக்குஞ்சு விற்பனை

**ஊர்க்கோழிக் குஞ்சுகள்**
**விற்பனை விலை 75/=**
**(வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு)**
076 982 2579

## பதவி வெற்றிடம்

எமது யாழ்
**சர்மிளா டிரவல்ஸ்** கிளை அலுவலகத்துக்கு
கீழ் கண்ட பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு.

1. Ticketing officer (3 வருட அனுபவமுள்ளவர்கள்)
2. Marketing officer (Field Work)
3. Cashier



விருப்பமுள்ளவர்கள் தங்கள்
CV (சுயவிவரக் கோவை) யினை
கீழ்க்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.



மின் அஞ்சல் முகவரி:
pettah@sharmilatravels.com

### பணியாளர் வெற்றிடம்

K.S.T. Tex வியாபார நிலையத்துக்கு விற்பனையாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

K.S.T. Tex
129/ 1/4 Jubileebazer
Power House Road, Jaffna.
021 222 9470

### ஜீஸ் பக்கெட் தயாரிக்கும் மெசின்

**புதிய ஐடியா! அதிக இலாபம்!**




தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org